# நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும்

முனைவர் அ. தாமோதரன்

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# நன்னூல் மூலமும்

# கூழங்கைத்தம்பிரான் உரையும்

பதிப்பாசிரியர்

முனைவர் அ. தாமோதரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **Nannul Mulamum Kulankait Tampiran Uraiyum** |
| Editor | : | **Dr. A. Dhamotharan**<br>South Asia Institute<br>The University of Heidelberg<br>Heidelberg, West Germany. |
| Publisher | : | **International Institute of Tamil Studies**, C.I.T. Campus,<br>Tharamani, Chennai - 600 113. |
| Publication No | : | 294 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Edition | : | First |
| Paper Used | : | TNPL 18.6 kg Super Printing |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 points |
| No.of Pages | : | 288 |
| Price | : | Rs. 65/- |
| No.of Copies | : | 1000 |
| Printed by | : | Parkar Computers |
| Subject | : | Commentary of Kuzhangai-thampiran to Nannul |

---

தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் அரிய நூல்களை வெளியிடும்
திட்டத்தில் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகின்றது.

முனைவர் இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# அணிந்துரை

ஒல்காப் பெரும் புலமை பெற்ற தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய இலக்கண நூல்களில் தலைசிறந்தது நன்னூலாகும். இந்நூலினை இயற்றிய பவணந்தி முனிவர் சமணத் துறவியாவார். இவர் 'சன்மதி' முனிவரின் மாணவர்.

**பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்**
**பன்னரும் சிறப்பிற் பவணந்தி**

என இந்நூற் சிறப்புப் பாயிரம் பவணந்தியார் ஊர் சனகை என்று கூறுகிறது (இலக்கண வரலாறு, புலவர் சோம. இளவரசு, ப.136). நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர் சனகை என்பது 'சனநாத புரத்தின் மரூஉ' என்பார். பவணந்தி முனிவர் பிறந்த ஊர் தொண்டை நாட்டில் உள்ளது என்று தொண்டை மண்டல சதகமும், கொங்கு நாட்டில் உள்ளது என்று கொங்கு மண்டல சதகமும் குறிப்பிடு கின்றன. கோபிநாதராவ் எனும் அறிஞர் தென்னாட்டில் இப்பெயர் உடைய ஊர்கள் நான்கு இடத்திற்கு மேல் உள்ளன என்று குறிப் பிட்டுள்ளார். எனவே பவணந்தியார் பிறந்த ஊர் பற்றித் தெளிவாக வரையறை செய்வது இயலாததாகிறது.

மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் (1178-1216) ஆளு கைக்கு உட்பட்ட சிற்றரசன் சீயகங்கன் கங்கநாட்டை அரசாண்டான். சீயகங்கன் வேண்டுகோளுக்கு இணங்கி, பவணந்தி முனிவர் நன்னூல் யாத்தார். நன்னூல் என்பதற்கு நல்லநூல் என்று பெயர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து வகை இலக் கணத்தையும் பவணந்தியார் எழுதினார் என்பதை 'அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணர' எனும் பாயிரத் தொடர் உணர்த்துகிறது. ஆயின் இன்று அவர் எழுதிய எழுத்து, சொல் ஆகிய இரு அதி

காரங்கள் மட்டுமே நமக்குக் கிடைக்கின்றன. மற்ற அதிகாரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

நன்னூலார் ஐந்து இலக்கணங்களையும் எழுதியிருப்பின் எழுத்து, சொல் ஆகிய இரு அதிகாரங்களைப் போற்றிய தமிழ் அறிஞர்கள் பிற அதிகாரங்களையும் போற்றிப் பாதுகாக்காமல் இருந்திருக்க முடியாது. மேலும் நன்னூலார் இயற்றியதாகச் சொல்லப்படுகின்ற பொருள், யாப்பு, அணி ஆகிய அதிகாரங்களில் இடம்பெற்றுள்ள ஒரு நூற்பா கூட நமக்குக் கிடைக்கவில்லை. எனவே நன்னூலார் எழுத்து, சொல் ஆகிய இரு அதிகாரங்களை மட்டுமே எழுதினார் என்று கொள்ளுவது ஏற்புடைத்து என்று அறிஞர் கருதுவர்.

நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் சீயகங்கன் அரசாண்ட காலத்தில் வாழ்ந்தவர். சீயகங்கன் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்த சிற்றரசன். எனவே பவணந்தி முனிவர் வாழ்ந்த காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கொள்ளலாம்.

நன்னூல் ஆசிரியர் பெரும் புலமை பெற்றவர் என்று இலக்கணக்கொத்து ஆசிரியர் சாமிநாத தேசிகர் புகழ்கிறார்.

**முன்னூ லொழியப் பின்னூற் பலவினுள்**
**நன்னூலார் தமக்கு எந்நூலாரும்**
**இணையோ என்னும் துணிவே மன்னுக**

என்பார் இலக்கணக் கொத்து ஆசிரியர் (இலக்கண வரலாறு, புலவர் சோம. இளவரசு, ப.140).

நன்னூல் உரையாசிரியர் சங்கரநமச்சிவாயர் 'நூலியற்றும் அறிவினையுடைய மக்கட்குப் பல்கலைக் குருசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான்' என்று போற்றியுள்ளார். வைத்தியநாத தேசிகர் தான் எழுதிய இலக்கண விளக்கம் எனும் நூலில் நன்னூலில் இருந்து 250 பாக்களை எடுத்து ஆண்டுள்ளார். இங்ஙனம் நன்னூலாசிரியர் அறிஞர் பெருமக்கள் பலராலும் பாராட்டப்படுகின்றார்.

நன்னூலுக்கு முதல்நூல் தொல்காப்பியமும் இளம்பூரணர் உரையுமாகும். நன்னூல் ஆசிரியர் 'அவிநயம்' என்ற தமிழ் நூலையும் 'சினேந்திரம்' எனும் வடமொழி நூலையும் தழுவி எழுதியுள்ளார்.

தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய இலக்கண, இலக்கிய நூல்களை நன்கு கற்றறிந்து உணர்ந்து மக்கள் வழக்காற்றையும் அறிந்து இந்நூலை யாத்துள்ளார். எனவே தொல்காப்பியத்திலும் சங்கப் பாடல்களிலும் காணப்படாத இலக்கண விதிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தமிழ் கற்கும் மாணவர்களுக்கு இலக்கணப் பயிற்சி இன்றியமையாதது. ஆகையால் பள்ளிப் பருவம் முதல் நன்னூல் கற்பிக்கப்படுகிறது. எனவே 'நன்னூலை அறியார் எந் நூலையும் அறியார்' என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நன்னூல், சிறப்புப் பாயிரம் பொதுப்பாயிரம் எனும் இரு பாயிரங் களையும் எழுத்து, சொல் எனும் இரு அதிகாரங்களையும் கொண் டமைந்த நூலாகும். சிறப்புப்பாயிரம், பொதுப்பாயிரம் ஆகியவற்றில் 56 நூற்பாக்கள் உள்ளன. பாயிரங்களில் இடம் பெற்றுள்ள நூற் பாக்கள் பழைய நூல்களான இறையனார் களவியல் உரை, இளம் பூரணர் உரை முதலியவற்றில் காணப்படுகின்றன. எனவே சிறப்புப் பாயிரத்தையும், பொதுப்பாயிரத்தையும் பவணந்தியார் எழுதவில்லை என்பார் மூதறிஞர் வ.சுப. மாணிக்கம்.

எழுத்ததிகாரம் 5 இயல்களையும் 202 நூற்பாக்களையும், சொல்லதிகாரம் 5 இயல்களையும் 204 நூற்பாக்களையும் ஆக மொத்தம் 406 நூற்பாக்களைக் கொண்டு அமைந்துள்ளது. தொல் காப்பியர் 6 இயல்களில் விரித்துக்கூறிய புணர்ச்சி விதிகளை நன்னூலார் 3 இயல்களில் சுருக்கி விளக்கியுள்ளார். மேலும் நன்னூல் நூற்பாக்கள் சுருக்கம், எளிமை, தெளிவு ஆகிய பண்பு நலன்களைக் கொண்டு விளங்குகின்றன.

**உரையாசிரியர்கள்**

**நன்னூலுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர்.** குறிப்பாக மயிலை நாதர், ஆண்டிப்புலவர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், முகவை ராமானுஜ கவிராயர், விசாகப் பெரு மாள் அய்யர், ஆறுமுக நாவலர், வை.மு. சடகோபராமாநுசாசாரியார் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நன்னூலுக்கு எழுதிய உரைகளில் மிகப் பழமையானது மயிலை நாதர் எழுதிய உரையேயாகும். சமணர்கள் போற்றும் 22ஆம் தீர்த் தங்கரரின் பெயர் நேமிநாதர். மயிலையில் நேமிநாதர் எழுந்தருளிய தால் மயிலைநாதர் எனப் பெயர் பெற்றார். அம்மயிலை நாதர் பெயரே உரையாசிரியர்க்கும் பெயர் ஆயிற்று.

நன்னூல் ஆசிரியர் வாழ்ந்த காலம் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கண்டோம். மயிலைநாதர் தம்முடைய நன்னூல் உரையில் சீயகங்கனையும் கங்கர் குடியையும் பாராட்டியுள்ளார் (நன்னூல் 359, 369, 413). கங்கர் தமிழகத்தில் பெருமையோடு இருந்த காலம் கி.பி.13 அல்லது 14ஆம் நூற்றாண்டு ஆகும். எனவே மயிலைநாதர் காலம் கி.பி.14 ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்.

நன்னூலாசிரியர் வாழ்ந்த காலத்தை ஒட்டி வாழ்ந்தவர் மயிலைநாதர். எனவே மயிலைநாதர் எழுதிய உரை மூலநூல் ஆசிரியரின் கருத்துக்கு ஏற்ப அமைகிறது. மயிலைநாதர் சமண சமயத்தைச் சார்ந்தவர். எனவே அவர் தம்முடைய உரையில் 'அருகதேவனைப்' போற்றிய பாடல்களையும் சமண சமய வழக்காறுகளையும் எடுத்துக் காட்டுகளாகத் தந்துள்ளார். மயிலைநாதர் உரையைக் 'காண்டிகையுரை' என்று உ.வே.சா. குறிப்பிடுவார். பேராசிரியர் க.ப. அறவாணன் அக்கருத்தை மறுத்துள்ளார். 'ஏடு எழுதியவர் பிழை' என்று அவருடைய 'எழு நூறு ஆண்டுகளில் நன்னூல்' என்ற ஆய்வு நூலில் சுட்டியுள்ளார்.

நன்னூலுக்கு உரை வகுத்த முதல் உரையாசிரியர் மயிலைநாதர் உரையைப் பதிப்புத்துறையின் முன்னோடி டாக்டர் உ.வே.சா. 1918இல் பதிப்பித்தார்.

**ஆண்டிப்புலவர்**

செஞ்சிப் பகுதியில் உள்ள ஊற்றங்கால் என்ற ஊரில் பிறந்தவர் ஆண்டிப்புலவர். அகவற்பாக்கள் பாடுவதில் வல்லவர். கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். 'ஆசிரிய நிகண்டு' என்னும் நூலை இயற்றியவர். நன்னூலுக்குப் பாட்டாலேயே உரை எழுதியுள்ளார். அதற்கு 'உரையறி நன்னூல்' என்று பெயரிட்டுள்ளார். இவ்வுரை இன்று நமக்குக் கிடைக்கவில்லை.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பாதுகாப்பில் உள்ள சுவடிகளில் 'நன்னூல் உரை' எனும் சுவடி இடம்பெற்றுள்ளது. ஆயின் அது ஆண்டிப்புலவர் உரை அன்று என்று மு. இராகவையங்கார் குறிப்பிட்டுள்ளார். எனவே இதுகாறும் தமிழ் உலகிற்கு வெளிவராமல் மறைந்து இருக்கும் 'உரையறி நன்னூலை'த் தமிழ் அறிஞர்கள் வெளிக்கொணர முன்வருதல் வேண்டும்.

**சங்கரநமச்சிவாயர்**

17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கரநமச்சிவாயர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். மயிலைநாதர் உரையில் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ள சமணக் கருத்துகளால் கசப்புற்ற சைவர்கள் நன்னூலுக்குச் சைவக் கருத்துகளை மேற்கோளாகக் காட்டும் புதிய உரை ஒன்று வெளிவர வேண்டும் என்று விரும்பினர். அவ்விழைவின் வெளிப்பாடு சங்கரநமச்சிவாயர் உரை ஆகும்.

சங்கர நமச்சிவாயரை நன்னூலுக்கு உரை எழுதத் தூண்டியவர் 'இலக்கணக் கொத்து' ஆசிரியர் சாமிநாத தேசிகர் ஆவார். ஊற்றுமலைச் சிற்றரசர் மருதப்பதேவர் வேண்டுகோளுக்கு இணங்கச் சங்கர நமச்சிவாயர் உரை எழுதினார். சங்கரநமச்சிவாயர் காலத்தில் வாழ்ந்த இலக்கணக் கொத்து ஆசிரியர் சாமிநாத தேசிகர், இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் ஆகியோர் மக்கள் மனதில் இருந்து மறைந்துவிட்டனர். ஆயின் அவர்கள் காலத்தில் வாழ்ந்த சங்கரநமச்சிவாயர் தமிழ் மக்களின் உள்ளங்களில் நன்னூல் விருத்தியுரை மூலம் நிறைந்து விளங்கினார்.

சங்கரநமச்சிவாயரின் விருத்தியுரையை ஆறுமுக நாவலர் 1851 இலும், 1887இலும் பதிப்பித்தார். சுவடிப் பதிப்பு முன்னோடி உ.வே.சா. அவர்கள் 1925இலும் 1935இலும் வெளியிட்டார்.

**சிவஞான முனிவர்**

சைவ சமயத்தைச் சார்ந்த சிவஞானமுனிவர் சங்கர நமச்சிவாயர் எழுதிய விருத்தியுரைக்கு மீண்டும் உரை எழுதினார். 'இலக்கணக் கொத்து' நூலில் உள்ள பாடல்களையும் இணைத்துப் புது நூலாகத் தந்தார். சங்கரநமச்சிவாயர் விருத்தியுரையை மேலும் விரித்துச் சிவஞான முனிவர் எழுதியதால் சங்கர நமச்சிவாயர் பெருமையை அறிய இயலுகிறது.

சங்க இலக்கியம், திருக்குறள், திருக்கோவையார், சைவத் திருமறைகள், சைவத் தத்துவங்கள் முதலியவற்றைச் சிவஞான முனிவர் தம்முடைய உரையில் எடுத்துக் காட்டியுள்ளார். சிவஞான முனிவர் 1785இல் சிவனடி சேர்ந்தார்.

சங்கரநமச்சிவாயர் உரையும் சிவஞான முனிவர் உரையும் இரண்டறக் கலந்து உருவான சிவஞான முனிவர் விருத்தி உரையை

வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், இவ்விரு அறிஞர் பெரு மக்களின் உரையையும் தனித்தனியே பிரித்துத் திருவாவடுதுறை ஆதீனம் வழியாகப் பதிப்பித்துள்ளார்.

**கூழங்கைத் தம்பிரான்**

சிவஞான முனிவர் எழுதிய நன்னூல் விருத்தியுரைக்குப் பிறகு நன்னூலுக்கு உரை எழுதியவர் கூழங்கைத்தம்பிரான் ஆவார். தம்பிரான் பிறந்தது காஞ்சிபுரம். இவருடைய காலம் 18ஆம் நூற்றாண்டு. வடமொழி, தமிழ்மொழி, தத்துவம் முதலிய துறைகளில் வல்லவராக விளங்கியவர். இவர் திருவாவடுதுறை மடத்தில் தம்பிரானாக இருந்தார் என்றும் திருவாரூர் மடத்தில் தம்பிரானாக இருந்தார் என்றும் திருவத்தூர் மடத்தில் தம்பிரானாக இருந்தார் என்றும் மூன்று வேறுபட்ட கருத்துகளை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவர் கூழங்கைத் தம்பிரான் என்று பெயர் பெற்றதற்குரிய காரணத்தைத் தமிழ்ப் புலவர் அகராதி பின்வருமாறு விளக்குகிறது.

"இவரது இயற்பெயர் தெரியவில்லை. கை கூழையானது பற்றி இவர் இப்பெயர் பெற்றார். இவர் திருவாரூர் மடத்தில் சில காலம் தம்பிரானாக இருந்தபோது மடாதிபதி சாட்டிய குற்றச்சாட்டை மறுத்து, தான் குற்றமற்றவர் என்று காட்டப் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியைப் பிடித்தமையால் இவரது கை கூழையாயிற்று" (தமிழ்ப்புலவர் அகராதி - பக்கம் 138).

தமிழிலக்கண வரலாற்று ஆசிரியர்கள் தமிழ்ப் புலவர் அகராதி குறிப்பிடுவது போன்று கூழங்கைத் தம்பிரான் பெயர் பெற்ற வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளனர். எனினும் இவர் உரையைப் பதிப்பித்த முனைவர் அ. தாமோதரன் அவர்கள் கருதுவதைப் போன்று இது புனைகதை போன்று தோன்றுகிறது.

தமிழகத்தில் வாழ்ந்த கூழங்கைத் தம்பிரான் யாழ்ப்பாணம் சென்று வள்ளல் வைத்தியலிங்கம் செட்டியார் ஆதரவில் வண்ணார் பண்ணையில் வாழ்ந்து தமிழ் இலக்கியம், இலக்கணம் பலருக்குக் கற்பித்தார். ஆறுமுக நாவலரின் தந்தையார் கந்தப்பிள்ளை, மயில் வாகனப் புலவர், இருபாலை நெல்லை முதலியார் இவருடைய மாணவர்கள் ஆவார். அப்போது கிறித்தவப் பாதிரிமார்களின் உறவும் பல்கிற்று. கபிரியேல் பச்சேக்கோ இவரிடம் தமிழ் பயின்றார். சித்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை, கூழங்கையார் வண்ணம், நல்லைக் கலிவெண்பா ஆகிய நூற்களை இயற்றியுள்ளார்.

இறுதிக் காலத்தில் கிறித்தவம் தழுவிய இவர், 'யோசேப் புராணம்' எனும் காவியத்தை 21 காண்டங்களில் 1023 பாக்களில் வடித்துள்ளார். இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. டச்சு, போர்ச் சுக்கீசிய மொழிகளிலும் வல்லாண்மை பெற்ற இவர் யாருக்கும் அஞ்சாதவர். நடுவுநிலை பிறழாதவர். இவர் எழுதிய நன்னூல் உரை கிடைக்கவில்லை என்று அறிஞர் மு. அருணாசலம், புலவர் சோம. இளவரசு, பேராசிரியர் மு.வை. அரவிந்தன், முனைவர் க.ப. அற வாணன், புலவர் இளங்குமரன் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு மறைந்து போனதாகத் தமிழ் அறிஞர்களால் கருதப் பட்ட கூழங்கைத் தம்பிரான் உரையைப் பிரிட்டிஷ் நூலகத்தில் கீழ்த் திசைப் பகுதியில் இருந்து எடுத்து முதல் பதிப்பாக 1980இல் முனைவர் அ. தாமோதரன் செர்மனியில் பதிப்பித்துள்ளார். தமிழ் அன்னை இழந்ததை மீட்டுத் தந்த முனைவர் அ. தாமோதரன் பாராட்டுக்குரியவர். எனவே தமிழ் உலகு அவர் இருக்கின்ற திசை நோக்கி வணங்கக் கடமைப்பட்டுள்ளது. 1980இல் செர்மனியில் வெளிவந்த இந்நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மறுபதிப்புச் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறது.

இந்நூலினை வெளியிட அனுமதி அளித்த முனைவர் அ. தாமோதரன் அவர்களுக்கும், அரிய நூல்கள் வெளியிடும் திட்டத் தின்கீழ் இந்நூலினை வெளியிட நிதி நல்கிய தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ச. நாகராசன் அவர்களுக்கும் நன்றி.

நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும், ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் திருமிகு த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய பார்க்கர் கம்பியூட்டர்ஸ் வே. கருணாநிதி அவர்களுக்கும் எங்கள் நன்றி.

**இயக்குநர்**

# பதிப்புரை

தமிழிலக்கண வரலாற்றின் பெருமைக்குக் காரணம் காலப் பழமை ஒன்றுமட்டுமல்ல; அதன் தொடர்நிலைப் பாங்குமாகும். இரண்டாயிரம் ஆண்டுகளாக இலக்கணங்கள் போற்றிப் பயிலப்படு வதும் மொழியின் மாற்ற வளர்ச்சிகட்கேற்பப் புதுப்புது இலக்கணங் கள் மரபு முறையையொட்டி இயற்றப்படுவதும் இந்திய மொழி களில் தமிழ் ஒன்றற்கேயுரிய சிறப்புகளாகும். செறிவான நடையை யுடைய இலக்கணச் சூத்திரங்களை உரையின்றித் தெளிவாகப் புரிந்து கொள்வது சிறிது கடினமாதலின் இலக்கண நூல்களின் தோற்ற வளர்ச்சிகளோடு உரைகளின் தோற்ற வளர்ச்சிகளும் இணைந்து ஒன் றாகி விட்டன. எனவேதான் இலக்கண மரபைப் போலவே உரை மரபும் தமிழில் வேரூன்றி வளர்ந்துள்ளது. இவற்றை வெவ்வேறாகப் பிரித்து ஆராய்வதுகூடச் சிறிது இடர்ப்பாட்டிற்குரியதாகும். இலக்கணங் களையும் அவற்றின் உரைகளையும் தொடர்ந்து ஆர்வத்தோடு கற்பதன் மூலமாகவும் கற்பிப்பதன் மூலமாகவும் அவற்றின் முழு வளர்ச்சிக்கு வித்தூன்றப்பட்டது. அச்சுப் பழக்கத்திற்குப் பிறகு அந்த ஆர்வம் நன்றாகப் பரவி வளர்ந்தது. இதன் விளைவாகப் பழைய ஓலைச்சுவடிகள் தேடப்பட்டன; கண்டுபிடிக்கப்பட்டன; தொகுக்கப் பட்டன; பதிப்பிக்கப்பட்டன. கல்வி நிலையங்கள் இலக்கணங் களைக் குறிப்பிட்ட சில உரைகளோடு பாடத்திட்டத்தில் சேர்த்ததால் அவற்றின் பதிப்புகள் திருந்தலாயின. இந்த முயற்சியில் தமிழறிஞர் களோடு அயல் நாட்டு அறிஞர்களும் ஈடுபட்டுச் செயலாற்றிய தொண்டு குறிப்பிடத்தக்கது. ஒப்பியற் கல்வி முறையும் மொழியிய லின் வளர்ச்சியும் இலக்கணக் கல்விக்குப் புதியதொரு எழுச்சியை ஏற்படுத்தின.

இத்தகைய வளர்ச்சி நிகழ்ந்துங்கூட இன்றுவரை எந்தவொரு தமிழிலக்கணத்திற்கோ அல்லது இலக்கண உரைக்கோ திருத்தப் பதிப்பு வெளிவராமல் இருப்பது வருந்தற்குரிய செய்தியாகும். இதைவிட வியப்பளிக்கும் உண்மை ஒரு சில இலக்கணங்களும் இலக்கண உரைகளும் இன்னும் அச்சாகாமலே இருப்பதுதான். இந்த நிலைமைக்குக் காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை யாக மூன்றைக் குறிப்பிடலாம்.

1. தமிழகத்திலும் அதன் அண்டை மாநிலங்களிலும் இலங்கை போன்ற புறநிலைப் பகுதிகளிலும் சிதறிக் கிடக்கும் தமிழ்ச் சுவடிகள் முறையாகவும் முழுமையாகவும் தேடிச் சேகரிக்கப் படாத நிலை.

2. அச்சிடும் முறை தமிழகத்தில் நன்றாகப் பயிற்சிக்கு வரும் முன்பாகவே ஆயிரக்கணக்கான தமிழ்ச்சுவடிகள் இந்திய மண்ணி லிருந்து இடம் பெயர்ந்துவிட்ட நிலை.

3. திட்டமிட்டுப் பணியாற்றி என்னென்ன ஏடுகள் எங்கெங்கே குடி யேறியுள்ளன என்று தெரிந்துகொள்ள முயலாமலே சில நூல் களும் உரைகளும் அழிந்துவிட்டனவென்று உறுதியாக நம்பிக் கொண்டிருக்கும் நிலை. அடிப்படையான இந்த மூன்று காரணங் களினால் தமிழிலக்கிய வரலாற்றின் பகுதிகள் சில இன்னும் தெளிவுபடாமலே இருக்கின்றன.

காலக்கோலத்தினால் இந்திய மண்ணிலிருந்து பயணமாகி ஐரோப் பிய நூலகங்களில் குடியேறிவிட்ட எண்ணற்ற தமிழ்ச் சுவடிகளுள் ஒன்றே 'நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும்' ஆகும். இது பிரிட்டீஷ் நூலகத்தின் (The British Library) கீழ்த்திசைப் பகுதியில் (Oriental Department) பத்திரமாக இருக்கிறது. இந்த நூலகத்தின் கையெழுத்துப் பட்டியலில் (Handlist) 'Nannul, a Tamil grammar' என்ற பெயரில் Oriental 2724 என்ற எண்ணுடன் பதிவாகி யுள்ளது. இது ஒரு காகிதப் பிரதி. மையினால் (ink) எழுதப்பட்டுள் ளது. சிதைவு சிறிதுமின்றி நன்றாகப் 'பைண்டு' செய்து வைக்கப் பட்டுள்ளது. ஒன்று முதல் இருநூற்று நாற்பத்தொன்று வரை பக்க மிடப்பட்டு முழுமையான நிலையில் இருக்கிறது. பக்கத்திற்குச் சராசரி இருபத்தைந்து வரிக்குக் குறையாமல் எழுதப்பட்டுள்ளது. நூற்றெட்டாவது பக்கம் வரையில் கோடிடாமலும் அதற்குப்பின்னர் கோடிட்டும் அடித்தல் திருத்தல் அதிகமின்றி எளிதில் படிக்குமாறு தெளிவாக எழுதப்பட்டுள்ளது. இடையிடையே சிற்சில இடங்களில் வேறு மையினால் திருத்தப்பட்டிருக்கிறது. இது ஓலைச்சுவடியோ அல்லது ஆசிரியரின் மூலக்கையேடோ (Autograph) அல்ல.

டாக்டர் ஆர்தர் கோக் பர்னல் (Dr. Arthur Coke Burnell (1840-1882)) என்பவருடைய சொந்த நூலகம். அவர் காலமாகிவிட்ட பின் 1884வது வருடம் ஜனவரி மாதம் விற்கப்பட்டது. அந்த விற்பனைக் குப் பிறகு, இன்னும் சரியாகச் சொன்னால் 18.1.1884 முதல்

பிரிட்டிஷ் நூலகத்தின் கீழ்த்திசைப் பிரிவில் இந்தச் சுவடி இருந்து வருகிறது. 1884வது ஆண்டு பிப்ரவரி மாதம் ஆர்.பி.எஸ். (RPS) ஜி.சி.டி. (G.C.T.) என்ற முதலெழுத்துக்களையுடைய இரு நூலக உதவியாளர்களால் இந்தச் சுவடி பரிசோதிக்கப்பட்டு ஏட்டு (folio) முறையில் மூன்று முதல் நூற்றிருபத்தொன்று வரையில் புதிதாக எண்ணிடப்பட்டுள்ளது. மேலே விவரிக்கப்பட்ட இந்தச் சுவடியே இப்போது நூலுருவில் முதன்முதலாக வெளிவருகிறது.

தொல்காப்பியத்திற்குப் பின்னர் இடைக்காலத்தில் எழுந்த இலக்கண நூலே நன்னூல். இது பவணந்தி என்னும் சமண முனிவரால் கி.பி.12ம் நூற்றாண்டின் இறுதி அல்லது 13ம் நூற்றாண்டின் துவக்கத்தில் இயற்றப்பட்டிருக்கலாமென இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் கருதப்படுகிறது. மறைந்தவை போகத் தமிழில் காணப்படும் இலக்கணங்களில் நன்னூலே மிகச் சிறந்த இலக்கணமாகும். காலத்தால் மிகப் பிந்தியதாயினும் தொல்காப்பியத்தை விடவும் பரவலாக விரும்பிப் பயிலப்பட்டு வரும் இலக்கணம் இது என்பதைத் தமிழுலகு நன்கு அறியும்.

இந்த இலக்கணத்திற்கு மயிலைநாதரால் கி.பி.14வது நூற்றாண்டில் ஒரு உரை இயற்றப்பட்டது. கிடைத்துள்ள நன்னூல் உரைகளில் பழமையானது இதுவே. இந்த உரையை அடியொற்றி ஆனால் மேலும் பல விளக்கங்களைச் சேர்த்து விரிவுபடுத்திச் சங்கர நமச்சிவாயர் என்பவர் கி.பி.17வது நூற்றாண்டில் மற்றொரு உரை செய்துள்ளார். இந்த இரு உரைகளும் பொழிப்புரைகளாகும். தமிழ் நாட்டின் தலைசிறந்த பதிப்பாசிரியராகிய உ.வே. சாமிநாதையர் இந்த இரு உரைகளையும் முறையே 1918லும் 1925லும் செப்பமாகப் பதிப்பித்துள்ளார். பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞான முனிவர் சங்கரநமச்சிவாயரின் உரையில் சிற்சில இடங்களில் புதிய விளக்கங்களைச் சேர்த்து அந்த உரையை மேலும் புதுக்கினார். இது 'நன்னூல் விருத்தியுரை' என்றும் 'புத்தம் புத்துரை' என்றும் வழங்கப்படுகிறது. இந்த உரையை நல்லூர் ஆறுமுக நாவலர் நல்ல முறையில் 1851ல் வெளியிட்டுள்ளார். மேலே குறித்த மூன்று உரைகளுமே இன்றளவும் தமிழறிஞர்களால் விரும்பிப் பயிலப்படுகின்றன. பயிலுவதற்குச் சிறிது கடினமாக இந்த உரைகள் தோன்றிய காரணத்தினால் விசாகப்பெருமாளையர், இராமானுச கவிராயர், ஆறுமுகநாவலர், சடகோபராமாநுசாச்சாரியார் முதலியோர் 19ஆம் நூற்றாண்டில் நன்னூலுக்குக் காண்டிகையுரைகளை இயற்றி

னார்கள். இவைகட்குப் பின்னர் மாணவர்கட்குப் பயன்படும் முறையில் பதவுரை, சுருக்கவுரை, தெளிவுரையென்று பல்வேறு புத்துரைகள் தோன்றலாயின; ஆங்கில மொழிபெயர்ப்புகளும் தோன்றின. இவைகள் பெரும்பாலும் அச்சாகியுள்ளன; சில பயிற்சியில் உள்ளன; பல அரிதாகிவிட்டன.

நன்னூலுக்குத் தோன்றிய முதல் காண்டிகையுரை 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கூழங்கைத்தம்பிரான் (1699 - 1795) என்பவரால் இயற்றப்பட்டதேயாகும். இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர்; தஞ்சைப் பகுதியில் வாழ்ந்தவர். பின்னர் ஈழநாடு சென்று ஆசிரியராகப் பணியாற்றி அங்கேயே உயிர் நீத்த தமிழ் நாவலர். இவருடைய பெயர் பற்றிய ஒரு கதையும் (அறவாணன், 1977, பக்.168) **உண்டு. பொற்கைப் பாண்டியன், சீத்தலைச் சாத்தனார் போன்ற பெயர்களுக்கு வழங்கும் கதைகளைப் போலவே இந்த கதையும் எனக்குத்** தோன்றுகிறது; உண்மையென்று உறுதியாகச் சொல்ல எனக்குத் தயக்கமாகவும் இருக்கிறது. சைவராக இருந்த இவர் தம் வாழ்நாளின் பிற்பகுதியில் கிறித்தவத்தைத் தழுவியதாகவும் (அரவிந்தன், 1968, பக்.479) தெரிய வருகிறது. நன்னூல் காண்டிகையைத் தவிர வேறு சில நூல்கள் இயற்றினார் என்பதும் இவர் வரலாறு பற்றிய மற்ற செய்திகளும் மேலே குறிப்பிட்ட இரு நூல்களிலும் பிற இலக்கிய வரலாற்று நூல்களிலும் காணப்படுகின்றன.

மயிலைநாதர் தம்முடைய உரையில் ஒரு சில சூத்திரங்களுக்குச் (உ.ம்: சிறப்புப் பாயிரம், 55, 107, 150, 187) சூத்திரத்திலுள்ள சொற்களைப் பதங்களாகவும் தொடர்களாகவும் மீண்டும் எடுத்தெழுதிப் பொருள் விளக்கியுள்ள பதவுரை முறையைத் தொடக்க முதல் இறுதி வரையில் கூழங்கைத்தம்பிரான் கடைப்பிடித்துத் தம்முடைய உரையை அமைத்துள்ளார். சுவடியின் இறுதியில் உள்ள குறிப்பும் இவ்வுரையைக் காண்டிகையுரையென்றே நமக்கு அறிவிக்கிறது. பொழிப்புரையாக இருக்கும் மயிலைநாதர் உரையைக் கற்போருக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்ற கருத்தே கூழங்கையர் தமது தலைநோக்காகக் கொண்டிருத்தலின் பெரும்பாலும் மயிலைநாதரின் உரையைப் பின்பற்றியே தம்முடைய உரையை அமைத்துள்ளார். ஆயினும் சங்கர நமச்சிவாயர் உரை நேமிநாத உரை ஆகியவற்றையும் சிற்சில இடங்களில் இவர் பயன்படுத்தியுள்ளாரென்று தெரிகிறது. முழுக்க முழுக்க மயிலைநாதர் உரையையே இவர் பின்பற்றினாலும் தம்முடைய கருத்துக்களை ஆங்காங்கே குறிப்பிடத்

தவறவில்லை. இதுபோன்ற பகுதிகள் குறைவுதான் என்றாலும் பாராட்டிற்குரிய நல்ல பகுதிகள் என்பதில் ஐயமில்லை. இவருடைய நடைப்போக்கு, இவர் கொண்டுள்ள பாடம், இவர்காட்டும் உதா ரணங்கள், இவர் எடுத்தாளும் மேற் கோள்கள் முதலிய செய்திகள் தனியே ஆராயப்படுதற்குரியன வாதலின் அவை இங்கே இடம் பெற வில்லை.

கூழங்கைத்தம்பிரான் ஒரு ஆசிரியர். ஆகையால் பாடம் சொல் லும் முறையில், தெளிவான போக்கில், மாணவர்க்குப் பயன்படும் வகையில் தமது உரையைப் பதவுரையாகச் செய்துள்ளார். நன்னூ லுக்கு எழுந்த இந்த முதல் காண்டிகையுரை ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் வெளியாக நேரிட்டதை நினைக்கும்போது தமிழியல் ஆராய்ச்சி எவ்வளவு பின்தங்கியுள்ளது என்ற எண்ணமும் இன்னும் நீண்டதொரு வழியை அது கடந்தாக வேண்டுமென்ற உணர்வும் ஏற்படுகின்றன. அதே நேரத்தில் இப்போதாவது வெளி யாகும் வாய்ப்பு இந்த உரைக்கு ஏற்பட்டதை எண்ணும்போது பெரு மகிழ்ச்சி உண்டாகிறது; பிற நினைவுகள் அனைத்தும் மறந்து போகின்றன. நீண்ட காலமாக மறைந்து கிடந்த இந்தப் பழைய உரையைத் தமிழறிஞர்களுக்கு வழங்குவதில் ஹைடல்பெர்க் பல்கலைக்கழகத் தெற்காசிய நிறுவனத்தில் இந்தியவியல் துறை (Department of Indology, South Asian Institute of the University of Heidelberg) பெருமைப்படுகிறது. இந்தப் பணியை, என்னைக் கருவி யாகக்கொண்டு நிறைவேற்றி வைத்த இறைவன் திருவுளத்தை எண்ணும்போது எனக்கு வியப்புணர்வே மேலிடுகிறது.

இந்தச் சுவடியில் பாயிரம் தொடங்கிப் பதினான்காவது சூத்திரம் வரையில்தான் மூலமும் உரையும் எழுதப்பட்டுள்ளன. பின்னர் நூலிறுதிவரை மூலமின்றிப் பதவுரை மட்டுமே எழுதப்பட்டுள்ளது. 'நன்னூல் மூலமும் கூழங்கைத்தம்பிரான் உரையும்' என்ற நூலின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதாலும் ஒரே முறையாக இருக்கவேண்டு மென்ற நோக்கத்தாலும் மயிலைநாதர் உரை (1918)யையொட்டிப் பதவுரையின் உதவி கொண்டு நூல் முழுதும் இப்பதிப்பில் மூலம் தரப்பட்டுள்ளது. சிறப்புப் பாயிரம் தொடங்கி இயல்தோறும் தனித் தனியே சூத்திரங்களுக்கு இச்சுவடியில் எண்ணிடப்பட்டுள்ளது. மயிலைநாதர் உரையில் காணப்படும் "அவ்வினையாளரொடு" எனத் தொடங்கும் 44வது சூத்திரமும் "அதுமுன்வருமன்று" எனத் தொடங் கும் 179வது சூத்திரமும் இந்த உரையில் அவைகளுக்கு முந்திய

சூத்திரங்களோடு முறையே இணைத்து ஒன்றாகக் கொள்ளப்பட்டுள் ளன. அந்த முறையிலேயே அவையிரண்டும் இப்பதிப்பில் இணைத் துத் தரப்பட்டுள்ளன. வழக்கத்தைப் பின்பற்றியும் மேற்கோள் வசதிக் காகவும் சூத்திரங்களுக்குத் தொடரெண் கொடுக்கப்பட்டுள்ளது. இது சுவடியில் இல்லாத ஒன்று. மரபையொட்டிச் சூத்திரங்களுக்கு ஆங்காங்கே பொருள் தலைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இது வும் சுவடியில் இல்லாத ஒன்றாகும். 'கடவுள் துணை' 'முருகன் துணை' உட்பட மற்றவை அனைத்தும் சுவடியில் உள்ளவாறே எடுத் தெழுதியுள்ளேன். மிகச்சில பிழைகள் மட்டுமே திருத்தப்பட்டுள்ளன; தெளிவாகத் தெரிந்திருந்தும் சிலவற்றைத் திருத்த விரும்பவில்லை; விடுபாடுகள் புள்ளியிட்டுக் காட்டப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் சூத்திர முதற்குறிப்பு அகராதியும் இடம்விளங்கா மேற்கோள் அக ராதியும் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வுரைக்குச் செய்ய வேண்டிய பணி இன்னும் நிறைய உண்டு என்பது உண்மைதான். இது ஆசிரியரின் மூலக்கையேடு இல்லை என்பதாலும் ஓலைச்சுவடி ஒன்றைப் பார்த் துப் பிரதி செய்யப்பட்ட நகலென்று இச்சுவடியை நான் நம்புவதாலும் திருத்தம் பெறவேண்டிய பகுதிகள் உண்டு என்பதாலும் இந்த உரையை உடனே தமிழுலகுக்கு வழங்கவேண்டுமென்ற ஆர்வத்தா லும் விளக்கம், அடிக்குறிப்பு, பாடபேதங்கள், உதாரணங்கள் முத லிய துணைப் பகுதிகள் இங்கு இடம் பெறவில்லை. கூழங்கைத் தம்பிரானுடைய உரையாராய்ச்சியில் இது ஒரு தொடக்கமே; கடக்க வேண்டிய தூரம் செய்ய வேண்டிய பணி இன்னும் எத்தனையோ எஞ் சிக் கிடக்கின்றன.

இலக்கண வரலாற்றில் இருள் கவிந்திருந்த ஒரு சிறு பகுதி யில் இந்த வெளியீட்டின் மூலம் ஒளி மிகு அகல் விளக்கு ஒன்று ஏற்றப்படுகிறது. இந்த ஒளியில் ஒரு வேளை இவ்வுரைக்குரிய வேறு சுவடிகள் இனிமேல் புலப்படக்கூடும். அதுவரையில் இப் பதிப்பை முதனிலைப் பதிப்பகாவே கருதுமாறு தமிழுலகைக் கேட் டுக் கொள்கிறேன். ஒளிப்படத்தைப் (microfilm) பார்த்துப் படிப்பதிலும் எழுதுவதிலும் உள்ள இடர்ப்பாடுகளை எண்ணிப் பார்த்தால் இப் பதிப்பின் பெருமை புலப்படாமற் போகாது. இதன் அருமைப் பாட் டினை அறிந்து உரிய வகையில் பயன்படுத்திக் கொள்வது தமிழ்ப் பெருமக்களின் கடமை.

இந்த முயற்சியில் எனக்கு உதவிய சிலரை நன்றியுணர்வோடு இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். இந்தச் சுவடியை நன்கு

பேணி வைத்திருந்ததோடு வெளியிட அனுமதி வழங்கி உதவினர் பிரிட்டீஷ் நூலகத்தார்; இதனை வெளியிட வேண்டுமென வற்புறுத் தியதோடு வெளியிடும் உரிமையை விரைந்து வாங்கித் தந்தவர் திருமதி. கௌர் (Mrs. Albertine GAUR) ஆவர்; ஏடு தேடும் பணிக்குப் பொருளுதவி செய்ததோடு நூலை வெளியிடும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர் தெற்காசிய நிறுவனத்தினர்; மறைந்து கிடந்த சுவடியொன்றைக் கண்டுபிடித்த விவரத்தைக் கேட்டவுடன் பெரு மகிழ்ச்சியுற்று உடனே வெளியிட்டுவிட வேண்டுமென ஊக்க மூட்டியதோடு ஒரு முன்னுரையினையும் வழங்கியவர் பேராசிரியர் பெர்கர் (Professor Hermann BERGER); டாக்டர் பர்னலைப் பற்றிய குறிப்புகளைக் கேட்டவுடன் தொகுத்துத் தந்தவர் திருமதி மீராபாய் டாஸன் (Mrs M. DAWSON, Indian Office Library, London) என்பவராவர்; பதிப்புரையைப் படித்து அதற்கு ஒரு ஆங்கிலச் சுருக் கத்தைத் தயாரித்தவர் திரு. எவலின் மயர் (Miss Eveline MEYER) என்ற தமிழ் மாணவியாவார்; இந்தப் பதிப்புப் பணியை ஏற்றுச் செய் யும் அறிவையும் ஆற்றலையும் எனக்கு வழங்கியவர் என் பேராசிரியர் வி.ஐ. சுப்ரமணியம் (Professor V.I. SUBRAMANIAM) ஆவார்; எழுத்துப் பணியில் ஈடுபட்டிருக்கும் போதெல்லாம் என்னை விட்டு விலகி இருந்தவளும் அயர்ச்சி நேரும் போதெல்லாம் ஊக்கமளித்த வளும் என் மனைவி. இவர்கள் அனைவர்க்கும் என் நெஞ்சு நிறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயன்ற வரையில் தெளிவாக எழுத முயன்றுள்ளேன். எனினும் கையெழுத்து ஒரே அளவில் எல்லாப் பக்கங்களிலும் அமையவில்லை; அமையவும் முடியாது. அழகைக் காட்டிலும் பிழையின்மைக்கு முத லிடம் கொடுத்திருக்கிறேன். எங்காவது ஓரிரு இடங்களில் கை யெழுத்துத் தெளிவின்மை அழகின்மை காரணமாகப் படிக்கும் போது யாருக்கேனும் உறுத்தலுணர்வு ஏற்பட்டால் இதைவிடத் தெளிவாக வும் அழகாகவும் எழுதும் திறமையை இறைவன் இப் பிறவியில் எனக்கு அளிக்கவில்லையென்ற அமைதியை அவருக்குத் தெரிவித் துக் கொள்கிறேன்.

இங்ஙனம்

**அ. தாமோதரன்**
தெற்காசிய நிறுவனம்
ஹைடல்பெர்க் பல்கலைக்கழகம்
ஹைடல்பெர்க், மே.ஜெர்மனி,

காணிக்கை

கல்வித்துறையை எனக்குக் காட்டிய

பேராசிரியர்

## அ. சிதம்பரநாதனார்

அவர்கட்கு

## பயன்பட்ட நூல்கள்


1. அரவிந்தன், மு.வை., **உரையாசிரியர்கள்**, சிதம்பரம்: மணிவாசகர் நூலகம், 1968.

2. அருணாசலம், மு., **தமிழ் இலக்கியவரலாறு**, பதின்மூன்றாம் நூற்றாண்டு, திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம், 1970.

3. அறவாணன், க.ப., **எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்**, சென்னை: தமிழ்க்கோட்டம், 1977.

4. இளவரசு, சோம., **இலக்கண வரலாறு**, சிதம்பரம்: தொல்காப்பியர் நூலகம், 1963.

5. சாமிநாதையர், உ.வே. (ப-ர்.), **நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும்**, சென்னை: வைஜயந்தி அச்சுக்கூடம், 1918.

6. சாமிநாதையர், உ.வே. (ப-ர்.), **நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயருரையும்**, நான்காம் பதிப்பு, சென்னை: ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, 1953.

7. தண்டபாணி தேசிகர், ச. (ப-ர்.), **நன்னூல் விருத்தியுரை**, இரண்டாம் பதிப்பு, சென்னை: பாரி நிலையம், 1971.

## நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பு அகராதி

| | |
|---|---|
| அக. | - அகத்தியம் |
| அகம். | - அகநானூறு |
| ஆத்தி. | - ஆத்திசூடி |
| இந்திர. | - இந்திரவிழவூரெடுத்த காதை |
| இறை. | - களவியல் என்னும் இறையனார் அகப்பொருள் |
| எழு. | - எழுத்ததிகாரம் |
| ஐங். | - ஐங்குறுநூறு |
| ஐந். | - ஐந்திணையைம்பது |
| கட்டுரை. | - கட்டுரை காதை |
| கடவுள். | - கடவுள் வாழ்த்து |
| கல்யாணச். | - கல்யாணச் சருக்கம் |
| கலி. | - கலித்தொகை |
| களவழி. | - களவழி நாற்பது |
| கானல். | - கானல்வரி |
| குறள். | - திருக்குறள் |
| குறு. | - குறுந்தொகை |
| கொன்றை. | - கொன்றை வேந்தன் |
| சிலம்பு. | - சிலப்பதிகாரம் |
| சீயவதை. | - சீயவதைச் சருக்கம் |
| சீவக. | - சீவக சிந்தாமணி |
| சூளா. | - சூளாமணி |
| சொல். | - சொல்லதிகாரம் |
| திணைமாலை. | - திணைமாலை நூற்றைம்பது |
| திரி. | - திரிகடுகம் |
| திருமுருகு. | - திருமுருகாற்றுப்படை |
| தூது. | - தூதுச் சருக்கம் |
| தே. | - தேவாரம் |

| | |
|---|---|
| தொல். | - தொல்காப்பியம் |
| நற். | - நற்றிணை |
| நன். | - நன்னூல் |
| நாலடி. | - நாலடியார் |
| நான்மணி. | - நான்மணிக்கடிகை |
| பட்டின. | - பட்டினப்பாலை |
| பதிற். | - பதிற்றுப்பத்து |
| பரி. | - பரிபாடல் |
| பழமொழி. | - பழமொழி நானூறு |
| பு.வெ. | - புறப்பொருள் வெண்பாமாலை |
| புறம். | - புறநானூறு |
| பெரும்பாண். | - பெரும்பாணாற்றுப்படை |
| பொருந. | - பொருநராற்றுப்படை |
| பொருள். | - பொருளதிகாரம் |
| மலைபடு. | - மலைபடுகடாம் |
| முத்தொள். | - முத்தொள்ளாயிரம் |
| வஞ்சின. | - வஞ்சினமாலை |

## பிற குறியீடுகள்

| | |
|---|---|
| இ-ள். | - இதன் பொருள் |
| உ-ம். | - உதாரணம் |
| சூ-ம். | - சூத்திரம் |
| பக். | - பக்கம் |
| ப-ர். | - பதிப்பாசிரியர் |
| வ-று. | - வரலாறு |

# உள்ளுறை


பாயிரம் 23

**எழுத்ததிகாரம்**

எழுத்தியல் 51

பதவியல் 77

உயிரீற்றுப் புணரியல் 91

மெய்யீற்றுப் புணரியல் 120

உருபு புணரியல் 136

**சொல்லதிகாரம்**

பெயரியல் 145

வினையியல் 182

பொதுவியல் 202

இடைச்சொல்லியல் 249

உரிச்சொல்லியல் 263

சூத்திர முதற் குறிப்பு அகராதி 273

இடம் விளங்கா மேற்கோள் அகராதி 284

# நன்னூல் மூலமும்

# கூழங்கைத் தம்பிரான்உரையும்

## சிறப்புப் பாயிரம்

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியி னொருதா னாகி முதலீ
றொப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் னலர்தரு தன்மையின்
மனவிரு ளிரிய மாண்பொருண் முழுவதும்
முனிவற வருளிய மூவறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலின்
அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதும்
தனதெனக் கோலித் தன்மத வாரணம்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை வினோத னமரா பரணன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே.

சூத்திரம், இஃது தமிழினது தன்மையும் இந்நூற்குச் சிறப்புப் பாயிர மும் கூறியது.

(இதன் பொருள்) மலர்தலை உலகின் - பரந்த இடத்தை யுடைய பூமியின் கண்ணே, மல்கிருள் அகல - நிறைந்த இருள் நீங்க, இலகொளி பரப்பி - விளங்காநின்ற ஒளியை விரித்து, யாவையும் விளக்கும் - நிலநீர் முதலிய எல்லாப் பொருளையும் காட்டும், பரிதி யின் - ஆதித்தியனைப் போல, ஒரு தானாகி - உலகுக்கெல்லாம் தானொரு முதலேயாகி, முதலீறு ஒப்பளவு - தோற்றமும் நாசமும் உவமையும் பிரமாணமும், ஆசை முனிவிகந்து உயர்ந்த - விருப்பும் வெறுப்புமின்றி ஞான குணங்களான் மிக்க, அற்புத மூர்த்தி - ஆச்சரி யத்தையுடைய இறைவனானவன், தன்னலர்தரு தன்மையின் - தன் னுடைய விரிந்த தன்மையாகிய கருணையினாலே, மனவிருள் இரிய - பூவுலகத்தினுள்ள உயிர்களுடைய மனங்களினுண்டான அறியாமை யான இருள் நீங்க, மாண்பொருள் முழுவதும் - மாட்சிமைப்பட்ட அற முதற் பொருளனைத்தையும், முனிவற அருளிய - பதினெண் நிலத்துள் ளார் எல்லாரும் விரும்ப அருளிச்செய்த, மூவறு மொழியுளும் - பதி னெண் நிலத்து வழங்கும் பதினெட்டுப் படையினுள்ளும், குணகடல் குமரி குடகம் வேங்கடம் - கீழ்கடல் தென்குமரி மேல்கடல் வடவேங் கடம், எனுநான்கு எல்லையின் - இச்சொன்ன நான்கு கரைக்குமுட் பட்டு வழங்காநின்ற; இருந்தமிழ்க் கடலின் - பெரிய தமிழெனும் கடலினுள், அரும்பொருள் ஐந்தையும் - எழுத்துச் சொல் பொருள் யாப்பு அலங்காரம் என்னும் அரிய பொருள் ஐந்தையும், யாவரும் உணரத் - கற்றவர் கல்லாதவர் யாவரும் உணரும்படி, தொகை வகை விரியிற் றருகென - தொகையும் வகையும் விரிவும்படி இம்மும்மை யானும் விளங்கச் சொல்லுகவென, துன்னார் இகலற நூறி - சத்துருக் களுடைய மாறுபாடெல்லாம் மாயும்படி கெடுத்து, இருநில முழு வதும் தனதெனக்கோலித் - பெரிய பூமியனைத்தினையும் தனதென்று ஏற்றிக் கொண்டு, தன்மத வாரணம் - தனக்கேயுரிய மத யானைகளை, திசைதொறு நிறுவிய - எட்டுத் திக்கிலும் எல்லைக்களிறாக நிறுத் திய, திறலுறு தொல்சீர் - வலியொடு பொருந்தி உலகுளதான அன்று தொடங்கி இடையறாது வாரா நின்ற புகழினையும், கருங்கழல் - கூடாதாரைக் கொன்று கட்டிய வீரக்கழலினையும், வெண்குடை - பற்றலர் பகரும் பழி மாசறுத்து மற்றுலகளிக்கும் மணிமுத்தக் குடை யினையும், கார் நிகர் வண்கை - வினைப்பயன் கருதாது மேதினி யோர்க்கு மழைபோலுதவும் மாமலர்க் கையினையும், திருந்திய செங்கோல் - குற்றமற்று உலகிற் கொடுங்கலி துரந்து செப்பம் வளர்க்கும் செய்ய கோலினையும் உடையனான, சீயகங்கன் - தங்க லாகுமாம் வெங்கயம் நுங்கும் சிங்கமாகும் கங்கனென்பான், அருங்

கலை வினோதன் - அரிய கலைநூல்களிலே பொழுதுபோக்கும் விளையாட்டாக உடையான், அமரா பரணன் - பெரும் போரினையே புனைகலனாக உடையானென்னும் அழகமை பேரினை உடையான், மொழிந்தனனாக - சொன்னானாக, முன்னோர் நூலின் வழியே - பழையோர் சொன்ன நூல் களின் வழியே, நன்னூற் பெயரின் வகுத்தனன் - நன்னூலென்னும் பெரிய பெயரினாலே செய்தனன் அவன் யாரோ வென்னில், பொன்மதிற் சனகைச் - பொன் மதில் புடைசூழ்ந்த சனகா புரத்து, சன்மதி முனியருள் - சன்மதியென்னும் நன்முனி அளித்த, பன்னருஞ் சிறப்பிற் - சொல்லுதற்கரிதாகிய பெருந்தன்மையினை யுடைய, பவணந்தியென்னு நாமத்து - பவணந்தியென்னும் பெயரினை யுடைய, இருந்தவத்தோனே - பெரிய தவத்தினை உடையவனாம் என்றவாறு. (1)

## பாயிரத்தின் பெயர்கள்

2. முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்

(இ-ள்) முகவுரை - முகமாய் இருத்தலான் முகவுரை என்றும், பதிகம் - பல வகைப் பொருளையும் கூட்டிச் சொல்லுதலாற் பதிகம் என்றும், அணிந்துரை - நூற்கு இன்றியமையாத அலங்காரமாய் இருத்தலின் அணிந்துரை என்றும், நூன்முகம் - நூல் இலக்கணத்தைத் தோற்றுவித்தலால் நூன்முகம் என்றும், புறவுரை - நூற்குப் புறமாகிய இலக்கணத்தைத் தந்துரைத்தலாற் புறவுரை என்றும், தந்துரை - நூற்குப் புறமாகிய இலக்கணத்தைத் தந்துரைத் தலால் தந்துரை என்றும், நூற்கு முகமாய் இருத்தலின் நூலுரை என்றுமாம், புனைந்துரை - நூற்களாகியதும் ஆபரணமுமாய் இருத்தலாற் புனைந்துரை என்றுமாகி, பாயிரம் - இவையனைத்தும் பாயிரத்துக்குள் காரணப் பெயர் என்றவாறு. (2)

## பாயிரத்தின் வகை

3. பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே

சூ-ம், அப்பாயிரம் இத்துணைப் பகுதியாமெனக் கூறுகின்றது

(இ-ள்) பாயிரம் - மேற்கூறிய பாயிரம், பொதுச் சிறப்பென - பொதுப் பாயிரமும் சிறப்புப் பாயிரமுமென, இரு பாற்றே - இரு வகைப்படும் என்றவாறு. (அரும்பதவுரை) பொதுப் பாயிரமாவது எல்லா நூன் முகத்தும் உரைக்கப்படுவது, சிறப்புப் பாயிரமாவது ஒரு நூன் முகத்து உரைக்கப்படுமெனக் கொள்க. (3)

## பொதுப் பாயிரம்

4. நூலே நுவல்வோ னுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்
எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்

சூ-ம், பொதுப் பாயிரம் இத்துணைப் பகுதிப்படுமெனக் கூறுகின்றது.

(இ-ள்) நூலே - நூல் இலக்கணமும், நுவல்வோன் - ஆசிரியன் இலக்கணமும், நுவலும் திறனே - ஆசிரியன் கற்பிக்கும் இலக்கணமும், கொள்வோன் - சீடன் இலக்கணமும், கோடற் கூற்று - சீடன் கொள்ளும் முறைமை இலக்கணமும், ஆமைந்தும் - ஆகிய இவ்வைந்து இலக்கணமும், எல்லா நூற்கும் - எல்லா நூன்முகத்தும் பொருந்தும், இவை பொதுப் பாயிரம் - பொதுப் பாயிரம் இஃவையாம் என்றவாறு. (1)

## நூலின் இயல்பு

5. நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ
டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே

சூ-ம், நூலின் இலக்கணம் இஃதெனக் கூறியது.

(இ-ள்) நூலின் இயல்பே நுவலின் - நூல் இலக்கணத்தைச் சொல்லின், ஓரிரு பாயிரம் தோற்றி - பொதுப் பாயிரமும் சிறப்புப் பாயிரமும் முன்னுடைத்தாய், மும்மையின் ஒன்றாய் - மூன்று நூலின் ஒரு நூலாய், நாற்பொருள் பயத்தோடு - நால்வகைப் பொருளையும் பெறுவதாக, எழுமதம் தழுவி - எழுவகை மதமும் படவருவதாய், ஐயிரு குற்றமும் அகற்றி - பத்துக் குற்றமும் சாராது வருவதாய், அம் மாட்சியோடு - பத்துப் பெருமையொடுங்கூடி வருவதாய், எண்ணான்கு உத்தியின் - முப்பத்திரண்டு தந்திரவுத்தியுடனே வருவதாய், இயலே படலம் என்னும் உறுப்பினில் - இயலுறுப்புப் படலவுறுப்பு என்னும் இவ்விரண்டு உறுப்பினை உடையதாய், சூத்திரம் - சூத்திரப் பொருளாகவும், காண்டிகை - காண்டிகைப் பொருளாகவும், விருத்தியாகும் -

விருத்திப் பொருளாகவும், விகற்ப நடை பெறுமே - இத்துணை வேறு பாடாகி வரும் இயல்பினை உடையது நூலாம் என்றவாறு. (5)

## நூலின் வகை

6. முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்.

சூ-ம், பொதுப் பாயிரம் சிறப்புப் பாயிரம் மேலே கூறினமையாற் பின் முறையே மூன்று நூலால் இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) முதல் வழி சார்பென - முதல் நூலென்றும் வழி நூலென்றும் சார்பு நூலென்றும், நூல் மூன்றாகும் - இம்மூன்று கூற்றதாம் நூல் என்றவாறு. (6)

## முதல் நூல்

7. அவற்றுள்,
வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

சூ-ம், முதல் நூல் இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) அவற்றுள் - மேற்கூறிய நூல் மூன்றினுள், வினையின் நீங்கி - அனாதியின் இயல்பாகவே பாசங்களை நீங்கி, விளங்கிய அறிவின் - விளக்கமாகிய பேரறிவினையுடைய, முனைவன் கண்டது - எல்லா உலகிற்கும் முதல்வனாகிய கடவுளால் செய்யப்பட்டது, முதல் நூலா கும் - முதல் நூலாவது என்றவாறு. (7)

## வழி நூல்

8. முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்

சூ-ம், வழி நூலாவது இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) முன்னோர் - முதல் நூலுடையராகிய பழைய ஆசிரியருடைய, நூலின் முடிபு ஒருங்கு ஒத்து - நூலிற் கூறிய பொருள் முடிவு முழு வதும் ஒத்து, பின்னோன் - முதல் நூலுடையார்க்குப் பின்னோனாகிய வழி நூற்காரன், வேண்டும் விகற்பம் கூறி - தான் செய்யும் நூலின் வேண் டும் வினா விடை கூறி, அழியா மரபினது - முதல் நூல் மரபு அழி யாது வருவது, வழி நூலாகும் - வழி நூலாவது என்றவாறு. (8)

### சார்பு நூல்

9. இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்

சூ-ம், சார்பு நூலாவது இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) இருவர் நூற்கும் - முன்னோர் பின்னோர் என்னும் இவ்விருவர் செய்த முதல் நூற்கும் வழி நூற்கும், ஒரு சிறை தொடங்கி - வேறிடமாகத் தொடங்கி, திரிபு வேறுடையது - சொல் திரிபும் பொருள் திரிபுமான வேறுபாடு உடையது, புடை நூலாகும் - சார்பு நூலாகும் என்றவாறு. இம்மூன்றினுள் ஒன்றாய் வருவது நூலென்று அறிக. (9)

### வழி நூல் சார்பு நூற் சிறப்பு விதி

10. முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும் முன்னோரின்
வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

சூ-ம், தொல்லாசிரியர் சூத்திரங்களையும் இந்த நூலில் வைத்துக் கூறலாம் என்கின்றது.

(இ-ள்) முன்னோர் மொழி பொருளேயன்றி - முன் பழைய ஆசிரியர் நூலின் மொழிந்த பொருளேயன்றி, அவர் மொழியும் - அப்பொருளை அவர் பொதிந்த மொழியையும், பொன்னேபோல் - பொன்னின் மூடின சீலையும் பொன்போல் எடுத்தது போலப் பொருள் பொதிந்த சொல்லையும் பொருளே போல, போற்றுவம் என்பதற்கும் - பேணி வைத்துக் கொள்வோம் என்பது காண்டற்கும், முன்னோரின் - பழைய ஆசிரியர் செய்த நூல் போல, வேறு நூல் செய்துமென்னும் - வேறு நூல் செய்கின்றோம் என்னும், மேற்கோள் இல்லென்பதற்கும் - மேலாய்க் கோட்பாடில்லை என்பதற்கும், கூறு பழஞ் சூத்திரத்தின் கோள் - பழஞ் சூத்திரத்தின் கொள்கையைக் கூறுக என்றவாறு. (10)

### நாற்பொருள் பயன்

11. அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே

சூ-ம், முறையே நாற்பொருட் பயன் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) அறம் பொருள் இன்பம் வீடு - அறப்பயன் எனவும் பொருட் பயன் எனவும் காமப்பயன் எனவும் வீட்டுப்பயன் எனவும், அடைதல் -

இந்நால் வகைப் பொருட்பயனையும் அடைதல், நூற் பயனே - நூற்குப் பயனாவது என்றவாறு. (11)

## எழுமதம்

12. எழுவகை மதமே யுடன்படன் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்ட லேனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே

சூ-ம், எழுவகை மதமாவது இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) எழுவகை மதமே - எழுவகை ஆசிரியர் மத விகற்பமாவன, உடன்படல் - முன்னூலார் கூறிய கோட்பாடு ஆகியவற்றிற்கு உடன் படுதலும், மறுத்தல் - சிலவற்றை வினாவும் விடையுங்கூறி மறுத்தலும், பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவே - பிறர் நூலிற் கூறிய கோட்பாட்டைத் தன்னூலில் எடுத்துக்காட்டி அவையிற்றைக் களைதலும், தாஅனாட்டித் தனாது நிறுப்பே - தானே புதிதாய் ஓர் இலக்கணம் நாட்டித் தன்னுடைய உத்திகொண்டு அவை நிலைநிறுத்தலும், இருவர் மாறுகோள் ஒரு தலை துணிவே - இருவர் மாறுபட்ட வழக்கிற் றான் ஒன்றைத் துணிந்து எடுத்தலும், பிறர் நூல் குற்றங் காட்டல் - பிறருடைய நூல்களிலேயுள்ள குற்றங்களைத் தோற்றுவித்தலும், ஏனைப் பிறிதொடு படாஅன் தன் மதம் கொளலே - தான் கூறிய உவமை உத்தி முதலாகிய கற்பனைகள் தன் நூலொழிந்த பிறிது நூலின் காணாதவையாய்த் தன் மதத்துக்கே உரித்தாகத் தோற்றுவித்தலுமாம் என்றவாறு. (12)

## பத்துக் குற்றம்

13. குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுத லின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்ற நூற்கே

சூ-ம், பத்து வகைக் குற்றமாவன இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) குன்றக் கூறல் - எழுத்துச் சொல் பொருள் யாப்பு அலங் காரம் கூறகின்றோமெனத் தொடங்கி அவையிற்றிற் குறையச்

சொல்லுவதும், மிகைபடக் கூறல் - எழுத்தும் சொல்லும் பொருளும் சொல்லுமெனத் தொடங்கி யாப்பிலக்கணம் கூறுதலும், கூறியது கூறல் - எழுத்திலக்கணம் கூறிச் சொல்லிலக்கணம் கூறப் புகுந் தவர் மீண்டும் எழுத்திலக்கணத்தைக் கூறதலும், மாறுகொளக் கூறல் - தாம் முன்னர் விதித்த இலக்கணத்திற்குப் பின்னர் மாறு பாடாகக் கூறுதலும், வழூஉச் சொற் புணர்த்தல் - இலக்கண விதி யில்லாத வழுவான சொற்களைப் புணர்த்தலும், மயங்க வைத்தல் - கற்றோர்க்கும் பொருள் மயங்க வைத்தலும், வெற்றெனத் தொடுத் தல் - பயனில்லாத சொற்களைப் பயத்தலும், மற்றொன்று விரித்தல் - தமிழ் இலக்கணம் சொல்லுவோமெனத் தொடங்கி வடசொல் இலக் கணம் சொல்லுதலும், சென்று தேய்ந்து இறுதல் - சொல்லின்பம் பொருளின்பம் பயப்பத் தொடங்கி வரவரத் தேய்தலும், நின்று பயன் இன்மை - மோனை முதலாகிய இலக்கணம் வழுவாது வைத்துப் பொருளிற் பயினின்றி முடித்தலும், என்றிவை ஈரைங் குற்ற நூற்கே - எனக் கூறிய இப்பத்து நூற்குக் குற்றமாம் என்றவாறு. (13)

## பத்து அழகு

14. சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலகமலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே

சூ-ம், பத்துப் பெருமையாவன இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) சுருங்கச் சொல்லல் - பல் வகைப்பட்ட பொருளும் விளங்கத் தொகைநிலைச் சொல்லாகச் சுருங்கச் சொல்லுதலும், விளங்க வைத் தல் - இலை மறை காய்போல ஆழ்ந்த பொருளையும் விளங்கிக் கிடக்க வைத்தலும், நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல் - கூறினோர்க்கு இனிமையாகிய மொழிகளைப் புணர்த்தலும், கதலி பாகம் என்றுமாம், ஓசை உடைமை - நாவுக்கு இசைந்த ஒழுங்குள்ள ஓசையைப் பயத்தலும், ஆழம் உடைத்தாதல் - கயிற்றுக் கோணி விளங்காய் போல வெளிப்பட்டும் எடுக்கக் கூடாது ஆழ்ந்த பொரு ளாக வைத்தலும், நாளிகேர பாகம் என்றுமாம், முறையின் வைப்பே - ஒன்றற்கு ஒன்று ஏற்றம் குறைவு கண்டு ஒன்றன் பின்னொன்று வரன் முறையாக வைத்தலும், உலக மலையாமை - கற்றுணர்ந்தோர்க்கு மலையாத பொருளாகக் கொடுத்துக் கூறலும், விழுமியது பயத்தல் - உயர்ச்சியுள்ள பயனாகத் தோற்றலும், விளங்கு உதாரணத்தாகுதல் -

யார்க்கும் விளக்கமாகிய உதாரணங்களைப் பெற வைத்தலும், நூலிற்கு அழகெனும் பத்தே - இப்பத்துக் குணப்பெருமையும் பட வருவது நூலுக்கு அழகாம் என்றவாறு. (14)

## முப்பத்திரண்டு உத்தி

15. நுதலிப் புகுத லோத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டன் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்த றொடர்ச்சொற் புணர்த்தல்
இரட்டுற மொழித லேதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தன் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்க லெதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தன் முடிந்தது முடித்தல்
உரைத்து மென்ற லுரைத்தா மென்றல்
ஒருதலை துணித லெடுத்துக் காட்டல்
எடுத்த மொழியி னெய்த வைத்தல்
இன்ன தல்ல திதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்
சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்
ஒன்றின முடித்த றன்னின முடித்தல்
உய்த்துணர வைப்பென வுத்தியெண் ணான்கே

சூ-ம், உத்தி முப்பத்திரண்டாவது இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) நுதலிப் புகுதல் .... உய்த்துணர வைப்பு எனக்கூறிய முப் பத்திரண்டு நூலினது உத்தியாம் என்றவாறு. (15)

## உத்தி இலக்கணம்

16. நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துத றந்திர வுத்தி

சூ-ம், தந்திர உத்திக்கு இலக்கணம் இன்னதெனக் கூறுகின்றது.

(இ-ள்) நூற்பொருள் வழக்கொடு - நூலாகிய செய்யுள் வழக்கொடும் உலகத்துப் பொருள் வழக்கொடும், வாய்ப்பக் காட்டி - பொருந்த எடுத்துக்காட்டி, ஏற்புழி அறிந்து - இவ்விடத்துக்கு இது பொருந்துமென ஏற்கும் இடமறிந்து, இதற்கு இவ்வகையாமென - இப்பொருட் கோட்பாட்டுக்கு இவ்வுத்தி யாமென, தரும் வகை செலுத்துதல் தந்திர உத்தி - தக்க வகையாகப் பொருந்துவது நூலுத்தியாம் என்றவாறு. (16)

## இயல் இலக்கணம்

17. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தியலென மொழிப வுயர்மொழிப் புலவர்

சூ-ம், இயல் உறுப்பாவது இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) நேரின மணியை - ஒத்த ஒரு வருக்கமாயுள்ள மணிகளை, நிரல்பட வைத்தாங்கு - நிரையாக வைத்துக் கோத்தாற்போல, ஓரினப் பொருளை - ஓர் இனமாயுள்ள சொற் பொருளையும், ஒரு வழி வைப்பது - ஒரு நெறிப்பட முறையே வைத்துச் சொல்லுவதும், இயலென மொழிப - இயலுறுப்பு என்று கூறுவர், உயர்மொழிப் புலவர் - உயர்ச்சியுள்ள சொற்கூறெல்லாம் அறிந்த புலவர் என்றவாறு. (17)

## படல இலக்கணம்

18. ஒருநெறி யன்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்

சூ-ம், படல உறுப்பாவது இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) ஒரு நெறியன்றி - ஒத்த ஒரு நெறிப்பட்ட பொருளேயன்றி, விரவிய பொருளால் - அப்பொருட்கு உயர்ந்ததும் தாழ்ந்ததும் ஆகக் கூடிய பல பொருளினாலும், பொதுமொழி தொடரின் - தான் கூறிய பொருட்கும் பிற பொருட்கும் பொதுவாகி வழக்கினாலும் தொடர்ந்து வருவது, அது படலமாகும் - இதுவே படல உறுப்பாம் என்றவாறு. (18)

## சூத்திர இலக்கணம்

19. சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறிந்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்

சூ-ம், சூத்திரத்திற்கு இலக்கணம் இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) சில்வகை எழுத்திற் - பல சொற்பொருளையும் அடக்கிய சில எழுத்துக்கூடிய சில சொற்களாலே, பல் வகைப் பொருளைச் - பல வேறு வகைப்பட்ட தொலைவற்ற பொருளையும் பயப்பதாய், செவ் வன் ஆடியிற் - செவ்விதாகிய கண்ணாடியிற் சிறிய பொருள் பெரிய பொருளாகத் தோன்றுவ போலவும் அல்லது சிறிய கண்ணாடியிற் பெரிய பொருளெல்லாம் காட்டினது போலவும், செறிந்து இனிது விளக்கி - பொருந்திய பல பொருளையும் இனிதாக விளக்கி, திட்பம் - வலிதாகிய கட்டுரையாகவும், நுட்பம் - நுணுக்கமாகிய பொருளாக வும், சிறந்தன சூத்திரம் - சிறந்து விளங்கப்படுவன சூத்திர நிலை யாம் என்றவாறு. (19)

### சூத்திரப் பொருள்கோள் நிலை

20. ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத் திரநிலை

சூ-ம், சூத்திரப் பொருள்கோள் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஆற்றொழுக்கு - ஆற்று மணல் அற்றற்று ஒழுகுவது போலச் சொற்றொறும் பொருள் அற்று வருவதும் ஆற்று நீர் ஒழுக்கம் போலப் பொருள் தொடர்ச்சி பின்னோக்காமல் வருவதும், அரிமா நோக்கம் - ஒரு காலத்தில் இரு பக்கமும் நோக்கி அறியும் சிங்க நோக்குப் போல இடையினின்ற சொல் முதலினும் ஈற்றினும் சென்று பொருள் கொள்ளுவதும், தவளைப் பாய்த்து - தவளை பாய்தல் போல ஒரு சொல் தன்னையடுத்த சொல்லை விட்டு அயற் சொல்லொடு தாவிப் பொருள் கொள்வதும், பருந்தின் வீழ்வு - ஆகாயத்தின் கண் வட்ட மிட்ட பருந்து எவ்விடத்தேனும் இரை கண்டு வீழ்வது போல ஒரு சொல் எவ்விடத்தேனும் சென்று பொருள்களாவது, அன்ன சூத்திர நிலை - இவை போல்வன பிறவும் சூத்திரப் பொருள்கோள் நிலை யாம் என்றவாறு. (20)

### சூத்திர வகை

21. **பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறநடைக் கூற்றன சூத்திரம்**

சூ-ம், சூத்திரத்தின் பகுதி இத்துணையெனக் கூறுகின்றது.

(இ-ள்) பிண்டம் - பிண்டச் சூத்திரமாயினும், தொகை - தொகைப் பொரு ளாகச் சொல்லுவது தொகைச் சூத்திரமாயினும், வகை - வகைப் படுத்து உரைப்பது வகைச் சூத்திரமாயினும், குறியே - பெயராகிய குறியிட வருவது குறிச் சூத்திரமாயினும், செய்கை - சொற் புணர்ச்சி

முதலாயின இலக்கணம் சொல்லுவது செய்கைச் சூத்திரமாயினும், கொண்டியல் புறநடை - இவற்றைக்கொண்டு இவ்விலக்கணம் வழு வாமற்கு வருமியல்பு சொல்லுவது புறநடைச் சூத்திரமாயினும், கூற்றன சூத்திரம் - இவ்வாறு வகைக் கூறுபாடு உடையது சூத்தி ரங்களாம் என்றவாறு. (21)

### உரையின் பொது இலக்கணம்

22. பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரந் துணிவு பயனோ
டாசிரிய வசனமென் றீரே ழுரையே.

சூ-ம், பதினான்கு வகை உரை பெறும் சூத்திரங்களெனக் கூறு கின்றது.

(இ-ள்) பாடம் - பாடம் சொல்லுதலும், கருத்தே - சூத்திரக் கருத்து உரைத்தலும், சூத்திரத்து உட்கோள் உரைத்தல் என்றுமாம், சொல் வகை - சூத்திரங்களிலும் சொற்களையெல்லாம் வகுத்து எழுத்துச் சந்தி சொற் சந்தி கூறுதலும், சொற் பொருள் - தனித்தனியே பதப் பொருள் உணர்த்தலும் என்னை? "சொற்றொறுஞ் சொற் றொறுஞ் துணிபொர்ருள் உணர்த்தல் கற்ற புலவர் கண்ணழி யென்ப," தொகுத்துரை - பதப்பொருளையெல்லாம் கூட்டிப் பிண்டமாக்கிப் பொழிப்புரையாக உரைத்தலும், உதாரணம் - கூறப்பட்ட இலக் கணத்திற்கு இலக்கியமாகிய உதாரணம் காட்டலும், துணிவு - இச் சொற்கு இதுவே பொருள் இச்சொற்கு இதுவே இலக்கண மெனத் துணிவு கூறலும், பயனொடு - சொற்றொறும் அளாவிய பொருளை யெல்லாம் கூட்டிப் பயனிதுவென உடன்படுத்தலும், ஆசிரிய வசனம் - கூடிய இலக்கணத்திற்குச் சரியாக ஆசிரியவசனம் காட்டலும், என்று ஈரேழுரையே - என்னும் இப் பதினான்கு பகுதியையும் உரைக் கப்படும் சூத்திரப் பொருள் என்றவாறு. (22)

### காண்டிகை உரை

23. கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானும்
சூத்திரத் துட்பொரு டோற்றுவ காண்டிகை.

சூ-ம், காண்டிகை உரையாமாறு கூறுகின்றது.

(இ-ள்) கருத்துப் - சூத்திரத்தின் கருத்து இவையெனக் கூறலும், பதப்பொருள் - தனித்தனியே பதப்பொருள் உரைத்தலும், காட்டு - இலக்கியமாகிய உதாரணம் எடுத்துக்காட்டலும், மூன்றினும் - இம் மூவகை உரையினோடுமாம், அவற்றொடு - அம்மூவகை உரையி னோடும், வினா விடை ஆக்கலானும் - வினாவும் விடையும் கூறி ஐந்துரையாகச் செய்தலினாலும், சூத்திரத்து உட்பொருள் தோற்றுவ - சூத்திரத்திலுள்ள பொருளெல்லாம் தோற்றப்படுவனவும், காண் டிகை - காண்டிகை உரையாம் என்றவாறு. (22)

## விருத்தி உரை

24. சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்
கின்றி யமையாதி யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறர்நூ லானும்
ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி.

சூ-ம், விருத்தி உரையாமாறு கூறுகின்றது.

(இ-ள்) சூத்திரத்து உட்பொருள் அன்றியும் - நூல்வகைப் பொருள் கோள் வகையாலும் கூறிய சூத்திரத்திலுள்ள பொருளல்லாமலும், ஆண்டைக்கு - அவ்விடத்துச் சொற்களுக்கு, இன்றியமையாது யாவை யும் விளங்க - இன்றியமையாதவையாய் உள்ள சொற்கள் எல்லாவற் றையும் விளங்கும்படிக்கு, தன்னுரையானும் - தான் கூறிய உரை யினாலும், பிறர் நூலானும் - பிறர் கூறிய நூலுரையாலும், ஐயமகல - தெளிவு பெறும்படிக்கு, ஐங்காண்டிகை உறுப்பொடு - காண்டிகை ஐவகை உறுப்பினோடும், மெய்யினை எஞ்சாது இசைப்பது - மெய்ப் பொருளினைக் குறைபடாமற் கூறப்படுவது, விருத்தி - விருத்தியுரை யாம் என்றவாறு. (24)

## நூற்குக் காரணக் குறி

25. பஞ்சுதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடிவு மாறு.

சூ-ம், நூற்குக் காரணக் குறியாமாறு கூறுகின்றது.

(இ-ள்) பஞ்சதன் சொல்லாப் - பஞ்சே சொல்லாகவும், பனுவல் இழை யாகச் - பஞ்சினாற் சேர்ந்த இழையே சொல்லினாற் சேர்ந்த பனுவலா

கவும், செஞ்சொற் புலவனே சேயிழையா - நூல் நூற்கின்ற சேயி ழையே செய்யுள் செய்கின்ற புலவனாகவும், எஞ்சாத கையே வாயா கக் - நூல் நூற்பானது குறைபாடில்லாத கையே புலவரது வாயாக வும், கதிரே மதியாக - நூல் சேர்க்கின்ற கதிரே புலவரது மதியாகவும், மையிலா நூல் முடியுமாறு - அச்சேயிழை நூற்கின்ற நூலே புலவரது நூல் முடியும் முறையாம் என்றவாறு. (25)

26. உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

சூ-ம், இதுவுமது என்றவாறு.

(இ-ள்) உரத்தின் வளம் பெருக்கி - மனத்தினது திண்ணிமையாயுள்ள வளத்தைப் பெருக்கி, உள்ளிய தீமைப் புரத்தின் வளமுருக்கிப் - பொருந்திய கோளை முதலாகிய குற்றப்பாடு மனத்தினது உடம்பின் வளத்தைக் கெடுத்து, பொல்லா மரத்தின் - கனக்கோட்டந் தீர்க்கு நூல் - குற்றம் பொருந்திய மரத்தினது கனத்தையும் கோணலையும் நீக்குவது நூலாம்; அஃதேபோல் - அந்நூல் மரத்தைச் செப்பம் செய்யு மாறு போல, மாந்தர் மனக்கோட்டந் தீர்க்கும் - மாந்தரது மனக் கோண லையும் புல்லிய செய்கையையும் நீங்கச் செய்வது, நூல் மாண்பு - புலவராற் செய்யப்படும் நூலினது தன்மையாம் என்றவாறு.

நூல்போல இதுவும் நூற்கப்படுதலானும் அந்நூல் போலச் செய்யப்படுதலினாலும் நூல் என்பது அடையடுத்து வந்த உவமை யாகுபெயராய குறியாயிற்று. (26)

## ஆசிரியர் இலக்கணம்

27. குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரிய யன்னே.

சூ-ம், கற்கப்படுவோராகிய ஆசிரியர் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) குலன் - உயர்ந்த குலத்தோனாகியும், அருள் - உயிர்களிடத் துத் தயவிரக்கம் உடையோனாகியும், தெய்வங் கொள்கை - நானே பிரமம் என்பது இல்லாமல் யாதொரு தெய்வ மேனும் கொண்டவ

னாகியும், மேன்மை - யாவருடையவ.ஃதிவையும் தனது நூலின் வழி இழுக்கும் மேம்பாடுள்ளவனாகியும், கலைபயி றெளிவு - கலைநூற் பயிற்சியிலே தெளிந்த அறிவைக் கொளுத்து வானாகியும், கட்டுரை - யாதொரு சொல்லேனும் உறுதி பயக்கும் சொல்லன்றிக் கூறானா கியும், வன்மை - எதிர்வாதிகளால் வெல்ல ஒண்ணாத வலியுடையனா கியும், நிலம் - நிலத்தினது தன்மையுள்ள வனாகியும், மலை - மலை யினது தன்மையுள்ளவனாகியும், நிறை கோல் - தராசினது தன்மை யுள்ளவனாகியும், மலர்நிகர் மாட்சியும் - மலரினது தன்மையொத்த மாட்சிமை உடையவனாகியும், உலகியல் அறிவோடு உயர்குணம் - உலகவொழுக்கம் வழுவாததனோடு மிக்கான அறிவுடையோனா கவும், இனையவும் அமைபவன் - இவை போல்வன பிறவுமாகிய மாட்சிமை எல்லாவற்றையும் பொருந்தினவன், நூலுரை ஆசிரியன்னே - நூல் கற்பிக்கப்பட்ட ஆசிரியன் என்றவாறு. (27)

## நிலத்தின் தன்மை

28. தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே.

சூ-ம், நிலத்தினது தன்மை இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) தெரிவரும் பெருமையும் - அகலமும் ஆழமும் இவ்வளவு என்று அளத்தற்கு அரிய பெருமையும், திண்மையும் - கடல் மலை முத லாக யானை எறும்பு ஈறாக உள்ளவற்றைத் தாங்கும் திண்மை யும், பொறையும் - பொச்சாந்தாரைத் தாங்கும் பொறையுடைமையும், பருவ முயற்சி அளவிற் பயத்தலும் - பருவ காலத்து முயற்சி செய்து தொழிற்பாங்கு அமைந்த பின்பு அளவில்லாத விளைவு பலன்களைக் கொடுத்தலும், மருவிய நன்னில மாண்பாகும்மே - பொருந்திய மாட்சி மையுள்ள நல்ல நிலத்தினது தன்மை இதுவாம் என்றவாறு. (28)

## மலையினது தன்மை

29. அளக்க லாகா வளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.

சூ-ம், மலையினது தன்மை இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) அளக்கலாகா அளவும் - இத்துணைத்தென்று அளத்தற்கு அரியவாய் ஏறற்கரிய உயரமும், பொருளும் - இவ்வளவென்று

அளத்தற்கரிய பொருள்களும், துளக்கலாகா நிலையும் - யாவராலும் அசைக்கக் கூடாத நிலையும், தோற்றமும் - நாடெல்லாம் காணும் படிக்கு உயர்ந்த தோற்றமும், வறப்பினும் - மழையின்றி உலகம் வற் கடமான காலத்தும், வளந்தரும் வண்மையும் - தனது வளம் குறை யாமல் தரும் மாட்சிமையும், மலைக்கே - இத்திறத் தன்மையுடையது மலையாம் என்றவாறு. (29)

## நிறைகோலினது தன்மை

30. ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிலை கோற்கே.

சூ-ம், துலாக்கோலினது இயல்பு இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும் - மிகுதியிது குறையிது வெனத் தெளிவு காட்டலும், மெய் நடு நிலையும் - மிகினும் குறை யினும் சமனால் நில்லாமல் ஒத்த பொருட்கண் சமனாய் நிற்றலும், மிகு நிறைகோற்கே - இத்திறத் தன்மை மிகுவது துலாக்கோல் என்ற வாறு. (30)

## பூவினது தன்மை

31. மங்கல மாகி யின்றி யமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே.

சூ-ம், பூவினது தன்மை இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) மங்கலமாகி - மங்கலங்கட்கு எல்லாம் தான் மணமுடைத் தாகிய மங்கலமாகி, இன்றியமையாது - தன்னையின்றி யாது காரிய மும் அமைவு பெறாமல் செய்வதாய், யாவரு மகிழ்ந்து - துன்பம் இன் பம் உள்ளோர் எல்லாரும் கைக்கொள்வதாய், மேற்கொள மெல்கி - கண்டோருவந்து மேற்கொள்ள மென்மை ஊறுள்ளவாய், பொழுதின் முகமலர்வு - பருவ காலத்தின் மலர்ந்து வண்டிற்குப் பயனாகியும், உடையது பூவே - இத்திறத் தன்மையுடையது பூவாம் என்றவாறு. இந்நான்கு திறத் தன்மையுடையார் கற்கப்படும் ஆசிரியர் என்ற வாறு. (31)

## ஆசிரியர் ஆகாதவர்

32. மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலும்

கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே.

சூ-ம், கற்கப்படாத ஆசிரியரது இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) மொழி குணமின்மையும் - நூற் குணமின்றி சொல்வன்மை இல்லாதனாகவும், இழி குண இயல்பும் - இழிவாகிய குணத் தியற்கையயானாதலும், அழுக்காறு - பிறராக்கம் பொறாமை உடை யோனாகியும், அவா - ஐயறிவினாலும் கண்டகண்ட புலன்களின் மேற் செல்கின்ற ஆசையை உடையவனாகியும், வஞ்சம் - காமம் தன் கண்ணே தோன்றி நலியாநிற்கவும் அதனதின்மை கூறிப் புறத்தாரை வஞ்சிக்கும் வஞ்சம் உடையானாகியும், அச்சமாடலும் - எதிர்வாதி களிடத்து அச்சம் உடையானாகியும், கழற்குடம் - கழற்சிக் குடம் ஒப்பானாகியும், மடற்பனை - கருக்குப் பனை ஒப்பானாகியும், பருத் திக் குண்டிகை - பருத்திக் குண்டிகை ஒப்பானாகியும், முடத் தெங்கு ஒப்பென - முடத்தெங்கு ஒப்பானாகியும், முரண் கொள் சிந்தையும் - மாறுகொள்ளுதலிலே வலிமை உடையோனாகியும், உடையோர் இத் தன்மை உடையோர், இலர் ஆசிரியர் ஆகுதலே - ஆசிரியர் ஆகுதல் இலராமென்க. (32)

## கழற்குடத்தின் தன்மை

33. பெய்தமுறை யன்றிப் பிறழ வுடன்றரும்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே

சூ-ம், கழற்குடத்தின் தன்மை இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) பெய்த முறையன்றிப் - சிறிது சிறிதாகப் பெய்யத் தானுட் கொண்ட முறையேயன்றி, பிறழ உடன் தரும் செய்தி - பின்பு சொரி யத் தானுட்கொண்டதெல்லாம் ஒருங்கு சொரிதல், **கழற் பெய் குடத் தின் சீரே** - கழற்சியை உட்கொண்ட குடத்தினது தன்மையாம எனற வாறு. இதுபோலக் கொள்வோன் உணர்வு சிறிதாயினும் தான் கற்ற தெல்லாம் ஒருங்குரைத்தல். (33)

## மடற்பனையினது தன்மை

34. தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை.

சூ-ம், மடற்பனையினது தன்மை இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) தானே தரக்கொளின் அன்றித் - தன்னிடத்துப் பலன்களை இவ்வுலகத்தார்க்குத் தான்தானே தரக்கொள்வதேயன்றி, தன்பால் மேவிக் கொளக் கொடா - தம்மிடத்திற் பிறர் கிட்டிய பலன்களைக் கொள்ளுதற் கரிதாய, இடத்தது - இனிதாகிய பயன்களைக் கொண் டிருப்பது, மடற்பனை - மடற்பனையது தன்மையாம் என்றவாறு.(34)

## பருத்திக் குண்டிகையின் தன்மை

35. அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்
கெளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

சூ-ம், பருத்திக் குண்டிகையினது தன்மை இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) அரிதிற் பெயக் கொண்டு - சிறிது சிறிதாய் அரிதாகப் பெய் யத் தானுட்கொண்டு, அப்பொருடான் பிறர்க்கு - அங்ஙனம் சிறிது சிறிதாய் உட்கொண்ட பொருள் பிறர் கொள்ளுதற்கு, எளிது ஈவில் லது - சொரியினும் வீழாது சிறிது சிறிதாக வாங்கக் கொடுப்பதே யன்றி எளிதின் ஈயாதது, பருத்திக் குண்டிகை - பருத்தி பெய்த குண் டிகையினது தன்மையாம் என்றவாறு. (35)

## முடத்தெங்கினது தன்மை

36. பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே.

சூ-ம், முடத்தெங்கினது தன்மை கூறுகின்றது.

(இ-ள்) பல்வகை உதவி - ஒருவர் பன்னாளும் நீர் வார்த்தல் முத லான உதவி செய்ய, வழிபடு பண்பின் அல்லோர்க்கு அளிக்கும் - இவ் வழிபடு பண்பு இல்லாராகிய பிறர்க்குப் பயன்படுவது, அது முடத் தெங்கே - யாதது முடத்தெங்கினது தன்மையாம் என்றவாறு. (36)

## கற்பித்தலின் இலக்கணம்

37. ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லென்ப

சூ-ம், ஆசிரியர் கற்பிக்கும் இலக்கணம் இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) ஈதல் இயல்பே - ஆசிரியர் சீடருக்கு நூலறிவைக் கற்பிக்கும் இலக்கணத்தை, இயம்புங் காலை - சொல்லுமிடத்து, காலமும் இடனும் - பொருத்தமாகச் சிறந்த ஓரையினும் சிறந்த இடத்தினும், வாலிதின் நோக்கிச் - தூய்தாக நோக்கி, சிறந்துழி இருந்து - இடம் பொருள் ஏவற்குக் குறை வராத இடத்திலிருந்து, தன் தெய்வம் வாழ்த்தி - தாம் தாம் கொண்ட தெய்வத்தை வாழ்த்தி, உரைக்கப் படும் பொருள் - மாணாக்கருக்கு உரைக்கப்படும் பொருளையெல்லாம், உள்ளத்து அமைத்து - தன்னுள்ளத்தின் கண்ணே ஒழுங்கு படச் சிந்தித்து நிறுத்தி, விரையான் - வருவதிற் கருத்தினை மட்டுப் படுத்தி வந்ததிற் சிந்தையைச் ... ... ... வெகுளான் - சினத்திற்குக் காரணம் மாணாக்கனிடத்து உளதாய போதும் அவ்வெகுளியைச் செய்யாதவனாய், விரும்பி - அறிவு உணர்த்தலிலேயே விருப்பம் தோற்றி, முகமலர்ந்து - முகமலர்ச்சியையும் தோற்றி, கொள்வோன் கொள்வகை அறிந்து - சீடன் கொள்ளத்தகும் அறிவு இவ்வளவென அறிந்து, அவன் உளங்கொளக் அவன் அறிவு ஏற்கும்படிக்கு, கோட்டமில் மனத்தின் - மனக்கோட்டம் இல்லாமல், நூல் கொடுத்தல் என்ப - நூலறிவைக் கொடுப்பதாமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு. (37)

### மாணாக்கர் ஆவார்

38. தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற்கு குரைப்பது நூலே.

சூ-ம், கற்பிக்கப்படுவோராகிய சீடராவார் இவரெனக் கூறுகின்றது.

(இ-ள்) தன் மகன் ஆசான் மகனே - தன் மகனுக்கும் ஆசான் மகனுக்கும், மன் மகன் பொருள் நனி கொடுப்போன் - மன் மகனுக்கும் பொருள் கொடுப்போனுக்கும், வழிபடுவோனே உரைகோளாளற்கு - வழிபடுவோர்க்கும் உரைகோளாளர்க்கும், உரைப்பது நூலே - இவ் வறுவர்க்கும் நூல் உரைக்க வேண்டுமுறையாம் என்றவாறு. (38)

### மாணாக்கர் வகை

39. அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

சூ-ம், இவர் தன்மை மூன்று வகைப்படுமெனக் கூறுகின்றது.

(இ-ள்) அன்னம் ஆவே - அன்னமும் ஆவும் போல்வார் தலை மாணாக்கர், மண்ணொடு கிளியே - மண்ணும் கிளியும் போல்வார் இடை மாணாக்கர், இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி - இல்லிக் குடமும் ஆடும் எருமையும் நெய்யரியும் போல்வார் கடை மாணாக்கர், அன்னர் - போல்வார் என்பதனை எல்லாவற்றோடும் கூட்டுக, தலை இடை கடை மாணாக்கர் - தலை மாணாக்கர் இடை மாணாக்கர் கடை மாணாக்கர் என முன்னிறுத்திய முப்பகுதியினும் கூட்டுக. பாலும் நீரும் பிரிப்பது அன்னம்; நீர்த்துறை சென்று நீர் கலக்காமல் அருந்துவது பசு; குசவன் வனைந்த வடிவுப் பண்பேயன்றித் தானொரு வடிவுப் பண்பு கொள்ளாதது மண்; பன்னாளும் பயிற்றிய சொல்லே யன்றி வேறொன்றும் கூறாதது கிளி; சொரிந்த நீரையெல்லாம் கீழ்ச் சொரிந்துவிடல் இல்லிக் குடம்; ஓரிடத்தில் வயிறு நிறைக்கும் களைகள் இருக்கப் பலவிடத்திற் களையினும் சென்று வயிறு நிறைவு படாதது ஆடு; நீர்த்துறை கடக்க விழுந்து வெள்ளிய நீரைக் கலக்கி அருந்துவது எருமை; நல்ல நெய்யைப் புறத்திட்டு அழுக்கை ஏற்றுக்கொள்வது நெய்யரி. நல்லவை அகத்திட்டு நவை புறத்திடுவது நெய்யரி மாண்பென நேர்ந்தன கொளலே எனத் தலை மாணாக்கர் என்றும் சொல்வர். (39)

### மாணாக்கர் ஆகாதவர்

40. களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் றொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் றறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

சூ-ம், கற்பிக்கப்படாத மாணாக்கராவார் இவரெனக் கூறுகின்றது.

(இ-ள்), களி - எப்போதும் பயனின்றிக் களிப்பானுக்கும், மடி - கருதியவற்றைச் செய்யுங்காலத்து முயற்சியின்றிச் சோம்பறை ஆவானுக்கும், மானி - எஞ்ஞான்றும் தன்னிலையில் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வரினும் உயிர் வாழாமையும் உடையான் ஆவானுக்கும், காமி - பிறர்க்குரிய பொருளைக் காம மயக்கத்தான் வவ்வக் கருதுவானுக்கும், கள்வன் - பிறர் உடைமையாயிருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதுவானுக்கும், பிணியன் - பழவினையாலன்றி உணவு செயல்கள் முதலாய காரணத்தான் வாதம் முதலிய பிணிகளை உடையானுக்கும், ஏழை - கேடு வறுமை பழி பாவங்களென்னும் ஆகாவொழுக்கத்தில் ஆசையுடைமையும் ஆக்கம் செல்வம் புகழ் அறங்களென்னும் நன்மைகளைக் கெடுத்துக்

கோடலும் இவ்விருவகைக் கருத்தாய் ஈயாது அறியாமை உடை யானுக்கும், பிணக்கன் - சிற்றறி வினனாயிருந்து தன்னைப் பேரறி வினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் முறைச்சொல் கேளாது பிணங் குவானுக்கும், சினத்தன் - அறியாமையால் ஒருவன் தினையளவு குற் றம் வரத் தோற்றினும் அதனைப் பனையளவாகக் கொண்டு முனிவா னுக்கும், துயில்வோன் - எப்பொழுதும் துயில்வானுக்கும், மந்தன் - புத்தி நுணுக்கம் இல்லாதவனுக்கும், தொன்னூற்கு அஞ்சித் தடு மாறுளத்தன் - பழமையாகிய நூலினது தொகையை இத்துணைத் தோவென அஞ்சித் தடுமாறும் நெஞ்சுடையானுக்கும், தறுகணன் - ... பாவி - பல வகைக் கூறுபாடாகிய தீவினைகளைச் செய்வானுக் கும், படிறன் - காம மயக்கத்தாற் பிறனுடைய இல்லாளை விரும்பு வானுக்கும், இன்னோர்க்கு - இன்னோர்க்கு, பகரார் நூலே - நூலறிவை உணர்த்தார்கள் என்றவாறு. இவ்வொன்பதின்மரும் நெடுநூலைக் கற்கலாகார். இவர் தன்மை கடை மாணக்கர் தன்மையாம். 'குரங் கெறி விளாங்காய் எருமை யாடே தோணி யன்னார் இவரென மொழிப.' (40)

### கற்கும் முறைமை

41. கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்
திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன வார்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்.

சூ-ம், நிறுத்திய முறை சீடன் கற்கும் முறைமை இதுவெனக் கூறு கின்றது.

(இ-ள்) கோடன் மரபே கூறுங் காலை - சீடன் கற்கும் முறைமை யைச் சொல்லுமிடத்து, பொழுதொடு சென்று - ஓதுங்காலச் சமய மறிந்து சென்று, வழிபடன் முனியான் - வழிபடுதலிலே விருப்பமுடை யானாகி, குணத்தொடு பழகி - அவனது நன்மை சேர்ந்த குணத்தோ டொத்த பயிற்சியைப் பயின்று, அவன் குறிப்பிற் சார்ந்து - ஆசிரியர் கருதியதன்னைக் கூறி முன்னர்க் குறிப்பின் வழியே சார்ந்து, இருவென இருந்து சொல்லெனச் சொல்லி - இருவென்றால் இருந்து சொல் லென்றால் சொல்லி, பருகுவன் அன்ன ஆர்வத்தனாகி - நுண்ணீர்த்

தாகமெடுத்தவன் குடித்தாலொத்த ஆசை உடையோனாகி, சித்திரப் பாவையின் அத்தகவடங்கி - மாடத்தில் எழுதிய சித்திரப்பாவை போலச் சலனம் இல்லாதவனாய், செவி வாயாக - செவியே சரக்கறை வாசலாக, நெஞ்சு களனாக - நெஞ்சே சரக்கறையாக, கேட்டவை கேட் டவை - கேட்ட கேட்ட நூற்பொருளை எல்லாம், விடாது உளத்தமைத்து - சிந்தை விடாது உள்ளத்திலே அமைவுபெற நிறுத்தி, போவெனப் போதல் - செல்லென்றால் செல்லுதல், என்மனார் புலவர் - என்று சொல் லுவர் புலவர் என்றவாறு. (41)

## நூல் பயிலும் முறை

42. நூல்பயி லியல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினேஎமடநனி யிகக்கும்.

சூ-ம், சீடர் நூலைச் சிந்திக்கும் முறைமை இவையெனக் கூறு கின்றது.

(இ-ள்) நூல் பயில் இயல்பே நுவலின் - மாணாக்கன் நூலைச் சிந் திக்கும் முறைமையைச் சொல்லின், வழக்கறிதல் - நூலிலக்கணத் தின் வழக்கை அறிதலும், பாடம் போற்றல் - இடை விடாது பாடத் தைப் போற்றலும், கேட்டவை நினைத்தல் - கேட்ட கேட்ட பொருளை யெல்லாம் மீண்டும் மீண்டுணர்தலும், ஆசாற் சார்ந்து அவை அமைவரக் கேட்டல் - ... அம்மாண்புடையோர் தம்மொடு பயிறல் - தன்னொடொத்துக் கேட்கும் மாண்புடைய மாணாக்கரோடு பயிறலும், வினாதல் - அந்நூற் பொருளைத் தானாய் வினாவுதலும், வினாயவை விடுத்தல் - பிறர் வினாய பொருளுக்குத் தான் விடை கூறலும், என் றிவை கடனாக் கொளினே - என்று சொல்லப்பட்ட இவையனைத்தும் முறைமைப்பாடாகக் கொள்ளின், மடநனி இகக்கும். அறியாமை மிகவும் நீங்கும் என்றவாறு. (42)

43. ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பிற்
பெருக நூலிற் பிழைபா டிலனே.

சூ-ம், நூலைக் கற்றுச் சிந்தித்துத் தெளிவோனது இயல்பு கூறு கின்றது.

(இ-ள்) ஒரு குறி கேட்போன் - ஒரு கால் கேட்டுச் சிந்தித்துத் தெளிய வல்லான், இரு காற் கேட்பின் - இரண்டு முறை **கேட்டானாயின்,** பெருகி நூலிற் - மிகுதியாகவும் நூலிலக்கண வழக்கிலே, பிழை பாடிலனே - குற்றப்பாடு இல்லாதவனாம் என்றவாறு. எனவே சிறு பான்மை நூலிலே குற்றப்பாடு பெறுமென்க. (43)

**44. முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) முக்காற் கேட்பின் - மூன்று முறை நூலுரை கேட்பானாயின், முறை அறிந்து உரைக்கும் - நூலது இலக்கணத்தின் முறையை அறிந்து கூறுமென்றவாறு. (44)

**45. ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்**
**காற்கூ றல்லது பற்றல வாகும்**
**அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்**
**செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்**
**மையறு புலமை மாண்புடைத் தாகும்.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும் - ஆசான் உரைத்த நூற்பொருள் அடங்கலும் அமைவு பெறக் கொள்ளுவானாயினும், காற்கூறு அல்லது பற்றலவாகும் - அவ்விலக்கணத்திற் காற்கூறே யன்றி அமைவு பெறானாம், அவ்வினையாளரொடு பயில் வகை ஒரு கால் - கேட்கும் இயல்பினை யுடைய தன்னோடொத்த மாணாக்கரோ டும் பயில்வகையில் ஒரு காலும், செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும் - அவ்விலக்கணம் பிறர்க்கு உணர்த்தும் வகையிலொழிந்த இரு காலும், மையறு புலமை - குற்றமற்ற புலமை செலுத்தும் தன்மை, மாண்புடைத்தாகும் - மாட்சிமை உடைத்தாம் என்றவாறு. (45)

## வழிபாடு

**46. அழலி னீங்கா னணுகா னஞ்சி,**
**நிழலி நீங்கா னிறைந்த நெஞ்சமொ**
**டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்**
**அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே.**

சூ-ம், மேற்கூறிய வழிபடுதற்கு இலக்கணம் இதுவெனக் கூறு கின்றது.

(இ-ள்) அழலினீங்கான் அணுகானஞ்சி - தீக் காய்வான் அவ்வழலி னிடத்துக் குளிருக்கஞ்சி நீங்காதவனும் வெம்மைக்கஞ்சி அணுகாத வனும் போல்வானாகி, நிழலிநீங்கான் - தன்னிழல் தன்னை விட்டு நீங் காத தன்மையெனவும் ஆசிரியனை நீங்காதவனுமாய், நிறைந்த நெஞ்சமொடு - விகாரமற்ற நெஞ்சத்துடனே, எத்திறத்து ஆசான் உவக்கும் - எவ்வகை ஒழுக்கத் திறத்திலே ஆசான் மகிழ்ச்சிப் படும், அத்திறம் - அவ்வகை ஒழுக்கத் திறன், அறத்திற் றிரியாப் படர்ச்சி - அற நிலையின் மாறுபடாத செலவே, வழிபாடே... (46)

**பொதுப்பாயிரம் முற்றும்**

## சிறப்புப் பாயிரம்

47. ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனொ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.

சூ-ம், சிறப்புப் பாயிரத்துக்கு இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) ஆக்கியோன் பெயரே - நூல் செய்தோர் பெயரையும், வழியே - இந்நூல் வழித்தாகச் செய்தோமென்னும் வழியையும், எல்லை - இத் துணை இடத்து வழங்கும் வழக்கென எல்லையையும், நூற் பெயர் - இந்நூற்கு இது பெயரென நூற்பெயரையும், யாப்பே - இவ்வகைப் பாவினால் தொகை வகை விரியில் ஒன்றாகச் செய்தோ மென்னும் யாப்பையும், நுதலிய பொருளே - இந்நூல் இத்துணைப் பொருளை யெல்லாம் கருதிற்றென நுதலிய பொருளையும், கேட்போர் - இந்நூல் கேட்கின்றோர் இன்னாரெனக் கேட்போரையும், பயனொடு - இந்நூல் உணர்தலான் பெறும் பயன் இதுவென நூற்பயனையும், ஆயெண் பொருளும் வாய்ப்பக் காட்டல் - அவ்வகை நூற்கு ஏற்கும் முறையே இவ்வெண் வகை இலக்கணமும் தோன்றச் செய்வது, பாயிரத் தியல்பே - சிறப்புப் பாயிரத்துக்கு இலக்கணமாம் என்றவாறு. (1)

48. காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) காலம் - இந்நூல் இன்ன காலத்தில் செய்ததெனக் காலத் தையும், களனே - இன்னார் அவைக்கண் செய்ததென இடத்தையும்,

காரணம் - இக்காரியமாகிய நூற்குக் காரணம் இதுவெனக் காரணத்தையும், என்றிம் மூவகை ஏற்றி - என்று சொல்லப்படும் இம்மூன்றையும் மேற்கூறிய எட்டினோடும் கூட்டி, மொழிநரும் உளரே - பதினொரு வகைத்தாகச் சிறப்பு பாயிரமும் கூறுவோரும் உளர் என்றவாறு. (2)

## நூற் பெயர்

49. முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் றன்மைமுத னிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே.

சூ-ம், நூற்குப் பெயரிடுமாறு கூறுகின்றது.

(இ-ள்) முதனூல் - ஆரியப் படலம், பாரதம் முதலாயின முதனூலாற் பெயர் பெற்றனவும், கருத்தன் - அகத்தியம், தொல் காப்பியம், திருவள்ளுவர் முதலாயின கருத்தனாற் பெயர் பெற்றனவும், அளவு - பன்னிரு படலம், நாலடி நானூறு, மும்மணிக் கோவை, நான்மணிமாலை முதலாயின அளவினாற் பெயர் பெற்றனவும், மிகுதி - களவியல் முதலாயின மிகுதியாற் பெயர் பெற்றனவும், பொருள் - அகப்பொருள், புறப்பொருள் முதலாயின பொருளாற் பெயர் பெற்றனவும், செய்வித்தோன் - சாதவாகனம், இளந்திரையம், வீரசோழியம் முதலாயின செய்வித்தோனாற் பெயர் பெற்றனவும், தன்மை - சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் முதலாயின தன்மையாற் பெயர் பெற்றனவும், முதனிமித்தினும். இவ்வெழு வகைக் காரணங்களாலும் பெயர் பெற்ற முறையேயன்றி, இடுகுறியானும் - நிகண்டு, கலைக்கோட்டுத்தண்டு முதலாயின இடுகுறியாற் பெயர் பெற்றனவும், நூற்கு எய்தும் பெயரே - இவ்வாறு இடுகுறியானும் காரணத்தானும் நூற்குப் பெயர் வரும் என்றவாறு. (3)

## நூல் யாப்பு

50. தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்ப்
பெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப.

சூ-ம், நூல் யாப்பினது பகுதி இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) தொகுத்தல் - தொகைச் செய்யுளாகவும், விரித்தல் - விரிவுச் செய்யுளாகவும், தொகை விரி - தொகையும் விரியும் கூடிய வகைச் செய்யுளாகவும், மொழிபெயர்ப்பு - முறை கூறிய தொகை வகை விரியிற் சொற்களைப் பெயர்க்கப்படும் மொழிபெயர்ப்புச் செய்யுளாகவும், எனத் தகு நூல் யாப்பு - இவ்வகை முறையாக நூற்கு உறுப்பாகிய

யாப்பு, ஈரிரண்டென்ப - நான்கு கூற்றதாம் என்றவாறு. மரத்தினது அடியே தொகையும், மரத்தினது இலை, பூ, காய், கனி, மேற்கோடு கள் இவை முதலாகிய யாப்பே விரிவும், அடியுங் கூடிய நடுவே தொகை விரியாகவும் கூறினார் அதன் வகை என்றுணர்க. (4)

## சிறப்புப் பாயிரம் செய்தற்குரியோர்

51. தன்னா சிரியன் றன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் றகுமுரை காரனென்
றின்னோர் பாயிர மியம்புதற் கடனே.

சூ-ம், சிறப்புப் பாயிரம் செய்வார் இவரெனக் கூறுகின்றது.

(இ-ள்) தன்னாசிரியன் - நூல் செய்தோன் தனது ஆசிரியனும், தன் னொடு கற்றோன் - தன்னோடு ஒருங்கொப்பக் கற்ற மாணாக்கரும், தன் மாணாக்கன் - தன்னிடத்திற் கற்ற சீடரும், தகும் உரைகாரன் - நூற்கு உரை செய்யுத்தகும் உரைகாரனும், என்றின்னோர் - எனக் கூறப்பட்ட இப்பகுதியை உடையோர், பாயிரம் இயம்புதல் கடனே - சிறப்புப் பாயிரம் கூறுதல் முறையாம் என்றவாறு. (5)

## சிறப்புப் பாயிரம் பிறர் செய்தற்குக் காரணம்

52. தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்றற் புகழ்த றகுதி யன்றே.

சூ-ம், நூல் செய்தோன் பாயிரம் செய்தற்பாலன் அல்லானைக் கூறு கின்றது.

(இ-ள்) தோன்றா தோற்றித் - தோன்றாத இலக்கணங்கள் எல்லாம் தோன்றச் செய்து, துறை பல முடிப்பினும் - பல பல முகமாக ஓர் துறையை முடிப்பினும், தான் தற்புகழ்தல் - தன்னைத் தான் புகழ்வது, தகுதியன்றே - நெறியன்று என்றவாறு. (6)

## தற்புகழ்ச்சிக்குரிய இடங்கள்

53. மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும்
மன்னிய வவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோற்கே.

சூ-ம், தன்னைத் தான் புகழ்வது இவ்விடத்தெனக் கூறுகின்றது.

(இ-ள்) மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும் - அரசுடைய அவைக் கண் செல்லும் ஓலைச் செய்யுளினும், தன்னுடைய ஆற்றல் உணரார் இடையினும் - தனது கல்விப் பெருமையை உணரார் இடத்தினும், மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும் - ..., தன்னை மறு தலை பழித்த காலையும் - தன்னிடத்து எதிர்வாதி கல்வியெளிமை தோன்ற இகழ்ந்த காலையும், தன்னைப் புகழ்தலும் - இவ்விடங் களிற் றன்னைப் புகழ்ந்து கூறுதலும், தகும் புலவோற்கே - புல வோற்கு முறையாம் என்றவாறு. (7)

**பாயிரம் நூற்கு இன்றியமையாதது என்பது.**

54. ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே

சூ-ம், நூற்குப் பாயிரம் இன்றியமையாமையெனக் கூறுகின்றது.

(இ-ள்) ஆயிர முகத்தான் - நுண்ணிதாய இலக்கணத்தோடு பல பல துறைகளினாலும், அகன்றதாயினும் - விரிவுள்ள நூலாகச் செய்யி னும், பாயிரமில்லது - பாயிரமின்மையுடைய நூல், பனுவ லன்றே - நூலன்று என்றவாறு. (8)

55. மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோ ணல்லார்க் கணியும்போல் நாடிமுன்
ஐதுரையாய் நின்ற வணிந்துரையை யெந்நூற்கும்
பெய்துரையாய் வைத்தார் பெரிது.

சூ-ம், பல வகைச் சிறப்பினாலும் நிரம்பிய பாயிரம் கேட்க வேண்டு மெனக் கூறுகின்றது.

(இ-ள்) மாடக்குச் சித்திரமும் - மாடங்கட்கு எழுதிய சித்திரச் சிறப் புப் போலவும், மாநகர்க்குக் கோபுரமும் - பெரிய நகரங்களினின்ற கோபுரச் சிறப்புப் போலவும், ஆடமைத்தோள் நல்லார்க்கு அணியும் போல் - அழகு அமைந்த வேய்போன்ற தோளையுடைய மாதர்க்கு அணிந்த ஆபரணச் சிறப்புப் போலவும், நாடி முன் - எந்நூற்கும் ஆராய்ந்து நூல் முன்னாக, ஐதுரையாய் நின்ற அணிந்துரையை - அழ காகிய பொருளாய் நின்ற பாயிரத்தை, எந்நூற்கும் - எவ்வகைப்பட்ட நூற் கும், பெய்துரையாய் வைத்தார் பெரிது - அவ்வவ் நூற்குப் பொருள் கூறு முறையாக வைத்தார் பெருமையோடு என்றவாறு. நூல் கேட் கின்னே புறவுரை கேட்டுப் பயன் என்னையோவெனின் கொழுச் சென்ற வழித் துன்னூசி இனிது செல்லுமாறுபோலப் பருப்பொருட்டாகிய பாயிரம் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்

என்றலின் அப்பாயிரம் தோன்றலை அமைந்த யானைக்கு வினை யமைந்த பாகன் போலவும் அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும் நூற்கு இன்றியமையாச் சிறப்பிற் றாயிருத்தலின் இது கேளாக்காற் குன்று முட்டிய குரீஇ போலவும் குறிச்சி புக்க மான் பேரலவும் மாணாக்கன் இடர்ப்படுமென்று உணர்க.

சில்லெழுத்தானியன்ற நூற்கு இன்றியமையாத பாயிரம் அறி யாதாய் பல்லெழுத்தினானாய நூல் யாங்ஙனம் அறிதியோ பேதாய் என்று இகழப்படுதலானும் இவ்விருவகைப் பாயிரமும் கேட்க வேண்டுமென்று உணர்க.

இனி இந்நூற்குச் சிறப்புப் பாயிரம் சொல்லுதும். மலர்தலை யுலகின் ... ... இருந்தவத் தோனே. ஆக்கியோன் - பவணந்தி; வழி - முன்னோரர் நூலின் வழியே; எல்லை - குணகடல் குமரி குடுகம் வேங் கடம் எனு நான்கு எல்லையின்; நூற்பெயர் - நன்னூற் பெயரின் வகுத்தனன்; யாப்பு - தொகை வகை விரியிற் றருகென; நுதலிய பொருள் - அரும் பொருள் ஐந்தையும்; கேட்போர் - சீயகங்கன்; பயன் - மாண் பொருள் முழுவதும்; காலம் - சீயகங்கன் காலத்து; களன் - சீய கங்கன் அவைக்கண்; காரணம் - யாவரும் உணர்தல் எனப் பதினொரு வகை இலக்கணத்தோடும் சிறப்புப் பாயிரம் வந்தது. (௭)

**சிறப்புப் பாயிரம் முற்றும்**

# எழுத்ததிகாரம்

முதலது

## எழுத்தியல்

### கடவுள் வணக்கமும் அதிகாரமும்

56. பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே.

சூ-ம், வணக்கமும் அதிகாரமும் சொன்னது.

(இ-ள்) பூமலி - பூக்கள் நிறைந்த, அசோகின் - அசோக மரத்தினது, புனைநிழல் - அலங்காரமாகிய நிழலிலே, அமர்ந்த - எழுந்தருளி யிருந்த, நான்முகன் - நான்கு திருமுகங்களை உடையானை, தொழுது - வணங்கி, நன்கியம்புவன் - அழகிதாகச் சொல்லுவன், எழுத்தே - எழுத்திலக்கணத்தை என்றவாறு.

பூ - நால்வகைப் பூக்களும்; புனைநிழல் - தன் அடியிட்டு நீங்காத நிழலும்; தொழுது - மன வாக்குக் காயத்தால். (1)

### எழுத்திலக்கணத்தின் பகுதி

57. எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் வெனப்பன் னிருபாற் றதுவே.

சூ-ம், எழுத்திலக்கணம் இவ்வளவு பகுதிப்படும் என்றவாறு.

(இ-ள்) எண் - எழுத்துக்களது தொகையும், பெயர் - எழுத்துக்களது பெயரும், முறை - எழுத்துக்களது முறையும், பிறப்பு - எழுத்துக்களது

தோற்றமும், உருவம் - எழுத்துக்களது வடிவும், மாத்திரை - கால வழியும், முதல் - எழுத்துக்கள் மொழிக்கு முதலாய் வருவனவும், ஈறு - எழுத்துக்கள் மொழிக்கு ஈறாய் வருவனவும், இடைநிலை - எழுத்துக்கள் மொழிக்கு நடுவாய் வருவனவும், போலி - எழுத்துக்கள் போலியாவனவும், என்றா - இப்பத்துக் கூறுபாடும், பதம் - எழுத்துக்கள் பதமாவனவும், புணர்வு - நின்ற பதத்தின் ஈற்றெழுத்து வரும் பதத்தின் முதலெழுத்துப் புணரும் புணர்ச்சியும், என - இவ்விரு கூறுபாடும், பன்னிரு பாற்று - ஆகப் பன்னிரண்டு பகுதியை உடையதாம், அதுவே - மேற்சொல்லிய எழுத்திலக்கணம் என்றவாறு. (2)

## எழுத்து இன்னதென்பதும் அதன் வகையும்

58. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சா ரெனவிரு வகைத்தே.

சூ-ம், எழுத்தாவது இன்னது என்பதூஉம் அதன் பகுதியும் சொல்லியது.

(இ-ள்) மொழிமுதற் காரணமாம் - மொழிக்கு முதற் காரணமாகியும், அணுத்திரள் - வாயு அணுக்கூட்டத்தின் காரிய மாகியும், ஒலி - வரும் ஓசையை, எழுத்து - எழுத்தென்று சொல்லப்படும், அது - அவ்வெழுத்து, முதல்சார்பென - முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும், இருவகைத்தே - இரண்டு பகுதிப்படும் என்ற வாறு.

எழுத்தென்றது யாதெனில் முன்பு கட்புலனாகாது மனனுருவாய் நிற்கும் கருத்துப் பொருளாய் பின்பு கட்புலனாகிய வடிவுமுடையவாய் வேறு வேறு வகுத்துக்கொண்டு தன்னையே உணர்த்தியும் சொற்கியைந்து நிற்கும் ஓசையேயாம்.

கடலொலி சங்கொலி முதலிய ஓசைகள் பொருள் உணர்த்தாமையானும் முற்கு வீளை முதலியன பொருளுணர்த்திற்று.

எழுத்து ஆகாமையானும் அவை ஈண்டுக் கொள்ளாராயினார். (3)

## முதலெழுத்து

59. உயிரு முடம்புமா முப்பது முதலே.

சூ-ம், முதலெழுத்தாயது இன்னதென்று சொல்லியது.

(இ-ள்) உயிரும் - உயிர் பன்னிரண்டெழுத்தும், உடம்பும் - உடல் பதினெட்டெழுத்தும், ஆ முப்பதும் - ஆகிய முப்பதெழுத்தும், முதலே - முதலெழுத்தென்று சொல்லப்படும். (4)

## சார்பெழுத்து

60. உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.

சூ-ம், சார்பெழுத்தாவது இன்னதென்றது.

(இ-ள்) உயிர்மெய் - உயிர்மெய்யெழுத்தும், ஆய்தம் - முற்றாய்தமும், உயிரளபு - உயிரளபெடையும், ஒற்றளபு - ஒற்றளபெடையும், அஃகிய இ - குற்றியலிகரமும், உ - குற்றியலுகரமும், ஐ - ஐகாரக் குறுக்கமும், ஔ - ஔகாரக் குறுக்கமும், மஃகான் - மகாரக் குறுக்க மும், தனி நிலை - ஆய்தக் குறுக்கமும், பத்தும் - இப்பத்தெழுத்தும், சார்பெழுத் தாகும் - சார்பெழுத்தென்று சொல்லப்படும் என்றவாறு. (5)

## சார்பெழுத்தின் விரி

61. உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றள பெடை
ஆறே ழஃகும் மிம்முப் பானேழ்
உகர மாறா றைகான் மூன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.

சூ-ம், சார்பெழுத்தின் விரிந்த தொகை இவ்வளவு என்றது.

(இ-ள்) உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு - உயிர்மெய்யெழுத்து இரு நூற்றுப் பதினாறும், உயராய்தம் எட்டு - முற்றாய்த எழுத்து எட்டும், உயிரளவு ஏழு மூன்று - உயிரளபெடை இருபத்தொான்றும், ஒற்றள பெடை ஆறேழ் - ஒற்றளபெடை நாற்பத்திரண்டும், அஃகும் இம்முப் பானேழ் - குற்றியலிகரம் முப்பத்தேழும், உகரம் ஆறு - குற்றியலுகரம் முப்பத்தாறும், ஐகான் மூன்றே - ஐகாரக் குறுக்கம் மூன்றும், ஔகான் ஒன்றே - ஔகாரக் குறுக்கம் ஒன்றும், மஃகான் மூன்றே - மகரக் குறுக்கம் மூன்றும், ஆய்தம் இரண்டொடு - ஆய்தக் குறுக்கம் இரண் டினோடும், சார்பெழுத்தாறு விரி - சார்பெழுத்துப் பொருந்தும் விரிவு தொகை, ஒன்றொழி முந்நூற்றெழுபான் என்ப - முந்நூற்றறு பத்து ஒன்பதென்று சொல்லுவார் புலவர். (6)

## பெயர்களின் இலக்கணம்

**62. இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின**

சூ-ம், பெயர்க்கு இலக்கணம் சொல்லியது.

(இ-ள்) இடுகுறி - இடுகுறியான் வந்த இடுகுறிப்பெயரும், காரணப் பெயர் - காரணத்தான் வந்த காரணப் பெயரும், பொது - இடுகுறிப்பொதுப் பெயரென்றும் காரணப் பொதுப் பெயரென்றும், சிறப்பின - இடுகுறிச் சிறப்புப் பெயரென்றும் காரணச் சிறப்புப் பெயரென்றும் நான்காம்.

ஆவி, உயிர், மெய், உடம்பு என்பன இடுகுறிப் பொதுப்பெயர். அவற்றுள் அ, ஆ, க, ங என்றற்றொடக்கத்தன இடுகுறிச் சிறப்புப் பெயர். குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம் என்றற்றொடக்கத்தன காரணப் பொதுப் பெயர். குற்றிகரம், குற்றுகரம், மகரக் குறுக்கம் என்றற்றொடக்கத்தன காரணச் சிறப்புப் பெயர். (7)

## எழுத்தின் பெயர்

**63. அம்முத லீரா றாவி கம்முதல்**
**மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.**

சூ-ம், முதலெழுத்துக்குப் பொதுவாகப் பெயர் கூறியது.

இ-ள், அம்முதல் ஈராறு ஆவி - அகர முதலாய் ஔகாரம் ஈறாக நின்ற பன்னிரண்டு எழுத்தையும் உயிரென்றும், கம்முதல் மெய் மூவாறென - ககர முதலாக னகர ஈறாக நின்ற பதினெட்டு எழுத்தையும் உடலென்றும், விளம்பினர் புலவர் - கூறினர் புலவர் என்றவாறு. (8)

## குறில்

**64. அவற்றுள்,**
**அ இ உ எ ஒக்குறி லைந்தே.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) அவற்றுள் - மேற்கூறிய முதலெழுத்துள், அ இ உ எ ஒக் குறிலைந்தே - இவ்வைந்தெழுத்தும் குற்றெழுத்தாம் என்றவாறு. (9)

## நெடில்

**65. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔநெடில்.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில் - இவ்வேழ் எழுத்தும் நெட்டெழுத்து என்று பெயராம். (10)

## சுட்டெழுத்துக்கள்

**66. அஇ உம்முதற் றனிவரிற் சுட்டே.**

சூ-ம், அந்த உயிர்க்கு இன்னுமொரு வகையாற் பெயர் கூறியது.

(இ-ள்) அ இ உ- அ, இ, உ என்னும் மூன்றெழுத்தும், முதல் - மொழிக்கு முதற்கண்ணும், தனி - மொழிக்குத் தனித்தும், வரில் - சுட்டுப் பொருள் உணர்த்தி வரில், சுட்டே - சுட்டெழுத்து என்னும் பெயரவாம் என்றவாறு.

உதாரணம்: அவன், இவன், உவன், அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் என்பது மொழிக்குறுப்பாய் முதற்கண் வந்த சுட்டாம். அக்கொற்றன், இக் கொற்றன், உக் கொற்றன் மொழிக்குத் தனித்து வந்த சுட்டாம் என்க.

அம்பலவன், அறம் என்பன மொழிக்குறுப்பாய் அகரம் நின்றும் சுட்டுப் பொருள் உணர்த்தாமையின் சுட்டெழுத்து அன்றென்க. சுட்டுப் பொருள் உணர்த்தி வரினே சுட்டெழுத்தாம். (11)

## வினாவெழுத்துக்கள்

**67. எயா முதலும் ஆஓ வீற்றும்**
**ஏயி ருவழியும் வினாவா கும்மே.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) எயா - எகரமும் யாவும், முதலும் - மொழிக்கு முதற்கண்ணே நின்று வினாவெழுத்தாம், ஆ ஓ - ஆகாரமும் ஓகாரமும், ஈற்றும் - மொழிக்கு ஈற்றின்கண்ணே நின்று வினாவெழுத்தாம், ஏயிரு வழியும் - ஏகாரம் மொழி முதற்கண்ணும் மொழிக்கு ஈற்றின்கண்ணும் நின்று, வினாவாகும்மே - வினா எழுத்தாகும் என்றவாறு.

உ-ம்: எவன், எப்படை எனவும், யாவன், யா உளது எனவும், சாத்தனா, சாத்தனோ எனவும்; ஏது, ஏவன் எனவும்; சாத்தனே எனவும் வரும். (12)

## வல்லினம்

**68. வல்லினங் கசட தபறவென வாறே.**

சூ-ம், உடலெழுத்துக்குப் பெயர் கூறியது.

(இ-ள்) வல்லினம் க ச ட த ப ற வெனவாறே - க ச ட த ப ற வென் னும் ஆறெழுத்தும் வல்லினமென்னும் பெயரவாம் என்றவாறு. (13)

## மெல்லினம்

69. மெல்லினம் ஙஞண நமனவென வாறே.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) மெல்லினம் ங ஞ ண ந ம ன வெனவாறே - ங ஞ ண ந ம ன வென்னும் ஆறெழுத்தும் மெல்லினமென்னும் பெயரவாம் என்றவாறு. (14)

## இடையினம்

70. இடையினம் யரல வழளவென வாறே.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) இடையினம் ய ர ல வ ழ ள வெனவாறே - ய ர ல வ ழ ள வென்னும் ஆறெழுத்தும் இடையின்மென்னும் பெயரவாம் என்ற வாறு. (15)

## இனவெழுத்து

71. ஐ ஔ இஉச் செறிய முதலெழுத்
திவ்விரண் டோரின மாய்வரன் முறையே.

சூ-ம், இனமில்லாத எழுத்துக்கு இனமடைத்தது.

(இ-ள்) ஐ ஔ இ உ - ஐகாரத்திற்கு இகரமும் ஔகாரத்துக்கு உகரமும், செறிய - இனமாகச் சேர்க்க, முதலெழுத்து - அகரமுதல் கைரவீறாயுள்ள முதலெழுத்து எல்லாம், இவ்விரண்டு ஓரினமாய் - இரண்டு இரண்டாய் ஓரினமாக, வரன் முறையே - வருதல் முறைமை யாம் என்றவாறு. அஆ, இஈ, உஊ, இஐ, உஔ, எஏ, ஒஓ; கங, சஞ, டண, தந, பம, யர, லவ, ழள, றன என வரும். (16)

## இனமாதற்குக் காரணம்

72. தான முயற்சி யளவு பொருள்வடி
வானவொன் றாதியோர் புடையொப் பினமே.

சூ-ம், இனமாதற்குக் காரணம் உரைத்தது.

(இ-ள்) தானம் - எழுத்துக்கள் தம் பிறப்புத் தானத்தினாலும், முயற்சி - எழுத்துக்கள் பிறக்கும் முயற்சியினாலும், அளவு - எழுத்துக்கள் தம் கால அளவினாலும், பொருள் - பொருள் ஒப்புமையயானும், வடிவு - எழுத்துக்கள் தம் வடிவினாலும், ஆனவொன்றாதி - இவற்றுள் ஒன்று முதலாகப் பலவினாலும், ஓர் புடையொப்பு - ஒரு சார் ஒத்து வந்த தாமின், இனமே - ஆதலின் இனமாம் என்றவாறு.

அ ஆக்கள் இடத்தானும் முயற்சியானும், அறாமிரம், ஆறாமிர மென்னும் பொருளானும் வடிவானும், இ ஈக்கள் இடத்தானும் முயற்சியானும், இராமிரம், ஈராமிரமென்னும் பொருளானும், ஐகாரம் இவற்றுடன் இடத்தானும் முயற்சியானும், உ ஊக்கள் இடத்தானும் முயற்சியானும், உங்கு, ஊங்கென்னும் பொருளானும் வடிவானும், இவற்றுடன் ஔகாரம் இடத்தானும் முயற்சியானும், எ ஏக்கள் இடமுயற்சிகளானும், எழாமிரம், ஏழாமிரமென்னும் பொருளானும் வடிவானும், ஒ ஓக்கள் இடத்தானும் முயற்சியானும், ஒராமிரம், ஓராமிரமென்னும் பொருளானும் வடிவானும், க ஙக்கள் முயற்சி யானும் மாத்திரையானும் குளக்கரை, குளங்கரையென்னும் பொருளா னும், ச ஞக்கள் முயற்சியானும் மாத்திரையானும், மச்சிகன் மஞ்சிகன் என்றும் பொருளானும், ட ணக்கள் முயற்சியானும் மாத்திரையானும், மட்குடம், மண்குடமென்னும் பொருளானும், த நக்கள் முயற்சியானும் மாத்திரை யானும், பாழ்த்தூறு, பாழ்ந்தூறு என்னும் பொருளானும், ப மக்கள் முயற்சியானும் மாத்திரையானும், வேய்ப்புறம், வேய்ம்புற மென்னும் பொருளானும், ய ரக்கள் இடமாத்திரையானும், வேயல், வேரலென்னும் பொருளானும், ல வக்கள் இட மாத்திரைகளானும், எல்லா வகை எவ்வகையென்னும் பொருளானும், ழ ளக்கள் இட மாத்திரையானும், காழகவுடையன், காளகவுடையன் என்னும் பொரு ளானும், ற னக்கள் முயற்சியானும் மாத்திரையானும், நற்குணம் நன்குணமென்னும் பொருளானும் இவை ஓதவே... ... ... (17)

## எழுத்தின் முறை

73. சிறப்பினு மின த்தினுஞ் செறிந்தீன் டம்முதல்
நடத்த றானே முறையா கும்மே.

சூ-ம், முறை இலக்கணம் கூறியது.

(இ-ள்) சிறப்பினும் - எழுத்துக்கள் தானே ஒன்றுக்கொன்று உயர்ந்த சிறப்பினாலும், இனத்தினும் - ஒன்றோடொன்று சேர்ந்த இனத்தானும், செறிந்து - ஒன்றன் பின்னே ஒன்று சென்று தொன்றுதொட்டு, ஈண்டு - இவ்வுலகின்கண்ணே, அம்முதல் நடத்தறானே - அகர முதலாக நடக்

கின்ற கிடக்கை முறைதானே, முறையாகும்மே - நூலுள்ளும் முறை யாம் என்றவாறு.

விகாரமின்றி இயல்பிற் பிறத்தலானும் அவ்வுடம்பை நண்ணி அவையிற்றின் தன்மையாய் நிற்றலானும் அகரம் முன் விகாரமின்றி வைக்கப்பட்டது. அதற்கு இனமாதலின் அகரத்தின் பின் ஆகாரம் வைக்கப்பட்டது. இடமும் செய்கையும் சுட்டுப் பொருட்டாதலும் நோக்கி அதற்பின் இகரமும் அதற்கு இனமாதலின் அதன்பின் ஈகாரமும் வைக்கப்பட்டது. இவ்வாறே ஒழிந்த எழுத்துக்கள் தம் கிடக்கை முறை காரணம் அறிந்து கொள்க. முதல் நா முதலண்ண முறப் பிறத்தலான் மெய்களுட் ககரம் முன் வைக்கப்பட்டது. தமிழ் எழுத்தென்பது அறிவித்தற்கு றகர னகரங்களை இறுதிக்கண் வைத் தார். உமிர் உடல் போலாகாமையின் அதற்கிடையே ஆய்தம் வைக் கப்பட்டது. (18)

## எழுத்தின் பிறப்பு

**74.** **நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப**
**எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி**
**மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்**
**வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.**

சூ-ம், எழுத்துக்களது பிறப்பு இன்னதெனக் கூறியது.

(இ-ள்) நிறையுயிர் - விகாரப்படாமல் தன்னியல்பில் நின்ற உமிர், முயற்சியில் - மொழிவேனென்னும் உள்ளம் தோன்றிய முயற்சியினாலே, உள் வளி துரப்ப - உள்ளே நின்ற வாயுக்கள் எழுப்ப, எழும் அணுத்திரள் - ஆண்டு நின்ற ஒலியணுக் கூட்டங்கள் விசைத்து எழுந்து, உரம் கண் டம் உச்சி மூக்கிற்று - நெஞ்சும் மிடறும் தலையும் மூக்குமென்னும் இந்நான்கு இடத்தையும் முதலடைந்து, இதழ் நாப் பல்லணத் தொழிலின் - இதழும் நாவும் பல்லும் அண்ணமுமென்னும் இந்நான் கிடத்தையும் பின் அடைந்து இவற்றது முயற்சி விகற்பத்தால், வெவ் வேறு எழுத்தொலியாய் - பல வேறு வகைப்பட்ட எழுத்தொலியாய், வரல் பிறப்பே - புலப்படல் எழுத்துக்களது பிறப்பாம் என்றவாறு. (19)

## முதலெழுத்துக்களின் இடம்

**75.** **அவ்வழி,**
**ஆவி யிடைமை யிடமிட றாகும்**
**மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.**

சூ-ம், முதலெழுத்துக்கட்கு இடம் கூறியது.

(இ-ள்) அவ்வழி - மேற்கூறிய நெறியாற் பிறக்குமிடத்து, ஆவி இடைமை - உயிரெழுத்துப் பன்னிரண்டுக்கும் இடையினம் ஆறுக் கும், இடம் மிடறாகும் - இடம் மிடறாகப் பொருந்தும், மேவுமென்மை மூக்கு - மெல்லினம் ஆறும் மூக்கை இடமாகப் பொருந்தும், உரம் பெறும் வன்மை - வல்லினம் ஆறும் நெஞ்சை இடமாகப் பொருந்தும் என்றவாறு. (20)

## முதலெழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு

**76.** அவற்றுள்,
முயற்சியுள் அஆ வங்காப் புடைய.

சூ-ம், எழுத்துக்கள் முயற்சியாற் பிறக்கும் முறைமை கூறியது.

(இ-ள்) அவற்றுள் - மேல் இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துகளுள், முயற்சியுள் - முயற்சிப் படுமிடத்து, அ ஆ அங்காப்புடைய - அகர மும் ஆகாரமும் அங்காத்தல் முயற்சியை உடையவாம். (21)

**77.** இஈ எஏ ஐயங் காப்போ
டண்பன் முதனா விளிம்புற வருமே.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்), இ ஈ எ ஏ ஐ - ஈ ஈ எ ஏ ஐ என்னும் இவ்வைந் தெழுத்தும், அங்காப்போடு - அங்காத்தல் முயற்சியோடுங்கூட, அண்பல் - அண் ணத்தையும் பல்லையும், முதல் நா விளிம்புற வருமே. அடி நா விளிம்பு தொடுமுயற்சியாற் பிறக்கும் என்றவாறு. (22)

**78.** உஊ ஒஓ ஔவிதழ் குவிவே.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) உ ஊ ஒ ஓ ஔ - உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வைந் தெழுத்து, இதழ் குவிவே - இதழைக் குவித்துச் சொல்லும் முயற்சி யாற் பிறக்கும் என்றவாறு. (23)

**79.** கஙவுஞ் சஞவும் டணவு முதலிடை
நுனிநா வண்ண முறமுறை வருமே.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) கஙவும் சஞவும் டணவும் - க ங ச ஞ ட ண என்னும் இவ் வாறெழுத்தும், முதலிடை நுனி நா அண்ணமுற - முதல் நா முதலண் ணத்தைப் பொருந்தக் ககாரமும் ஙகாரமும் இடை நா இடையண்

ணத்தைப் பொருந்தச் சகாரமும் ஞகாரமும் நுனி நா நுனியண்ணத் தைப் பொருந்த டகாரமும் ணகாரமும், முறை வருமே முறைமையாகப் பிறக்கும் என்றவாறு. (24)

**80. அண்பல் லடிநா முடியுறத் தநவரும்.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) அண்பல்லடி - அண்ணத்தின் அடியையும் பல்லின் அடியை யும், நா முடியுற - நாவினது நுனி ஒற்ற, த ந வரும் - தகாரமும் நகார மும் பிறக்கும் என்றவாறு. (25)

**81. மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) மீகீழ் இதழ் உற - மேலிதழும் கீழிதழும் பொருந்த, ப ம பிறக்கும் - யகாரமும் மகாரமும் பிறக்கும் என்றவாறு. (26)

**82. அடிநா வடியண முறயத் தோன்றும்.**

சூ-ம், இதுவுமது,

(இ-ள்) அடி நா அடியணம் உற - அடி நாவானது அடியண்ணத்தைச் சார, யத் தோன்றும் - யகாரம் தோன்றும் என்றவாறு. (27)

**83. அண்ண நுனிநா வருட ரழவரும்.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) அண்ண நுனி நா வருட - அன்னத்தை நுனி நாவானது தடவ, ரழ வரும் - ரகாரமும் ழகாரமும் பிறக்கும் என்றவாறு. (28)

**84. அண்பன் முதலு மண்ணமு முறையின்**
**நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்**
**லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) அண்பல் முதலும் அண்ணமும் முறையின் - அண்பல் முத லையும் அண்ணத்தையும் வரன்முறையே, நா விளிம்பு வீங்கி முற்றவும் வருடவும் - அண்பல் முதலை நா விளிம்பு வீங்கி ஒற்றவும் அண்ணத்தை நா விளிம்பு வீங்கி வருடவும், லகார ளகாரம் ஆயிரண் டும் பிறக்கும் - லகாரமும் ளகாரமும் பிறக்கும் என்றவாறு. (29)

85. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) மேற்பல் இதழுற - மேற்பல்லானது கீழிதழைப் பொருந்த, மேவிடும் வவ்வே - வகாரம் பிறக்கும் என்றவாறு. (30)

86. அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) அண்ண நுனி நா நனியுறின் - அண்ணத்தின் நுனி நா மிகவும் பொருந்த, றன வரும் - றகாரமும் னகாரமும் பிறக்கும் என்றவாறு. (31)

### சார்பெழுத்தின் இடமும் முயற்சியும்

87. ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி
சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய

சூ-ம், சார்பெழுத்துக்களுக்கு இடமும் முயற்சியும் கூறியது.

(இ-ள்) ஆய்தக் கிடந்தலை - ஆய்த எழுத்திற்கு இடம் தலையாம், அங்கா முயற்சி - அங்காந்து சொல்லுதல் முயற்சியாம், சார்பெழுத் தேனவும் - ஒழிந்த சார்பெழுத்துக்களுக்கு இடமும் முயற்சியும், தம் முதலனைய - தத்தம் முதலெழுத்துக்களோடு ஒப்பனவாம் என்றவாறு.

உ-ம்: ககா, எஃகு, ஆஅ, மங்கலம், கேண்மியா, நான்கு, மைப்புறம், மௌவல், வாழும் வணிகன், கஃறீது எனவும் கண்டுகொள்க. (32)

### பிறப்பின் புறநடை

88. எடுத்தல் படுத்த னலித லுழப்பில்
திரிவுந் தத்தமிற் சிறிதுள வாகும்.

சூ-ம், மேற் கூறியவற்றிற்கு ஓர் புறநடை கூறியது.

(இ-ள்) எடுத்தல் படுத்தல் - எடுத்தல் ஓசையினாலும் படுத்தல் ஓசையினாலும், நலிதல் உழப்பில் - நலிதல் முதலான உழப்பு விகற்பங்களினாலும், திரிவும் தத்தமில் - தத்தம் எழுத்துப் பிறப்பினுள் ஒன்றுக்கொன்று வேறுபாடுகளும், சிறிதுளவாகும் - சிறிது உளவாம் என்றவாறு. (33)

## உயிர்மெய்

89. புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரோ டுருபு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்

சூ-ம், உயிர்மெய் ஆமாறு உரைத்தது.

(இ-ள்) புள்ளிவிட்டு - மெய்யானது புள்ளியை ஒழிந்து, அவ்வொடு - அகரத்துடனே சேர்ந்து, முன்னுருவாகியும் - புள்ளியழிந்த உருவே உருவாகியும், ஏனை உயிரோடு - ஒழிந்து உயிர்களோடும் சேர்ந்து, உருபு திரிந்தும் - தனது உருவு வேறுபட்டும், உயிரளவாய் - உயிரினுடைய மாத்திரையே தனக்கு மாத்திரையாய், அதன் வடிவொழித்து - ... இருவயிற் பெயரோடும் - உயிர் மெய் என்ற இருவகைப் பெயரொடும், ஒற்று முன்னாய் வரும் உயிர்மெய் - ஒற்று முன்னாகவும் உயிர் பின்னாகவும் வருவது உயிர்மெய் என்றவாறு.

உ-ம்: க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ
ஒழிந்தனவும் இவ்வாறே வரும். ஆக உயிர்மெய் 216. (34)

## முற்றாய்தம்

90. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே

சூ-ம், முற்றாய்தத் தோற்றம் வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) குறியதன் முன்னர் - குற்றெழுத்துக்கு முன்னாக, ஆய்தப் புள்ளி - முற்றாய்த எழுத்தானது, உயிரொடு புணர்ந்த - உயிரொடுங் கூடிய, வல்லாறன் மிசைத்தே - வல்லெழுத்து ஆறின்மேல் வருமென்றவாறு.

உ-ம்: எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு, "விலஃஃகி" ஓசை நிறைத்தற்பொருட்டு வந்த ஆய்தம். இருபஃது புணர்ச்சிக்கண் வந்த ஆய்தம் ஆக ஆய்தம் 8. (36)

## உயிரளபெடை

91. இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

சூ-ம், உயிரளபெடைத் தோற்றம் கூறியது.

(இ-ள்) இசை கெடின் - செய்யுட்கள் ஓசை அரிய வந்தவிடத்து, மொழி முதல் இடை கடை - மொழிக்கு முதற்கண்ணும் மொழிக்கு இடையினும் மொழிக்கு ஈற்றினும், நிலை நெடில் - இம் மூன்று இடத்துநின்ற நெட்டெழுத்துக்கள், அளபெடும் - இரண்டு மாத்திரை யினீண்டு இசைக்கப்படும், அவற்றவற்று இனக்குறில் - அவ்வ நெட்டெழுத்துக்களுக்கு இனமாகிய குற்றெழுத்துக்கள், குறியே - அவ்வளவிற்குக் குறியாய் வந்து நிற்கும் என்றவாறு.

உ-ம்: வாஅகை, ஈஇகை, ஊஉகம், பேஎகன், தைஇயல், தோஒரை, மௌஉவல் எனவும்; படாஅகை, பரீஇகம், கழூஉமணி, பரேஎரம், வளைஇயம், புரோஒசை, மணிமௌஉலி எனவும்; கடாஅ, குரீஇ, கழூஉ, விலேஎ, விரைஇ, உலோஒ, அனௌஉ எனவும் வரும். ஆக உயிரளபெடை 21. (36)

## ஒற்றளபெடை

92. ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.

சூ-ம், ஒற்றளபெடைத் தோற்றம் கூறியது.

(இ-ள்) ஙஞண நமன வயலள ஆய்தம் - ஙஞண நமன வயலள என் னும் இப் பத்தொற்றும் ஆய்தமும், அளபாம் - தத்தம் அரை மாத் திரையின் நீண்டு இசைக்கப்படும், குறிலிணை குறிற்கீழ் - குறி லிணைக் கீழும் குறிற்கீழும், இடை கடை - மொழிக்கு இடையினும் ஈற்றினும், மிகலே அவற்றின் குறியாம் - அவ்வவொற்றுக்கள் தாமே இரட்டித்து நிற்றல் அவற்றுக்கு அளவு குறியாம், வேறே - இவ்விதி யன்றி வேறே விதியானும் அளபெடுக்கும் என்றவாறு.

உ-ம்: அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, முரந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரவ்வவை, அரய்ய்யர், குரல்ல்கள், திரள்ள்கள், வரஃஃகு எனக் குறிலிணைக்கீழ் மொழிக்கு இடையிலே நின்று அளபெடுத்தது. மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு எனக் குறிற் கீழ் மொழிக்கிடையினின்று அளபெழுந்தது. கலங்ங்கொண்ட, கலஞ்ஞ்சார்ந்த, அரண்ண் கொண்ட, அரந்ந் தாழ்ந்த, அரம்ம்பட்ட, பலன்ன்கொண்ட, தகவ்வ்நன், துணைய்ய் நன், பகல்ல்நன், திரள்ள்சேனை எனக் குறிலிணைக்கீழ் மொழிக்கு ஈற்றினின்று அளபெழுந்தது. கங்ங்கண்டான், கஞ்ஞ்சார்ந்தான், மண்ண்கொண்டான், கந்ந் தரித்தான், கம்ம்பத்தான், பொன்ன்கொண் டான், தெவ்வ்யானை,

மெய்யழகு, சொல்லரிது, கள்ள் வலிமை எனக் குறிற்கு ஈற்றி னின்று அளபெழுந்தன. ஆய்தம் குறிற்கீழ் ஈற்றினும் குறி லிணைக்கீழ் ஈற்றினும் வாரா என்க. ஆக ஒற்றளபெடை 42. (37)

### குற்றியலிகரம்

93. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய

சூ-ம், குற்றியலிகரத் தோற்றம் கூறியது.

(இ-ள்) யகரம் வர - வருமொழி முதலாய் யகரம் வந்தவிடத்து, குற ளுத்திரி இகரமும் - நிலைமொழி ஈற்றுக்கண் நின்ற குற்றிய லுகரம் திரிந்த இகரமும், அசைச்சொல் மியாவின் இகரமும் - மியாவென் னும் அசைச்சொல்லின் வந்த இகரமும், குறிய - குற்றியலிகரமாம் என்றவாறு.

உ-ம்: நாகியாது, எஃகியாது, வரகியாது எனவும்; கேண்மியா, சென்மியா எனவும் வரும். பிறவும் இவ்வாறு ஒட்டுக. ஆகக் குற்றியலிகரம் 37. (38)

### குற்றியலுகரம்

94. நெடிலொ டாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.

சூ-ம், குற்றியலுகரத் தோற்றம் கூறியது.

(இ-ள்) நெடிலொடு - தனிநெடிலுடனே, ஆய்தம் உயிர் வலி மெலி இடை - ஆய்தவெழுத்தும் உயிரெழுத்தும் வல்லெழுத்தும் மெல் லெழுத்தும் இடையெழுத்தும், தொடர்மொழி இறுதி - இவை தொடர்ந்த மொழி ஈற்றின்கண்ணே நின்ற, வன்மையூர் உகரம் - வல் லினமாகிய கசடதபறக்களை ஊர்ந்து வந்த உகரம், அஃகும் - தன் மாத்திரையிற் சுருங்கிக் குற்றியலுகரமாம், பிற மேற்றொடரவும் பெறுமே - பிற எழுத்துக்கள் மேலே தொடரவும் பெறும் என்றவாறு.
உ-ம்: நாகு, காசு, காடு, காது, காபு, காறு, எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு, வரகு, முரசு, மருது, துரபு, கவறு, நக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று; கொங்கு, மஞ்சு, வண்டு, பந்து, அம்பு, நன்று, தெற்கு, நொய்சு, நொய்து, நொய்பு, ஆகாது, மொய்ம்பு, ஈர்க்கு, வாழ்த்து, சுண்ணாம்பு, ஆமணக்கு, இருபஃது. இது பிற மேற்றொடர்ந்த குற்றியலுகரம் பிறவுமன்ன. (39)

### ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும்

**95.** **தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்**
**நையு மௌவு முதலற் றாகும்.**

சூ-ம், ஐகார ஔகாரக் குறுக்கங்கள் ஆமாறு கூறியது.

(இ-ள்) தற்சுட்டு - தன்னைச் சொல்லுதற்கண்ணும், அளபு - அள பெடுத்தற்கண்ணும், ஒழி ஐ - அல்லாத வழி வந்த ஐகாரம், மூவழி யும் நையும் - மொழிந்த முதல் இடை கடையென்னும் மூன் றிடத்தும் குறுகும், ஔவு முதல் - ஔகாரம் மொழி முதற்கண்ணே, அற்றாகும் - அத்தன்மையை உடையவாகும் என்றவாறு.

உ-ம்: ஐப்பசி, மடையன்; குவளை என வரும் ஐகாரக் குறுக்கம் 3. மௌவல் என வரும் ஔகாரக் குறுக்கம் 1. (40)

### மகரக் குறுக்கம்

**96.** **ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்.**

சூ-ம், மகரக் குறுக்கம் ஆமாறு கூறியது.

(இ-ள்) ண ன முன்னும் - ளகார லகாரங்கள் திரிந்த ணகார னகாரத் தின் முன்னும், வஃகான் மிசையும் - வகாரத்தின் மேலும், மக் குறுகும் - நின்ற மகாரம் குறுகி மகாரக் குறுக்கமாம் என்றவாறு.

உ-ம்: மருண்ம், போன்ம், வாழும் வளவன் என வரும். ஆக மகரக் குறுக்கம் 3. (41)

### ஆய்தக் குறுக்கம்

**97.** **லளவீற் றியைபினா மாய்த மஃகும்.**

சூ-ம், ஆய்தக் குறுக்கம் ஆமாறு கூறியது.

(இ-ள்) லளவீற்று இயைபினாம் - லகார ளகார ஈறு புணருமிடத்தே உண்டாகும், ஆய்தம் அஃகும் - ஆய்தம் குறுகி ஆய்தக் குறுக்கமாம் என்றவாறு.

உ-ம்: கஃறீது, முஃடீது என வரும். ஆயுதக் குறுக்கம் ஆக 2. (42)

### எழுத்தின் உருவம்

**98.** **தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்**
**டெய்து மெகார மொகாரமெய் புள்ளி.**

சூ-ம், நிறுத்திய முறையே எழுத்துக்களது வடிவிலக்கணம் கூறியது.

(இ-ள்) தொல்லை வடிவின எல்லாவெழுத்தும் - எல்லாவெழுத்தும் பழையதாக வருகின்ற வடிவினவேயாம், ஆண்டெய்தும் - அவ்விடத்துப் பொருந்தி நிற்பனவாம், எகாரமொகாரமெய் புள்ளி - எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளி பெற்று நிற்கும் என்றவாறு.

தொகையுரை: எழுத்தினது தன்மையும் எழுத்தினது வடிவும் நமக்கு உணர்த்தலாகாமையின் ஆசிரியர் இண்டு உரைத்திலரெனக் கொள்க. இங்ஙனம் கூறிய வடிவாவது கட்புலனாகியே நிற்கும் வரி வடிவு. அது வட்டம் சதுரம் முதலிய முப்பத்திரண்டனுள் ஒன்றை உணர்த்தும். மனத்தால் உணரும் நுண்ணறிவில்லோரும் உணர்தற்கு எழுத்துகட்கு வேறு வேறு வடிவங்காட்டி எழுதப்பட்டு நடத்தலிற் கட்புலனாகிய வரிவடிவுடையவும் உடையவாயிற்று.

உ-ம்: எரி, எரி; ஒளி, ஒளி; உலகு, உலகு; மண்மகள், மணமகள். (43)

## எழுத்தின் மாத்திரை

99. மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையௌக் குறுக்க மொற்றள
பரையொற் றியுக் குறுமை யாய்தம்
கால் குறண் மஃகா னாய்த மாத்திரை.

சூ-ம், நிறுத்திய முறையே எழுத்துக்களது மாத்திரை ஆமாறு கூறியது.

(இ-ள்) மூன்று உயிரளபு - உயிரளபெடை மூன்று மாத்திரையும், இரண்டா நெடில் - நெட்டெழுத்து இரண்டு மாத்திரையும், ஒன்றே குறிலோடு ஐ ஔக் குறுக்கம் ஒற்றளபு - குற்றெழுத்தும் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் ஒற்றளபெடையும் ஒரோவொன்று ஒரு மாத்திரையும், அரை ஒற்றியுக் குறுமை ஆய்தம் - உடலெழுத்தும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் முற்றாய்தமும் ஒரோவொன்று அரை மாத்திரையும், கால் குறள் மஃகான் ஆய்தம் - மகரக் குறுக்கமும் ஆய்தக் குறுக்கமும் ஒரோவொன்று கால் மாத்திரையுமாம், மாத்திரை - மாத்திரையென்றதை எல்லா எண்ணொடும் ஒட்டுக. (44)

## மாத்திரை அளவு

100. இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை

சூ-ம், மேற்கூறிய மாத்திரைக்கு அளவு கூறியது.

(இ-ள்) இயல்பெழு மாந்தர் - இயற்கையாக - எழாநின்ற மாந்த ருடைய, இமை நொடி - கண்ணிமை இமைத்தலும் கைநொடி நொடித் தலும், மாத்திரை - மாத்திரை ஒன்றுக்கு அளபாம் என்றவாறு.

அரும்பதவுரை: கட்புலனாகிய இமைக்காலமும் செவிப் புல னாகிய நொடிக் காலமும் கருதிக் கோடற்கு இரண்டும் ஓதி னார். அன்றி இரண்டும் கூடி ஒரு மாத்திரைய அல்லவென்க.

(45)

### மாத்திரைக்குப் புறநடை

**101. ஆவியு மொற்று மளபிறந் திசைத்தலும்**
**மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்.**

சூ-ம், மேலுரைத்த மாத்திரைக்கு ஓர் புறநடை உரைத்தது.

(இ-ள்) ஆவியுமொற்றும் - உயிரும் ஒற்றுமென்னும் இவ்விரு கூற் றெழுத்தும், அளபிறந்து இசைத்தலும் மேவும் - தத்தமக்குச் சொன்ன மாத்திரை கடந்து மிக்கிசைக்கவும் பெறும், இசை விளி பண்டமாற் றாதியின் - இசை கூறுமிடத்தும் விளக்குமிடத்தும் பண்டமாற்று முத லானவற்றின்கண்ணும் என்றவாறு.

### முதனிலை

**102. பன்னீ ருயிருங் கசதந பமவய**
**ஞஙுவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்**

சூ-ம், நிறுத்திய முறையே மொழிக்கு முதல் வரும் எழுத்து இன்ன தென உரைத்தது.

(இ-ள்) பன்னீருயிரும் - உயிர் பன்னிரண்டெழுத்தும், க ச த ந ப ம வ ய ஞ ங ஈரைந்துயிர்மெய்யும் இப்பத்து உயிர்மெய்யெழுத்தும், மொழி முதல் - மொழிக்கு முதற்கண்ணே வரும் என்றவாறு.

உ-ம்: அருள், ஆகம், இகல், ஈகை, உருவம், ஊசல், எது, ஏது, ஐயர், ஒள்வாள், ஓம், ஔவிய நெஞ்சு எனவும்; கண்டு, காடு, கிளி, கீரி, குளி, கூவல், கெடு, கேடு, கையறம், கொஞ்சம், கோலடி, கௌவை, சதம், சாடு, சிறுமி, சீயம், சுவடு, சூகரம், செல்வம், சேது, சைவம், சொல், சோரன், சௌவுரியம், தந்தி, தாதை, திரு, தீனம், துருவை, தூது, தெய்வம், தேக்கு, தையல், தொந்தி, தோள், தௌவை, நகரம், நாடு நிலை, நீதி, நுனி, நூல், நெல், நேற்று, நைதல், நொறல், நோக்கம், நௌவி, படு, பாடு, பிடி, பீடு, புடை, பூவை, பெண், பேதை, பையல், பொறி, போது, பௌவம், மலை,

மாலை, மிசை, மீசை, முகம், மூர்த்தி, மெல்லியல், மேதை, மையல், மொண்டு, மோது, மௌ வல் எனவும் வரும். இவை முழுதும் மொழி முதற்கண் வந்தன. ஒழிந்தன தத்தம் சிறப்பு விதியுட் காட்டுதும். (47)

**103. உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்.**

சூ-ம், வகாரத்துக்குப் பொது விதி மாற்றிச் சிறப்பு விதி கூறியது.

(இ-ள்) உ ஊ ஒ ஓ அலவொடு - உ ஊ ஒ ஓ என்னும் இந்நான்கு உமிருமல்லாத எட்டு உயிரெழுத்தோடும் கூடி, வம் முதல் - வகரம் மொழிக்கு முதலாம் என்றவாறு.

உ-ம்: வளம், வாவி, விளைவு, வீதம், வெண்பா, வேதம், வையம், வௌவுதல் என வரும். (48)

**104. அ ஆ உ ஊ ஒ ஔ யம்முதல்.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) அ ஆ உ ஊ ஒ ஔ - இவ்வாறு உயிரோடுங் கூடி, யம் முதல் - யகாரம் மொழிக்கு முதலாம் என்றவாறு.

உ-ம்: யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம் என வரும். (49)

**105. அஆஇ எஒவ்வொ டாகும் ஞமுதல்.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) அ ஆ இ எ ஒவ்வொடு - இவ்வைந்து உயிரோடுங் கூடி, ஆகுஞ்ஞம் முதல் - ஞகரம் மொழிக்கு முதலாம் என்றவாறு.

உ-ம்: ஞமண், ஞானம், ஞிமிறு, ஞெண்டு, ஞொள்கல் என வரும். (50)

**106. சுட்டியா வெகர வினாவழி யவ்வை**
**ஒட்டி ஙவ்வு முதலா கும்மே.**

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) சுட்டியா எகர வினாவழி - சுட்டெழுத்தின் பின்னும் யா வினாவின் பின்னும் எகர வினாவின் பின்னும், அவ்வை ஒட்டி - அகர உயிரோடுங் கூடி, ஙவ்வு முதலாகும்மே - ஙகரம் மொழிக்கு முதலாம் என்றவாறு.

உ-ம்: அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என வரும். (51)

## ஈற்று நிலை

107. ஆவி ஞணநம னயரல வழளமெய்
சாயு முகர நாலாறு மீறே.

சூ-ம், நிறுத்திய முறையே மொழிக்கு ஈறாம் எழுத்து இன்னதெனக் கூறியது.

(இ-ள்) ஆவி - உயிர் பன்னிரண்டு எழுத்தும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய் - இப்பதினோர் உடலெழுத்தும், சாயுமுகரம், குற்றிய லுகரம் ஒன்றும், நாலாறும் ஈறே - ஆக இருபத்துநாலெழுத்தும் மொழிக்கு ஈறாய் வரும் என்றவாறு.

உ-ம்: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவும்; எ, ஐ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு எனவும் வரும். இது பொது விதியாற் போந்தன. ஒழிந்தன வரும் சூத்திரத்துள் காட்டுதும். (52)

108. குற்றுயி ரளபி னீறா மெகரம்
மெய்யொ டேலா தொந்நவ் வோடாமௌக்
ககர வகரமோ டாகு மென்ப.

சூ-ம், குற்றுயிருக்குப் பொது விதி மாற்றிச் சிறப்பு விதியும் எல்லா உயிருக்கும் பொது விதிமேற் சிறப்பு விதியும் கூறியது.

(இ-ள்) குற்றுயிர் அளபின் ஈறாம் - குற்றுயிர் ஐந்தும் தானே நின்று ஈறாகா, அளபெடுப்புழி ஈறாம்.

உ-ம்: ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ.

எகரம் மெய்யொடு ஏலாது - எகரம் மெய்களோடு கூடிவந்து ஈறாகாது.

ஓ நவ்வொடு ஆம் - ஒகரம் நகரம் ஒன்றுடனே கூடிநின்று ஈறாம்.

உ-ம்: நொ

ஔ ககர வகரமோடு ஆகும் - ஔகாரம் ககரத்தோடும் வகரத் தோடும் கூடிநின்று ஈறாம்.

உ-ம்: கௌ, வௌ.

என்ப - என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

ஒழிந்த ஒன்பது உயிரும் தத்தமக்கேற்ற மெய்களோடுங் கூடி ஈறாமென்பது சொல்லாமற் போந்தது.

உ-ம்: வருக, பூங்கா, வீக்கி, புகீ, செகு, புகூ, இங்கே, மங்கை, எங்கோ; உச, உசா, விசி, சீ, முசு, சூ, சே, கச்சை, சோ; உரிஞ், உரிஞா, உரிஞி, உரிஞீ, உரிஞு, உரிஞூ, மஞ்சை, உரிஞோ; தட்ட, தடா, மடி, பிடீ, மடு, மடூ, அடே, பட்டை, அடோ, பண்ண, எண்ணா, கண்ணி, உண்ணி, கணு, கண்ணூ, இணே, பண்ணை, கண்ணோ; அத, உதா, புதி, பதீ, அது, தூ, அதே, தந்தை, அந்தோ; பொருந, நா, நீ, நே, நை, நொ, தப, துப்பா, தம்பி, ஆப்பீ, தபு, பூ, பே, பெதும்பை, போ; கம, மா, அம்மி, மீ, செம்மு, கொண்மூ, மே, ஆமை, வம்மோ; செய, காயா, ஆயி, மொயி, வாயு, கொய்யூ, அய்யே, ஐயை, ஐயோ; அவர, தரா, புரி, புரீ, சரு, வெரூ, நரை, அரோ; சில, பலா, வலி, வலீ, வலு, கொலூ, வல்லே, கலை, கொலோ; தவ, அவா, தவி, வீ, கதவு, வே, வை, தொழ, விழா, நழி, வழி, மழு, எழூ, ஊழே, வாழை, உழோ, உள, உள்ளா, உள்ளி, குளீ, உள்ளு, எள்ளே, அளை; கற்ற, கற்றா, உறி, உறீ, கற்று, கற்றூ, அற்றே, காறை, எற்றோ; நன, கனா, வனி, துனீ, முன்னு, துன்னூ, என்னே, அன்னை, அன்னோ. (53)

**109. நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே.**

சூ-ம், உயிர்மெய்யெழுத்துக்கு முதலும் ஈறும் ஆமாறு உரைத்தது.

(இ-ள்) நின்ற நெறியே உயிர்மெய் - உயிர்மெய்யானது ஒற்று முன்னும் உயிர் பின்னுமாய் நின்ற முறைமையே, முதலீறே - மெய் முதல் மொழியென்றும் உயிர் ஈற்று மொழியென்றும் ஆவதல்லது உயிர் மெய் முதலென்றும் உயிர்மெய் ஈறென்றும் கொள்ளப் படா என்றவாறு. (54)

## இடைநிலை

**110. கசதப வொழித்த வீரேழ் கூட்டம்**
**மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்**
**டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை**
**மேவு முயிர்மெய் மயக்கள வின்றே.**

சூ-ம், நிறுத்திய முறையே மொழிக்கு இடையெழுத்து இன்னதெனக் கூறியது.

(இ-ள்) கசதப ஒழித்த - க ச த ப என்னும் நான்கு மெய்யும் ஒழித்து நின்ற, ஈரேழ் கூட்டம் - பதினான்கு மெய்யும் ஒன்றன்பின் ஒன்று மாறி வந்து ஒன்றுவது, மெய் மயக்கு - இன மெய் மயக்கமும் பிற மெய்

மயக்கமுமாய், உடனிலை - தன் முன்னர்த் தாம் வந்தொன்றும் உட னிலை மயக்கமாவது, ர ழ ஒழித்து ஈரெட்டாகும் - ரகார ழகாரம் ஒழித்து ஒழிந்து நின்ற பதினாறு மெய்யுமாம், இவ்விருபான் மயக்கும் - இனமெய் பிறமெய் கூடிய மெய் மயக்கமும் தன் முன்னர்த் தான் மயங்கும் உடனிலை மயக்கமும் என்னும் இவ்விரு கூறு மயக்கமும், மொழியிடை மேவும் - மொழிக்கிடையிலே பொருந்தும், உயிர்மெய், மயக்கு - உயிர்மெய்யும் உயிர்மெய்யும் கூடிய மயக்கமும், அளவின்றே - இன்னதன் பின் இன்னது வருமென்னும் வரையறை இல்லை என்றது. (55)

**111.** ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

சூ-ம், ஙகர வகர மெய்மயக்கம் கூறியது.

(இ-ள்) ஙம்முன் கவ்வாம் - ஙகரத்துக்கு முன்னே ககரமும், வம்முன் யவ்வே - வகரத்தின் முன்னர் யகரம் வந்து மயங்கும் என்றவாறு.

உ-ம்: கங்கன், தெவ்யாது என வரும். (56)

**112.** ஞ ந முன் றம்மினம் யகரமோ டாகும்.

சூ-ம், ஞகார நகார மெய்மயக்கம் கூறியது.

(இ-ள்) ஞந முன் - ஞகாரமெய் முன்னும் நகாரத்தின் முன்னும், தம் இனம் - தமக்கு இனமாகிய சகரமும், தகரமும், யகரமோடாகும் - யகாரமும் வந்து மயங்கும் என்றவாறு.

உ-ம்: கஞ்சன், உரிஞ் யாது, கந்தன், வெரிந் யாது. (57)

**113.** டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

சூ-ம், டகார றகார மெய்மயக்கம் கூறியது.

(இ-ள்) டறமுன் - டகாரத்தின் முன்னும் றகாரத்தின் முன்னும், க ச ப மெய்யுடன் மயங்கும் - க ச ப என்னும் மூன்று மெய்யும் மயங்கும் என்றது.

உ-ம்: கட்கம், கட்கிறார், தட்பம் எனவும்; கற்க, கற்கிறார், கற்பம் எனவும் வரும். (58)

**114.** ண ன முன வினங்கச ஞபமய வவ்வரும்.

சூ-ம், ணகார னகார மெய்மயக்கம் கூறியது.

(இ-ள்) ண ன முன் - ணகார னகாரத்தின் முன்னர், இனம் - தனக்கு இனமாகிய டறக்களும், க ச ஞ ப ம ய வ வரும் - இவ்வேழு மெய்யும் வந்து மயங்கும் என்றவாறு.

உ-ம்: விண்டு எனவும்; நன்று எனவும்; வெண்கலம், வெண்சோறு, வெண்ஞாண், பண்பு, வெண்மை, மண்யாது, மண்வலிது எனவும்; புன்கண், புன்செய், புன்ஞாண், அன்பு, வன்மை, பொன்யாது, பொன்வலிது எனவும் வரும். (59)

**115. மம்முன் பயவ மயங்கு மென்ப.**

சூ-ம், மகார மெய்மயக்கம் கூறியது.

(இ-ள்) மம்முன் - மகார மெய் முன்னர், ப ய வ மயங்குமென்ப - தனக்கு இனமாகிய பகரமும் யகாரவகாரமும் வந்து மயங்கும் என்றவாறு.

உ-ம்: கம்பன், கலம் யாது, கலம் வலிது எனவும் வரும்.(60)

**116. யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.**

சூ-ம், யகார ரகார ழகார மெய்மயக்கம் கூறியது.

(இ-ள்) ய ர ழ முன்னர் - இம்மூன்று மெய் முன்னரும், மொழிமுதன் மெய் வரும் - ஙகாரம் ஒழித்து மொழிக்கு முதலாம் ஒன்பது எழுத்தும் வந்து மயங்கும் என்றவாறு.

உ-ம்: வேய், வேர், வீழ் : கடிது, சிறிது, தீது, பெரிது, நீண்டது, மாண்டது, ஞான்றது, யாது, வலிது என வரும். (61)

**117. லளமுன் கசப வயவொன் றும்மே.**

சூ-ம், லகார ளகார மெய்மயக்கம் கூறியது.

(இ-ள்) ல ள முன் - லகார ளகார மெய் முன்னர், க ச ப வ ய ஒன்றும்மே - க ச ப வ ய என்னும் ஐந்து மெய்யும் மயங்கும் என்றவாறு.

உ-ம்: செல்க, வல்சி, செல்ப, செல்வம், கொல்யானை எனவும்; கொள்க, நீள்சினை, கொள்ப, கள்வன், வெள்யாறு எனவும் வரும். (62)

**118. ரழவல் லனதம்முற் றாமுட னிலையும்.**

சூ-ம், உடனிலைமயக்கம் ஆமாறு கூறியது.

(இ-ள்) ரழ அல்லன - ரகார ழகாரம் ஒழித்து ஒழிந்த மெய் பதினாறும், றம்முற் றாமுடனிலையும் - தம் முன்னர்த் தாம் வந்து ஒன்றுவது உடனிலைமயக்கமாம் என்றவாறு.

உ-ம்: பக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், திட்டம், திண்ணை, அத்தம், வெந்நீர், தப்பு, அம்மி, அய்யர், வெல்ல, கவ்வை, கள்ளு, குற்றம், அன்னம் என வரும். (63)

119. யரழவொற் றின்முன் கசதப ஙஞநம
ஈரொற் றாம்ரழத் தனிக்குறி லணையா.

சூ-ம், ஈரொற்றாகும் உடனிலை மயக்கம் ஆமாறும் தனிக்குறிற் கீழ் ஒற்று வாராதெனவும் உரைத்தது.

(இ-ள்) ய ர ழ ஒற்றின் முன் - ய ர ழ என்னும் இம்மூன்று மெய் முன்னும், க ச த ப ங ஞ ந ம - க ச த ப ங ஞ ந ம என்னும் இவ்வெட்டு ஒற்றுங்கூடி, ஈரொற்றாம் - ஈரொற்று உடனிலை மயக்கமாம், ர ழ - ரகார ழகாரம் என்னும் இவ்விரண்டு மெய்யும், தனிக்குறில் அணையா - தனிக்குறிற்கீழ் வந்து ஒற்றாய் நில்லாது என்றவாறு.

உ-ம்: வேய்க்குறை, வேய்ச்சிறை, வேய்த்தல், வேய்ப்புறம், வேய்ங் குறை, வேய்ஞ்சிறை, வேய்ந்தல், வேய்ம்புறம் என வரும். வேர் வீழ் என்பவற்றிற்கும் இவ்வாறொட்டி க ச த ப ங ஞ ந ம க்கள் ஈரொற்றாய் வந்தன காண்க. ஆகாதனவற்றிற்கு யாண்டும் காட்ட வராவென்க. (64)

120. லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.

சூ-ம், செய்யுட்குரிய ஈரொற்றுடனிலைமயக்கம் கூறியது.

(இ-ள்) ல ள மெய் திரிந்த ன ண முன் - லகாரம் திரிந்த னகாரத்தின் முன்னும் ளகாரம் திரிந்த ணகாரத்தின் முன்னும், மகாரம் நைந்து ஈரொற்றாம் - மகாரம் குறுகி ஈரொற்றாய் நிற்கும், செய்யுளுள்ளே - செய்யுளிடத்து என்றவாறு.

உ-ம்: திதையுங் கலத்தைப் பயினாற் றிருத்தும் திசையறி
மீகானும் போன்ம் (பரி.10)

எனவும்,

வெயிலிகல் வெஞ்சுர மையநீ
யேகின் மயிலியன் மாதர் மருண்ம்

எனவும் வரும். (65)

**121. தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்
இம்முறை மாறியு மியலு மென்ப.**

சூ-ம், முதனிலை இடைநிலைக்குரியதோர் வழுவமைப்புக் கூறியது.

(இ-ள்) தம் பெயர் மொழியின் - எழுத்துக்கள் தம் பெயர்களை மொழி யுமிடத்து, முதலு மயக்கமும் - மொழிக்கு முதலாய் நின்றதும் மொழிக்கு இடையே நிற்பனவும், இம்முறை மாறியும், ஈண்டுச் சொன்ன முறையேயன்றி முதலாகாதன் முதலாகியும் மயங்காதன மயங்கியும், இயலுமென்ப - வரப்பெறுமென்றும் சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: "அவற்றுள், லளஃகான் முன்னர் யவவும் தோன்றும்" (தொல். நூன்மரபு, 24) என்பதனுள் ளகாரமெய் முன்னர் லகாரம் மயங்கின வாறும் லகாரம் மொழிக்கு முதலாயினவாறும் காண்க. (66)

**122. மகர விறுதி யஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே.**

சூ-ம், மகர மெய்மயக்கம் உரைத்தது.

(இ-ள்) மகர விறுதி - மகரவிறுதியாகிய சொற்களுள், அஃறிணைப் பெயரின் - அஃறிணைப் பெயர்களுட் சிலவிடத்து ஈற்றினின்ற மகரம், னகரமோடு உறழா நடப்பன உளவே - னகரத்துடனே பொருந்தி வருவனவும் உள என்றவாறு.

உ-ம்: நிலம், நிலன்; புலம், புலன்; வலம், வலன்; முகம், முகன்; அகம், அகன் எனவும் வரும். 'உறழா நடப்பன உள' எனவே உறழாதன பெரும்பான்மையவாம் என்க. அவை விட்டம், பட்டம், குடம் எனவும் வரும். (67)

**123. அ ஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன்.**

சூ-ம், அகரமும் ஐகாரமும் ஒரோவிடத்துத் தம்மில் வேறுபாடில்லை என உரைத்தது.

(இ-ள்) அ ஐ முதலிடை - அகரமும் ஐகாரமும் மொழிக்கு முதலினும் மொழிக்கு இடையினும், ஒக்கும் - தம்மில் வேறுபாடின்றி ஒத்து நடக்கும், ச ஞ ய முன் - சகர ஞகர யகரங்கள் முன்னாக வந்த விடத்து என்றவாறு.

உ-ம்: பசல், பைசல்; மஞ்சு, மைஞ்சு; முரஞ்சு, முரைஞ்சு; அரயர், அரையர் எனவும் வரும். (68)

124. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழு மென்மரு முளரே.

சூ-ம், இதுவும் ஒரோ மயக்கம் கூறியது.

(இ-ள்) ஐகான் யவ்வழி - ஐகாரத்தின் பின்னும் யகாரத்தின் பின்னும் வரும், நவ்வொடு சில்வழி - நகரத்துடனே சில இடங்களில், ஞஃகா னுறமும் - ஞகாரம் பொருந்தி வரப்பெறும், என் மரும் உளரே - என்று சொல்லுவாரும் உளர் என்றவாறு.

உ-ம்: செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண்டாற் பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே

(தே. கோயில் திருவிருத்தம், 5) எனவும், உறழ்ச்சியான் மை நீலம், மெய் நானம் எனவும் கொள்க. (௬௯)

## போலி

125. அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன.

சூ-ம், நிறுத்தமுறையானே போலியெழுத்து ஆமாறு கூறியது.

(இ-ள்) அம்முன் இகரம் யகரம் என்றிவை எய்தின் - அகரத்தின் முன்னர் இகரமும் யகரமும் வந்து பொருந்தின், ஐயொத்து இசைக்கும் - ஐகார ஓசை போல இசைக்குமென்ப; அவ்வோடு உவ்வும் வவ்வும் - அகரத்தின் முன்னர் உகரமும் வகரமும் வந்து பொருந்தின், ஒளவோரன்ன - ஒளகார ஓசைபோல இசைக்கும் என்றவாறு.

உ-ம்: ஐவனம், அய்வனம் எனவும்; மௌவல், மஉவல் எனவும் வரும்.

அவை ஐகார ... ... போலியாம் என்க. (70)

## எழுத்தின் சாரியை

126. மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்
ஐஔக் கானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு காரமுமாஞ் சாரியை பெறும்பிற

சூ-ம், எழுத்துக்கு வரும் சாரியை இன்னதென உரைத்தது.

(இ-ள்) மெய்கள் அகரமும் - மெய்கள் பதினெட்டும் அகரச் சாரியை யும், நெட்டுயிர் காரமும் - நெட்டுயிர் ஏழும் காரச் சாரியையும், ஐ ஔக் கானும் - ஐகார ஔகாரங்கள் காரத்துடனே கான் சாரியையும், இருமைக் குறில் - உயிரும் உயிர்மெய்யுமான குற்றெழுத்து இரண்டு பகுதியும், இவ்விரண்டொடு கரமுமாம் - காரம் கான்களுட னேயும் கரமென்னும் சாரியையும், சாரியை பெறும்பிற - எழுத்துச் சாரி யையாகச் சார்ந்து நடக்கும் என்றவாறு.

உ-ம்: க ங ச ஞ ட ண ற ன எனவும்; ஆகாரம், ஈகாரம், ஊகாரம், ஏகாரம், ஐகாரம், ஓகாரம், ஔகாரம் எனவும்; ஐகான், ஔகான் எனவும்; அகாரம், அஃகான், அகரம் எனவும்; ககாரம், கஃகான், ககரம் எனவும்; "பிற" என்றதினாலே கான் வருங்காலை ஆய்த மும், ஆன், ஓன் முதலாயினவும் கொள்க. (71)

## புறநடை

127. மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே

சூ-ம், எனைவகை எழுத்துக்கும் இயல்வதோர் இயல்பு கூறியது.

(இ-ள்) மொழியாய்த் தொடரினும் - எழுத்துக்கள் பலவற்றையும் கூட்டி நெருக்கி ஒரு தொடராய்க் கூறினாலும், முன்னனைத் தெழுத்தே - தம் வடிவும் அளவும் முதலான இலக்கணம் திரியாது தனித்து நின்றாற் போலுமாம் ஆண்டும் என்றவாறு.

உ-ம்: மறு, மன்று; மறு, மற்றை எனவும், "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" (குறள்.391) என வும் இவற்றுள் அரிசனமும் நீறும் கூட்டிச் செவ்வண்ணமானது போல ஆகாமல் எழுத்துக்கள் கூடி நின்றவிடத்துத் தம்மியல்பு திரியாமை நின்றவாறு காண்க. (72)

**முதலாவது எழுத்தியல் முற்றும்**

## இரண்டாவது

# பதவியல்

### பதம்

128. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி யியலு மென்ப.

சூ-ம், நிறுத்தமுறையானே பொதுவகையாற் பதம் ஆமாறும் அதன் பகுதியும் கூறுகின்றது.

(இ-ள்) எழுத்தே தனித்தும் - மேற்சொன்ன எழுத்துத்தானே தனித்து நின்றும், தொடர்ந்தும் - அவ்வெழுத்து இரண்டு முதலாகத் தொடர்ந்து நின்றும், பொருள் தரில் - பொருள் விளக்குமெனின், பதமாம் அது - பதமென்பதாம்; அப்பதம், பகாப்பதம் பகுபதமென - பகாப்பதம் பகு பதமென்னும் இருபாலாகி இயலுமென்ப - இரண்டு பகுதியாய் நடக்குமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

"தன்னை யுணர்த்தி னெழுத்தாம் பிறபொருளைச் சுட்டுதற் கண்ணே யாஞ் சொல்" என்பது அவினயப் புறநடை. எல்லா மொழியும் ஓரெழுத்துப் பதம் தொடரெழுத்துப் பதமெனவும் பகாப்பதம் பகுபத மெனவும் இவ்விரண்டாய் அடங்கும் என்ப. இறிஞி, மிறிஞி முத லாயின தொடர்ந்தனவேனும் பொருள் தராவெனிற் பதமாகாததென மறுக்க. (1)

### ஓரெழுத்தொருமொழி

129. உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும்
கவசவி னாலும் யவ்வி லொன்றும்
ஆகு நெடினொது வாங்கு றி லிரண்டொ
டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.

சூ-ம், ஓரெழுத்துப் பதமாவன இவையெனக் கூறியது.

(இ-ள்) உயிர் மவிலாறும் - உயிர் வருக்கத்தில் ஆறும் மகரத்தில் ஆறும், தபநவில் ஐந்தும் - தகரத்தில் ஐந்தும் பகரத்தில் ஐந்தும் நகரத்தில் ஐந்தும், கவசவில் நாலும் - ககரத்தில் நாலும் வகரத்தில் நாலும் சகரத்தில் நாலும், யவ்வில் ஒன்றும் - யகரத்தில் ஓரெழுத்தும், ஆகுநெடில் - ஆகிய நெட்டெழுத்தில் ஓரெழுத்துப் பதம் நாற்பதும், நொ து வாங் குறிலிரெண்டொடு - நொவ்வும் துவ்வு மாகும் குற் றெழுத்தில் ஓரெழுத்துப் பதம் இரண்டினுடன்,... ... ... ... ஆறேழ் சிறப்பின - நாற்பத்திரண்டும் சிறப்பினவாம் என்றவாறு. "உயிர் மவில்" என்றதனை அவ்வவ்வருக்கங்களில் எனக் கொள்க.

உ-ம்: ஆ, ஈ, ஏ, ஐ, ஓ, ஔ; மா, மீ, மூ, மே, மை, மோ; தா, தீ, தூ, தை, தோ; பா, பூ, பே, பை, போ; நா, நீ, நே, நை, நோ; கா, கூ, கை, கோ; வா, வீ, வே, வை; சா, சீ, சே, சோ; யா; நொ, து எனவும் இவை சிறப்புளவெனவே சிறப்பில்லனவும் சிலவுளவாயிற்று. அவை ஆறாமுயிரும், பகரவீகாரமும், சீ, சூ, சை, கௌ, வௌ என்பன போலவும் எனக் கொள்க. (2)

## தொடரெழுத்தொருமொழி

130. பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்
எழுத்தீ றாகத் தொடரு மென்ப

சூ-ம், நிறுத்த முறையானே தொடரெழுத்துப் பதத்துக்கு வரையறை கூறியது.

(இ-ள்) பகாப்பதம் ஏழும் - பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழெ ழுத்தீறாகவும், பகுபதம் ஒன்பதும் எழுத்தீறாக - பகுபதம் இரண் டெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகவும், தொடரும் என்ப - தொடரு மென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி எனப் பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழெழுத் தீறாகத் தொடர்ந்து தொடரெழுத்துப் பதமாயினவாறு காண்க. கூனி, கூனன், கூழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத் தான், அத்திகோசத்தான், உத்திரட்டாதியான் எனப் பகுபதம் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகத் தொடர்ந்து தொட ரெழுத்துப் பதமாயினவாறுகாண்க. கங்கைகொண்ட சோழபுரம், இரதநூபுரச் சக்கரவாளம், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடு மிப் பெரு வழுதி (என்றற் றொடக்கத்து ஒட் டுப் பெயர்க்கு வரையறை இல்லையெனக் கொள்க.) (3)

## பகாப்பதம்

131. பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்.

சூ-ம், நிறுத்த முறையானே பகாப்பதம் ஆமாறு கூறியது.

(இ-ள்) பகுப்பாற் - ஒன்றாய் நின்று ஒரு பொருள் தருமொழியைப் பலவாகப் பிரித்தால், பயனற்று - அதனால் வருவதோர் பயனுமற்று, இடுகுறியாகி - இதற்கு இது பெயர் என்றிட்ட இடுகுறியாகி, முன்னே ஒன்றாய் முடிந்து - தொன்று தொட்டு ஒரு பிண்டமாய் முடிந்து, இயல்கின்ற பெயர் வினை இடை உரி - நடக்கின்ற பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமென, நான்கும் பகாப்பதம் - வழங்குகின்ற நால்வகைச் சொல்லும் பகாப் பதமாம் என்றவாறு,

வ-று: ஈ, கள், ஆண், பெண், தந்தை, தாய், மிருகம், பட்சி, கிருமி, கீடம், ஆனை, குதிரை, உயிர், உடம்பு எனப் பொருட்பெயர்ப் பகாப்பதம்; வானம், பூமி, அகம், புறம் என இடப்பெயர்ப் பகாப்பதம்; வருடம், மாதம், இரா, பகல் எனக் காலப்பெயர்ப் பகாப்பதம்; கண், செவி, மூக்கு, தளிர், பூ, காய், கனி எனச் சினைப்பெயர்ப் பகாப்பதம்; செம்மை, கருமை, நெடுமை எனப் பண்புப் பெயர்ப் பகாப்பதம்; உணல், தினல், செலவு, வரவு, கூத்து, பாட்டு எனத் தொழிற் பெயர்ப் பகாப் பதம்; இவை ஆறும் பெயர்ப் பகாப்பதம். உண், தின், நட, கிட., போ, வா என வினைப் பகாப்பதம். மன், மற்று, தில், கொல், மியா, இக, அம்ம, மதி என இடைப் பகாப்பதம். உறு, தவ, நனி, கழி, ஒலி, முழக்கு என உரிப் பகாப்பதம். சாத்தன், கொற்றன், கூத்தன் என்பன சாத்தையுடையான் சாத்தன், கொற்றையுடையான் கொற்றன், கூத்தையுடையான் கூத்தன் என இவ்வாறு பொருள் ஏலாவிடில் அவை பகாப்பதமாய் இடு குறி மாத்திரையாய் நிற்குமென்க. (4)

## பகுபதம்

132. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

சூ-ம், நிறுத்தமுறையே பகுபதம் ஆமாறு கூறியது.

(இ-ள்) பொருள் - பொருள் காரணமாக வரும் பெயரும், இடம் - இடம் காரணமாக வரும் பெயரும், காலம் - காலம் காரணமாக வரும்

பெயரும், சினை - சினை காரணமாக வரும் பெயரும், குணம் - குணம் காரணமாக வரும் பெயரும், தொழிலின் வருபெயர் - தொழில் காரண மாக வரும் பெயரும், பொழுதுகொள் வினை - காலத்தைக் கொண்டு முடியும் வினையும், பகுபதமே - இவையெல்லாம் பகுபதம் என்றவாறு.

பொருள் முதல் மூன்றும் முதலும் சினைமுதல் மூன்றும் சினை யுமாய் அடங்குதற்கு இம்முறை வைத்தார் என்க.

உ-ம்: குழையன், வாணன், உத்திரட்டாதியான், கூனன், கரியன், கூத்தன் எனப் பெயர்ப் பகுபதம் ஆறும் வந்தன. நடந்தான், நடக்கின்றான், நடப்பான் என முக்காலமும் காட்டும் வினைப் பகுபதம் வந்தன. (5)

### பகுபதவுறுப்பு

133. பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

சூ-ம், பகுபத முடித்தற்கு வேண்டும் கருவி கூறியது.

(இ-ள்) பகுதி விகுதி இடைநிலை - முதல் நிற்பதுவும் இடை நிற் பதுவும் இறுதி நிற்பதுவும், சாரியை சந்தி விகாரம் - பொதுச் சாரி யையும் சந்தி வகையும் விகாரக் கூறுபாடும். ஆறினும் ஏற்பவை - இங்ஙனம் கூறிய ஆறினுள்ளும் ஈண்டைக்கேற்பன இவையென, முன்னிப் புணர்ப்ப - கருதி வருவித்து முடிக்க, முடியும் எப்பதங்களும் - பொருளாதி அறுவகைப் பெயர்ப்பதமும் வினைப்பதமும் முடியும் என்றவாறு. இடைநிலையாவன: பதம் முடிப்புழிக் காலமும் பொருண் மையும் காட்டி வருவன. சாரியையாவன; அன், ஆன் முதலாக ஓதிய தில் எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ப் பெரும்பாலும் இன்னொ லியே பயனாக வருவன. சந்தியாவன: இன்னது வந்தால் இன்னது ஆமென வருவன. விகாரமாவன: பதத்துள் அடிப்பாடும் செய்யுள் தொடையும் ஒலியும் காரணமாக வலித்தல் முதலாக வருவன. "ஏற் பவை" எனவே ஒன்றற்கே இவை ஆறும் வரவேண்டுமென்னும் யாப் புறவு இல்லையென்க. (6)

### பகுதி

134. தத்தம்,
பகாப் பதங்களே பகுதி யாகும்.

சூ-ம், பகுபதங்கட்குப் பகுதியாமாறு கூறியது.

(இ-ள்) தத்தம் - பொருளாதி ஆறும் காரணமாக வரும் பகுபதங் கட்குத் தந்தமுடைய, பகாப் பதங்களே - அப்பொருளாதி ஆறான பகாப்பதங்களே, பகுதியாகும் - பகுதி ஆகும் என்று சொல்லுவர் புல வர் என்றவாறு.

உ-ம்: குழையன், குழையான், குழையள், குழையாள், குழை யவை, குழையென், குழையேன், குழையன், குழையம், குழையாம், குழையெம், குழையேம், குழையோம், குழையை, குழையாய், குழையிர், குழையீர் என வருவன இப்பொருண் மையுடையார் என்னும் பொருட்பெயர்ப் பகுபதம். ஒழிந்த வானான், காரான், தாளான், கரியான், ஊணான் என்னும் ஐ வகைப் பெயர்ப் பகுபதத்துக்கும் அவ்வாறு ஒட்டிக்கொள்க. இவற்றுள் தத்தம் பகப்பாதங்களே பகுதியானவாறும் அன் ஆன் முதலான விகுதியானவாறும் சாரியை சந்தி விகாரங்கள் ஏற்ற வாறும் கண்டுகொள்க. (7)

135. செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்புப் பகாநிலைப் பதமே.

சூ-ம், பண்புப் பகாப்பதம் விளங்கித் தோன்றாமையின் அவற்றை எடுத்து விரித்துரைத்தது.

(இ-ள்) செம்மை - செம்மையும் செம்மைக்கு மாறான வெண்மை, கருமை, பொன்மை, பசுமையும், சிறுமை - சிறுமையும் சிறுமைக்கு மாறான பெருமையும், சேய்மை - சேய்மையும் சேய்மைக்கு மாறான அணிமையும், தீமை - தீமையும் தீமைக்கு மாறான நன்மையும், வெம்மை - வெம்மையும் வெம்மைக்கு மாறான தண்மையும், புதுமை - புதுமையும் புதுமைக்கு மாறான பழமையும், மென்மை - மென்மையும் மென்மைக்கு மாறான வன்மையும், மேன்மை - மேன்மையும் மேன் மைக்கு மாறாக கீழ்மையும், திண்மை - திண்மையும் திண்மைக்கு மாறாக நொய்மையும், உண்மை - உண்மையும் உண்மைக்கு மாறான இன்மையும், நுண்மை இவற்றெதிர் - நுண்மையும் நுண்மைக்கு மாறான பருமையும், இன்னவும் - இவை போல்வன பிறவும், பண்புப் பகா நிலைப் பதமே - பண்புப் பெயர்ப் பகாப்பதமாம் என்றவாறு. (8)

136. ஈறு போத லிடையுகர மிய்யாதல்
ஆதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே.

சூ-ம், பண்புப் பதத்திற்குரிய சில விகாரம் எடுத்துரைத்தது.

(இ-ள்) ஈறு போதல் - பண்புப் பதத்தின் இறுதி கெடுதலும், இடை யுகர மிய்யாதல் - இடையிலே நின்ற உகரம் இகரமாதலும், ஆதி நீடல் - முதலினின்ற உயிர்கள் நீடலும், முதலினின்ற அகாரம் ஐகார மாதலும், தன்னொற் றிரட்டல் - இடையே தன்னொற்று இரட்டித்த லும், முன்னின்ற மெய்திரிதல் - முன்பு நின்ற மெய்யெழுத்துத் திரித லும், இனமிகல் - வருமொழி முதலுக்கு இனவெழுத்து மிகுதலும், இனையவும் - இவை போல்வன பிறவும், பண்பிற்கு இயல்பே - பண் புப் பதத்துக்கு முறைமை என்றவாறு.

அருகியவுரை: ஈற்றிற் செய்கையை முற்கூறியவதனால் இக் கேடு ஒருதலை அல்ல என்பதூஉம், கெடுவழி ஈற்றுயிர் கெடுதலும் ஈற்றுயிர்மெய் கெடுதலும், ஈற்றுயிர்மெய்யோடு ஈற்றயலுயிர் கெடுதலும், இனவெழுத்து வருமொழிக்கண்ணது என்பதூஉம், கெடுவழி ஈற்றுயிர் இவ்விதி எல்லாம் ஒன்றற்கு அல்ல என்பதூஉம் கொள்க.

வ-று: கரியன், பெரியன், சிறியன், நெடியன் என்பன ஈற்றுயிர் மெய் கெட்டும், உகரம் இகரமாகியும் வந்தன. கருங் குதிரை, செங்கோலம் என்பன ஈற்றுயிரும் ஈற்றுயிர்மெய்யும் முறையே கெட்டன. கார், பேரா, பாசிழை, பாசடை என்பன ஈற்றுயிர் மெய்யும் ஈற்றுயிரும் கெட ஆதி நீண்டன. பைங்கண், பைந்தார் ஈற்றுயிர்மெய்யும் ஈற்றயலுயிரும் கெட்டு அடியில நின்ற அகரம் ஐகாரமாய் முன்னின்ற மெய் திரிந்தன. வெற்றிலை, சிற்றாடை, குற்றடி, குற்றுயிர், நெட்டிலை, நெட்டெழுத்து என்பன ஈற்றுயிர்மெய்யும் ஈற்றயலுயிரும் கெட்டு இடையே தன்னொற்று இரட்டித்தன. சேதா என்பது ஈற்றுயிர்மெய் கெட்டு முன்னின்ற மெய் திரிந்து ஆதி நீண்டது. செங்கன்று என் பது வருமொழிக்கு இனமான மெல்லெழுத்து மிக்கது. கருங் குதிரை முதலாயின பகுபதம் அல்லவெனினும் பண்பு அதி காரப்பட்டமையாற் பதப்புணர்ச்சிக்கும் ஈண்டே சொன்னார் என்க. (9)

137\. நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரி நுண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே எஃகென்
றெய்திய விருபான் மூன்றா மீற்றவும்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

சூ-ம், வினைப் பகாப்பதம் விளங்கித் தோன்றாமையின் அவற்றை எடுத்து விரித்துரைத்தது.

(இ-ள்) நட ... அஃகு என்றெய்திய - நட ... அஃகு என்று சொல்லப் பட்ட, இருபான் மூன்றாம் ஈற்றவும் - இருபத்து மூன்று ஈற்றவாய ஏவல் வாய்பாட்டான் வருவனவெல்லாம், செய்யென் ஏவல் - செய்

யென்னும் விரவுத்திணை முன்னிலை ஒருமை ஏவல் வாய்பாடு போன்ற, **வினைப் பகாப்பதமே** - தெரிநிலைவினைப் பகாப்பதம் என்றவாறு. (10)

**138. செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்**
**செய்வியெ னேவ லிணையினீ ரேவல்.**

சூ-ம், இருமடியேவல் மும்மடியேவல் வினைப் பகாப்பதங்கள் ஆமாறு உரைத்தது.

(இ-ள்) செய்யென் வினைவழி - செய்யென்னும் ஏவல் வாய்பாட்டு வினையின்பின், விப்பி தனிவரில் -விப்பியென்னும் இரண்டினுள் ஒன்று தனித்து வரில், செய்வியென் ஏவல் - செய்வி என்னும் ஏவல் வாய்பாட்டு வினையென்னும் பொருளைப் பெறும், இணையின் - வி பி என்னும் இவையிரண்டும் ஒருங்கு வரினும் ஒன்றே இணைந்து வரினும், ஈரேவல் - ஏவன்மேல் ஏவலொன்று மூவராவானொரு கருத்தனைக் காட்டும் என்றவாறு.

உ-ம்: வருவி, சீப்பி, கூவுவி, வைவி, போவுவி, நடப்பி, மடிவி, விடுவி, ஏவுவி, நொவ்வுவி, வெளவுவி, உரிஞுவி, உண்பி, பொருநுவி, திருமுவி, தின்பி, தேய்வி, தேய்ப்பி, பார்ப்பி, செல்வி, அவ்வுவி, வாழ்வி, கேட்பி, அஃகுவி எனச் செய்வி யென்னும் ஏவல் வாய்பாட்டு வினைப் பகாப்பதம் வந்தவாறு நடத்துவிப்பி, வருவிப்பி, மடிவிப்பி என இரண்டும் ஒருங்கு வந்தன. நடப்பிப்பி, கற்பிப்பி, படிப்பிப்பி என ஒன்றே இணைந்து வந்தன. இவ்வாறு செய்விப்பி என்னும் ஏவல் வாய் பாட்டு வினைப் பகாப்பதம் வந்தவாறு உணர்க. இவற்றாற் பகுபதம் வருமாறு: நடத்துவித்தான், நடத்துவித்தாள், நடத்து வித்தார் எனவும், நடப்பித்தான், நடப்பித்தாள், நடப்பித்தார் எனவும், இவ்வாறு எல்லாம் பால் இடம் காலங்கடோறும் ஒட் டிச் செய்வியென் ஏவற்குப் பகுபதம் ஆமாறு உணர்க. நடத்து விப்பித்தான், நடத்துவிப்பித்தாள், நடத்துவிப்பித்தார் எனவும் நடப்பிப்பித்தான், நடப்பிப்பித்தாள், நடப்பிப்பித்தார், கற்பிப் பித்தான், கற்பிப்பித்தாள், கற்பிப்பித்தார் எனவும் எல்லாப் பால் இடம் காலங்டோறும் ஒட்டிச் செய்விப்பி என்னும் இருமடி யேவற்குப் பகுபதம் வந்தவாறு காண்க. இவையெல்லாம் ஏற்ற பெற்றி கொள்க. (11)

**139. விளம்பிய பகுதிவே றாதலும் விதியே.**

சூ-ம், பகுதிக்கு உரியதோர் விதி கூறியது.

(இ-ள்) விளம்பிய பகுதி - மேற்கூறிய எனைவகைப் பகுதிகளுள் ளும், வேறாதலும் - சில பொருள் வேறுபட்டும் சில மிக்கும் சில திரிந் தும் சில ஈறுகெட்டும் வருவது, விதியே - முறைமையாம் என்றவாறு.

உ-ம்: வா என் பகுதி வந்தான், வருகின்றான் என மிக்கும் திரிந்தும் வந்தது. கொள் என் பகுதி கொண்டான், கோடு, கோடும் என ளகாரம் ணகாரமாகியும் கெட்டும் நீண்டும் வந்தது. கொல், செல், வெல் என்னும் பகுதி கொன்றான், சென்றான், வென்றான், கோறு, கோறும், சேறு, சேறும், வேறு, வேறும் என லகாரம் னகாரமாகியும் கெட்டும் நீண்டும் வந்தன. இவ்வாறே பிறவுமுள்ள பகுதிக்கு வரும் வேறுபாடெல்லாம் அறிந்து முடிக்க. (12)

**140.** **அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம் மார்**
**அ ஆ குடு துறு என் ஏன் அல் அன்**
**அம் ஆம் எம் ஏம் ஓமொ டும் மூர்**
**கட தற ஐ ஆய் இம்மின் இர்ஈர்**
**ஈயர் கயவு மென்பவும் பிறவும்**
**வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.**

சூ-ம், பகுபதங்கட்கு விகுதியாமாறு கூறியது.

(இ-ள்) அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார் அ ஆ கு டு துறு என் ஏன் அல் அன் அம் ஆம் எம் ஏம் ஓமொடு - அன் ஆன்... ஓம் என்ற விகுதியோடும், உம் மூர் கடதற - உம்மூர்ந்த கடதறக்களாவது கும் டும் தும் றும், ஐ ஆய் இம்மின் இர் ஈர் ஈயர் கயவும் என்பவும் - என இங்ஙனம் சொன்ன முப்பத்தேழு விகுதியும், பிறவும் - இவை போல்வன பிறவும், வினையின் விகுதி - வினைப் பகுபதத்தின்கண் வரும் விகுதியாம், பெயரினும் சிலவே - பெயர்ப் பகுபதத்தின் கண்ணும் சில விகுதி வரும் என்றவாறு.

உ-ம்: நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தனன், நடந்தனள், நடந்தனர், நடப்ப, நடமார், நடந்தன, நடவா, நடக்கு, உண்டு, குண்டு, கட்டு, நடந்து, நடந்தது, வேறு, குமிற்று, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன. நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்கும், உண்டும், நடந்தும், சேறும், நடந்தனை, நடந்தாய், நடத்தி, நடமின், நடந்திர், நடந்தீர், நடவீயர், நடக்க, வாழிய, நடவும் என வினைக்கண் முப்பத்தேழும் விகுதியாயின. பிறவற்றோடும் இவ்வாறே ஏற்றிக் கொள்க. அன் ஆன் விகுதி உயர்திணை ஆண்பாற் படர்க்கை; அள் ஆள் விகுதி உயர்திணைப் பெண்பாற் படர்க்கை; அர் ஆர் ப மார் உயர் திணைப் பலர்பாற் படர்க்கை; ப இறந்தகாலம் எதிர்காலம் காட்டும் விகுதி; மார் எதிர்காலம் காட்டும் விகுதி; அ ஆ விகுதி அஃறிணைப் பன்மைப் படர்க்கை; கு டு து று விகுதி அஃறிணை ஒருமைப் படர்க்கை; குடு து று என் ஏன் அல் அன் விகுதி விரவுத் திணைத் தன்மையொருமை; அம் ஆம் எம் ஏம் ஓம்மொடு

உம்மூர் கடதற விகுதி விரவுத்திணைத் தன்மைப்பன்மை; ஐ ஆய் இ விகுதி விரவுத்திணை முன்னிலையொருமை; மின் இர் ஈர் விகுதி விரவுத்திணை முன்னிலைப் பன்மை; ஈயர் க ய உம் விகுதி இருதிணை ஐம்பால் மூன்றிடத்துக்கும் பொது. (13)

141. இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

சூ-ம், பெயர்ப் பகுபதங்கட்கு இடைநிலை ஆமாறு கூறியது.

(இ-ள்) இலக்கியங் கண்டு - முற்காலத்து இலக்கியங் கண்டு, அதற்கு இலக்கணம் இயம்பலிற் - அவ்விலக்கியத்துக்கே இலக் கணம் காட்டலில், பகுதி விகுதி பகுத்து - முடிக்கலுறும் பகுபதத்தின் பகுதியும் விகுதியும் பிரித்து, இடை நின்றதை - இடையிலே நிற்பது யாது அதனை, வினைப் பெயரால் பெயர்க்கு - வினையாலணையும் பெயரல்லாத பெயர்ப்பகுதி பதத்திற்கு, இடைநிலை எனலே - இடை நிலையென்று கொள்ளவேண்டும் என்றவாறு.

உ-ம்: நடந்தான் வானவன், மீனவன், எல்லவன், வில்லவன், பகலவன், கதிரவன், கரியவன் என அவ்வென்னும் இடைநிலை பெற்றன. சேரமான், கட்டிமான் என மகர இடைநிலை பெற்றன. வலைச்சி, புலைச்சி எனச் சகர இடைநிலை பெற்றன. புலத்தி, வண்ணாத்தி எனத் தகர இடைநிலை பெற்றன. வெள் ளாட்டி, மலையாட்டி என டகர இடைநிலை பெற்றன. கணக் கிச்சி, தச்சிச்சி என இச்சென்னும் இடைநிலை பெற்றன. பிறவும் இவ்வாறு அறிந்து முடிக்க. (14)

142. தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை

சூ-ம், வினைப் பகுபதத்திற்கு இடைநிலை ஆமாறு கூறியது.

(இ-ள்) தடறவொற்றின்னே - தகார டகார றகார மெய்களும் இன் னும், ஐம்பான் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒருமைப்பால், பன்மைப்பாலென ஐம்பாலினும், மூவிடத்து - தன்மை, முன்னிலை, படர்க்கை மூன்றிடத்தும், இறந்த காலந் தரும் - இறந்த காலங் காட் டும், தொழில் இடைநிலை - வினைப் பகுபத இடைநிலையாம் என்ற வாறு.

உ-ம்: நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந் தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர் எனவும்; விட்டான், விட் டாள், விட்டார், விட்டது, விட்டன, விட்டேன், விட்டேம், விட் டாய், விட்டீர் எனவும்; உற்றான், உற்றாள், உற்றார், உற்றது,

உற்றன, உற்றேன், உற்றேம், உற்றாய், உற்றீர் எனவும்; உறங்கினான், உறங்கினாள், உறங்கினார், உறங்கிற்று, உறங் கின, உறங்கினேன், உறங்கினேம், உறங்கினாய், உறங்கினீர் எனவும் வரும். (15)

**143. ஆநின்று கின்று கிறுமு விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.**

சூ-ம, நிகழ்காலம் காட்டும் வினைப் பகுபத இடைநிலை வருமாறு கூறியது.

(இ-ள்) ஆநின்று கின்று கிறு - ஆநின்று என்பதுவும் கின்று என்பது வும் கிறு என்பதுவும், மூவிடத்தின் ஐம்பால் - ஐம்பான் மூன்றிடத்தும், நிகழ்பொழுது அறை - நிகழ்காலம் காட்டும், வினை இடைநிலை - வினைப்பகுதி இடைநிலையாம் என்றவாறு.

உ-ம்: உண்ணாநின்றான், உண்ணாநின்றாள், உண்ணாநின்றார், உண்ணாநின்றது, உண்ணாநின்றன, உண்ணாநின்றேன், உண் ணாநின்றேம், உண்ணாநின்றாய், உண்ணாநின்றீர் எனவும்; உண்கின்றான், உண்கின்றாள், உண்கின்றார், உண்கின்றது, உண்கின்றன, உண்கின்றேன், உண்கின்றேம், உண்கின்றாய், உண்கின்றீர் எனவும்; உண்கிறான், உண்கிறாள், உண்கிறார், உண்கிறது, உண்கின்றன, உண்கிறேன், உண்கிறோம், உண் கிறாய், உண்கிறீர் எனவும் வரும். (16)

**144. பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.**

சூ-ம், எதிர்காலம் காட்டும் வினைப் பகுபத இடைநிலை வருமாறு கூறியது.

(இ-ள்) பவ்வ - பகர வகரங்களான இரண்டொற்றும், மூவிடத் தைம் பால் - ஐம்பரன் மூன்றிடத்தும், எதிர் பொழுது இசை - எதிர்காலங் காட்டும், வினை இடைநிலையாம் - வினைப் பகுபத இடை நிலை யாம், இவை - இம் முக்காலமும் காட்டும் இடைநிலையில், சிலவில - சில வினையிடை இல்லையாம் என்றவாறு.

உ-ம்: உண்பான், உண்பாள், உண்பார், உண்பது, உண்பன, உண்பேன், உண்பேம், உண்பாய், உண்பீர் எனவும்; உறங்கு வான், உறங்குவாள், உறங்குவார், உறங்குவது, உறங்குவன, உறங்குவேன், உறங்குவேம், உறங்குவாய், உறங்குவீர் என வும் வரும். 'சிலவில' என்பதினானே நக்கான், புக்கான், சொன் னான், போனான், வைச்சான் என்பனவும் கொள்க. (17)

### காலம் காட்டும் விகுதி

145. றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வொ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தம்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் வெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

சூ-ம், இடைநிலைகளன்றி விகுதி காலம் காட்டுமெனக் கூறியது.

(இ-ள்) றவ்வொடு உகரவும்மை - றகரத்தோடு கூடிய உகரவீறும் உம்மீறுமான று, றும் என்னும் விகுதிகள், நிகழ்பல்லவும் - நிகழ் காலம் அல்லாத இறந்தகாலமும் எதிர்காலமும் காட்டும் விகுதி யாம், தவ்வொடு - தகரத்தொடு, கூடிய உகரவீறும் உம்மீறுமான து, தும் என்னும் விகுதிகள், இறப்பும் எதிர்வும் - இறந்தகாலமும் எதிர் காலமும் காட்டும் விகுதியாம், டவ்வொடு - டகரத்தோடு கூடிய உகரவீறும் உம்மீறுமான டு, டும் என்னும் விகுதிகள், கழிவும் - இறந்த காலம் காட்டும் விகுதியாம், கவ்வொடு - ககரத்தொடு கூடிய உகர வீறும் உம்மீறுமான கு, கும் என்னும் விகுதிகள், எதிர் வும் - எதிர்காலம் காட்டும் விகுதியாம், மின்னேவல் - மின்னீற்று வினைச்சொல்லும் ஏவற்பொருண்மையின் வரும் அனைத்தீறுகளும், வியங்கோள் இம்மார் - வியங்கோள் விகுதியும் இகரவிகுதியும் மாரீற்று விகுதியும், எதிர்வும் - இவையெல்லாம் எதிர்காலம் காட்டு வனவாம், பாந்தம் செலவொடு வரவும் - பகரவீற்று வினைச்சொல் இறந்தகாலமும் எதிர்காலமும் காட்டும், செய்யும் நிகழ்வெதிர்வும் - செய்யுமென்னும் வாய்பாட்டு வினை நிகழ் காலமும் எதிர்காலமும் காட்டும், எதிர்மறை மும்மையும் ஏற்கும் - எதிர்மறை வினை முக்கால மும் ஏற்று நிற்பனவாம், ஈங்கே - இவ்விடத்து விகுதிகளை ஆராயு மிடத்து என்றவாறு.

உ-ம்: சென்று, சென்றும்; சேறு, சேறும்; வந்து, வந்தும்; வருது, வருதும்; உண்டு, உண்டும்; உண்கு, உண்கும்; உண் மின், உண், உண்க, வாழிய, வாழியர், சேறி, உண்மார்; உண்ப; உண்ணும்; உண்ணான் என முறையே காண்க. (18)

### வடமொழியாக்கம்

146. இடையி னான்கு மீற்றி னிரண்டும்
அல்லா வச்சை வருக்க முதலீறு

யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும்

சூ-ம், வடமொழிப் பதம் தமிழொடு வருங்கால் திரிவனவும் திரியா தனவும் ஆமாறு பொதுவகையான் உரைத்தது.

(இ-ள்) இடையி னான்கும் - வடமொழியுள் அச்சென்று வழங்கும் உயிர் பதினாறுள்ளும் இடையினின்ற ஏழா முயிர்முதல் நான்கும், ஈற்றினிரண்டும் அல்லாவச்சு - ஈற்றினின்ற இரண்டெழுத்துமான ஆறும் ஒழிந்துநின்ற அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்தும், ஐவருக்கும் - அல்லென்று வழங்கும் மெய் முப்பத்தே முள்ளும் க ச ட த ப என்னும் ஐந்து வருக்கத்துள், முதலீறு - இடையில் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லப்பட்டு நிற்கும் மூன்றுமொழிந்த க ங சஞ டண த ந பம என்னும் மெய் பத்தும், யவ்வாதி நான்மை - யரலவ என் னும் நான்கு மெய்யும், ளவ்வாகு மையைம் பொதுவெழுத்து - ளகரத் தொடுமாகிய இருபத்தைந்தெழுத்தும், தமிழ்மொழிக்கும் ஆரிய மொழிக்கும் பொதுவாம், ஒழிந்த நாலேழும் - உயிரில் ஒழிந்த ஆறும் வருக்கத்தில் ஒழிந்த பதினைந்தும் ளகரம் ஒழிந்த ஏழும் ஆக இருபத் தெட்டும் வடமொழிக்கே உரியவாய், திரியும் - தமிழ் மொழிக்கு வழங்குங் கால் தத்தமக்கு ஒத்த பொதுவெழுத்துக்களாய்த் திரியும் என்றவாறு.
(19)

**147.** அவற்றுள்,
ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வவ் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்
மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவி றையு மீயீ றிகரமும்.

சூ-ம், மேற் பொது வகையாற் சொன்ன திரிவை ஈண்டுச் சிறப்பு வகை யால் ஆரியத்திற்கே உரிய எழுத்துக்கு இன்னது இன்னது ஆமெனக் கூறியது.

(இ-ள்) அவற்றுள் - மேற்கூறிய ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத் தினுள், ஏழாமுயிர் இய்யுமிருவும் - ஏழாமுயிர் இகரமும் இருவுமாம், ஐ வருக்கத் திடையின் மூன்றும் - ஐந்து வருக்கத்தினிடையும் உரப்பி யும் எடுத்தும் கனைத்தும் சொல்லப்படுகின்ற மூன்றெழுத்தும், அவ்வவ் முதலும் - அவ்வவ்வருக்கங்களின் முதலெழுத்தும், எட்டே யவ்வும் - ஏட்டாம் மெய்யான சவ்வருக்கத்தில் எடுத்துச்சொல்லும் மெய் ஒரோவிடத்து யகரமுமாம், முப்பது சயவும் - முப்பதாம் மெய்

மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் யகரமுமாம், மேலொன்று சடவும் - முப்பத்தொன்றாம் மெய் மொழி முதற்கண் சகரமும் இடைக் கண் டகரமுமாம், இரண்டு சதவும் - முப்பத்திரண்டாம் மெய் மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் தகரமும், மூன்றே யகவும் - முப்பத்து மூன்றாம் மெய் மொழி முதற்கண் அகரமும் இடைக்கண் ககரமுமாம், ஐந்திரு கவ்வும் - முப்பத்தைந்தாம் மெய்யான கூட்டெழுத்திறுதி கெட்டு இரண்டு ககரமாம், ஆவீறையும் - ஆகார ஈற்று மொழியுட் சில ஈற்று ஆகாரம் ஐகாரமாம், ஈயீறிகரமும் - ஈகார ஈற்று மொழியுட் சில ஈற்று ஈகாரம் இகரமாம் என்றவாறு.

உ-ம்: இடபம், விடபம், திட்டி, எனவும்; இருடி, மிருகம், விருத்தி எனவும் ஏழாமுயிர் இகரமும் இருவுமாயிற்று. நகம், நாகம், மேகம், சலவாதி, விசையம், சருச்சரை, பீடம், பீடை, திடம், தலம், தினம், தரை, பலம், பந்தம், பாரம் என ஐந்து வருக்கத்தினும் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லும் மூன்றும் அவ்வவ் முதலாயின. அயம், பங்கயம் என எட்டாம் மெய் யகரமாயிற்று. சாலை, சூலை எனவும்; மயானம், வியாகம் எனவும் முப்பதாம் மெய் மொழி முதற்கண் சகாரமும் இடைக் கண் யகரமும் ஆயிற்று. சடம், சண்முகம் எனவும்; விடம் பாடாணம் எனவும் முப்பத்தொன்றாம் மெய் மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் டகரமும் ஆயிற்று. சித்தி, சூத்திரம், சேனை, சாதனம் எனவும், வத்திரம், பொத்தகம் எனவும் முப்பத்திரண் டாம் மெய் மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் தகரமும் ஆயிற்று. அரன் அரி, ஆர் எனவும்; அருகன், சிங்கம், மோகம் எனவும் முப்பத்துமூன்றாம் மெய் மொழி முதற்கண் அகரமும் இடைக்கண் ககரமும் ஆயிற்று. பக்கம், தக்கணம் என முப்பத் தைந்தாம் கூட்டெழுத்து ஈறு கெட்டு இரண்டு ககரம் ஆயிற்று. வேலை, மாலை, சாலை, ஓமை, வனிதை என ஆகார வீறு ஐகார மாயிற்று. குமாரி, நீதி என ஈகாரவீறு இகரமாயிற்று. (20)

**148.** ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

சூ-ம், வடமொழிக்கு முதலாகிய ரகர லகரங்கள் தமிழ்மொழியுள் வந்தால் இன்னது பெறுமெனக் கூறியது.

(இ-ள்) ரவ்விற்கு அம்முதல் ஆமுக் குறிலும் - ரகர முதன் மொழிக்கு அ இ உ என்னும் மூன்று குற்றெழுத்தும், லவ்விற்கு இம் முதல் இரண் டும் - லகர முதன்மொழிக்கு இ உ என்னும் இரண்டு குற்றெழுத்தும், யவ்விற்கு இய்யும் - யகர முதன்மொழிக்கு இகரமும், மொழி முத லாகி முன் வரும் - மொழிக்கு முதற்கண்ணாகி வரும் என்றவாறு.

உ-ம்: அரங்கம், இராமன், உரோமம் எனவும்; இலங்கை, இலாபம், உலோபம் எனவும்; இயக்கன், இயாத்திரை எனவும் முறையே காண்க. (21)

**149. இணைந்தியல் காலை யரலக் கிகரமும்**
**மவ்வக் குகரமு நகரக் ககரமும்**
**மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.**

சூ-ம், வடமொழியிற் கூட்டெழுத்துத் தமிழில் வந்தால் வேறோர் எழுத்துப் பெறுமெனக் கூறியது.

(இ-ள்) இணைந்தியல் காலை - இரண்டெழுத்து ஒன்றாய் இணைந்து வருமிடத்து, யரலக்கு இகரமும் - யரலக்கண்மீதே இகரமும், மவ்வக்கு உகரமும் - மகரவகரங்கண்மீதே உகரமும், நகரக்கு அகரமும், நகரத்தினுக்கு அகரமும், மிசை வரும் - மேலே வந்து பொருந்தும், ரவ்வழி உவ்வுமாம் பிற - ரகாரத்தின் உகாரமும் வரும் என்றவாறு.

உ-ம்: வாச்சியம், வச்சிரம், சத்திரம், சுக்கிலம், வாக்கியம், நாட்டியம் எனவும்; வக்கிரம் அப்பிரம் எனவும்; ஆமிலம் எனவும்; பதுமம் எனவும்; பக்குவம், தத்துவம் எனவும்; அருக்கன், அருத்தம், கருப்பம், தருமம் எனவும் முறையே காண்க. 'பிற' வென்ற மிகையானே சத்தி, கட்சி, காப்பியம், பகுப்பதம் எனத் திரியும். தூலம், அத்தம், ஆதித்தன், அனத்தம் எனக் கெடும், மற்றும் விகாரத்தாலே வருவனவும் கொள்க. (22)

**150. றனழஎ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள**
**பல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே.**

சூ-ம், தமிழிற் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும் இவ்வளவென உரைத்தது.

(இ-ள்) ற ன ழ எ ஒவ்வும் - ற ன ழ என்னும் மூன்றுடலும் எ ஒ என்னும் இரண்டு உயிருமான முதலெழுத்து ஐந்தும், உயிர்மெய்யும் உயிரளபல்லாச் சார்பும் - உயிர்மெய்யும் உயிரளபெடையும் ஒழிந்த சார்பெழுத்து எட்டுமாகப் பதின்மூன்றும், தமிழ் - தமிழ்க்கே உரியனவாம், பிற பொதுவே - ஒழிந்த இருபத்தெட்டும் தமிழுக்கும் ஆரியத்துக்கும் பொது என்றவாறு.

உ-ம்: கறி, கனி, என, ஒன்று எனவும் எஃகு, மங்கலம், நாகியாது, நாகு, மைப்புறம், மெளவல், வாழும் வளவன், கஃறீது எனச் சிறப்பெழுத்து வந்தவாறு காண்க. ஒழிந்த பொதுவெழுத்து வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் கண்டுகொள்க.

**இரண்டாவது பதவியல் முற்றும்**

மூன்றாவது

# உயிரீற்றுப் புணரியல்

## புணர்ச்சி

151. மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

சூ-ம், புணர்ச்சிக்கு இலக்கணம் இவ்வாறு வருமெனக் கூறியது.

(இ-ள்) மெய்யுயிர் முதலீ றாம் - மெய் முதலாய் உயிர் ஈறாயும் உயிர் முதலாய் மெய் ஈறாயும் மெய் முதலாய் மெய் ஈறாயும் உயிர் முதலாய் உயிர் ஈறாயும் வரும், இரு பதங்களும் - பகாப்பதங்களும் பகுபதங் களும், தன்னொடும் - மெய்யீற்றின் முன் மெய் முதல் வந்தும் உயிரீற் றின் முன் உயிர் முதல் வந்தும், பிறிதொடும் - மெய்யீற்றின் முன் உயிர் முதல் வந்து உயிரீற்றின் முன் மெய் முதல் வந்தும், அல்வழி வேற்றுமைப் பொருளில் - அல்வழிப் பொருளினானாதல் வேற்றுமைப் பொருளினானாதல், பொருந்துழி - வந்து புணருமிடத்து, நிலைவரு மொழிகள் - நிலைமொழியும் வருமொழியும், இயல்பொடு - நிலை மொழி இயல்பாகியும் வருமொழி இயல்பாகியும் இரு மொழியும் இயல்பாகியும், விகாரத்து நிலைமொழி விகாரமாகியும் வருமொழி விகாரமாகியும் இரு மொழியும் விகாரமாகியும், இயைவது புணர்ப்பே - பொருந்துவது புணர்ச்சியின் முறையாம் என்றவாறு. உ-ம்: பொன் கழஞ்சு, மணியொன்று, பொன்னிருகழஞ்சு, மணிமூன்று என மெய்யும் உயிரும் தன்னொடும் பிறிதொடும் வந்தன. மரம் என மெய் முதலும் மெய்யீறும் இலை என உயிர் முதலும் உயிரீறும், ஆல் என உயிர் முதலும் மெய்யீறும் விள என மெய் முதலும் உயிரீறும் என மெய் உயிர் முதல் ஈறாய் வந்தன. புணர்ச்சியென்பது ஒன்றுண்டாம் பிற வெனின் அச்சொற்களைக் கூறுகின்றோரும் கேட்கின்றோரும் அவ்வோசையை இடையறவு படாமை உள்ளத்தின்கண்ணே உணர்வ ராதலின் அவ்வோசை கெடின் உள்ளத்தின்கண் நிலைபெற்றுப்

புணர்ந்தனவேயாம். ஆகவே பின்னர் கண்கூடாகப் புணர்க்கின்ற புணர்ச்சியும் முடிந்தனவேயாம் என்று உணர்க. (1)

## வேற்றுமை அல்வழி இவையென்பது

152. வேற்றுமை ஐமுத லாறா மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.

சூ-ம், மேல் 'அல்வழி வேற்றுமை' என்றார்; அவை இவையென உரைத்தது.

(இ-ள்) வேற்றுமை - வேற்றுமைப் புணர்ச்சியாவது யாதென்னில், ஐமுத லாறாம் - இரண்டாம் வேற்றுமை ஐயுருபு முதல் ஆறுருபும் விரியவும் தொகவும் புணரும் புணர்ச்சியாம், அல்வழி - அல்வழிப் புணர்ச்சியாவது யாதென்னில், தொழில் - வினைத்தொகை பெயரோடும் புணரும் புணர்ச்சியும், பண்பு - பண்புத்தொகைப் பெயரொடும் வினையொடும் விரியவும் தொகவும் புணரும் புணர்ச்சியும், உவமை - உவமைத்தொகைப் பெயரொடும் வினையொடும் விரியவும் தொகவும் புணரும் புணர்ச்சியும், உம்மை - உம்மைத்தொகைப் பெயரொடும் வினையொடும் விரியவும் தொகவும் புணரும் புணர்ச்சியும், அன்மொழி - அன்மொழித்தொகைப் பொருளொடும் புணரும் புணர்ச்சியும், எழுவாய் - எழுவாய் வேற்றுமை தன் பயனிலையொடு புணரும் புணர்ச்சியும், விளி - விளி வேற்றுமை தம் பொருளொடு புணரும் புணர்ச்சியும், ஈரெச்சம் - பெயரெச்சமும் வினையெச்சமும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், முற்று - தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், இடையுரி - இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், தழுவு தொடர் - என்பதனை எல்லாவற்றோம் ஒட்டுக புணரும் புணர்ச்சியென்றாம், அடுக்கு - விரைவாதியின் வரும் அடுக்குப் புணரும் புணர்ச்சியும், என ஈரேழே - என்று சொல்லும் இப்பதினான்கு புணர்ச்சியுமாம் என்றவாறு. உ-ம்: பொன்னையுடையான் பொன்னுடையான், பொன்னாலாய குடம் பொற்குடம், பொன்னர்க்குமகன் பொன்னர்மகன், மலையின்வீழருவி மலைவீழருவி, மலையினதுச்சி மலையுச்சி, மலைக்கண் முழை மலைமுழை என ஐமுதல் ஆறும் விரிந்தும் தொக்கும் வேற்றுமைப் புணர்ச்சி வந்தவாறு காண்க. பொன்னை, பொன்னால், பொற்கு, பொன்னின், பொன்னது, பொற்கண் என்னும் உருபுப் புணர்ச்சியும் அதுவேயெனக்

கொள்க. கொல்யானை, அரிவாள், எரி முட்டையென வினைத் தொகை பெயரொடு புணர்ந்து தொக்கு வந்தன. ஆயனாய சாத்தன் ஆயன் சாத்தன், கேழலாய பன்றி கேழற்பன்றி, வேழமாய கரும்பு வேழக் கரும்பு எனவும், வேயனையதோள் வேய்த்தோள், துடிபோலு மிடை துடியிடை, பால் போலுமொழி பான்மொழி எனவும் தீயுநீரம் தீநீர், கல்லாடரும் மாமூலரும் கல்லாடர்மாமூலர், சேரரும் சோழரும் பாண்டியரும் சேர சோழ பாண்டியர் எனவும் பொற்றாலி பூண்டாள் பொற்றாலி, தாழ்குழலுடையர் தாழ்குழல் எனவும் பண்புமுதல் நான் கும் விரிந்தும் தொக்கும் அவ்வப் பொருளை உணர்த்தி முறையே வந்தவாறு காண்க. கொற்றன் கொடுத்தான் எழுவாய்ப் புணர்ச்சி கொற்றன் கொள் விளிப்புணர்ச்சி. உண்ட சாத்தன், உண்கின்ற சாத்தன், உண்ணும் சாத்தன் பெயரெச்சப் புணர்ச்சி. உண்டு வந்தான், உண்ண வந்தான் என வினையெச்சப் புணர்ச்சி. உண்டான் போனான், உண்டான் தின்றான் எனத் தெரிநிலை வினைமுற்றுப் புணர்ச்சி. குண்டுகட்டெருமை, குண்டுகட்கு வந்தது குறிப்பு வினைமுற்றுப் புணர்ச்சி. "சின்மொழி அரிவையை பெறுகதில் யானே," வந்தாள் கொல் பாங்கி "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங் குழை மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" (குறள். 1081) என இடைச்சொற் புணர்ச்சி. நனிபேதை, சாலக் கொண்டான் உரிச்சொற் புணர்ச்சி. பாம்பு பாம்பு, தீத்தீ, வருக வருக அடுக்குப் புணர்ச்சி. முறையே அல் வழிப் புணர்ச்சி பதினான்கும் வந்தவாறு காண்க. (2)

## இயல்புப் புணர்ச்சி

**153.** விகார மனைத்து மேவல தியல்பே.

சூ-ம், மேல் 'இயல்பொடு விகாரத்'தென்றார்; அவற்றுள் இயல் பாவது இதுவென உரைத்தது.

(இ-ள்) விகார மனைத்தும் - மேற்கூறப்பட்ட விகார வகை மூன்றும், மேவலதியல்பே - மேவாதது யாது அது இயல்புப் புணர்ச்சியாம் என்ற வாறு.

உ-ம்: மண் மலை, கொற்றன் வந்தான், பாடினான் வந்தான், பாடினான் சாத்தன் என வரும். (3)

## விகாரப் புணர்ச்சி

**154.** தோன்ற றிரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்.

(இ-ள்) தோன்றல் - சாரியையே உயிரே ஒற்றே உயிர்மெய்யே என்றிவை மிகுதல் தோன்றல் என்பதாம், திரிதல் - சொன்ன பெற்றியே முன்னின்ற எழுத்து வேறுபட நிற்பின் திரிவு என்பதாம், கெடுதல் - இவற்றுள் ஒன்றும் பலவும் தொகுத்தல் கேடென்பவாம், விகார மூன்றும் - இத்தன்மையாய் வருகிற விகார வகை மூன்றும், மொழி மூவிடத்துமாகும் - நிலைமொழியிடத்தும் வருமொழியிடத்தும் இருமொழியிடத்தும் வந்து பொருந்தும் என்றவாறு.

உ-ம்: புளியங்காய் எனச் சாரியை மிக்கது. உரிஞு மாட்சியென உயிர் மிக்கது. மலைத்தலையென ஒற்று மிக்கது. உரிய நெய்யென உயிர்மெய் மிக்கது எனவும், அறுகலம் என உயிர் திரிந்தது. மட்குடம் என ஒற்றுத் திரிந்தது. "திருத்தார் நன் றென்றேன் றியேன்" என உயிர்மெய் திரிந்தது எனவும், பல்சாத்து என உயிர் கெட்டது. மரவேரென ஒற்றுக் கெட்டது. ஆங்கை என உயிர்மெய் கெட்டது எனவுமாம். மரவேர் என நிலைமொழி விகாரம். மலைத்தலை என வருமொழி விகாரம். அறுபது என இருமொழியும் விகாரம் எனவும் வந்தன. மலைத்தலை, மட்குடம், மரவேர் இவை பெயரொடு பெயர் புணர்ந்து மூன்று விகாரமும் வந்தன. பலர்க் கொணர்ந்தான், சொற் கேட்டான், மா நட்டான் இவை பெயரொடு தொழில் புணர்ந்து மூன்று விகாரமும் வந்தன. கோடசப் பொருள், வந்தானாற் சாத்தன், ஓடுநாகம் தொழிலொடு பெயர் புணர்ந்து மூன்று விகாரமும் வந்தன. பாடப் போமினான், வந்தாற் கொள்க, சாகா நின்றான் இவை தொழிலொடு தொழில் புணர்ந்து மூன்று விகாரமும் வந்தன.

அவற்றுள்,
நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே

எனத் தொல்காப்பியர் (எழு.109) விகாரம் மூன்றும் திரிபென்று கூறியதும் கொள்க. "மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்று இவ்வென மொழிப திரியுமாறே" (தொல். எழு.110). (4)

## செய்யுள் விகாரம்

155. வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.

சூ-ம், இதுவும் ஒரு சார் விகாரவகை இவையென உரைத்தது.

(இ-ள்) வலித்தல் - மெல்லெழுத்தை வல்லெழுத்தாக்கலும், மெலித்தல் - வல்லெழுத்தை மெல்லெழுத்தாக்கலும், நீட்டல் குறுக்கல் - குறுக்கலை நீட்டலும் நீட்டலைக் குறுக்கலும், விரித்தல் தொகுத்தலும் - தொகுத்தலை விரித்தலும் விரித்தலைத் தொகுத்தலும், வரும் செய்யுள வேண்டுழி - செய்யுளிடத்து வேண்டுழி வரப் பெறும் என்றவாறு.

உ-ம்: 'குறுத்தாட்பூதம்', குறுந்தாளென்பதனைக் குறுத்தாளென வலித்தவாறு. 'தண்டையின் இனக்கிளி கடிவோர்'. இது தட்டையென்பதனைத் தண்டையென்று மெலித்தவாறு. "போத்தறார் புல்லறிவினார்" (நாலடி.351). இது பொத்தறாரென்றதனைப் போத்தறாரென நீட்டியவாறு. "திருத்தார நன்றென்றேன் றியேன்." இது தீயேன் என்றதனைத் தியேன் என்று குறுக்கியவாறு. "தண்ணந் துறைவனென்". இது தண்டுறைவன் என்றதனைத் தண்ணந் துறைவனென விரித்தவாறு. "வேண்டார் பெரியர் விறன்மதி றான்கோடல்." இது வேண்டாதாரென்பதனை வேண்டார் எனத் தொகுத்தவாறு. பிறவுமன்ன. (5)

156. ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

சூ-ம், புணர்மொழியல்லா ஒரு மொழிக்கண் விகாரம் வருமாறு உரைத்தது.

(இ-ள்) ஒரு மொழி - புணர்மொழியல்லாத ஒரு மொழியின், மூவழிக் குறைதலும் - முதலும் இடையும் கடையும் குறைதலும், அனைத்தே - மேற்கூறிய செய்யுள் விகாரத்தோடு ஒப்பனவாம் என்றவாறு.

உ-ம்: "மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி" எனவும், "வேதின வெரிநி னோதிமுது போத்து" (குறு.140) எனவும், "நீலுண்டுகிலிகை கடுப்ப" எனவும் முறையே தாமரை, ஓந்தி, நீலம் என்றதில் முதல், இடை, கடை குறைந்தவாறு காண்க. இங்ஙனம் வரும் செய்யுள் விகாரம் ஒன்பதையும் விரித்தல் தோன்றல் விகாரமாகவும், வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் திரிபு விகாரமாகவும், தொகுத்தலும் மூவிடத்தினும் குறைதலும் கெடுதல் விகாரமாகவும் அடக்கச் செய்யுள் விகாரம் இம்மூன்று மென அமையுமென்பது போதற்கே ஈண்டே வைத்தாரென்க. (6)

**157. ஒருபுணர்ப் பிரண்டு மூன்று முறப்பெறும்.**

சூ-ம், ஒரு புணர்ச்சிக்கண் விகாரமனைத்தும் வருவன உரைத்தது.

(இ-ள்) ஒரு புணர்ப்பு - ஒரு புணர்ச்சியினிடத்து ஒன்றேயன்றி, இரண்டும் மூன்றும் - இரண்டு விகாரமும் மூன்று விகாரமும், உறப் பெறும் - ஒருங்கு வரவும் பெறும் என்றவாறு. (7)

உ-ம்: நிலவாகை, நிலப்பனை, பனங்காய் என முறையே காண்க.

**158. எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்**
**முன்வரு ஞனமய வக்க ளியல்பும்**
**குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி**
**மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்.**

சூ-ம், எல்லா ஈற்றொடும் மெல்லினமும் இடையினமும் வந்து புணரு மாறு தொகுத்துரைத்தது.

(இ-ள்) எண் மூவெழுத்தீற்று - இருபத்துநாலு எழுத்தையும் ஈறாக வுடைய, எவ்வகை மொழிக்குமுன் - இயற்சொல் திரிசொல் என்னும் இருவகையிற் பெயர் வினை இடை உரி திசைச் சொல் என்னும் இம்மொழிகளின் முன், வரு ஞந மய வக்கள் இயல்பும் - வருமொழி முதலாக வரும் ஞகார நகார மகார யகார வகாரங்கள் இயல்பாவன வாம், குறில்வழி ய - ஒரு குற்றெழுத்தை அடுத்து வந்த யகார ஒற்றே, தனி ஐ நொது முன் - தனியே வந்த ஐகாரமே நொவ்வே துவ்வே என்றிவற்றின் முன், மெலி மிகலுமாம் - வருமொழி முதலாக வரும் மெல்லெழுத்தாகிய ஞகார நகார மகாரங்கள் மிகுவனவாம், ண ள ன ல வழி - நிலைமொழியீற்று - ணகார ளகார னகார லகாரங்கள் முன், நத் திரியும் - வருமொழி முதலாக வரும் நகாரம் திரியப்பெறும் என்றவாறு.

உ-ம்: விள, பலா, புளி, தீ, கடு, தூ, ஏஎ, சே, பனை, ஓஒ, சோ, ஔ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், தாள், எஃகு ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது வலிது எனவும், ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை எனவும் இருவழியும் இயல்பாயின. மெய், பொய், கை என நிறுத்தி ஞான்றது, நீண்டது, மாண்டது, ஞாற்சி, நீட்சி, மாட்சி என வருவித்து மெல்லினம் இருவழியும் மிக்கு முடித்துக் காண்க. நொ, து நிறுத்தி ஞெள்ளா, நாகா, மாடா என வருவித்து மிக்கு வந்தது காண்க. இவை ஏவல் வினையாகலின் அல்வழிப் புணர்ச்சி என்க. கண், முள், பொன், கல் என நிறுத்தி நன்று என வருவித்து கண்ணன்று, முண்ணன்று, பொன்னன்று, கன்னன்று

என நகரத்திரிபு வந்தவாறு காண்க. வேதா, விதி என நிறுத்தி ஞான்றான், நீண்டான், மாண்டான், யாவன், வலியான் எனவும் ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை எனவும் வருவித்து வடசொல் இருவழியும் மெல்லினம் வர இயல்பாயினவாறு காண்க. சாத்தற்கு நல்கினான், சாத்தனது மாட்சியென உருபின் கண்ணும் இயல்பாயினவாறு காண்க. இன்னதென்று விதந்து உரையாவிடத்துப் புணரியலிடத்து எஞ்ஞான்றும் அல்வழி வேற்றுமையாம் ஈரிடத்தும் கொள்க. (8)

159. பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பா மாவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.

சூ-ம், உயர்திணைப் பெயரும் பொதுப் பெயரும் வல்லினத்தோடு புணருமாறு கூறியது.

(இ-ள்) பொதுப் பெயர் - உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொது வான பெயர்க்கும், உயர்திணைப் பெயர்கள் ஈற்று மெய் - உயர் திணைப் பெயர்க்கும் ஈறான மெய்கள், வலி வரின் இயல்பாம் - வரு மொழி முதலாக வல்லினம் வந்தால் இயல்பேயாம், ஆவி யரமுன் - உயிரே யகரமே ரகரமே என்றிவ்வீற்று அவ்விரு பெயர் முன்னரும், வன்மை மிகா - வருமொழி முதலாக வந்த வல்லினம் மிகாவாம், சில விகாரமாம் உயர்திணை - உயர்திணைப் பெயர்களுட் சில விகாரப் பட்டு வருவனவும் உள என்றவாறு.

உ-ம்: சாத்தன், கொற்றன், மகன், மகள், ஆண், பெண் என நிறுத்தி, குறிது, சிறிது, தீது, பெரிது எனவும் குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும் கை, செவி, தலை, புறம் எனவும் வருவித்துப் பொதுப்பெயர்க்கண் வல்லினம் வர இரு வழியும் இயல்பாயினவாறு காண்க. "வலி வரின் இயல்பாம்" எனவே ஏனை இரண்டினமும் வந்தால் தத்தமக்கேற்றவாறு விகாரப்படுவனவாம் என்க. உதாரணம் மருத்துவமாமணி, இறைவனொடு வேட்டுவன் என வரும். சாத்தி, கொற்றி, தாய் என நிறுத்தி, குறிது, சிறிது, தீது பெரிது எனவும் குறியள், சிறியள், தீயள், பெரியள் எனவும் கை, செவி, தலை, புறம் எனவும் விருவித்துப் பொதுப் பெயர் முன் க ச த பக்கள் இருவழியும் இயல்பாயினவாறு காண்க. ரவ்வீறு பொதுப் பெயர் ஏலாவென்க. நம்பி, விடலை, ஆய், சேய் என நிறுத்தி, குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும் கை, செவி, தலை, புறம் எனவும் தோழி, நங்கை என நிறுத்தி, குறியள், சிறியள், தீயள், பெரியள் எனவும் கை, செவி, தலை, புறம் எனவும் வருவித்து அவர், யாவர், ஒருவர் என நிறுத்தி, குறியர், சிறியர், தீயர், பெரியர் எனவும் கை, செவி, தலை, புறம்

எனவும் வருவித்து உயிரே யகரமே ரகரமே என்று இவ்வீற்று உயர்திணைப் பெயர் முன் வந்த க ச த பக்கள் இரு வழியும் இயல்பாயினவாறு காண்க. "ஆவி ய ர முன் வன்மை மிகா" எனவே பிற ஈறுகள் முன்வரின் பிற விகாரங்களாமெனக் கொள்க. அவை கொற்றன்றீயன், அவன்றண்ணியன் என வரும். இனி ஆடூஉக் குறியன், மகடூஉக் குறியள் கை, செவி, தலை, புறம் எனவும் எட்டிப் பூ, எட்டிப்புரவு, காவிதிப்பூ, காவிதிப்புரவு, நம்பிப்பூ, நம்பிப் பேறு எனவும் உயர்திணைப் பெயர் முன் சில மிக்கன. மக்கட் குணம், சுட்டு, தலை, பிணம் எனச் சில திரிந்தன. கபிலபரணர், பல சான்றார் எனச் சில ஈறு கெட்டு இயல்பாயின. ஆசீவகப் பள்ளி, கணக்காயப்பள்ளி என ஈறு கெட்டு வருமொழி மிக்கன. வாயு தேவகோட்டம், பிரம கோட்டம், பிரமக்கோட்டம் எனச் சில ஈறு கெட்டு வருமொழி உறழ்ந்தன. பார்ப்பனக்கன்னி, பார்ப்பனச்சேரி, தோட்டம், பிள்ளை, மரபு, வாழ்க்கை எனச் சில ஈற்றயல் குறுகி அகரம் மிக்கன. பிறவும் இவ்வாறு வருவனவெல்லாம் கண்டு கொள்க. (9)

**160.** ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலியியல்பே.

சூ-ம், வினா விளிப் பெயர்கள் புணருமாறு கூறியது.

(இ-ள்) ஈற்றியா வினா - ஈற்று வினா முன்னும் யா வினா முன்னும், விளிப் பெயர் முன் - விளிப் பெயர்கள் முன்னும், வலி - வருமொழி முதல் வல்லினம் வந்தால், இயல்பே - இயல்புப் புணர்ச்சியாம் என்றவாறு. உ-ம்: உண்கா, உண்கோ, வந்தானோ, வந்தானா, வந்தாயோ, வந்தாயா என நிறுத்தி, கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வருவித்து ஈற்று வினா முன் வல்லினம் வர இயல்பாயினவாறு காண்க. யா என நிறுத்தி, குறிய, சிறிய, தீய, பெரிய என வருவித்து யா வினா முன் இயல்பாயினவாறு காண்க. நாகா, நம்பீ, தோழீ, செவிலி எனவும் சாத்தா, கொற்றா, சாத்தி, கொற்றி எனவும் நாயே, நரியே, நீரே, நிலனே எனவும் நிறுத்தி, கொள், செல், து, போ என வருவித்து முப்பெயர் விளிகள் முன்னும் வல்லினம் வந்து இயல்பாயினவாறு காண்க. (10)

**161.** ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை
ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

சூ-ம், முன்னிலை வினைமுற்றும் முன்னிலை ஏவல் வினையும் புணருமாறு கூறியது.

(இ-ள்) ஆவி யரழ இறுதி - உயிரும் ய ர ழ என்னும் இம் மூன்று மெய்யும் ஈறாக வரும், முன்னிலை வினை ஏவல் முன் - முன்னிலை வினைமுற்றே முன்னிலை ஏவல் வினையே என்று இவற்றின் முன்,

வல்லினம் - வருமொழி முதல் முன் வல்லினம் வந்தால், இயல்பொடு விகற்பே - இயல்பாகியும் விகற்பாகியும் புணரும் என்றவாறு.

உ-ம்: உண்டி, தின்றி, உண்டனை, தின்றனை, உண்டாய், தின்றாய், உண்டனிர், தின்றனிர் என நிறுத்தி, கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் கொற்றரே, சாத்தரே தேவரே, பூதரே எனவும் வருவித்து முன்னிலை வினைமுற்றுச் சொல் முன் இயல்பாயினவாறு காண்க. சேர், தாழ் என நிறுத்தி, கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வருவித்து முன்னிலை ஏவல் வினை முன் வல்லினம் வந்து இயல் பாயினவாறு காண்க. நட கொற்றா நடக் கொற்றா, ஈர் கொற்றா, ஈர்க் கொற்றா, எய் கொற்றா, எய்க் கொற்றா, தாழ் கொற்றா, தாழ்க் கொற்றா என விகற்பமும் கண்டுகொள்க. மூவீறு முன்னிலை வினை முற்றுச்சொல் ஏலாமையிற் காட்டிற்றிலம். ஏவல் முன்பு ஓதி யது விளங்குதற் கென்க. "உயிரீ றாகிய முன்னிலைக் கிளவி யும், (புள்ளியிறுதி முன்னிலைக் கிளவியும்,) இயல்பாகுநவும் உறழா குநவுமென், றாயீ ரியல வல்லெழுத்து வரின்" என்பது தொல்காப்பியம் (எழு.151). குற்றெழுத்தோரெழுத்து முன் னிலை ஏவல் வினைச்சொல் முன் மிக்கே முடிவன கொள்க.

(11)

### உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி

162. இ ஈ ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.

சூ-ம், உயிரீற்று மொழிமுன் உயிர் முதன்மொழி வந்து புணருமாறு கூறியது.

(இ-ள்) இ ஈ ஐ வழி யவ்வும் - இகர ஈகார ஐகாரங்களின் வழியே யகரமும், ஏனை உயிர் வழி வவ்வும் - இவையொழிந்த அஆ உஊ ஒஓ ஔ என்னும் இவ்வேழு உயிர்களின் முன்னே வவ்வும், ஏ முன் இவ்விருமையும் - ஏகாரத்தின் வழியே யகாரமும் வகாரமும் உயிர் களின் முன் மொழிமுதல் உயிர் வந்தால், உடம்படுமெய் யென்றாகும் - உடம்படுமெய்யென்று பெயரவாய் வரும் என்றவாறு.

உ-ம்: மணி, தீ, மலை என நிறுத்தி அடைந்தது. ஆடிற்று, இடைந்தது, ஈறிற்று, உடைந்தது, ஊறிற்று, எழுந்தது, எறிந்தது, ஏறிற்று, ஐது, ஒழிந்தது, ஓங்கிற்று என வருவித்து மணியடைந்தது மணியாடிற்று என எல்லாவற்றோடும் ஒட்டி இடையே யகர உடம்படுமெய் வந்தவாறு காண்க. மணியழகு, மணியாட்டம் என வேற்றுமைப் பொருட்கும் ஒட்டுக. ஔகாரம் தானாக மொழிக்கு முதலாகவில்லை என்க. விள, பலா, கடு, பூ, நொ, சோ, ஔ என நிறுத்தி அடைந்தது, ஆடிற்று,

இடைந்தது, ஈறிற்று, உடைந்தது, ஊறிற்று, எழுந்தது, ஏறிற்று, ஐது, ஒழிந்தது, ஓங்கிற்று என வருவித்து விளவடைந்தது, விளவாடிற்று என எல்லாவற்றிற்கும் ஒட்டி இடையே வகர உடம்படுமெய் வந்தவாறு காண்க. விளவழக்கு, விளவாட்டம், விளவிசைவு என வேற்றுமைப் புணர்ச்சிக்கும் ஒட்டி இடையே வகர உடம்படுமெய் வந்தவாறு காண்க. "ஏயேயிவளொருத்தி பேடியோ வென்றார்" (சீவக.652), சேவழக்கு என ஏகாரத்தின் முன் யகரமும் வகரமும் வந்தன காண்க. (12)

**163. எகர வினாமுச் சுட்டின் முன்னர்**
**உயிரும் யகாமு மெய்தின் வவ்வும்**
**பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு**
**நீளின் யகரமுந் தோன்றுத னெறியே.**

சூ-ம், வினாவும் சுட்டும் புணருமாறு கூறியது.

(இ-ள்) எகர வினா முச்சுட்டின் முன்னர் - எகர வினா முன்னும் மூன்று சுட்டுக்களின் முன்னும், உயிரும் யகரமும் எய்தின் - வருமொழி முதலாக உயிர்களும் யகரமும் வந்தால், வவ்வும் - இடையே வகரவொற்று வந்து பொருந்தும்; பிற வரின் - யகரமொழிந்த ஒன்பது மெய்யும் வந்தால், அவையும் - வந்த வந்த ஒற்றுக்களே இரட்டித்தலும், தூக்கிற் சுட்டு நீளின் - செய்யுட்கண்ணே சுட்டு நீண்டு இசைத்த வழி, யகரமும் - இடையே யகரவொற்று மிகுதலும், தோன்றுதல் நெறியே - உண்டாய் வருதல் முறைமையாம் என்றவாறு.

உ-ம்: எவ்வணி, எவ்யானை, அவ்வணி, அவ்யானை, இவ்வணி, இவ்யானை, உவ்வணி, உவ்யானை எனவும் எக்குதிரை, எச்சேனை, எத்தண்டு, எந்நாடு, எப்படை, எம்மனை, எவ்வரை, எஞ்ஞாலம், எங்ஙனம் எனவும் சுட்டுக்கு மிகுந்த அடைவே கொள்க 'ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து' (தொல். பாயிரம்) எனவும், "ஆயிரு திணையி னிசைக்குமன் சொல்லே" (தொல். சொல். 1) எனவும், "ஆயிரு பாற்சொல்" (தொல். சொல். 3) எனவும் வரும். "நெறியே"யென்ற மிகையானே யா வினா முன்னும் ஙகாரம் மிகும் என்பதுவும் கொள்க.(13)

**164. உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்**
**யவ்வரி னிய்யா முற்றுமற் றொரோவழி.**

சூ-ம், குற்றுகரவீற்றிலும் முற்றுகரவீற்றிலும் உயிரும் யகரமும் வந்து புணருமாறு கூறியது.

(இ-ள்) உயிர் வரின் - வருமொழி முதலாக உயிர் வந்தால், உக் குறள் - நிலைமொழி ஈற்றிற் குற்றியலுகரம், மெய் விட்டோடும் -

தனக்குப் பற்றுக்கோடாகிய மெய் நிற்கத் தான் கெடும், யவ்வரின் - வருமொழி முதலாக யகரம் வந்தால், இய்யாம் - நிலைமொழி ஈற்றிற் குற்றியலுகரம் இகரமாய்த் திரியும், முற்றுமற்று - முற்றியலுகரமும் அத்தன்மைத்தாம், ஒரோ வழி - ஒரோ இடங்களில் என்றவாறு.

உ-ம்: நாகழகிது, நாகியாது எனவும்; நாகின் வளர்ச்சி, நாகி யமன் கொள்ளான் எனவும்; அதழகு, இதழகு, தரவு, தெருவு, கதவு, புதவு, இழவு, விழவு, வரவு, செலவு, உணர்வு, புணர்வு, நோவு, நுகர்வு, அழகிது, யாது எனவும் வரும். (14)

## உயிரீற்றுமுன் வல்லினம்

165. இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
க ச த ப மிகும்வித வாதன மன்னே.

சூ-ம், உயிரீற்றின் முன் வல்லினம் புணருமாறு கூறியது.

(இ-ள்) இயல்பினும் விதியினும் - இயல்பினாலும் ஆக்கப் பாட்டினாலும், நின்ற உயிர் முன் - நிலைமொழி ஈறாக நின்ற உயிர் முன், க ச த ப மிகும் - வருமொழி முதலாக வந்த கசதபக்கள் மிக்கு முடியும், வித வாதன மன்னே - பெரும்பாலும் எடுத்து விரிக்கப்படாத சொற்களுக் கெல்லாம் என்றவாறு.

உ-ம்: மக, விள, நுண், அத, மூங்கா, தாரா, யா, கிளி, புலி, நரி, ஈ, தீ, கடு, தழு, கொண்மூ, ஏஎ, சே, சோ, கோ, கௌ, கொக்கு என நிறுத்தி, கடிது, சிறிது, தீது, பெரிது எனவும்; கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் வருவித்து இயல்பாக நிற்கும் உயிரீற்றுப்பெயர்ப் பதமுன் இருவழியும் மிக்கவாறு காண்க. யானைக்கால், யானைச்செவி, யானைத்தலை, யானைப் புறம் என ஐகாரவீற்றுப் பெயர் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் மிக்கன. உண், தா, சால், உண்ணா, தின்னா, ஓடி, ஆடி, பாடி, தழீஇ, நிறீஇ, அடித்து, பிடித்து, உண்ணு, ஒல்லை, வல்லை என நிறுத்தி, கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வருவித்து இயல்பாய் நின்ற உயிரீற்று வினையெச்சத்தின் முன் வந்த வல்லினம் மிக்கவாறு காண்க. உண்ணா தின்னா என நிறுத்தி, சாத்தன், கொற்றன், தேவன், பூதன் என வருவித்து ஆகாரவீற்று எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிக்கவாறு காண்க. நொ, து என நிறுத்தி கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வருவித்து இவ்விரண்டீற்று வினைச்சொல் முன் வல்லினம் மிக்கவாறு காண்க. கொள்ளோ, ஆங்க, புலி போல், மூவினமெனா, தனிநிலையெனா, அணி பெற்று என நிறுத்தி, கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வருவித்து உயிர் ஈற்று இடைப்பதமுன் மிக்கவாறு காண்க.

ஏஎக் கொற்றா, ஓஒக் கொற்றா என ஒகர ஈற்று முன்னிலை யிடைச்சொல் மிக்கது காண்க. தில்லைச்சொல், கொன்னைச் சொல்லென ஐகாரவீற்று இடைச்சொல் மிகக் காண்க. தடக்கை, தவக் கொண்டான், வயக்களிறு, குழக்கன்று எனவும் இயல்பாகா உரிச்சொல்லீற்று முன் மிக்கன. உசா, வயா என நிறுத்தி, கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் வருவித்து இயல்பாய் நின்ற ஆகாரவீற்றுப் பதமுன் மிக்கவாறு காண்க. கடிக்கமலம், செண்பகம், தாமரை, பங்கயம் என இகர வீற்றுப் பதமுன் மிக்கன. தீக் கதி, சிறை, தொழில், புலன் என ஈகாரவீற்று உரிப்பதமுன் மிக்கன. அதிர்ப்பு என நிறுத்தி, கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் கடுமை, சிறுமை, தீமை, பெருமை என வும் வருவித்து உகரவீற்றுப் பதமுன் இருவழியும் மிக்கவாறு காண்க. பணைத்தோள் என ஐகாரவிற்றுப் பதமுன் மிக்கது. வட்டக்கடல், சுனை, தாழி, பானை என ஈற்று மகாரம் கெட்டு விதியகரவீற்றுப் பெயராய் இவை முன் வந்த வல்லினம் மிக்கன. தாழக்கோல், தமிழ்ப் பல்லவதரையர் என ஈற்று மெய்மேல் அகரச் சாரியை பெற்று விதி அகரவீற்றுப் பெயராய் அவற்றின்முன் இரு வழியும் அடைவே மிக்கன. இயல்புயிரும் விதியுயிரும் இவ்வாறே. ஒழிந்த வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொற்கும் அறிந்து முடிக்க.

ஊர்வழிக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என இகர வீற்றுருபுப் பதமுன் மிக்கன. ஊர்க்குக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என உகரவீற்றுருபுப் பதமுன் மிக்கன. யானையைக் காத்தான், செகுத்தான், தடுத்தான், பிடித்தான் என ஐகாரவீற்று ருபுப் பதமுன் மிக்கன. ஈண்டுக் காட்டாதனவும் வந்த வழிக் கண்டு இதுவே நிலனாக முடித்துக் கொள்க.

இதனுள் "மன்னே"யென்ற மிகையானே விதவாதவற்றுள்ளும் சிறுபான்மை மிகாதனவும் உளவெனக் கொள்க. அவை குண கடல், குடகடல், வடதலை, மழகளிறு, குழவிகை, ஏரிகரை, மீகண், "மலை கிழவோனே" (திருமுருகு.317), குழந்தை கை, என்னை காணுமாதோ என வருவனவும் எல்லாம் இதுவே விதியாக முடிக்க. (15)

**166.** மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து
வரப்பெறு நவுமுள வேற்றுமை வழியே.

சூ-ம், உயிரீற்று மரப்பெயர்கட்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறி யது.

(இ-ள்) மரப் பெயர் முன்னர் - உயிரீற்று மரப்பெயர்கண்முன், இன மெல்லெழுத்து - மேலைப் பொதுவிதியால் இரு வழியும் வல்

லெழுத்து மிகுவதேயன்றி அதற்கினமான மெல்லெழுத்தும், வரப் பெறுநவுமுள - மிக்கு வரவும் பெறுவனவும் சில உளவாம், வேற் றுமை வழியே - வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண் என்றவாறு.

உ-ம்: அதங்கோடு, விளங்கோடு, களங்கோடு, யாங்கோடு, ஒதிங்கோடு, செங்கோடு, செதிள், தோல், பூ என வரும் "பெறுநவும்" என்ற உம்மையால் பெறாதிருத்தலே வலியுடைத் தென்க. அவை அத்திக்காய், ஆத்திக்காய், இறளிக்காய், இலந்தைக்காய், வாழைக்காய் எனக் கண்டு கொள்க. (16)

## அகரவீற்றுச் சிறப்புவிதி

**167.** செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றாற னுருபே
அஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே.

சூ-ம், எய்தியது விலக்கி இயல்பாய் முடியுமெனக் கூறியது.

(இ-ள்) செய்யிய என்னும் வினையெச்சம் - செய்யியவென்று சொல் லப்படும் வினையெச்சமாகிய அகரவீற்று வினைச்சொல் முன்னும், பல்வகைப் பெயரினெச்சம் - பல வகைப்பட்ட பெயரெச்சமாகிய அகர வீற்று வினைச் சொல் முன்னும், முற்று - குறிப்பு முற்றும் வினை முற்றுமாகிய அகர வீற்று வினைச்சொல் முன்னும், ஆறனுருபே - ஆறாம் வேற்றுமை யாகிய அகரவீற்று உருபு முன்னும், அஃறிணைப் பன்மை - பன்மைப் பொருளினை உணர்த்தும் அகரவீற்று அஃறி ணைப் பெயர்கள் முன்னும், அம்ம முன் - அம்மவென்று சொல்லும் எதிர்முகமாகிய அகரவீற்று இடைச்சொல் முன்னும், இயல்பே - வருமொழி முதல் வல்லினம் வந்தால் இயல்பாய் முடியும் என்றவாறு.

அருகியவுரை: முதலினும் ஈற்றினும் அகரவீற்றுச் சொல்லை வைத்தமையால் இடையினின்ற சொற்களும் அகரவீறே எனக்கொள்க.

பலவகைப்பட்ட பெயரெச்சமாவது தொழில் கொள் பெயரெச்ச மும், உவமைத் தொழில் கொள் பெயரெச்சமும், பண்பு கொள் பெய ரெச்சமும், எதிர்மறைப் பெயரெச்சமுமாம் என்க.

உ-ம்: உண்ணிய கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வினையெச்சம் இயல்பாயிற்று. உண்ட, உண்ணாநின்ற குதிரை, செந்நாய், தகர், பன்றி எனத் தொழில் கொள் பெயரெச் சம் இயல்பாயிற்று. பொன்போன்ற, பொன்னிகர்த்த, பொன் னொத்த, பொன்னுறழ்ந்த, பொன்புரைத்த, பொன்னிசைந்த, பொன்னேய்ந்த, பொன்னேர்ந்த குதிரை, செந்நாய், தகர், பன்றி யென உவமைத் தொழிலோடு பெயரெச்சம் இயல்பாயின. பொன்னன்ன, பொன்னனைய, பொன்னின் குதிரை, செந்நாய்,

தகர், பன்றியென உவமைப் பண்பு கொள் பெயரெச்சம் இயல்பாயின. செய்ய, சிறிய, சேய, தீய, வெய்ய, புதிய, மேல, திண்ணிய, உண்ணிய, நுண்ணிய கமலம், சரோருகம், தாமரை, பங்கயம் எனப் பண்பு கொள் பெயரெச்சம் இயல்பாயின. உண்ணாத, தின்னாத குதிரை, செந்நாய், தகர், பன்றியென எதிர்மறைப் பெயரெச்சம் இயல்பாயின. உண்டன, தின்றன, நல்லன, தீயன, வாழ்க, செல்க குதிரை, செந்நாய், தகர், பன்றியெனத் தெரிநிலை வினைமுற்று குறிப்பு வினைமுற்று முன்னும் இயல்பாயின. சாத்தன், கொற்றன் குதிரை, செந்நாய், தகர், பன்றியென ஆறனுருபின்முன் இயல்பாயின. சில, பல, உள, இல, அல, சில்ல, பல்ல, உள்ள, இல்ல, அல்ல குதிரை, செந்நாய், தகர், பன்றியென அஃறிணைப் பன்மை முன் இயல்பாயின. அம்மகொற்றா, சாத்தா, தேவா, பூதா என உரையசை இடைச்சொல் முன் இயல்பாயின. (17)

168. வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
ஏகலு முரித்தஃ தேகினு மியல்பே.

சூ-ம், எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்துபடாமற் காத்தலும் கூறியது.

(இ-ள்) வாழிய என்பதன் - வாழியவென்று சொல்லப்படும் வியங்கோள் வினைமுற்றின், ஈற்றுயிர்மெய் ஏகலும் உரித்து - இறுதிக்கண்ணே நின்ற யகர உயிர்மெய் கெட்டு முடிதலும் உரித்து, அஃது ஏகினும் இயல்பே - அது கெட்டு இகரவிறாய் நின்றாலும் ஆண்டும் இயல்பேயாம் என்றவாறு.

அரும்பதவுரை: உம்மை எதிர்மறைக்கண்ணாதலான் கெடாமையும் உரித்தாகலும் இயல்பிகந்துபடாமையும் கொள்க. வருமொழி வரையாமையின் நாற்கணமும் வரினும் கெடுதலும் கெடாமலும் கொள்க.

உ-ம்: வாழிய, வாழி கொற்றா, சாத்தா, தேவா, பூதா, ஞெள்ளா, நாகா, மன்னா, வளவா, யவனா, அபயா எனவும் வரும். (18)

169. சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) சாவவென் மொழி - சாவவென்று சொல்லப்படும் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சத்து, ஈற்றுயிர்மெய் - இறுதிக்கண் நின்ற வகர உயிர்மெய், சாதலும் விதி - கெட்டு நிற்றலும் விதியாம் என்றவாறு.

அரும்பதவுரை: "சாதலும் விதி"யெனவே கெடாமல் நிற்றலே வலியுடைத்து என்க.

உ-ம்: சாக்குத்தினான் சீறினான், தகர்த்தான், படைத்தான் எனவும் ஒட்டுக. வருமொழி வரையாமையின் நாற்கணமும் கொள்க. சாநீண்டான், மாண்டான், யார்த்தான், வீழ்ந்தான், அடைந்தான் என ஒட்டுக. (19)

170. பலசில வெனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பு மிகலு மகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற

சூ-ம், பல சில என்னும் இவ்விரு சொல்லும் புணருமாறு கூறியது.

(இ-ள்) பல சிலவெனும் இவை - அஃறிணைப் பன்மைப் பொருளை உணர்த்தும் அகரவீற்றுப் பெயராகிய பல சிலவென்னும் இவ்விரு சொற்களும், தம்முன் தாம் வரின் - பலவின்முன் பல வந்தாலும் சில வின்முன் சில வந்தாலும், இயல்புமிகலும் - இயல்பாய் முடிதலும் மிக்கு முடிதலுமாம்; அகரமேக - தம்மீற்றினின்ற அகரம் கெட, லகரம் றகரமாதலும் - அதனாற் பற்றப்பட்ட லகரவொற்று றகரவொற்றாய்த் திரிந்து முடிதலுமாம், பிற வரின் - இவற்றின் முன் பிற சொற்கள் வரினும், அகரம் விகற்பமாகலும் உள பிற - ஈற்றினின்ற அகரம் நிற்றலும் நீங்கலும் உள என்றவாறு.

உ-ம்: பலபல, சிலசில, பலப்பல, சிலச்சில என இயல்பாயும் மிக்கும் வந்தன. "பல் சான்றீரே" (புறம்.246) என அகரம் கெட்டது. பற்பல, சிற்சில என அகரம் கெட்டு லகரம் றகரமாய்த் திரிந்தது. பல்கலை பலகலை, பல்சாலை பலசாலை, பஃறாழிசை பல தாழிசை, பல்படை பல படை, பல நாள் பன்னாள், பல்மணி பன்மணி, பல்வளை பலவளை, பல்யானை பலயானை, பலவணி பல்லணி, பலவாயம் பல்லாயம், பல விழை பல்லிழை, பலவுரை பல்லுரை என அகரம் விகற்பித்து வந்தது. சிலவுக்கும் இவ்வாறே எடுத்துக் கொள்க.

'பிற'வென்ற மிகையானே பல்ல பல, சில்ல சில என்று வருவனவும், பலாம், சிலாம் என வருவனவும் பிற வல்லினம் வந்தவழி லகரம் திரியாமல் வருவதும் கொள்க. (20)

## ஆகாரவீற்றுச் சிறப்புவிதி

171. அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா.

சூ-ம், எய்தியது விலக்கல் கூறியது.

(இ-ள்) அல்வழி - அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண் வரும், ஆ மா - ஆவென்னும் பெயரும் மாவென்னும் பெயரும், மியா - முன்னிலை

ஏவல்வினையைக் கருதி வரும் எதிர்முகமாக்கும் சொல்லினைச் சேர்ந்த மியாவென்னும் உரையசை இடைச்சொல்லும், முற்று - அஃறிணைப் பன்மைப் பொருளையுணர்த்தும் ஆகாரவீற்று எதிர் மறை முற்றுவினைச் சொல்லும், முன் மிகா - இச்சொற்களின் முன் வல்லினம் இயல்பாய் முடியும் என்றவாறு.

> உ-ம்: ஆ குறிது, மா குறிது, சிறிது, தீது, பெரிது, குறிய, சிறிய, தீய, பெரிய என ஒட்டி இயல்பாயினவாறு காண்க. கேண்மியா கொற்றா, சாத்தா, தேவா, பூதா என ஒட்டி இயல்பாயினவாறு காண்க. உண்ணா, தின்னா குதிரை, செந்நாய், தகர், பன்றி என இயல்பாயினவாறு காண்க.

ஆமா என்பதனை ஒரு சொல்லாக வைத்து முடிப்பினுமாம். ஆமாவென்பது காட்டா. ஆமா குறிது, சிறிது, தீது, பெரிது, குறிய, சிறிய, பெரிய என ஒட்டுக. (21)

**172.** குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.

சூ-ம், ஆகாரவீற்றுள் சிலவற்றிற்குச் செய்யுள் முடிவு கூறியது.

(இ-ள்) குறியதன் கீழாக் குறுகலும் - குற்றெழுத்தின் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது இரண்டு மாத்திரையிலே ஒரு மாத்திரை கெட்டு அது அகரமாய் நிற்றலும், அதனோடுகர மேற்றலும், - அந்த அகரத்துடனே இறுதியுகரம் வருதலும், இயல்புமாம் - இவ்விரண்டு விதியுமின்றி இயல்பாதலும், தூக்கின் - இம்மூவிதியும் செய்யுளிடத்து உரித்தாம் என்றவாறு.

> உ-ம்: "சுறமறிவன துறையெல்லாம்", "நிலவிரி கானல்வாய்" எனவும் "இறவுப் புறத்தன்ன" (நற்.19), "சுறவுக் கோட்டன்ன" (நற்.19), "நிலாச் சுறவினும் பொன் போன்றன", "நிலாவணங்கு மென்மணன்மே னின்று" என முறையே காண்க.

ஈண்டு இயல்பு ஐயமறுத்தற்கு உரைத்தார். (22)

## இகரவீற்றுச் சிறப்புவிதி

**173.** அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

சூ-ம், ஈகாரவீற்றுள் சில சொற்களுக்குச் செய்யுள் முடிவு கூறியது.

(இ-ள்) அன்றி இன்றியென் - அன்றியென்றும் இன்றியென்றும் சொல்லப்படும், வினையெஞ்சிகரம் - வினையெச்சக் குறிப்பின்

இறுதிக்கண் நின்ற இகரம், தொடர்பினுள் உகரமாய் - செய்யுளுள்ளே உகரமாகியும் வரப்பெறும், வரின் இயல்பே - அவ்வழி வந்த விடத்து மேல்வரும் வல்லின மகரம் இயல்பாய் முடியும் என்றவாறு.

உ-ம்: "வாளன்று பிடியா வன்க ணாடவர்", "நாளன்று போகிப் புள்ளிடை தட்பப் பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்" (புறம்.124) எனவும் இது முற்றியலிகரம் குற்றியலிகரமாய் நின்றது. "உப்பின்று புற்கை யுண்கமா கொற்கை யோனே" எனவும் வரும். (23)

174. உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகர வுயிர்மெய்யா மேற்பன வரினே.

சூ-ம், முதலதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதியும் ஏனையதற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதியும் கூறியது.

(இ-ள்) உரி வரின் - உரியென்னும் அளவுச் சொல் வருமொழியாய் வருங்காலத்து, நாழியின் ஈற்றுயிர்மெய் கெட - நாழியென்னும் அளவுப் பெயரீற்று நின்ற உயிர்மெய் கெட, மருவும் டகரம் - அவ்விடத்து, டகரவொற்று வரும், உரியின் வழியே - உரியென்னும் அளவுப் பெயர் முன், யகர உயிர்மெய்யாம் - யகர உயிர்மெய் தோன்றி நிற்கும், ஏற்பன வரினே - ஏற்ற மொழிகள் வருமொழியாக வந்தவிடத்து என்றவாறு.

உ-ம்: நாடுரி எனவும், உரிய உப்பு, கொள்ளா, சாமை, தினை, பயறு, மிளகு, வரகு எனவும் ஒட்டுக.

"ஏற்பன" என்றதனால் உரியரிசி, உரியாழாக்கு, உரியெண்ணெய் முதலானவற்றில் யகர உயிர்மெய் மிகாதெனக் கொள்க. (24)

175. சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்.

சூ-ம், எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறியது.

(இ-ள்) சுவைப்புளி முன் - மரமல்லாத சுவைப்புளி முன்னர் வல்லெழுத்து வந்தால், இன மென்மையும் தோன்றும் - அதற்கினமான மெல்லெழுத்துக்களும் மிகப்பெறும் என்றவாறு.

உ-ம்: புளிங்கறி, சோறு, தயிர், பாளிதம் என ஒட்டுக.

உம்மையால் பொதுவிதியான் வந்த வல்லெழுத்துப் பேறும் கொள்க. (25)

## இகர ஐகாரவீற்றுச் சிறப்புவிதி

**176.** அல்வழி இ ஐ முன்ன ராயின்
இயல்பு மிகலும் விகற்பமு மாகும்.

சூ-ம், எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்துபடாமற் காத்தலும் கூறியது.

(இ-ள்) அல்வழி - அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, இ ஐ முன்னராயின் - இகர ஐகாரத்தின் முன்னே வருமொழி வல்லெழுத்து வந்ததாயின், இயல்புமிகலும் - இயல்பாய் முடிதலும் மிக்கு முடிதலும், விகற்பமுமாகும் - ஒன்றற்கே ஒருகால் மிக்கும் மிகாதும் வருவனவாம் என்றவாறு.

உ-ம்: பருத்தி, பொதி, யானை, குதிரை குறிது, சிறிது, தீது, பெரிது என இயல்பாயின. "ஆடித்திங்கள்" (சிலம்பு. கட்டுரை. 133), அலிக்கொற்றன் எனவும்; சித்திரைத் திங்கள் (சிலம்பு. இந்திர. 64), புலைக்கொற்றன் எனவும் மிக்கு முடிந்தன. கிளிகுறிது, கிளிக்குறிது எனவும் தினைகுறிது, தினைக்குறிது எனவும் உறழ்ந்து வந்தன. பிறவுமன்ன,

மிகுதி இறந்துபடாமற்கு ஈண்டுக் கூறினாரென்க. (26)

## ஈகாரவீற்றுச் சிறப்புவிதி

**177.** ஆமுன் பகரவீ யனைத்தும்வரக் குறுகும்
மேலன வல்வழி யியல்பா கும்மே.

சூ-ம், ஈகாரவீற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறியது.

(இ-ள்) ஆமுன் பகரவீ - ஆவென்னும் பெயரீற்று நின்ற பகரவீகாரம், அனைத்தும் வரக் குறுகும் - இருவழியும் நாற்கணத்தோடும் புணருமிடத்துக் குறுகும், மேலன - அங்ஙனம் குறுகி நின்ற ஈகாரத்தின் மேலே வரும் வல்லினம், அல்வழி - அல்வழிப் பொருட்புணர்ச்சிக் கண்ணே, இயல்பாகும்மே - மிகாது இயல்பாய் முடியும் என்றவாறு.

உ-ம்: ஆப்பியரிது, குளிரும், நன்று, வலிது எனவும்; ஆப்பி யருமை, குளிர்ச்சி, நன்மை, வன்மை எனவும் இரு வழியும் குறுகின. ஆப்பி குறிது, சிறிது, தீது, பெரிது என இயல் பாயின. ஆப்பிப்புழு என வேற்றுமைக்கண் மிக்கது. (27)

**178.** பவ்வீ நீமீ முன்ன ரல்வழி
இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே.

சூ-ம், ஈகாரவீற்றிற்கு எய்தியது விலக்கலும் எய்தாதது எய்துவித்த லும் கூறியது.

(இ-ள்) பவ்வீ நீ மீ முன்னர் - இடக்கர்ப் பெயராகிய பகரத்தோடு கூடி நின்ற ஈகாரவீற்றுப் பெயர் முன்னரும் நீயென்னும் முன்னிலைப் பெயர் முன்னரும் மீயென்னும் பெயர் முன்னரும், அல்வழி - அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, இயல்பாம் - வருமொழிமுதல் வல்லினம் வந்தால் மிகாது இயல்பாய் முடியும், வலிமெலி மிகலுமாமீக்கே - மீ யென்னும் சொல் முன்னர் ஒரோவிடத்து வல்லெழுத்து மெல்லெழுத்து மிகவும் பெறும் என்றவாறு.

உ-ம்: பீ குறிது, சிறிது, தீது, பெரிது எனவும்; நீ குறியை, சிறியை, தீயை, பெரியை எனவும்; மீகண், செவி, தலை, புறம் எனவும் இயல்பாயின. மீக்கோள், மீப்பாய், மீங்குழி, மீந்தோல் என வலி மெலி மிக்கன. மீகண் என்பது மேலிடத்துக்கண். இது வேற்றுமைப் புணர்ச்சி எனினும் இயல்பு பற்றி உடன் கூறி னார். (28)

## முற்றுகரவீற்றுச் சிறப்புவிதி

179. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகு முகர முன்ன ரியல்பாம்
அதுமுன் வருமன் றான்றாந் தூக்கின்

சூ-ம், முற்றுகரத்திற்கு எய்தியது விலக்கலும் பிறிது விதி வகுத் தலும் கூறியது.

(இ-ள்) மூன்றாறுருபு - மூன்றாம் வேற்றுமை ஒடுவென்னும் உரு பின் முன்னரும் ஆறாம் வேற்றுமை அதுவென்னும் ஒருமையுருபின் முன்னரும், எண் - முற்றுகரமாய் வந்த எண்ணுப் பெயர் முன்னரும், வினைத்தொகை - உகரவீறாய் வந்த வினைத்தொகைச் சொல் முன்ன ரும், சுட்டீறாகும் உகரமுன்னர் - சுட்டுச் சொல் ஈற்றினின்ற உகரத் தின் முன்னரும், இயல்பாம் - வருமொழிமுதல் வல்லினம் வந்தால் மிகாது இயல்பாய் முடியும், அதுமுன் வருமன்று - அதுவென்னும் சுட்டின் முன் வந்த அன்றென்னும் மறைமொழி, ஆன்றாந் தூக்கின் - செய்யுளிடத்து வந்தால் முதனீளும் என்றவாறு.

உ-ம்: சாத்தனொடு கொண்டான், சென்றான், தந்தான், போயி னான் எனவும்; சாத்தனது கை, செவி, தலை, புறம் எனவும்; ஒரு காசு, சின்னம் , தலை, பகல், இரு கண், எழு கண், எழு கடல், அறு கலம் எனவும்; அடு களிறு, சேனை, தானை, படை எனவும்; அது, இது, உது குறிது, சிறிது, தீது, பெரிது எனவும் முறையே இயல்பாயின. அதான்று என வருமொழி முதல் ஆகாரம் நீண்டது. (29)

## முற்றுகரவீற்றுச் சிறப்புவிதி

**180.** வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி.

சூ-ம், குற்றுகரத்துள் வன்றொடரல்லாத ஐந்துக்கும் எய்தியது ஒரு வழி விலக்கல் கூறியது.

(இ-ள்) வன்றொடரல்லன முன் - வன்றொடரொழிந்த ஐந்து குற்றுகர ஈற்றின் முன்னும், மிகா அல்வழி - வந்த வல்லினம் மிகாது இயல்பாய் முடியும் அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண் என்றவாறு.

உ-ம்: நாகு, எஃகு, வரகு, குரங்கு, தெள்கு கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் முறையே இயல்பாயின. உறங்குகின்றான் துஞ்சுகின்றான், உண்டுபோயினான், எறிந்துபோயினான் என்பன முதலாயினவும் கொள்க. சுக்குக்கடிது, பதக்குப்பெரிது என வன்றொடர் மிக்கவாறு காண்க. (30)

**181.** இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

சூ-ம், எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் கூறியது.

(இ-ள்) இடைத்தொடர் ஆய்தத்தொடர்- இடைத்தொடர்க் குற்றுகர மும் ஆய்தத்தொடர்க் குற்றுகரத்தின் முன்னும், ஒற்றிடையின் மிகா நெடில் - இடையே ஒற்று மிகாத நெடிற்றொடர்க் குற்றுகரத்தின் முன் னும், உயிர்த்தொடர் முன் - உயிர்த்தொடர்க் குற்றுகரத்தின் முன்னும், மிகா வேற்றுமை - வல்லினம் வந்தால் வேற்றுமைக்கண் இயல்பாம் என்றவாறு.

உ-ம்: தெள்கு, எஃகு கடுமை, சிறுமை, தீமை; பெருமை என வும்; நாகுகால், செவி, தலை, புறம் எனவும்; காசு, காது, காபு கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் ஒற்றிடையிலே மிகாத நெடிற்றொடர்க் குற்றுகரம் இயல்பாயின. வரகு கதிர், சோறு, தாள், பதர் எனவும்; முரசு, மருது, துரபு கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் ஒற்று இடையிலே மிகாத உயிர்த்தொடர்க் குற்றுகரத்தின் முன் இயல்பாயின.

இவை இயல்பாம் எனவே வன்றொடரும் மெற்றொடரும் ஒற்றிடை யிலே மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர் இரண்டும் உயிரீற்றுப் பொதுவிதியான் மிக்கு முடியுமென்க. அவை கொக்குக் கால், குரங் குக்கால், ஆட்டுக்கால், முயிற்றுக்கால், செவி, தலை, புறம் என வரும். (31)

182. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

சூ-ம், எய்தியனதன்மேற் சிறப்பு விதி கூறியது.

(இ-ள்) நெடிலோடுயிர்த்தொடர் - நெட்டெழுத்தீற்றினும் உயிர்த் தொடரீற்றினும், குற்றுகரங்களுள் - உகரப் பற்றுக்கோடாகி வரும் வல்லெழுத்து ஆறனுள், டறவொற்றிரட்டும் - டகார றகாரமான இரண் டொற்றுக்களும் இரட்டிக்கும், வேற்றுமை மிகவே - பெரும்பாலும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் என்றவாறு.

உ-ம்: ஆட்டுக்கால், பாற்றுக்கால், முருட்டுக்கால், முயிற்றுக் கால், செவி, தலை, புறம், நிறம், மயிர், யாப்பு வலிமை, அடி, ஆய்வு என வேற்றுமைக்கண் நாற்கணத்தோடும் மிக்கன. "நாடுகிழ வோனே" (பொருந.248), "காடக மிறந்தோர்க்கே ஓடமென் மனனே காண்", "கறைமிட றணியலு மணிந்தன்று" (புறம். கடவுள்) எனச் சிறுபான்மை வேற்றுமைக்கண் மிகா வாயின. காட்டரண், குருட்டுக்கோழி, முருட்டுப்புலையன், களிற்றியானை, வெளிற்றுப்பன்றி, எயிற்றேனம் எனச் சிறு பான்மை அல்வழிக்கண் மிக்கன. வெருக்குக்கண், வெருக்குக் கால், செவி, தலை, புறம் என உகரப் பற்றுக்கோடாகி பிற மெய்யும் மிக்கது. (32)

183. மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே.

சூ-ம், மென்றொடர்க் குற்றுகரம் புணருமாறு கூறியது.

(இ-ள்) மென்றொடர் மொழியுட் சில - மென்றொடர் மொழிக் குற்று கரங்களுட் சில மொழிகள், வேற்றுமையில் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, தம்மினம் - இடையே நின்ற மெல்லெழுத்துத் தமக்கினமான, வன்றொடராகா - வல்லெழுத்தாகத் திரிந்து வருவன வும் திரியாமல் நிற்பனவுமாம்; மன்னே - பெரும்பாலும் என்றவாறு.

உ-ம்: குரக்குக்கால், கழைச்சுக்கோல், எட்குக்குட்டி, மருத்துப் பை, பாப்புக்கால், ஏற்புடம்பு எனத் திரிந்தன. நாற்கணத் தோடும் ஒட்டுக. ஞெண்டுக்கால், வண்டுக்கால், பந்துத் திரட்சி, கோங்கிலை, புன்கங்காய், அடம்பம்பூ, பொதும்பிற் பூவை, குறும்பிற்கொற்றன் எனத் திரியாமல் நின்றன.

"மன்னே"யென்ற மிகையானே ஒன்றுதானே ஓரிடத்துத் திரிந்தும் திரியாதும் வருவனவும் உளவெனக் கொள்க. அவை குரக்கடி குரங் கடி, குரக்குக்கால் குரங்கின்கால், வேப்பங்காய் வேம்பின்காய்,

பாப்புத்தோல் பாம்பின்தோல் என வேற்றுமைக்கண் திரிந்தும் திரி யாமலும் வந்தன. (33)

**184. ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே.**

சூ-ம், குற்றியலுகரவீற்று ஐகாரவீறாமெனக் கூறியது.

(இ-ள்) ஐயீற்றுடைக் - ஐகாரத்தைத் தம்மீற்றிலே பெற வரும், குற் றுகரமு முளவே - குற்றியலுகரங்களும் உள என்றவாறு.

உ-ம்: ஓராட்டை நெல், ஈராட்டைப் பொன், ஐயாட்டைக் கடமை, அன்றைக் கூத்தன், பண்டைச் சான்றோர் என வரும். (34)

**185. திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்**
**நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்**
**றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.**

சூ-ம், நாற்றிசையிலுள்ள குற்றுகரம் புணருமாறு கூறியது.

(இ-ள்) திசையொடு திசையும் - குற்றியலுகரவீற்றின் நாற்பெருந் திசைகளும் தம்மோடு தாம் மாறிப் புணருமிடத்தும், பிறவும் சேரின் - பிறவற்றோடும் புணருமிடத்தும், நிலையீற்றுயிர்மெய் - நிலைமொழி யீற்று உயிர்மெய் கெடுதலும், கவ்வொற்று நீங்கலும் - அதன் மேனின்ற கவ்வொற்று நீங்குதலும், றகரம் னலவாத் திரிதலும் - அதன் மேனின்ற றகாரம் னகாரம் லகாரமாகத் திரிதலும், ஆம் பிற - இத்தன்மை விதியும் பிற விதியும் பெறும் என்றவாறு.

உ-ம்: வடகிழக்கு, வடமேற்கு, வடவேங்கடம், வடபால், வட கடல், வடமலை, தென்கிழக்கு, தென்மேற்கு, தென்குமரி, தென்கடல், தென்பால், தென்றலை, மேற்கடல், மேல்பால், குணகடல், குணபால், குடகடல், குடபால்.

"பிற"வென்ற விதப்பானே கிழவென்பதனைக் கீழென நிறுவிக் கீழ் பால், கீழ்சார், கீழ்கரை என வரும். (35)

**186. தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.**

சூ-ம், தெங்கென்னும் சொல் காயென்னும் சொல்லொடு புணருமாறு கூறியது.

(இ-ள்) தெங்கு நீண்டு - தெங்கென்னும் நிலைமொழியின் முதல் நீண்டு, ஈற்றுயிர்மெய் கெடும் - அச்சொல்லின் ஈற்றுயிர்மெய்யும் கெடும், காய் வரின் - வருமொழி காயென்னும் சொல் வந்தால் என்ற வாறு.

உ-ம்: தேங்காய் என வரும். (36)

### எண்ணுப் பெயர்கட்குச் சிறப்புவிதி

187. எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீறா மெண்ணுள்
முதலீ ரெண்முத னீளு மூன்றா
றேழ்குறு கும்மா றேழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யென்மனார் புலவர்.

சூ-ம், எண்பெயருடனே எண்ணாதி நாற்பெயரும் புணருமாறு கூறியது.

(இ-ள்) எண்ணிறை யளவும் பிறவும் - எண்ணுப்பெயரும் நிறைப் பெயரும் அளவுப்பெயரும் பிறபெயரும், எய்தின் - இந்நால்வகைப் பெயரும் வருமொழியாக வரில், ஒன்று முதல் எட்டீறாம் - ஒன்று முதலாக எட்டீறாக, எண்ணுள் - நின்ற எண் வகை எண்களுக்கு, முதலீரெண் - முதற்கணின்ற ஒன்றென்னும் எண்ணும் இரண்டென்னு மெண்ணும், முதனீளும் - இவ்விரண்டெண்ணும் முதலுயீர் நீளும், மூன்றாறேழ் குறுகும் - மூன்று ஆறு ஏழு என்னும் இம்மூன்றெண்ணும் முதலுயிர் குறுகும், ஆறேழல்லவற்றின் - ஆறும் ஏழும் ஒழிந்த எண்களினின்ற, ஈற்றுயிர்மெய்யும் - ஈற்றுயிர்மெய்யும் கெடும், ஏழனுயிரும் ஏகும் - ஏழென்னும் எண்ணின் ஈற்றினின்ற உயிரும் கெடும், ஏற்புழி என்மனார் புலவர் - ஏற்றுமிடத்தென்று சொல்லுவர் அறிவுடையோர் என்றவாறு.

உ-ம்: ஓரொன்று, ஓரிடை, ஓருழக்கு, ஓர் யாண்டு, ஈரொன்று, ஈரிடை, ஈருழக்கு, ஈரிலையென முதல் ஈரெண் முதல் நீண்டன. முப்பது, முக்கழஞ்சு, முக்கலம், முப்பழம் எனவும்; அறுபது, அறுகழஞ்சு, அறுகலம், அறுமீன் எனவும்; எழுபது, எழு கழஞ்சு, எழுகலம், எழுபிறப்பு எனவும் மூன்று, ஆறு, ஏழ் குறுகின. ஒன், இரண், மூன், நான், ஐந், எட் என ஆறேழ் அல்லவற்றின் ஈற்றுயிர்மெய் கெட்டன. ஏழ் என ஏழு என்னும் எண்ணின் ஈற்றுயிரும் ஏகிற்று.

இதனுள் "எண்ணிறை யளவும் பிறவும்" என்பதனை மேல்வரும் ஐந்து சூத்திரத்தோடும் கூட்டுக. "ஏற்புழி" என்பதனை இப் பொருண்மை அதிகாரம் முற்றும் எடுத்துக்கொள்க. (37)

188. ஒன்றன் புள்ளி ரகர மாக
இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.

சூ-ம், ஒன்று இரண்டு என்னும் இருவகை எண்ணின் முன் எண்ணாதி நால்வகைப் பெயரும் புணருமாறு கூறியது.

(இ-ள்) ஒன்றன் புள்ளி ரகரமாக - ஒன்றென்னும் எண்ணிடை நின்ற னகரவொற்று ரகரவொற்றாக, இரண்டனொற்றுயிரேக - இரண்டென் னும் எண்ணிடைநின்ற னகரமும் ரகரமிசை நின்ற அகரமும் போக, உவ்வருமே - இவ்விரண்டெண்ணின் ரகரத்தின் மேலும் உகரம் வரும் என்றவாறு.

உ-ம்: ஒருபது, ஒரு கழஞ்சு, ஒரு கலம், ஒரு பிறப்பு எனவும் இருபது, இரு கழஞ்சு, இரு கலம், இரு பிறப்பு எனவும் வரும். (38)

**189.** மூன்றானுறுப் பழிவும் வந்தது மாகும்.

சூ-ம், மூன்றென்னும் எண்ணின் விகாரம் கூறியது.

(இ-ள்) மூன்றனுறுப் பழிவும் - மூன்றென்னும் எண்ணிடைநின்ற ஒற் றுக்கெடுதலும், வந்தது மாகும் - வருமொழி முதல் வந்த ஒற்றாய்த் திரிதலுமாம் என்றவாறு.

உ-ம்: மூவொன்று, மூவிடை, மூவுழக்கு, மூவுலகு எனவும்; முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, மும்மொழி எனவும் வரும். (39)

**190.** நான்கன் மெய்யே லறவா கும்மே.

சூ-ம், நான்கென்னும் எண்ணின் விகாரம் கூறியது.

(இ-ள்), நான்கன் மெய்யே - நான்கென்னும் எண்ணிடைநின்ற னகர ஒற்று, லறவாகும்மே - லகாரமும் றகாரமுமாய்த் திரியும் என்றவாறு.

உ-ம்: நாலொன்று, நாலிடை, நாலுழக்கு, நால்யானை எனவும்; நாற்பது, நாற்கழஞ்சு, நாற்கலம், நாற்கவி எனவும் வரும். (40)

**191.** ஐந்தனொற் றடைவது மினமுங் கெடும்

சூ-ம், ஐந்தென்னும் எண்ணின் விகாரம் கூறியது.

(இ-ள்) ஐந்தனொற்று - ஐந்தென்னும் எண்ணிடையே நின்ற நகார ஒற்று, அடைவதும் - வருமொழி முதல் வந்த ஒற்றாய்த் திரிதலும், இனமும் கெடும் - அதற்கு இனமாய்த் திரிதலும் கெடுதலும் இம் மூன்றினாலும் முடியும் என்றவாறு.

உ-ம்: ஐம்மூன்று, ஐம்மஞ்சாடி, ஐவ்வட்டம், ஐவ்வண்ணம் என வந்த ஒற்றாய்த் திரிந்தது. ஐம்பது, ஐங்கழஞ்சு, ஐங்கலம், ஐஞ்சந்தி என வந்ததற்கு இனமாய்த் திரிந்தது. ஐயொன்று, ஐயிடை, ஐயாழாக்கு ஐவிரல் என ஒற்று கெட்டது. (41)

192. எட்ட னுடம்பு ணவ்வாகு மென்ப.

சூ-ம், எட்டென்னும் எண்ணின் விகாரம் கூறியது.

(இ-ள்) எட்டனுடம்பு - எட்டென்னும் எண்ணிடைநின்ற டகரவொற்று, ணவ்வாகு மென்ப - ணகரமாய்த் திரியுமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: எண்பது, எண்கழஞ்சு , எண்கலம், எண்குணம் என வரும். (42)

193. ஒன்பானொடு பத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப் பஃதகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

சூ-ம், தொண்ணூறும் தொள்ளாயிரமும் முடிக்குமாறு கூறியது.

(இ-ள்) ஒன்பானொடு பத்தும் - ஒன்பதென்னும் எண் முன்னர்ப் பத்தும், நூறுமொன்றின் - நூறுமான எண்கள் வந்து பொருந்தின், முன்னதின் - முன் நிலைமொழியாய் நின்ற ஒன்பதென்னும் எண்ணாவது எட்டும் ஒன்றும் சேர்ந்து எட்டு ஒன் ஒன்றாய் ஒன்று பத்தாய் ஒன்பது ஆன வாறு போல, ஏனைய முரணி - வருமொழிகள் இரண்டையும் நூறென்றும் ஆயிரமென்றும் மாறி, ஒவ்வொரு தகர நிறீஇ - நிலைமொழி முதனின்ற ஓகாரத்துடனே ஒரு தகரவொற்றைச் சேர்த்து, பஃதகற்றி - பஃதென்பதனை ஒழித்து, னவ்வை நிரலே ண ள வாய்த் திரிப்பது நெறியே - நிகழும் மொழியீற்றினின்ற னகரவொற்றை முறையே ணகாரமும் ளகாரமுமாய்த் திரிப்பது முறையாம் என்றவாறு.

உ-ம்: தொண்ணூறு, தொள்ளாயிரம் என வரும். (43)

194. முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்
இடையொற் றேக லாய்த மாகல்
எனவிரு விதியு மேற்கு மென்ப.

சூ-ம், எண்ணுடன் எண் புணருமாறு கூறியது.

(இ-ள்) முதலிரு நான்கா மெண்முனர் - ஒன்று முதலாக எட்டு ஈறாக வுள்ள எண் முன்னர், பத்தின் இடையொற்று ஏகல் - வரும் பத்தென்

னும் எண்ணிடைநின்ற தகரவொற்று ஒருகாற் கெடுதலும், ஆய்த மாகல் - அவ்வொற்று ஒருகால் ஆய்தமாகலும், எனவிரு விதியும் ஏற்கு மென்ப - என்னும் இவ்விரண்டு விதியும் பெறும் என்று சொல்லுவர் என்றவாறு.

உ-ம்: ஒருபது, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறு பது, எழுபது, எண்பது எனவும் ஒருபஃது, இருபஃது, முப்பஃது, நாற்பஃது, ஐம்பஃது, அறுபஃது, எழுபஃது, எண்பஃது எனவும் வரும். (44)

**195.** ஒருபஃ தாதிமுன் னொன்றுமுத லொன்பான்
எண்ணு மவையூர் பிறவு மெய்தின்
ஆய்த மழியவாண் டாகுந் தவ்வே.

சூ-ம், எண்களுடனே எண் புணருமாறு கூறியது.

(இ-ள்) ஒருபஃதாதிமுன் - ஒருபஃது முதலாய் ஒன்பது ஈறாயுள்ள எண்களின் முன்னர், ஒன்றுமுதல் ஒன்பான் எண்ணும் - ஒன்று முதலாக ஒன்பதெண்ணும் வருமொழியாக வரினும், அவையூர் பிறவும் எய்தின் - அவ்வொன்பது எண்ணின்மேலும் சேர்ந்த பிற சொற்கள் வரினும், ஆய்தம் அழிய - நிலைமொழிப் பஃதென்னும் எண்ணிடைநின்ற ஆய் தம் கெட, ஆண்டாகும் தவ்வே - அந்த நிலையிலே தகரவொற்று வரும் என்றவாறு.

உ-ம்: ஒருபத்தொன்று, இருபத்தொன்று எனவும் இருபத் தொருகழஞ்சு, முப்பத்துமுககலனேதூணி, எழுபத்தேழி யாண்டு எனவும் வரும். (45)

**196.** ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

சூ-ம், பத்தும் ஒன்பதுமான எண்பெயரொடு எண்ணாதி நாற்பெயரும் வந்து புணருமாறு ... ...

(இ-ள்) ஒன்று முதலீரைந்தாமிரங் கோடியெண் - ஒன்றாதியாகப் பத்தும் ஆமிரமும் கோடியம் என்றிவ்வெண்ணுப் பெயரும், நிறையளவும் பிறவரின் - நிறைப் பெயரும், அளவுப்பெயரும் மற்றும் பொரு ட்பெயரும் இவை வருமொழியாக வரில், பத்தினீற்றுயிர்மெய் கெடுத்து - நிலையாக நின்று பத்தென்பதன் ஈற்று நின்ற உயிர் மெய் யைக் கெடுத்து, இன்னும் இற்றும் ஏற்பதேற்கும் - இன்னாதல் இற் றாதல் ஆண்டைக்கு அடுப்பது ஒன்றை ஏற்கும், ஒன்பதும்

இனைத்தே - ஒன்பதென்னும் எண்ணின் பின் இவ்வெண்ணாதிப் பெயர் வந்தால் இவ்விரண்டனுள் ஒன்று ஆண்டுமாம் என்றவாறு.

உ-ம்: பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு எனவும் பதினாயிரம், பதின் கோடி, பதின் கழஞ்சு, பதின்றுலாம், பதினாழி, பதின்கலம், பதின்மர், பதின்மடங்கு என இன் சாரியை பெற்றன. பதிற் றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றுமூன்று, பதிற்றுநான்கு, பதிற்றைந்து, பதிற்றாறு, பதிற்றேழு, பதிற்றெட்டு, பதிற் றொன்பது, பதிற்றுப்பத்து, பதிற்றுக்கோடி, பதிற்றுக்கழஞ்சு, பதிற்றுத்துலாம், பதிற்றுத்தூணி, பதிற்று நாழி என இற்றுப் பெற்றன. ஒன்பதினாயிரம், ஒன்பதின்கோடி, ஒன்பதின்கழஞ்சு, ஒன்பதின்கலம், ஒன்பதின்மர் என இன் சாரியை பெற்றன. ஒன் பதிற்றொன்று, ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதிற்றுமூன்று, ஒன் பதிற்று நான்கு, ஒன்பதிற்றைந்து, ஒன்பதிற்றாறு, ஒன்பதிற் றேழு, ஒன்பதிற்றெட்டு, ஒன்பதிற்றொன்பது, ஒன்பதிற்றுப் பத்து, ஒன்பதிற்றுக்கோடி, ஒன்பதிற்றுக்கழஞ்சு, ஒன்பதிற்றுத் தூணி, ஒன்பதிற்றுமடங்கு என இற்றுச் சாரியை பெற்றன.

"ஏற்பதேற்கும்" என்பதனால் பத்தின்முன் இரண்டும் ஒன்பதும் பத்தும் வரும் வழி இன் சாரியை பெறாதென்க; ஆயிரம் வரும்வழி இற் றுச்சாரியை பெறாதென்க; இன்வரும். ஒன்பதின்முன் ஒன்று முதல் பத்தெண்ணும் வரும்வழி இன் சாரியை பெறாதென்க... (46)

197. இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்று னவ்வாகு மென்ப...

சூ-ம், பத்தென்னும் எண்முன் இரண்டென்னும் எண் புணருமாறு கூறியது.

(இ-ள்) இரண்டு முன்வரில் - இரண்டென்பது வருமொழியா வரில், பத்தின் ஈற்றுயிர்மெய் கரந்திட - பத்தென்னும் எண்ணின் நிலை மொழி ஈற்றுயிர்மெய் கெட, ஒற்று னவ்வாகு மென்ப - இடையே நின்ற தகர ஒற்று னகரவொற்றாய்த் திரியுமென்று உரைப்பர் புலவர் என்றவாறு.

உ-ம்: பத்து இரண்டு என்பது பன்னிரண்டு என வரும். (47)

198. ஒன்ப தொழித்தவெண் ணொன்பத மிரட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி.

சூ-ம், ஒன்று முதல் பத்தீறாகவுள்ள எண்கள் தம்மொடு தாம் புண ருமாறு கூறியது.

(இ-ள்) ஒன்பதொழித்த - ஒன்பதென்னும் எண் ஒன்றனையுமொழிந்து ஒழிந்து நின்ற, எண்ணொன்பதும் - ஒன்றாதி பத்தீறான் எண் ஒன்பதும், இரட்டின் - தம்முன்னர்த் தாம் வந்து புணருமிடத்து, முன்னதின் முன் னலவோட - நிலைமொழியாக நின்றதன் முதலெழுத்து ஒன்று நிற்க அல்லனவெல்லாம் கெட ஆண்டு, உயிர் வரின் வவ்வும் - வருமொழி முதலாக உயிர் வந்தால் இடையே வகரவொற்றும், மெய் வரின் வந்தது மிகல் - வருமொழி முதலாக மெய் வந்தால் வந்தவெழுத்து இரட்டித்தலும், நெறி - முறையாம் என்றவாறு.

உ-ம்: ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவ்வைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து என வரும் விகற்பமும் ஐவைந்து என்புழி வகரம் இரட்டாமலும் ஒரோவொன்றென்பதும் கழக்கழஞ்சு, கலக்கலம் என்பதும் கொள்க. (48)

### ஊகாரவீற்றுச் சிறப்புவிதி

**199.** பூப்பெயர் முன்னின மென்மையும் புணரும்.

சூ-ம், ஊகாரவீற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறியது.

(இ-ள்) பூப்பெயர் முன் - பூவென்று சொல்லப்படும் பெயர் முன்னர், இனமென்மையும் புணரும் - வல்லெழுத்து மிகலேயன்றி வருவதற் கினமான மெல்லெழுத்தும் வரப்பெறும்.

உ-ம்: பூங்கொடி, சோலை, தாமம், பந்து என வரும்.

உம்மையாற் பூக்கொடி முதலானவும் கொள்க. (49)

### ஏகார ஓகாரவீற்றுச் சிறப்புவிதி

**200.** இடைச்சொ லேயோ முன்வரி னியல்பே.

சூ-ம், இடைச்சொல் ஏகார ஓகார ஈறு புணருமாறு கூறியது.

(இ-ள்) இடைச்சொல்லேயோ முன் - இடைச்சொல்லாய் வரும் ஆறு ஏகாரமுன்னும் எட்டு ஓகாரமுன்னும், வரின் இயல்பே - வருமொழி முதல் வல்லினம் வரின் இயல்பாய் முடியும் என்றவாறு.

உ-ம்: அவனே கொண்டான் என்பது பிரிநிலை, நீயே கொண் டாய் என்பது வினா, காலே செவியே கையே தலையே என்பது எண், "கழியே, சிறுநெய்தல் நாடொவ்வாதே" என்பது ஈற்றசை, சாத்தனே கொண்டான் என்பது தேற்றம், "ஏதெனை யென்றோ ரிருடி வினவவே" என்பது இசைநிறை எனவும்; கொளலோ கொண்டான் என்பது ஒழியிசை, அவனோ சொன்னான் என்பது வினா, ஓஒ பெரியன் என்பது சிறப்பு, யானோ கொண்டேன் என்

பது எதிர்மறை, நன்றோ தீதோ என்பது தெரிநிலை, அவனோ போனான் என்பது கழிவு, "காணிய வம்மினோ கங்குலது நிலையே" என்பது அசைநிலை, அவனோ கொண்டான் என்பது பிரிநிலை எனவும் இயல்பாயின. (50)

### ஐகாரவீற்றுச் சிறப்புவிதி

201. வேற்றுமை யாயி னைகா னிறுமொழி
ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே.

சூ-ம், ஐகாரவீறு புணருமாறு கூறியது.

(இ-ள்) வேற்றுமையாயின் - வேற்றுமைப் புணர்ச்சிக்கண்ணே வல்லினம் வந்ததாயின், ஐகானிறு மொழி - ஐகாரவீற்று நிலைமொழி, ஈற்றழிவோடும் - தன்னீற்று ஐகாரம் கெடுதலுடனே, அம்மேற்பவும் உளவே - அம்முச் சாரியை பெறுதலும் உளவென்றவாறு.

உ-ம்: ஆவிரங்கோடு, வழுதுணங்காய், தூதுணங்காய், தில்லங்காய், பாவட்டங்காய், செதிள், தோல், பூ எனவும் ஓலம்போழ் எனவும் வரும்.

"ஈற்றழிவோடம் மேற்பவும்" என்பதினானே ஈற்றழிவின்றி அம்மேற்பவு முள. அவை அரையங்காய், மனையங்காய் எனவும் வரும். வல்லெழுத்துப் பேறும் கொள்க. (51)

202. பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்
அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

சூ-ம், பனையென்னும் ஐகாரவீற்றுப் புணர்ச்சி கூறியது.

(இ-ள்) பனைமுன் கொடிவரின் - நிலையாக நின்ற பனையென்னும் பெயர் முன்னர் சேரன் அணியும் கொடி வரின், மிகலும் - வந்த கொடி முதன் வன்மை மிகலும், வலி வரின் - மற்றும் வன்மை வந்தால், ஐபோயமும் - நிலையாக நின்ற தன் ஈற்றைகாரம் போய் அம்முச்சாரியை பெறுதலும், திரள் வரின் உறழ்வும் - திரள் என்பது வரின் அப்பெற்றிடலொடு விகற்பித்தும், அட்டுறின் - அட்டு என்பது வரின், ஐகெட்டந் நீள்வுமாம் - ஈற்றினின்ற ஐகாரம் போய் வந்த அகரம் ஆகாரம் ஆதலுமாம், வேற்றுமை - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் என்றவாறு.

உ-ம்: பனைக்கொடி, பனங்காய், செறும்பு, தூண், பழம் எனவும்; பனந்திரள், பனைத்திரள் எனவும்; பனாட்டு எனவும் முறையே காண்க. இதற்கு வரும் அகலமும் உரையிற் கொள்க. (52)

**மூன்றாவது உயிரீற்றுப் புணரியல் முற்றும்.**

நான்காவது

# மெய்யீற்றுப் புணரியல்

## மெய்யீற்றின் முன் உயிர்

203. உடன்மே லுயிர்வந் தொன்றுவது லியல்பே.

சூ-ம், மெய்யீற்றின் முன் உயிர்முதல் வந்து புணருமாறு கூறியது.

(இ-ள்) உடன்மேல் - நிலைமொழி ஈற்றினின்ற ஒற்றின் மேல், உயிர் வந் தொன்றுவது - வருமொழி முதல் நின்ற உயிர் வந்து ஒன்றுதல், இயல்பே - இயல்புப் புணர்ச்சியாம் என்றவாறு.

உ-ம்: உரிஞ், நாண், வெரிந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், புகழ், நாள் என நிறுத்தி அழகிது, ஆன்றது, இயன்றது, ஈண்டிற்று, உயர்ந்தது, ஊறிற்று, எழுந்தது, ஏறிற்று, ஐது, ஒழிந்தது, ஓங்கிற்று என முறையே ஒட்டிக்கொள்க.

ஔவொடு வரும் வழியும் ஆராய்ந்து கொள்க.

அழகு, ஆட்டம், இயைபு, ஈகை, உரம், ஊக்கம், எழுச்சி, ஏற்றம், ஐயம், ஒழிபு, ஓட்டம், ஔவியம் என வேற்றுமைப் புணர்ச்சிக்கும் ஒட்டுக. உடன்மேல் உயிர் வந்தொன்றுவது உலகத்தின் முறைமை என்றுமாம். (1)

204. தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்

சூ-ம், தனிக் குற்றெழுத்தடுத்த ஒற்றின்மேல் உயிர் வந்து புணருமாறு கூறியது.

(இ-ள்) தனிக்குறின் முன்னொற்று - நிலைமொழி ஒரு குற்றெழுத்தின் பின்னின்று அவ்வொற்றின்மேல், உயிர்வரின் - வருமொழி முதல் நின்ற உயிர் வந்தால், இரட்டும் - அவ்வொற்று இரட்டித்து நிற்கும் என்றவாறு.

உ-ம்: மண்ணழகிது, பொன்னழகிது, கம்மழகிது, மெய்யழகிது, கல்லழகிது, தெவ்வழகிது, புள்ளழகிது என வரும்.

ஆன்றது, இயைந்தது என ஒழிந்த உயிர்களோடும் ஒட்டுக. அமைவு, ஆக்கம், இளமை, ஈகை என வேற்றுமைக்கண்ணும் ஒட்டுக. (2)

## மெய்யீற்றின் முன் மெய்

205. தன்னொளி மெய்ம்முன் யவ்வரி னிகரம்
துன்னு மென்று துணிநரு முளரே.

சூ-ம், யகரமொழிந்த மெய் முன்னர் யகரம் வந்து புணருமாறு கூறு கின்றது.

(இ-ள்) தன்னொழி மெய்முன் - நிலைமொழி ஈறாய் நின்ற யகர மொழிந்த பத்து மெய் முன்னரும், யவ்வரின் - வருமொழி முதல் நின்ற யகரம் வந்தால், இகரம் துன்னு மென்று - அவ்வொற்றின் மேல் இகரம் வந்து பொருந்துமென்று, துணிநரு முளரே - துணிந்தவரும் உளர் என்றவாறு.

உ-ம்: உரிஞியானை, மண்ணியானை, வெரிநியானை, நம்மி யானை, பொன்னியானை, காரியானை, கல்லியானை, தெவ்வி யானை, வாழியானை, வெள்ளியானை எனவும் உரிஞியாது, மண்ணியாது எனவும் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண் ணும் இகரம் பெற்றன.

உம்மையால் துணியார் பெரும்பாலர் எனக் கொள்க. (3)

206. ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினைநனி யவ்வன் மெய்வரின்
உவ்வுறு மேவற் குறாசில சிலவழி.

சூ-ம், தொழிற்பெயர்க்கும் ஏவல் வினைக்கும் ஈற்றினின்ற ஒற்றின் மேல் யவ்வல்லாத மெய் வந்து புணருமாறு கூறியது.

(இ-ள்) ஞணநம லவளன ஒற்றிறு - ஞ ண ந ம ல வ ள ன என்னும் இவ்வெட்டு ஒற்றும் ஈறாய் வரும், தொழிற்பெயர் ஏவல் வினைநனி - தொழிற்பெயரிலும் ஏவல்வினைச் சொல்லினும் மிகவும், யவ்வன் மெய்வரின் - யகரமல்லாத பத்து மெய்களும் வந்தால், உவ்வுறும் - அவ் விற்றினின்ற ஒற்றின்மேல் உகரம் வந்து பொருந்தும், ஏவல் குறா சில சிலவழி - ஏவல் வினைக்கண் அவ்வுகரம் சில சில இடங்களிற் பெறா தாம் என்றவாறு.

உ-ம்: உரிஞு, மண்ணு, பொருநு, செம்மு, புல்லு, தெவ்வு, துள்ளு, நுன்னு, கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும் கடுமை, சிறுமை, தீமை,

பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் இரு வழியும் தொழிற்பெயர்க்கண் உகரம் பெற்றன.

இவற்றை எடுத்துச்சரித்துப் பெயரை வருவித்து ஏவல் வினையாக்கி உகரம் பெற்றவாறு காண்க. உரிஞு கொற்றா, உரிஞு சாத்தா, உரிஞு தேவா, பூதா, ஞெள்ளா, நாகா, மாடா, வளவா என வரும். பிறவுமன்ன உண், தின் கொற்றா, சாத்தா, தேவா, பூதா என இவை ஏவற்கண் உகரம் பெறாவென்க.

"நனி" என்றதினாற் சிறுபான்மை இவை எட்டொற்று மல்லாத பிற ஒற்றினும் உகரம் பெறுமென்க. மணலை வாரு, சருகை வாரு, நீ தாழு, நீ வாழு என ரகர ழகரம் ஏவற்கண் உகரம் பெற்றன. (4)

**207. நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை.**

சூ-ம், நகரவீற்றுத் தொழிற்பெயர் விகாரம் கூறியது.

(இ-ள்) நவ்விறு தொழிற்பெயர்க்கு - நிலைமொழி நகரவீற்றுத் தொழிற் பெயர்க்கு, அவ்வுமாம் - உகரமேயன்றி அகரமும் வந்து பொருந்தும், வேற்றுமை - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் என்றவாறு.

உ-ம்: பொருநக் கடுமை, சிறுமை, தீமை, பெருமை என வரும். (5)

### ணகர னகரவீறு

**208. ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்**
**இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்**
**கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.**

சூ-ம், ணகார னகார ஈறு புணருமாறு கூறியது.

(இ-ள்) ண ன - நிலைமொழி ஈறாய் நின்ற ணகர னகாரங்கள், வல்லினம்வர - வருமொழி முதலாய் நின்ற வல்லினம் வந்தால், டறவும் - முறையே ண டகரமும் ன றகரமுமாம், பிறவரின் - ஒழிந்த மெல்லினமும் இடையினமும் வருமொழி முதலாக வந்தால், இயல்புமாகும் - நிலைமொழி ஈற்றில் ணகார னகாரங்கள் திரியாமல் இயல்பாய் முடியும், வேற்றுமைக்கு - இவ்விரு விதியும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண்ணாம், அல்வழிக்கு - அல்வழி பொருட் புணர்ச்சிக்கண் அவ்வீற்று ணகார னகாரங்கள், அனைத்து மெய் வரினும் - வருமொழி முதலாக மூவினமும் வந்தாலும், இயல்பாகும்மே - இயல்பாய் முடியும் என்றவாறு.

உ-ம்: மட்குடம், சாடி, தாழி, பானை எனவும்; பொற்குடம், சாடி, தாழி, பானை எனவும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் வலிவரத் திரிந்தன. மண், பொன் ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை என வேற்றுமைக்கண் மெல்லினமும் இடையினமும் வர இயல்பாயின. மண், பொன் கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என அல்வழிக் கண் மூவினமும் வர இயல்பாயின பிறவுமன்ன. (6)

209. குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

சூ-ம், தனியே ஒரு குற்றெழுத்தை ஒழிந்த ணகார னகரவீற்றுச் சொற் கள் புணருமாறு கூறியது.

(இ-ள்) குறிலணவில்லா ணனக்கள் - நிலைமொழி தனிக் குற் றெழுத்தையடுத்து வராத ஒரு மொழி தொடர் மொழிகளைச் சார்ந்த ணகார னகாரங்கள், வந்த நகரந் திரிந்துழி - வருமொழி முதலாய் வந்த நகரம் ஈற்று ணகார னகாரமாகத் திரிந்த பின்பு, நண்ணும் கேடே - நிலைமொழி ஈற்று ணகார னகாரம் கெடுவனவாம் என்றவாறு.

உ-ம்: பாண், பரண், பசுமண், பண்மணிப்பூண், பைங்கண், வான், வலன், வயான், வலியன், வாலன், பல்லன், அருமணவன் என நிறுத்தி நன்று எனவும் நன்மை எனவும் இருவழியும் ஒட்டி வந்த நகரம் திரிந்து நிலை மொழி ஈறு கெட்டவாறு காண்க. (7)

210. சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி
இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே.

சூ-ம், ணகாரவீற்றுச் சில சொற்புணர்ச்சி விகாரம் கூறியது.

(இ-ள்) சாதி குழூஉ - சாதி பற்றியும் திரள் பற்றியும் வரும் பெயர் களும், பரண் கவண் பெயரிறுதி - பரண் கவண் என்னும் இவ்விரு பெயர்களுமான இவ்வீற்று ணகாரம், இயல்பாம் வேற்றுமைக்கு - வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் இயல்பேயாம்.

உணவெண் சாண் பிற - எண்ணென்னும் உணவுப் பெயரும் சா ணென்னும் நீட்சியளவுப் பெயரும், டவ்வாகலுமாம் - வல்லெழுத்து வந்தால் அவ்வீற்று ணகாரம் டகாரமாகவும் பெறும், அல்வழியும்மே - அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண்ணே என்றவாறு.

உ-ம்: பாண், உமண், உவண் குடி, சேரி, தோட்டம், பாடி எனச் சாதிப் பெயரும் அமண் குடி, சேரி, தோட்டம், பாடி எனக் குழூஉப் பெயரும், பரண் கால், கவண் கால் என வரும் தனிப்

பெயரும் வேற்றுமைக்கண் இயல்பாயின. எட் கடிது, சிறிது, தீது, பெரிது, எனவும் சாட்கோல் எனவும் அல்வழிக்கண் திரிந்தன.

உம்மையால் திரியாமையே வலியுடைத்து. "பிற" என்றதினாலே கண்கடுமை அட்டூண்டுழனி என வருவனவும் கொள்க. (8)

**211.** ணஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகான்
அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே.

சூ-ம், ணகாரவீற்றுச் சாதிப் பெயர் புணருமாறு கூறியது.

(இ-ள்) ணஃகான் கிளைப்பெயர் - நிலைமொழி ணகாரவீற்றுச் சாதிப் பெயர்கள், இயல்பும் - மூவினமும் வர இயல்பாய் முடிதலும், அஃகான் அடைவுமாகும் - மூவினமும் வர அகரம் பெறுதலுமாம், வேற்றுமைப் பொருட்கே - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் என்றவாறு.

உ-ம்: எயின் குடி, சேரி, தோட்டம், பாடி, ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை என இயல்பாயின. எயினக்கன்னி, எயினப் பிள்ளை, மரபு, வரைவு என அகாரம் பெற்றன.

சாதியும் குழுவும் அஃறிணையாகலின் வேறு எடுத்து ஓதினார் என்க. (9)

**212.** மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே.

சூ-ம், மீனென்னும் னகரவிற்றுச் சொல்லின் விகாரம் கூறியது.

(இ-ள்) மீன் - மீனென்னும் நிலைமொழி ஈற்றினின்ற னகரவொற்று, றவ்வொடு பொரூஉம் - வல்லெழுத்து வரின் றகரத்தோடு உறழ்ந்து வருதலுமாம், வேற்றுமை வழியே - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண் என்றவாறு.

உ-ம்: மீன் கண், மீற்கண், செவி, தலை, புறம் என வரும். (10)

**213.** தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.

சூ-ம், தேனென்னும் னகரவீற்று … …

(இ-ள்) தேன்மொழி - தேனென்னும் நிலைமொழி ஈற்றின் னகர ஒற்று, மெய் வரின் - வருமொழி முதல் ஒன்பது மெய்யும் வந்தால், இயல்பும் - ஈறு கெடாமல் இயல்பாய் முடிதலும், மென்மை மேவின் - வருமொழி முதல் மெல்லினம் வந்தால், இறுதியழிவும் - நிலைமொழி

ஈற்றின் னகரவொற்றுக் கெடுதலும், வலிவரின் - வருமொழி முதல் வல்லினம் வந்தால், ஈறு போய் - நிலைமொழி ஈற்றினின்ற னகர வொற்றுக் கெட்டு, வலி மெலி மிகலுமாம் - வந்த வல்லினம் மிகுத லும் அதற்கு இனமான மெல்லெழுத்து மிகுதலுமாம், இருவழி - அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும் என்றவாறு.

உ-ம்: தேன் கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது வலிது எனவும் கடுமை, சிறுமை, தீமை, பெருமை, வலிமை எனவும் இருவழியும் ஒன்பது மெய்யொடும் இயல்பாயிற்று.

தேஞெரி, தேநெரி, தேமுரி எனவும் தேஞான்றது, நீண்டது, மாண்டது எனவும் மென்மை வர இருவழியும் ஈறு கெட்டது. தேக் குடம், சாடி, தாழி, பானை எனவும் தேக்கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் தேங்குடம், சாடி, தாழி, பானை எனவும் தேங்கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் இரு வழியும் ஈறு கெட்டு வன்மை மென்மை மிக்கன.

இதனை ஞாபகமா மேற்சூத்திரத்தினானே தேன்குடம், தேற்குடம் என உறழ்வாம் என்பாரும் உளர். (11)

214. மரமல் லெகின்மொழி யியல்பு மகர
மருவ வலிமெலி மிகலு மாகும்.

சூ-ம், அன்னமென்னும் பொருள் பட வந்த எகினென்னும் னகர ஈற்றுச் சொல் விகாரம் கூறியது.

(இ-ள்) மரமல் லெகின் மொழி - மரமென்னும் பொருள் கொள்ளாமல் அன்னமென்னும் பொருள் கொள்ளும் எகின் என்னும் நிலைமொழி ஈற்றினின்ற னகரவொற்று, இயல்பும் - வல்லினம் வந்தால் இருவழி யும் இயல்பாதலும், அகரமருவ - ஈற்றினின்ற னகரவொற்றின் மேல் அகரம் பொருந்த, வலி மெலி மிகலுமாகும் - வந்த வல்லெழுத்து மிகு தலும் அதற்கு இனமான மெல்லெழுத்து மிகுதலுமாம் என்றவாறு.

உ-ம்: எகின் கால், சிறகு, தலை, புறம் எனவும் எகின் தடிது, சிறிது, தீது, பெரிது எனவும் இருவழியும் இயல்பாயிற்று. எகினக் கால், எகினங்கால் எனவும் எகினக் கடிது, எகினங் கடிது எனவும் இருவழியும் அகரம் பெற்று வல்லெழுத்து மெல் லெழுத்து மிக்கன.

வருமொழி வரையாமையின் எகினவழகு, எகினமாட்சி, வலிமை என ஏனைய முக்கணமும் வரவும் அகரம் பெறுமெனவும் கொள்க. (12)

**215. குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே.**

சூ-ம், குயின் ஊன் என்னும் இவ்விரு சொல்லும் புணருமாறு கூறியது.

(இ-ள்) குயினூன் - குயின் ஊன் என்னும் இவ்விரு சொல்லின் ஈற்றினின்ற னகர ஒற்றின்மேல், வேற்றுமைக்கண்ணும் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணும், இயல்பே - வருமொழிமுதல் வல்லினம் வந்தால் இயல்பாய் முடியும் என்றவாறு.

உ-ம்: குயின் குழாம், செறிவு, திரள், பெருமை, மாட்சி, வலிமை எனவும் ஊன் கடுமை, சிறுமை, தீமை, பெருமை, மாட்சி, வலிமை எனவும் வரும்.

குயின் - கொண்மூ (13)

**216. மின் பின் பன் கன் றொழிற்பெய ரனைய**
**கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்.**

சூ-ம், மின், பின், பன், கன் என்னும் இந்நான்கு சொல்லும் புணருமாறு கூறியது.

(இ-ள்) மின் பின் பன் கன் - மின் பின் பன் கன் என்னும் இந்நான்கு சொல்லின் ஈற்றினின்ற னகரவொற்று, தொழிற் பெயரனைய - தொழிற்பெயரே போல உகரம் பெற்று வல்லெழுத்துப் பெறும்; இயல்பு கணம் வரின் இயல்புமாம்; கன் அவ்வேற்று - கன் என்னும் சொல்லின் ஈற்றினின்ற னகரவொற்று அகரச் சாரியை ஏற்று, மென்மையோ டுறழும் - வல்லெழுத்து மெல்லெழுத்து மிக்கு முடியும் என்றவாறு.

உ-ம்: மின்னு, பின்னு, பன்னு, கன்னுக்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும் கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் இருவழியும் உகரத்தோடு வன்மை மிக்கன; ஏனைய இயல்பாயின. கன்னங்கடிது, கன்னக் கடிது, கன்னங் கடுமை, கன்னக் கடுமை எனக் கன் அகரம் பெற்று வன்மை மென்மை உறழ்ந்து வந்தது. (14)

**217. தன்னென் னென்பவற் றீற்றின் வன்மையோ**
**டுறழு நின்னீ றியல்பா முறவே.**

சூ-ம், தன் என் நின் என்னும் சொற்கள் புணருமாறு கூறியது.

(இ-ள்) தன்னென் என்பவற்றீற்றின் - தன் என் என்னும் இவ்விரு சொல்லின் ஈற்றினின்ற னகரவொற்று தத்தம் பொருட் புணர்ச்சிக் கண், வன்மையோ டுறழும் - வல்லினம் வந்தால் றகரத்துடன் உறழ்ந்து முடியும், நின்னீறு - நின் என்னும் சொல்லின் ஈற்றினின்ற னகரவொற்றுத் தன் பொருட் புணர்ச்சிக்கண், இயல்பாமுறவே - வல்லினம் வந்தால் திரியாமல் இயல்பாய் முடியும் என்றவாறு.

உ-ம்: தன் பகை தற் பகை, என் பகை எற் பகை, நின் பகை, செவி, தலை, புறம் என வரும். (15)

### மகரவீறு

218. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாய்த் திரிபவு மாகும்.

சூ-ம், மகரவீறு புணருமாறு கூறியது.

(இ-ள்) மவ்வீறு - நிலைமொழி ஈறாக நின்ற மகரவொற்று, ஒற்ற ழிந்து - மொழி முதல் அனைத்தும் வர இறுதியொற்று அழிந்து, உயிரீ றொப்பவும் - உயிரீறாய் நாற்கணமும் வந்தால் உயிரீற்றுப் பதப்புணர்ச்சி போலாம், வன்மைக் கினமாய்த் திரிபவுமாகும் - வன்மை வந்தால் ஈறு கெடாது அவற்றிற்கு இனமாகிய மென்மை களாய்ந் திரிவனவும் உள என்றாறு.

உ-ம்: வட்டவடி, ஆடி, இலை எனவும் வட்டக்கல், சுனை, தாழி, பாறை எனவும் வட்டஞான்றது, நீண்டது, மாண்டது, வாரி என வும் விதியுயிரீறாய் உடம்படுமெய்யும் மிகுதியும் இயல்புமாய் அல்வழிக்கண் வந்தது. மரங்குறிது, சிறிது, தீது, பெரிது என அல்வழிக்கண் வல்லினம் வர இனமாய்த் திரிந்தது. மரவடி, ஆட்டம், இலை எனவும் மரக்கோடு, செதிள், தோல், பூ எனவும் மரஞாண், நூல், வடு எனவும் இறுதி கெட்டு விதியுயிரீறாய் உடம்படுமெய்யும் மிகுதியும் இயல்புமாய் வேற்றுமைக்கண் வந்தது. மரவங்கோடு, செதிள், தோல், பூ என வேற்றுமைக் கண் வல்லினம் வர இனமாய்த் திரிந்தது. (16)

219. வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) வேற்றுமை - வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணே, மப் போய் - நிலைமொழி ஈற்றினின்ற மகரவொற்றுக் கெட்டு, வலிமெலி உறழ்வும் - வல்லெழுத்து வந்தால் வல்லெழுத்து மெல்லெழுத்துக்கு உறழ்வும், அல்வழி - அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண், உயிரிடை

வரின் - வருமொழி முதலாக உயிர்க்கணமும் இடைக்கணமும் வந்தால், இயல்பு முள - நிலைமொழி ஈற்றினின்ற மகரம் கெடாமல் இயல் பாய் நிற்றலுமுள.

உ-ம்: குளக்கரை குளங்கரை என வேற்றுமைக்கண் உறழ்ந்தன. மரமழகிது, வலிது, யாது என அல்வழி இயல்பாயின. (17)

**220. நுந்தம்,**
**எம் நம் மீறா மவ்வரு ஞநவே.**

சூ-ம், சுற்றப் பெயர் ஈற்றினின்ற மகரம் புணருமாறு கூறியது.

(இ-ள்) நுந்தம் எம் நம் - நும் தம் எம் நம் என்னும் இந்நான்கு பெய ரும், ஈறா ம் - நிலைமொழியாய் நின்றதனீற்றின் மகரம், வரு ஞ நவே - மேல் வருமொழி முதல் வந்த ஞகர நகரங்களாய்த் திரியும் என்ற வாறு.

உ-ம்: நும், தம், எம், நம் ஞாண், நூல் என வரும். (18)

**221. அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.**

சூ-ம், அகமென்னும் மகரவீற்றுச் சொற் புணர்ச்சி கூறியது.

(இ-ள்) அகமுனர் - நிலைமொழியாய் நின்ற அகம் என்னும் மகர வீற் றுச் சொல் முன்னர், செவி கை வரின் - செவி கை என்னும் இவ்விரு சொல்லும் வந்து புணர்ந்தால், இடை ய ன கெடும் - நிலை மொழி யிடை நின்ற உயிர்மெய் கெடும் என்றவாறு.

உ-ம்: "அஞ்செவி நிறைய மந்திர மோதி", "அங்கையி னெல்லி யதன்பயன்" (பு.வெ.34) எனவும் வரும்.

**222. ஈமுங்,**
**கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்**
**முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.**

சூ-ம், ஈம் கம் உரும் என்னும் இம் மூன்று சொல்லின் ஈற்றினின்ற மகர விகாரம் கூறியது.

(இ-ள்) ஈமுங் கம்மு முருமும் - ஈம், கம், உரும் என்னும் இம்மூன்று சொல்லின் ஈற்றினின்ற மகரவொற்று, தொழிற்பெயர் மானும் - தொழிற்பெயர் போல உகரம் பெற்று உயிரீற்றுப் புணர்ச்சியாம், முதலன - முதனின்ற ஈமும் கம்முன் என்னும் இவ்விரு சொற்களும், வேற்றுமைக்கு - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணே, அவ்வும் பெறுமே - அவ்வீற்று மகரம் அகரச் சாரியையும் பெறும் என்றவாறு.

உ-ம்: ஈமும் கம்மும் உருமும் கடிது, ஞான்றது, வலிது, அழகிது, கடுமை, ஞாற்சி, வலிமை, அழகு என உகரம் பெற்று உயிரீற்றுப் புணர்ச்சியாயின ஈமக்குடம், கம்மக்குடம் என வேற்றுமை அகரச் சாரியை பெற்றன. (20)

## யரழவீறு

223. யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.

சூ-ம், யரழ ஒற்றீறு வல்லினத்தோடு புணருமாறு கூறியது.

(இ-ள்) யரழ முன்னர் - நிலைமொழி ஈறாக நின்ற யரழ என்னும் இம்ய மூன்றிற்று முன்னரும், க ச த ப - வருமொழி முதல் க ச த பக்கள் வந்தால், அல்வழி - அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, இயல்பும் மிகலும் ஆகும் - இயல்பாய் முடிவனவும் மிகுவனவுமாம், வேற்றுமை மிகலும் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணே மிகுவனவும், இனத்தோ டுறழ்தலும் விதி மேல் - தம்மின மெல்லெழுத்துக்களோடு உறழ்ந்து வருவனவும் உள என்றவாறு.

உ-ம்: நாய், தேர், பூழ் கடிது, சிறிது, தீது, பெரிது என இயல்பாயின.

மெய்க்கீர்த்தி, பொய்ச்சொல், மெய்த்தெய்வம், நோய்ப் பகை எனவும் கார்ப்பருவம் எனவும் பாழ்க்கொல்லை, சாலை, தலை, பயிர் எனவும் அல்வழிக்கண் மிக்கன. நாய், தேர், பூழ் கால், செலவு, தலை, புறம் என வேற்றுமைக்கண் மிக்கன. வேய்க்குறை வேய்ங்குறை, வேர்க்குறை வேர்ங்குறை, வீழ்க்குறை வீழ்ங்குறை, சிறை, தலை, புறம் என ஒட்டி வேற்றுமைக்கண் உறழ்ந்து வந்தது காண்க. (21)

224. தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே.

சூ-ம், தமிழ் தாழ் என்னும் ழகரவீற்றுச் சொல் விகாரம் கூறியது.

(இ-ள்) தமிழ் - நிலைமொழி தமிழென்னும் ழகரவீற்றுச் சொல், அவ்வுறவும் பெறும் - அகரச் சாரியை பெறுதலுமுள, தாழும் - தாழென்றும் ழகர வீற்றுச் சொல்லும், கோல் வந்துறுமேல் - கோலென்னும் சொல் வந்து புணருமாயின், அற்றே - தமிழ்ப் போல் அகரச் சாரியை பெறும் என்றவாறு.

உ-ம்: தமிழப்பல்லவ தாசா, தமிழக்கூத்து, சேரி, தோட்டம், பிள்ளை எனவும் தாழக்கோல் எனவும் வரும்.

உம்மையால் தமிழ்க்கூத்து, தாழ்க்கோல் எனவும் வரும். (22)

225. கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.

சூ-ம், திசையை உணர்த்தும் கீழென்னும் ழகரவீற்றுப் புணர்ச்சி கூறியது.

(இ-ள்) கீழின்முன் - கீழென்னும் நிலைமொழி ஈறாக நின்ற ழகாரவீற்று முன், வன்மை - வருமொழி முதல் வல்லினம் வந்தால், விகற்பமுமாகும் - ஒரு கால் இயல்பாயும் ஒரு கால் மிக்கும் உறழ்ந்தும் முடியும் என்றவாறு.

உ-ம்: கீழ்க்குளம், கீழ்குளம், சேரி, துறை, பாடி என வரும்.

அல்வழிக்கும் ஒப்பன கொள்க. (23)

### லகர ளகர ஈறு

226. லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.

சூ-ம், லகார ளகார ஒற்றிறு புணருமாறு கூறியது.

(இ-ள்) லள - நிலைமொழி ஈறாக நின்ற லகார ளகார மெய்கள், வேற்றுமையில் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, றடவும் - லகாரம் றகாரமும் ளகாரம் டகாரமுமாய்ப் புணர்தலுமாம், அல்வழி அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, அவற்றோ டுறழ்வும் - றகார டகாரத்துடனே உறழ்வனவும், வலிவரினாம் - வருமொழி முதல் வல்லினம் வந்தால், ஆம் என்றதனை முன்னே கூட்டுக, மெலிமேவின் - லகர ளகர ஈற்றின் முன்னே வருமொழி முதல் மெல்லினம் வந்தால், னணவும் - லகரம் னகரமும் ளகரம் ணகரமுமாம், இடைவரின் - வருமொழி முதல் இடையினம் வந்தால், இயல்புமாகும் - நிலைமொழி ஈறு விகாரப்படாமல் இயல்பாய் முடியும், இருவழியானும் என்ப - இரு வழிப் புணர்ச்சியினுமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: கல், முள் குறை, சிறை, தலை, புறம் என வேற்றுமைக்கண் திரிந்தன. கல் குறிது கற்குறிது, முள் குறிது முட்குறிது, சிறிது, தீது, பெரிது என அல்வழிக்கண் உறழ்ந்தன. கல், முள்

ஞெரிந்தது, நீண்டது, மாண்டது எனவும், ஞெரி, நுனி, முரி எனவும் லகார ளகாரங்கள் னகார ணகாரங்களாய்த் திரிந்தன. கல், முள் யாது, வலிது எனவும், யாப்பு, வலிமை எனவும் இரு வழியும் இயல்பாயின. (24)

227. குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே.

சூ-ம், குற்றெழுத்தை அடுத்த லகர ளகரவீற்றுப் புணர்ச்சி கூறியது.

(இ-ள்) குறில் வழி லள - தனியே ஒரு குற்றெழுத்தின் பின்னின்ற லகார ளகார மெய்கள், தவ்வணையின் - வருமொழி முதல் தகரம் வந்தால், ஆய்தமாகவும் பெறும் - அவ்வீற்று லளக்கள் ஆய்தமாகவும் பெறும், அல்வழியானே - அல்வழிப் புணர்ச்சிக்கண் என்றவாறு.

உ-ம்: கஃறீது, முஃடீது என வரும்

உம்மையால் முன்னுறழ்ச்சியே பெறுமென்க. (25)

228. குறில்செறி யாலள வல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபு மாவன வுளபிற.

சூ-ம், ஒரு குற்றெழுத்தை அடாது வந்த லகர ளகரவீற்றுப் புணர்ச்சி கூறியது.

(இ-ள்) குறில் செறியா லள - தனிக்குறில் ஒன்றனை ஒழிந்து வந்த லகர ளகர மெய்கள், அல்வழி வந்த தகரந் திரிந்த பின் அல்வழிக் கண் வந்த தகரம் திரிந்த பின், கேடும் - ஈற்று லளக்கள் கெடுதலும், ஈரிடத்தும் வரும் நத் திரிந்த பின் - இருவழியினும் வருமொழி முதல் வந்த நகரம் திரிந்த பின், மாய்வும் - ஈற்று ல ளக்கள் கெடுதலும், வலி வரின் - வருமொழி முதல் தகரமொழிந்த வல்லினம் வந்தால், இயல்பும் திரிபும் ஆவன உள பிற - இயல்பாய் முடிதலுமுள பிறவு மாம் என்றவாறு.

உ-ம்: வேல், கருங்கோல், தோள், நெஞ்சுள் தீது என அல் வழிக்கண் கெட்டன. சூல், செங்கல், வாள் நன்று எனவும் நன்மை எனவும் இருவழியும் கெட்டன. (26)

229. லளவிறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுறா
வலிவரி னல்வழி யியல்புமா வனவுள.

சூ-ம், லகர ளகரவீற்றுப் புடை பெயர்ச்சித் தொழிற்பெயர்ப் புணர்ச்சி கூறியது.

(இ-ள்) லளவிறு தொழிற்பெயர் - நிலைமொழியான் லகர ளகரவீற்றுப் புடைபெயர்ச்சித் தொழிற்பெயர்க்கண் முக்கணம் வரினும், ஈரிடத்தும் - அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும், உவ்வுறா - மேல் விதித்த உகரம் இவ்வீற்று லளக்கள் ஏலாதாம், வலி வரின் அல்வழி - வல்லினம் வந்தால் அல்வழிப் புணர்ச்சிக்கண்ணே, இயல்பும் ஆவன வுள - மேற்சொன்ன உறழ்வு உறழாது இயல்பாய் முடிவனவும் உள என்றவாறு.

> உ-ம்: ஆடல், பாடல், ஓதல், ஈதல், முன்னல், பின்னல், உள்ளல், துள்ளல், செய்யுள், விளையுள், கோள் கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் கடுமை, சிறுமை எனவும் இருவழியும் உகரம் ஏலாது இயல்பாய் முடிந்தன. (27)

**230.** **வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்**
**பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்.**

சூ-ம், வல்லென்னும் லகரவீற்றுப் பெயர்ப் புணர்ச்சி கூறியது.

(இ-ள்) வல்லே - வல் என்னும் லகர ஒற்றீற்றுச் சொல மூவினம் வரினும், தொழிற்பெயரற்று - முதனிலை தனிநிலை தொழிற்பெயரே போல உகரம் பெற்றும், இருவழியும் - அல்வழி வேற்றுமை இரண்டிடத்துமாம், பலகை நாய் வரினும் - பலகையும் நாயும் வருமொழியாக வரில், வேற்றுமைக்கு - வேற்றுமைப் புணர்ச்சிக்கண், அவ்வுமாம் - உகரமேயன்றி அகரமும் பெறும் என்றவாறு.

> உ-ம்: வல்லுக் கடிது, ஞான்றது, வலிது எனவும் கடுமை, ஞாற்சி, வலிமை எனவும் இருவழியும் மூவினம் வர உகரம் பெற்றது. வல்லப் பலகை, வல்லநாய் என வேற்றுமைக்கண் அகரம் பெற்றது. (28)

**231.** **நெல்லுள் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்**
**அல்வழி யானும் றகர மாகும்.**

சூ-ம், நெல் செல் கொல் சொல் என்னும் இந்நான்கு சொல்லும் புணருமாறு கூறியது.

(இ-ள்) நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும் - நெல் செல் கொல் சொல் என்னும் இந்நான்கு சொல்லும், அல்வழியானும் - அல்வழிப்பொருட் புணர்ச்சிக்கண், றக்ர மாகும் - அவ்வீற்று லகரம் றகரமாகத் திரிந்து வரும் என்றவாறு.

உ-ம்: நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது.(29)

**232. இல்லெ னின்மைச் சொற்கை யடைய**
**வன்மை விகற்மு மாகா ரத்தொடு**
**வன்மை யாதலு மியல்பு மாகும்.**

சூ-ம், இன்மைப் பொருளை உணர்த்தும் இல்லென்னும் சொற் புணர்ச்சி கூறியது.

(இ-ள்) இல்லெனின்மைச் சொற்கு - இல்லென்னும் ஒரு பொருள் இன்மையைக் கருதி வரும் சொல், ஐயடைய - தன் ஈற்றினின்ற லகர ஒற்றின் மேல் ஐகாரம் வந்து பொருந்த, வன்மை விகற்பமும் - வல்லி னம் வந்தால் ஒரு கால் மிக்கும் மிகாதும் வரும், ஆகாரத்தொடு - ஐகாரமின்றி ஆகாரம் இறுதி வர அதனோடு, வன்மையாதலும் - வல்லொற்று வந்து மிகுதலும், இயல்புமாகும் - இவ்விரண்டும் ஏலாது இயல்பாய் முடியவும் பெறும் என்றவாறு.

உ-ம்: இல்லை பொருள், இல்லைப் பொருள் எனவும் இல் லாப் பொருள் எனவும் இல் பொருள் எனவும் வரும். (30)

**233. புள்ளும் வள்ளுந் தொழிற்பெயர் மானும்.**

சூ-ம், புள் வள் என்னும் இவ்விரு சொல்லின் ஈற்றினின்ற ளகரப் புணர்ச்சி கூறியது.

(இ-ள்) புள்ளும் வள்ளும் - புள் வள் என்னும் இவ்விரு சொற்களும், தொழிற்பெயர் மானும் - தொழிற்பெயரே போல உகரம் பெறும் என்ற வாறு.

உ-ம்: புள்ளி, வள்ளுக் கடிது, ஞான்றது, வலிது, கடுமை, ஞாற்சி, வலிமை என இருவழியும் மூவினமும் வர உகரம் பெற்றன.

உம்மையால் உகரம் பெறாமலும் புணரும், புள் கடிது, புட்கடிது, புட்கடுமை, எனவும் வள் கடிது, வட் கடிது, வட் கடுமை என உகரம் பெறாது பொது விதி பெறுதலும் கொள்க. (31)

## வகரவீறு

**234. சுட்டு வகரமூ வினமுற முறையே**
**ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.**

சூ-ம், சுட்டீற்று வகரம் புணருமாறு கூறியது.

(இ-ள்) சுட்டு வகரம் - சுட்டெழுத்தை முதலாகவுடைய ஈற்று நின்ற வகரவொற்று, மூவினமுற - வருமொழி முதல் வலி மெல் இடை வந்தால், முறையே ஆய்தமும் மென்மையும் இயல்புமாகும் - முறையே வலி வர ஆய்தமும் மெலி வர மெல்லெழுத்தும் இடை வர இயல்புமாம் என்றவாறு.

உ-ம்: அஃகடிய, குறிய, சிறிய, தீய, பெரிய எனவும் அஞ் ஞான்றன, நீண்டன, மாண்டன எனவும் அவ்வலிய, அவ்யானை என முறையே காண்க. (32)

**235. தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே**
**மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.**

சூ-ம், தெவ்வென்றும் வகரவீற்றுச் சொற் புணர்ச்சி கூறியது.

(இ-ள்) தெவ்வென் மொழியே - தெவ்வென்னும் நிலைமொழி ஈற்றினின்ற வகரவொற்று மூவினமும் வரவும் தொழிற்பெய ரற்றே - முதனிலைத் தொழிற்பெயரே போல உகரம் பெற்றுப் புணரும் இருவழியும், மவ்வரின் - வருமொழி முதலாக மகரம் வந்தால், வஃகான் மவ்வுமாகும் - ஈற்று வகரமும் மகரமாம் என்றவாறு.

உ-ம்: தெவ்வுக் கடிது, ஞான்றது, வலிது எனவும் தெவ்வுக் கடுமை, ஞாற்சி, வலிமை எனவும் இருவலியும் மூவினமும் வர உகரம் பெற்றது. தெம்மன்னர், தெம்முனை என ஈற்று வகரம் மகரமாயின. (34)

## வருமொழித் தகர நகரத் திரிபு

**236. லனமுன் றனவும் ணளமுன் டணவும்**
**ஆகுந் தநக்க ளாயுங் காலே.**

சூ-ம், வருமொழி முதல் வந்த தகர நகர விகாரம் கூறியது.

(இ-ள்) ல ன முன் - லகர னகாரங்கள் முன்னர், றனவும் - தகார நகாரங்கள் வந்தால் றவ்வும் னவ்வுமாம், ண ள முன் - ணகார ளகாரங்கள் முன்னர், ட ணவும் - தக ர நக ரங்கள் வந்தால் டவ்வும் ணவ்வுமாம், ஆகுந் தநக்கள் - என்பதனை இரண்டொடும் கூட்டுக, ஆயுங்காலே - ஆராயுமிடத்து என்றவாறு.

உ-ம்: கற்றீது, பொற்றீது, கன்னன்று, பொன்னன்று எனவும் கற்றீமை, பொற்றீமை, கன்னன்மை, பொன்னன்மை எனவும் இரு வழியும் லன உறழ்ந்த த ந க்கள் வரத் த றவ்வும் ந னவ்வுமாயிற்று. மட்டீது, முட்டீது, மண்ணன்று, முண்ணன்று எனவும் மட்டீமை, முட்டீமை, மண்ணன்மை, முண்ணன்மை

எனவும் இருவழியும் த நக்கள் வரத் த டவ்வும் ந ணவ்வும் ஆயிற்று. (34)

237. உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்.

சூ-ம், பதப்புணர்ச்சிக்கு ஓர் கருவி கூறியது.

(இ-ள்) உருபின் முடிபவை - மேல் உருபுப் புணர்ச்சிக்கண் முடிந்த முடிவெல்லாம், ஒக்குமப் பொருளினும் - அவ்வுருபின் பொருளான பதப் புணர்ச்சிக்கண்ணும் ஒக்கும் என்றவாறு.

உ-ம்: தன்னை, தம்மை, நம்மை, தன்பதி, நம்பதி. (35)

238. இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

சூ-ம், எவ்வகை மொழிக்கும் ஆவதோர் விதி கூறியது.

(இ-ள்) இடையுரி வடசொலின் - இடைச் சொல்லினும், உரிச் சொல் லினும் வட சொல்லினும், இயம்பிய கொளாதவும் - மேல் ஓதிய புணர்ச்சி விதி கொள்ளாது மாறுபட்டு வருவனவும், போலியும் மரூஉவும் - இலக்கணப் போலியும் மரூஉ மொழியும் இரு வகை வழக்கின் நடக்கும் முறைமை அறிந்து, பொருந்தியவாற்றிற்கு - அவற்றவற்றிற்குப் பொருந்து முறைமையாக, இயையப் புணர்த்தல் - பொருந்தும் படிக்குப் புணர்ப்பது, யாவர்க்கு நெறியே - கற்றோர் எல்லார்க்கும் கடனாகும் என்றவாறு. (36)

**நான்காவது மெய்யீற்றுப் புணரியல் முற்றும்**

## ஐந்தாவது

# உருபு புணரியல்

### உருபுகள்

239. ஒருவ னொருத்திபல ரொன்று பலவென
வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்
குருபு முறழ்தர நாற்பதா முருபே.

சூ-ம், வேற்றுமை உருபு பொருந்துமிடமும் அவற்றது தொகையும் கூறியது.

(இ-ள்) ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென - ஒருவனென்றும் ஒருத்தியென்றும் பலரென்றும் ஒன்றென்றும் பலவென்றும், வரு பெயர் ஐந்தொடு - வருகிற இவ்வைந்து பெயருடனும், பெயர்முதல் இரு நான்கு உருபும் உறழ்தர பெயர் வேற்றுமை முதலாக விளி வேற்றுமை ஈறாக நின்ற எட்டு வேற்றுமை உருபினையும் உறழ, நாற்பதாம் உருபே - வேற்றுமை உருபுகள் நாற்பதாம் என்றவாறு.

உ-ம்: நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பியே என உயர்திணை ஆணொருமையோடு எட்டுருபும் வந்தன. ஒழிந்த நாற்பெயரோடு ஒட்டுக. (1)

### உருபுகள் வரும் இடம்

240. பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே.

சூ-ம், வேற்றுமையுருபு வருமிடம் கூறியது.

(இ-ள்) பெயர்வழித் - எவ்வகைப் பெயர்க்கும் பின்னாக, தம் பொருள் தர - தம் பொருளைத் தோற்றுவித்தற்கு, வரும் உருபே - வேற்றுமை உருபுகள் வரும் என்றவாறு.

உ-ம்: நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பியே என வரும். (2)

## உருபுகள் புணரும் முறைமை

**241. ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்**
**ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே**

சூ-ம், உருபுகள் பதத்தோடு புணரும் முறைமை மாட்டெறிந்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் - மெய் முதலாயும் மெய் ஈறாயும் உயிர் முதலாயும் உயிர் ஈறாயும் மெய் முதலாயும் உயிர் ஈறாயும் உயிர் முதலாயும் மெய் ஈறாயும் வரும் உருபுகள்.

உ-ம்: கண், அது, கடை, ஆல்.

புணர்ச்சியின் - நிலைமொழியாயும் வருமொழியாயும் பதத்தோடு புணருமிடத்து, ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே - முற் கூறிய அப்பெயர்ப் பதங்கள் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் தம்முடன் புணரும் புணர்ச்சி விதியோடு ஒக்கும் பெரும்பாலும் என்ற வாறு. (3)

## சாரியைகள் வரும் இடமும் இயல்பும்

**242. பதமுன் விகுதியும் பதமு முருபும்**
**புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை**
**வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.**

சூ-ம், ... ...

(இ-ள்) பதமுன் விகுதியும் - பதத்தின் முன் விகுதி வந்து தொடரு மிடத்தும், பதமும் - பதத்தின் முன்னே பதம் வந்து தொடருமிடத்தும், உருபும் புணர்வழி - பதத்தின் முன்னே உருபு வந்து தொடருமிடத் தும், ஒன்றும் பலவும் சாரியை வருதலும் - அவ்விரண்டிற்கும் இடையே ஒரு சாரியை இரண்டு சாரியை வருதலும், தவிர்தலும் - இடையே சாரியை வராமல் இயல்பாய் முடிதலும், விகற்பமும் ஆகும் - ஒரு புணர்ச்சிக்கே ஓரிடத்து வந்தும் ஓரிடத்து வராமலும் வழங்குவனவாம் என்றவாறு.

உ-ம்: ஊரது, உண்டது என அகரச் சாரியை விகுதிப் புணர்ச் சிக்கண் வந்தது. வெற்பன், பொருப்பன், வீரன், ஊரன் எனச் சாரியை வேண்டாவாயின. உண்டனன், உண்டான், மொழிகு வன், மொழிவன என ஒன்றற்கே ஓரிடத்து வேண்டியும் ஓரிடத்து வேண்டாமலும் வந்தன.

பதப்புணர்ச்சிக்கண் புளியங்காய் எனச் சாரியை வேண்டி வந்தது; அத்திக்காய் என வேண்டாது வந்தது. உருபு புணர்ச்சிக்கண் மலையுச்சி, மலையியினுச்சி என வேண்டியும் வேண்டாமலும் வந்தது. மரத்தை மரத்தால் என வேண்டியும் வந்தன. மரக்கு, மரக்கரை என வேண்டாமலும் வரும். வேயை, வேயால் என வேண்டாது வந்தன. விளவை, விளவினை, குழியை, குழியினை என ஒன்றற்கே வேண்டியும் வேண்டாமலும் வந்தன. (4)

### சாரியைகள் இவையென்பது

243. அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்
தம் நம் நும் ஏ அ உ ஐகுன்
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே.

சூ-ம், மேற் சாரியை என்றார்; அவை இவையெனக் கூறியது.

(இ-ள்) அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம் - அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம்நம் நும்மே - தம், நம், நும், ஏ, அஉ ஐகுன் - அ, உ, ஐ, கு, ன், இன்ன பிறவும் - இப்பதினேழு சாரியையும் இவை போல்வன பிறவும், பொதுச்சா ரியையே - விகுதி பதம் உருபு முதலான சாரியையாம் என்றவாறு.

உ-ம்: ஒன்றன் கூட்டம், ஒரு பாற்கு, வண்டின் கால், "பூநறுந் தொடையல் சூடிய," பலவற்றை, பதிற்றுப்பத்து, மரத்திலை, புளியங்காய், எல்லார்தம்மையும், எல்லார்நம்மையும், எல்லீர் நும்மையும், கலனே தூணி, குன்றக்கூகை, சாத்தனுக்கு, பண்டைச்சாத்தன், மொழிகுவான், ஆன்கன்று என முறையே காண்க.

"பிற" என்றதில் ஞான்று, கேளு, ஒன் முதலாயின கொள்க.
(5)

### எல்லாமென்னும் பொதுப்பெயர் சாரியை பெறுமாறு

244. எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றே னம்மிடை யடைந்தற் றாகும்.

சூ-ம், ஒரு சார் சாரியை வந்து பொருந்துமாறு கூறியது.

(இ-ள்) எல்லா மென்ப திழிதிணை யாயின் - எல்லாம் என்னும் மகர வீற்று விரவுப் பெயர் அஃறிணைப் பெயரான காலத்து, அற்றோடு உருபின் மேல் உம்முறுமே - அற்றுச் சாரியையும் உருபின் மேல் உம் என்னும் சாரியையும் பெறும், அன்றேல் - அஃறிணையன்றி எல்லாம்

என்னும் விரவுப் பெயர் உயர்திணையான காலத்து, நம்மிடை யடைந்து அற்றாகும் - இடையே நம்முச் சாரியை அடைந்து முன் போல உருபின் மேல் உம்முன் பெறும்.

உ-ம்: எல்லாவற்றையும், எல்லாவற்றொடும்; எல்லாவற்றிற் றலையும், எல்லாவற்றிற் செவியும் என அஃறிணைக்கண் உருபின் மேலும் பொருளினும் அற்று உம்முப் பெற்றது. எல்லா நம்மையும், எல்லாநம்மொடும், எல்லாநங்கையும், எல்லா நஞ் செவியும் என உயர்திணைக்கண் உருபினும் பொருளினும் நம்மும் உம்மும் பெற்றது. இவற்றிற்கு எல்லாரையும் எல்லாம் என்பது பொருளாக ஒட்டுக. (6)

245. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே.

சூ-ம், மகரவீற்று உயர்திணைப் பெயருக்கும் விரவுத்திணைப் பெயருக்கும் சாரியை புணருமாறு கூறியது.

(இ-ள்) எல்லாரும் எல்லீரும் - எல்லாருமென்னும் மகரவீற்று உயர் திணைப் படர்க்கைப் பெயரும் எல்லீருமென்னும் மகரவீற்று விரவுத் திணை முன்னிலைப் பன்மைப் பெயரும், என்பவற் றும்மை தள்ளி - இவ்விரு வகைச் சொல்லினும் ஈற்றினின்ற உம்மைக் கெடுத்து, நிரலே தம் நும் சாரப் - முறையே தம் சாரியை நும் சாரியை இடையே சார, புல்லும் உருபின் பின்னர் உம்மே - பின்னர் உருபு சேர்ந்து அதன் பின் உம் புணரும் என்றவாறு.

உ-ம்: எல்லார்தம்மையும், எல்லீர்நும்மையும், எல்லார் தங்கையும், எல்லீர்நுங்கையும் என உருபினும் பொருளினும் சாரியையும் உம்மும் வந்தவாறு காண்க. இவ்வாறன்றி எல்லாரையும் எல்லீரையும், எல்லார்கையும் எல்லீர்கையும் எனச் சாரியை இடையில் இல்லாமலும் வருமெனக் கொள்க.

"சார"வென்ற இலேசானே கரியார்தம்மையும், சான்றார் தம்மையும், கரியீர்நும்மையும், சான்றீர்நும்மையும் என மற்றப் படர்க்கையினும் முன்னிலையினும் ஒட்டுக. (7)

246. தான் தாம் நாம் முதல் குறுகும் யான்யாம்
நீ நீர் என் எம் நின்நு மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல.

சூ-ம், தான், தாம், நாம், யான், யாம், நீ, நீர் என்னும் இவ்வேழு பெயரும் இன்னவாறு முடிக்கவென்பது கூறியது.

(இ-ள்) தான் தாம் நாம் முதல் குறுகும் - தான், தாம், நாம் என்னும் இம் மூன்று சொல்லின் முதனின்ற நெட்டெழுத்துக் குறுகும், யான் யாம் நீ நீர - யானென்றும் யாமென்றும் நீயென்னும் நீரென்றும் வரும் இந்நான்கு சொல்லும், என் எம் நின் நும் ஆம் - முறையே யான் என் னென்றும் யாம் எம்மென்றும் நீ நின்னென்றும் நீர் நும்மென்றும் கூறப் படும், பிற - பிறவுமாம்; அவை நீ உன்னென்றும் நீர் உம்மென்றும் வரும், குவ்வின் அவ்வரும் - அங்ஙனம் திரிந்து நின்றவிடத்து நான் காம் வேற்றுமைக் குவ்வுருபு புணருமிடத்து இடையே அகரச் சாரியை பெறும், நான்கு ஆறு இரட்டல - நான்காமுருபும் ஆறாமுரு பும் புணருமிடத்து இடையே குற்றொற்று இரட்டாவாம்.

உ-ம்: தன்னை, தன்னொடு, தனக்கு, தன்னின், தனது, தன்கண், தம், நம், என், எம், நின், நும், உன், உம் சொற்களோடு உருபு பெற்றுத் திரிந்தது காண்க. தனக்கு, எனக்கு எனக் குவின் அகரச் சாரியை வந்தவாறு காண்க. தனக்கு, தனது என நான்க னுருபும் ஆறனுருபும் வரத் தனிக் குறில் முன் ஒற்று இரட்டாத வாறு காண்க. (8)

247. ஆமா கோனவ் வணையவும் பெறுமே.

சூ-ம், ஆ, மா, கோ என்னும் இம் மூன்று சொல்லிற்கும் ஒருசார் சாரியை பெறுமாறு கூறியது.

(இ-ள்) ஆ மா கோ - ஆ, மா, கோவென்னும் இம்மூன்று பெயரும், னவ்வணையவும் பெறுமே - னகரச் சாரியை பெறவும் கூடும் என்றவாறு.

உ-ம்: ஆன், மான், கோன் என வரும்.

உம்மையால் ஆவை, மாவை, கோவை எனவும் ஆவினை, மாவினை, கோவினை எனவும் வரும். ஊ, ஊன் என்று வருவனவும் உள. (9)

248. ஒன்று முதலெட் டளவா மெண்ணூர்
பத்தின் முன் ஆன்வரிற் பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடு மொன்பது மிற்றே.

சூ-ம், ஒன்று முதல் எட்டீறாம் எண்களோடு பத்தென்னும் எண்ணுப் பெயர் வந்து புணர்ந்து ஒன்றாய் நின்ற சொற்கள் சாரியை பெற்றுத் திரியுமாறு கூறியது.

(இ-ள்) ஒன்று முதல் எட்டளவாம் எண்ணூர் - ஒன்று முதலாக எட்டு ஈறாக நின்ற எண்களின் மேலே ஊர்ந்து வரும், பத்தின் முன் ஆன்வரில்

- பத்தென்னும் எண் முன்னர் ஆனென்னும் சாரியை வந்தால், பவ்வொற்றொழிய மேலெல்லாம் ஓடும் - பத்தென்னும் மொழியிற் பகர ஒற்றொழிய மேல் நின்ற எல்லாம் கெடும், ஒன்பதும் இற்றே - ஒன்பது என்பதன் முன் ஆன் வரினும் பவ்வொற்று ஒழிய எல்லாம் கெடும் என்றவாறு.

உ-ம்: ஒருபானை, இருபானை எனவும் ஒழிந்த எண்ணோடும் ஒட்டுக. ஒன்பானை, ஒன்பானொடு எனவும் வரும். (10)

**249. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.**

சூ-ம், சுட்டு முதல் வகரவீற்றிற்குச் சாரியை முடிவு கூறியது.

(இ-ள்) வவ்விறு சுட்டிற்கு - அவ், இவ், உவ் என்னும் சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகர ஈற்றிற் சொற்கு, அற்றுறல் வழியே - அற்றுச் சாரியை பெறுதல் முறைமையாம் என்றவாறு. (11)

**250. சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே.**

(இ-ள்) சுட்டின்முன் ஆய்தம் - மூவகைச் சுட்டின் முன் ஆய்தம், அன் வரிற் கெடுமே - அன் சாரியை வரிற் கெடுமாம் என்றவாறு.

உ-ம்: அதனை, இதனை, உதனை என வரும். (12)

**251. அத்தி னகர மகரமுனை யில்லை.**

சூ-ம், அத்துச் சாரியை விகாரப்படுமாறு கூறியது.

(இ-ள்) அத்தின் அகரம் - அத்துச் சாரியையின் முதனின்ற அகரம், அகர முனை இல்லை - இயல்பானும் விதியானும் நின்ற அகர ஈற்று முன் இல்லையாம் என்றவாறு.

உ-ம்: மகத்துக்கை, மரத்துக்குறை என இரண்டு அகரத்தின் கண்ணும் கெட்டது. (13)

### புறநடை

**252. இதற்கிது சாரியை யெனினள வின்மையின்**
**விகுதியும் பதமு முருபும் பகுத்திடை**
**நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும்**
**ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே.**

சூ-ம், சாரியைக்கு ஆவதோர் புறநடை கூறியது.

(இ-ள்) இதற்கிது சாரியை எனின் - இச்சொற்கு இச் சாரியையாம் என்று சொற்றோறும் சாரியை சொல்லலுறின், அளவு இன்மையின் -

சொற்கள் அளவிலவாதலின் சாரியையும் அளவின்றிப் பெருகுமத னால், விகுதியும் - நிலைமொழியான பதத்தையும் அதன் வழிவரும் விகுதியையும், பதமும் - பதத்தின் முன்னே வரும் பதமும், உருபும் பகுத்து - பதத்தின் முன்னே வரும் உருபையும் பிரித்து, இடை நின்ற எழுத்தும் பதமும் - இடையே நின்ற எழுத்துச் சாரியையே மொழிச் சாரியையே, இயற்கையும் ஒன்ற உணர்த்தல் - இயல் பேயென்று இன்னதென்று பொருந்தும்படி அறிந்து உணர்த்தல், உரவோர் நெறியே - புலவரது நெறி என்றவாறு. (14)

253. விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்
உரைத்த விதியினோர்ந் தொப்பன கொளலே.

சூ-ம், எனைவகைப் புணர்ச்சிக்கும் ஏற்பதோர் கருவி கூறியது.

(இ-ள்) விகுதி பதம் சாரியை - விகுதியின்கண்ணும் பதத்தின் கண்ணும் சாரியையின் கண்ணும், உருபு அனைத்தினும் - உருபின் கண்ணும் இவ் வெல்லாவற்றின் கண்ணும், உரைத்த விதியினோர்ந்து - ஓரிடத்திற் சொன்ன விதியை ஓர்ந்து, ஒப்பன கொளலே - எவற்றிற்கும் பொருத்த முடையன விசாரித்து அறிந்து புணர்க்க ஒப்பன கொளலே. (15)

## இரண்டாம் வேற்றுமைத் திரிபு

254. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவு மாகுமை யுருபே.

சூ-ம், இரண்டாம் வேற்றுமைத் திரிபு தொகுத்துக் கூறியது.

(இ-ள்) இயல்பின் விகாரமும் - இயல்பாகப் புணருமிடத்து விகார மாகப் புணர்தலும், விகாரத் தியல்பும் - விகாரமாகிப் புணருமிடத்து இயல்பாகிப் புணர்தலும், உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும் - உயர்திணைப் பெயரிடத்து ஐயுருபு விரிந்தும் மறைந்தும் நிற்றலும், விரவுப்பெயரின் விரிந்து நின்றும் - விரவுத்திணைப் பெயரில் ஐயுருபு விரிந்தும் மறைந்தும் நிற்றலும், அன்ன பிறவும் ஆகும் ஐயுருபே - இதுபோல் பிறவும் இரண்டாம் வேற்றுமை உருபினும் பொருளினு மாம் என்றவாறு.

உ-ம்: "வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப" (தொல். பொருள். 415) எனப் பொதுப் பெயர்க்கண் இயல்பாகப் புணரும் புணர்ச்சி திரிபு விகாரப் புணர்ச்சி ஆயிற்று. தாய் கொலை

செய்தான் என இயல்பாய் வருமிடத்துத் தாய்க் கொலை செய்தான் எனத் தோன்றல் விகாரம் ஆயிற்று. மண் கொணர்ந்தான், பொன் கொணர்ந்தான் என்பது விகாரத்தியல்பு. நம்பியைக் கொணர்ந்தான், நங்கையைக் கொணர்ந்தான் என உயர்திணை யிடத்து விரிந்து நின்றது. மகற்பெற்றான், மகட் பெற்றான் என்பது இரண்டனுருபு தொக்கு வந்தது. ஆடூஉ அறிசொல் என்பதுமது. கொற்றனைக் கொணர்ந்தான் கொற்றியைக் கொணர்ந்தான் என்பது விரவுப்பெயர் ஈற்றின் ஐயுருபு கொள்ளுக. மகப் பெற்றான் என விரவுப் பெயர்க்கண்ணும் கெடுதல் கொள்க.

“பிறவு”மென்ற இலேசானே விளங் குறைத்தான் என்பதனை விளக்குறைத்தான் எனவும் மரக்குறைத்தான் என வல்லெழுத்து மிகுமிடத்து மரங் குறைத்தான் என மெல்லெழுத்தோடு தோன்றலும் பலாக் குறைத்தான், கடுக் குறைத்தான், சேக் கட்டினான் என உயிர் வருமிடத்து உயிர் கெட்டு வருதலும் கொள்க. (16)

## மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குரிய முடிபு

**255. புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்**
**தம்மி னாகிய தொழின்மொழி வரினே**
**வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்.**

சூ-ம், மேல் உயிரீற்றுக்கும் புள்ளியிற்றுக்கும் வேற்றுமைக் கண் கூறும் முடிபு பெறாது நிற்கும் மூன்றாம் வேற்றுமை முடிவு கூறியது.

(இ-ள்) புள்ளியும் உயிரும் ஆயிரு சொன்முன் - நிலைமொழி ஒற்றும் உயிரும் ஈறாகிய சொல், தம்மினாகிய தொழின்மொழி - மூன்றாவதற் குரிய வினைமுதற் பொருளாகிய தொழிற்சொல், வரின் - வருமொழி யாக வந்தால், வல்லினம் விகற்பமும் - வந்த வல்லெழுத்து உறழ்ச்சி விதி பெறுதலும், இயல்புமாகும் - இயல்பாய் முடிதலுமாம் என்றவாறு.

உ-ம்: நாய், புலி என நிறுத்தி கோட்பட்டான், பாய்ப்பட்டான் என வருவித்து இயல்பாயினவாறு காண்க. பேய் கோட்பட்டான், பேய்க் கோட்பட்டான், வளிகோட்பட்டான், வளிக்கோட்பட்டான் என இவை உறழ்ந்தன. நாய் கவ்வப்பட்டான், புலி கவ்வப் பட்டான் எனவுமாம். (17)

## புறநடை

**256. இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்**
**விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்**
**வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.**

சூ-ம், இவ்வதிகாரத்துட் சொன்ன பொருட்கெல்லாம் ஏற்பதோர் புற நடை கூறியது.

(இ-ள்) இதற்கு இது முடிபென்று - இச்சொற்கு இதுவே விதியாக முடிப்பவென்று, எஞ்சாது யாவும் விதிப்ப - குறைவில்லாமல் எல்லாச் சொற்களுக்கும் விதித்தலைச் செய்ய, அளவின்மையின் - சொற்கள் அளவு படாது ஆகையினாலே, விதித்தவற்றியலான் - இவ்வதிகாரத் துட் சொல்லிய அதிகாரங் கொண்டு, வகுத்துரையாதவும் - எடுத்து விதியாத சொற்களும், வகுத்தனர் கொளலே - வகுத்தனர்; கொள்க என்றவாறு.

**ஐந்தாவது உருபு புணரியல் முற்றிற்று**

அடையெண் பெயர்முறை தோற்றம் வடிவள வாதியந்தம்
இடைநிலை போலியென் றீரைந் தெழுத்து மிருபதமும்
படுபுணர் மூன்றி னியல்பும் விகாரமுஞ் சாரியையும்
உடனுணர் வாரை யெழுத்தறி வாரென்ப ருத்தமரே

**எழுத்ததிகாரம் முற்றும்**

# சொல்லதிகாரம்

### முதலாவது

## பெயரியல்

### சிறப்புப் பாயிரம்

257. முச்சக நிழற்று முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே.

சூ-ம், ஒருசார் வேண்டும் சிறப்புப் பாயிரம் கூறியது.

(இ-ள்) முச்சக நிழற்றும் - பூமி அந்தர சுவர்க்கமென்னும் இம் மூன்று உலகத்து உயிர்கட்கெல்லாம் நிழலைச் செய்யும், முழுமதி முக்குடை - நிறைந்த மதியைப் போன்ற மூன்று குடையையுடைய, அச்சுதன் அடி தொழுது - கேடில்லானது திருவடிகளை வணங்கி, அறைகுவன் சொல்லே - சொல்லிலக்கணத்தைச் சொல்வேன் யான் என்றது. (1)

### சொல்லின் இயல்பு

258. ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்றா
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே

சூ-ம், சொல்லின் கூறுபாடும் அதன் இயல்பும் கூறுகின்றது.

(இ-ள்) ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா - ஒரு மொழியும் தொடர் மொழியும் பொது மொழியும் என்னும் இக்கூறுபட்ட தாய், இருதிணை ஐம்பாற் பொருளையும் - உயர்திணை அஃறிணை

என்னும் இவ்விரு திணையும் அவற்றின் கூறுபாடாய் வரும் ஐம்பாற் பொருளையும், தன்னையும் - பொருளை உணர்த்துவதன்றித் தன்னை உணர்த்துவதான சொல் தன்னையும், மூவகை இடத்தும் - தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடத்தும், வழக்கொடு செய்யு ளின் - வழக்கின் கண்ணும் செய்யுட்கண்ணும், வெளிப்படை குறிப்பின் - வெளிப்படையினாலும் குறிப்பினாலும், விரிப்பது சொல்லே - விளக் குவது சொல்லாம் என்றவாறு. (2)

## மூவகை மொழி

259. ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி
பலபொரு ளனபொது விருமையு மேற்பன.

சூ-ம், மேற்சூத்திரத்தில் நிறுத்திய முறையே சொற்கூறு ஆமாறு கூறியது.

(இ-ள்) ஒரு மொழி ஒரு பொருளனவாம் - ஒரு மொழிகளாவன பகுப் பிலவாய் நின்று ஒரு பொருளை உணர்த்துவனவாம்; தொடர் மொழி பல பொருளன - தொடர் மொழிகளாவன பகுக்கப்பட்டு, தொகை நிலை தொகாநிலை வகையானும் தொடர்ந்து நின்று பல பொருளை உணர்த்துவனவாம்; பொது இருமையும் ஏற்பன - பொது மொழிகளா வன ஒரு காற் பகுப்பிலவாய் நின்று ஒரு பொருளை உணர்த்தியும் அதுவே தொடர் மொழியுமாய்ப் பல பொருளை உணர்த்தியும் இவ் வாறு இருமைக்கும் பொதுவாய் நிற்பனவாம் என்றவாறு. (3)

## இரு திணை

260. மக்க டேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை.

சூ-ம், மேல் இரு திணை என்றார்; அவை இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) மக்கள் தேவர் நரகர் - மக்களும் தேவரும் நரகரும், உயர் திணை - உயர்ந்த குலமாகிய உயர்திணை, மற்றுயிர் உள்ளவும் - அவரை ஒழிந்து நின்ற ஊர்வன, தவழ்வன, தத்துவன, நடப்பன, நிற் பன, பறப்பனவான விலங்கு முதலாம் உயிருள்ளனவும், இல்லவும் - நில நீர் தீ வளி முதலான உயிரில்லனவும் உடல் உயிர் கூடிய ஒழிந்த எல்லாப் பொருளும், அஃறிணைப் - உயர் திணை இன்மையவான இழிதிணையான அஃறிணையாம். ஆண்பாலும் பெண்பாலும் தழுவு தற்கு வேண்டிய மக்கள் தேவர் நரகர் எனக் கதிமேல் வைத்து

ஓதினாரென்க. உயர்திணை வினைத்தொகை உயர்திணை அல்லாத திணை அஃறிணை. இது பண்புத்தொகை. இழி திணை எனினும் அமையும். (4)

**பால்**

**261. ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை**

சூ-ம், மேல் ஐம்பால் என்று பேர்தந்தார்; அவற்றுள் உயர்திணை இத் துணைப் பாலுடைத்து என்பது கூறுகின்றது.

(இ-ள்) ஆண் பெண் பலரென - ஆண்பால், பெண்பால், பலர்பால் என் னும், முப்பாற் றுயர்திணை - இம்மூன்று திணையையும் உடையது உயர்திணையாம் என்றவாறு.

உ-ம்: அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார் என வரும்.

இவ்வாறன்றி உயர்திணையில் ஆணொருமைப்பாலும், பெண்ணொரு மைப் பாலும், ஆண் பன்மைப்பாலும், பெண் பன்மைப்பாலும், அவ் விருவரது பன்மைப்பாலும் எனப் பால் ஐந்தாக வேண்டுமெனின் அம் மூவர் பன்மையும் வந்தார், சென்றார் என்னும் ஓரீற்று வாய்பாட்டு வினைகொண்டு அடங்கும் என்ப. நம்பி, ஆடூஉ, விடலை எனவும் தோழி, செவிலி, மங்கை எனவும் ஆடவர், மைந்தர், குமரர் எனவும் பேதையர், மங்கையர் எனவும் மக்கள், மாந்தர், மகார், சிறார் எனவும் நிறுத்தி வந்தான், வந்தாள், வந்தார் என வருவித்து முப்பாலாய் அடங்கினவாறு காண்க. ஆண் பெண் என்பன அஃறிணைக்கண் வந்ததெனினும் வழக்கினுள் வேறு வாய்பாடு இன்மையின் ஆண்பால் பெண்பால் என்னும் வழக்கு உயர்திணைக்கேயாம் என்க. (5)

**262. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.**

(சூ-ம்), ஐம்பாலுள் அஃறிணை இத்துணைப் பாலுடைத்து என்பது கூறுகின்றது.

(இ-ள்) ஒன்றே பலவென்று - ஒருமைப் பாலும் பன்மைப் பாலும் என் னும், இரு பாற்று அஃறிணை - இவ்விரு பகுதியை உடையது அஃ றிணை என்றவாறு.

உ-ம்: அது வந்தது, அவை வருகின்றன என வரும். (6)

**263. பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்**
**ஆண்மைவிட் டல்ல தவாவுவ் பெண்பால்**
**இருமையு மஃறிணை யன்னவு மாகும்.**

சூ-ம், அலியது தன்மை உயர்திணை ஆணிலும் பெண்ணிலும் அடங்குமெனக் கூறியது.

(இ-ள்) பெண்மை விட்டு - பெண்மையினை நீங்கி, ஆண் அவாவுவ பேடு - ஆண் தன்மையினை அவாவுவனவாகிய பேடுகள், ஆண்பால் - உயர்திணை ஆண்பாலனையவாம்; ஆண்மை விட்டு - ஆண் தன்மையினை நீங்கி, அல்லது அவாவு - பெண் தன்மையினை அவாவுவனவாகிய பேடுகள், பெண்பால் - உயர்திணைப் பெண்பாலனையவாம்; இருமையும் - இவ்விருவரது தன்மையும் மக்கட் கதியின எனினும் அத்தன்மை நிரம்பாமையின், அஃறிணை அன்னவும் ஆகும் - அஃறிணை போலவுமாம், முடிவின் வாய்பாட்டின் கண் என்றவாறு.

> உ-ம்: பேடன் வந்தான், பேடி வந்தாள், பேடர் வந்தார், பேடியர் வந்தார், பேடு வந்தது, பேடுகள் வந்தன என வரும்.

"அழிதூஉ வகையு மவற்றின் பால்" என்றார் அவினயனார். அலி மகண்மா. (7)

> **264.** படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பிற்
> பெறப்படந் திணைபா லனைத்து மேனை
> இடத்தவற் றொருமை பன்மைப் பாலே.

சூ-ம், திணையும் பாலும் தெரிதற்கு ஓர் விதி கூறியது.

(இ-ள்) படர்க்கை. வினைமுற்று - படர்க்கை முற்றுவினையானும், நாமங் குறிப்பிற் - படர்க்கைப் பெயராலும் சொல்லுவான் குறிப்பானும், பெறப்படும் திணைபால் அனைத்தும் - இரு திணையும் ஐம்பாலும் அறியப்படும்; ஏனையிடத்து - ஒழிந்த தன்மை வினைமுற்றிடத்தும் தன்மைப் பெயரிடத்தும் முன்னிலை வினைமுற்றிடத்தும் முன்னிலைப் பெயரிடத்தும், அவற்று - அவ்விரண்டு இடத்தானும், ஒருமை பன்மைப் பாலே - ஒருமைப் பாலும் பன்மைப் பாலும் அறியப் படுவனவாம் என்றவாறு.

> உ-ம்: உண்டான், உண்டாள், உண்டார், உண்டது, உண்டன எனப் படர்க்கை முற்று வினையாற் றிணை பால் விளங்கின. அவன், அவள், அவர், அது, அவை எனப் படர்க்கைப் பெயராற் றிணையும் பாலும் விளங்கின. இனி, நீ வருதலான் அறிவு பெற்றேன், நீ வருதலான் ஆகரம் பெற்றேன் என இவை குறிப்பால் உயர்திணை ஆண்பாலாயிற்று. நீர் உதவலான் முல்லை அரும்பின, நீர் தொக்கு நிற்றலான் உடம்பாயிற்று எனக் குறிப்பான் மழையும் ஐம்பூதமுமென அஃறிணை ஒருமைப் பன்மை விளங்கின. ஒருவரால் அரிய தவம் பெற்றேன் என்பது ஆண்பால் என்பதும் ஒருவரால் அரிய மடல் பெற்றேன்

என்றால் பெண்பால் என்பதும் குறிப்பான் விளங்கின. சாந்த ரைக்கும் மாந்தர், பூத்தொடுக்கும் மாந்தர் என ஆண்பால் பெண் பால் விளங்காவாயின. சொல்லுவான் குறிப்பால் இரு திணை யும் பாலும் விளங்கின காண்க. நான், நாம், வந்தேன், வந்தேம் எனத் தன்மைப் பெயரினும் தன்மை வினையினும் ஒருமை பன்மை மாத்திரையே விளங்கின. நீ, நீர், வந்தனை, வந்தீர் என முன்னிலைப் பெயரினும் முன்னிலை வினையினும் ஒருமை பன்மை மாத்திரையே விளங்கின. (8)

## மூவிடம்

265. தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே.

சூ-ம், முன்னர் மூவிடம் என்றார், அவை இவையெனக் கூறியது.

(இ-ள்) தன்மை முன்னிலை படர்க்கை - தன்மை இடமென்றும் முன் னிலை இடமென்றும் படர்க்கை இடமென்றும், மூவிடனே - இவை மூவிடமாம் என்றவாறு.

உ-ம்: யான், யாம், நான் நாம் எனவும் நீ, நீர், நீயிர், நீவிர், எல்லீர், நின், உன், உம் எனவும் அவன், அவள், அவர், அது, அவை என மூவிடப் பெயர் வந்தன. உண்டேன், உண்டேம், உண்டாய், உண்டீர், உண்டனன், உண்டனள், உண்டனர், உண்டது, உண் டன என மூவிடத்தும்... வந்தவாறு காண்க. (9)

## வழக்கு

266. இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கன் மங்கலங் குழூ உக்குறி
எனுமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்.

சூ-ம், மேல் வழக்கின்கண்ணும் என்றார், அஃது இஃதெனக் கூறி யது.

(இ-ள்) இலக்கணம் உடையது - இலக்கண நெறியால் வரும் வழக் கும், இலக்கணப் போலி - இலக்கணமுடையது போல வடிவப்பட்டுச் சான்றோரரால் வரும் வழக்கும், மரூஉ - இலக்கணத்திற் சிதைந்து வழங்கிவரும் வழக்கும், என்றாகும் மூவகை இயல்பும் - எனக் கூறிய இம்மூன்று வகையான் வரும் இயல்பு வழக்கும், இடக் கரடக்கல் மங்கலம் - மறைத்த வார்த்தை அடக்கிச் சொல்லும் வழக்கும் மங்கல மரபினாற் கூறிய வழக்கும், குழூஉக்குறி - ஒவ் வொரு குழுவினுள்ளாகத் தம் குறியாகப் பெயரிட்டு வழங்கும் வழக்

கும், எனுமுத்தகுதியோடு - என இம் மூவகைத் தகுதி வழக்கினொடுங் கூட, ஆறாம் வழக்கியல் - வழக்கு நெறி ஆறு வகைப்படும் என்ற வாறு.

உ-ம்: நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என இலக்கணமுடைய வழக்கு இல்முன் என்பதனை முன்றிலென்றும், புறவிலா என்ப தனை விலாப்புறம் என்றும், கோவில் என்பதனைக் கோயி லென்றும், பொதுவில் என்பதனைப் பொதியிலென்றும், கண்மீ என்பதனை மீகண்ணென்றும், யாவர் என்பதனை யாரென்றும், எவன் என்பதனை என்னென்றும் இப்பெற்றியான் வருவது இலக்கணப் போலி வழக்கு. அருமருந்தன்னான் என்பதனை அருமந்தான் என்றும், நாட்டுவித்தான் என்பதனை நாட்டியத்தா னென்றும், மலையனாடு என்பதனை மலாடு என்றும், சோழ னாடு சோணாடு என்றும், பாண்டிய நாட்டைப் பாண்டி நாடென் றும், கிழங்கன்னபழஞ்சோறு கிழங்கம் பழஞ்சோறு எனவும், மண்கட்டி மண்ணாங்கட்டி, பொற்கட்டி பொன்னாங்கட்டி எனவும் இப்பெற்றியான் வருவன மரூஉமொழி வழக்கு, கண்கழீஇ வருதும், கான்மேல் நீர் பெய்து வருதும், வாய் பூசி வருதும், கை குறியராய் இருந்தார், பொறையுயிர்த்தார் என இவ்வாறு வருவன இடக்கரடக்கல் வழக்கு. செத்தாரைத் துஞ்சினாரென் றும், ஓலையைத் திருமுகமென்றும், காராட்டை வெள்ளாடென் றும், இடுகாட்டை நன்காடென்றும், இல்லதுக்கு அமுதுபடி நிறைந்திருந்ததென்றும், கொடுக்க மெத்தவென்றும் இவ் வாறு வருவன மங்கல வழக்கு, பொற்கொல்லர் பொன்னைப் பறியென்றும், வண்ணக்கார் காரத்தை நீலமென்றும், யானைப் பாகர் ஆடையைக் காரையென்றும், வேடர் கள்ளைச் சொல் விளம்பியென்றும், இழிசினர் சோற்றைச் சொன்றியென்றும், ஈழநாட்டார் வைக்கோலைக் கந்தென்றும் இவைபோலவும் குழூஉக்குறி வழக்கு.

வழக்காவது சில சொல் பிறந்த காலத்து இஃது அறத்தை உணர்த்திற்று; இஃது பொருளை உணர்த்திற்று; இஃது இன்பத்தை உணர்த்திற்று; இஃது வீட்டை உணர்த்திற்று ... (10)

## செய்யுள்

267. பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.

சூ-ம், மேற் செய்யுள் என்றார்; அவை இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) பல்வகைத் தாதுவின் - தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர் என்னும் சத்த தாதுக்களினாலே, உயிர்க்கு

உடல்போல் - உயிருக்கு இடனாக இயற்றப்பட்ட உடம்பு போல, பல சொல்லால் - திரிசொல் முதலாகிய பலவகைச் சொற்களினாலும், பொருட்கிடனாக பொருள் இருத்தற்கு இடனாக, உணர்வின் வல் லோர் - தங்கள் அறிவினாற் கற்று வல்லோர்கள், அணிபெறச் செய் வன - அலங்காரம் தோன்றச் செய்வன, செய்யுள் - செய்யுட்களாவன என்றவாறு.

> அரும்பதவுரை: பல சொல்லாவன பொருளாதி அறு வகைப் பெயர்களுள் வந்த பெயர்த் திரிசொல்லும், பவ்வீறும் மாரீறுமான படர்க்கை வினை முற்றும், அல், அன் என்னும் விரவுத்திணை தன்மையொருமை வினை முற்றும், அம், ஆம், எம் என்னும் விரவுத்திணைத் தன்மைப்பன்மை வினைமுற்றும், கு, டு, து, று, கும், நும், என்னும் ஈற்று வினைமுற்றும் இவ் வாறு வரும் வினைத் திரிசொல்லும், இடைத்திரிசொல்லும், உரித்திரி சொல்லும், திசைச்சொல்லும், வடசொல்லும், எழுத் ததிகாரத்துள் செய்யுட்கென்று விதந்தோதினவும் எனக் கொள்க.

சொல்லும் எழுத்தாற் பெறப்படுதலின் எழுத்துச் சொற் பொருள் அணி என்னும் நான்கினும் நடப்பது யாப்பு என்பதாயிற்று. ஆகவே ஐந்து அதிகாரங்களும் தம்முள் ஒன்றையொன்று இன்றியமையா வெனக்கொள்க.

உ-ம்: கங்க னகன்மார்பன் கற்றோர்க் கினிதளிக்குஞ்
செங்கனகம் வெள்ளைச் செழுமணிகள் - தங்கந்
தெறித்தனவே போல்விளங்கு மீன்சூழ்ந்த திங்கள்
எறிக்குநிலா வன்றோ வினி

என வரும்.

தொகையுரைச் செய்யுளாவது யாப்பிலக்கணத்திற் கூறிய எழுத்து, அசை, முதலிய ஏழும் அறம் முதலிய மூன்று பொருளும் பயப்ப நிகழ்வது. (11)

### வெளிப்படை குறிப்பு

268. ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதறொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

சூ-ம், மேல் வெளிப்படை குறிப்பு என்றார்; அவை இவையெனக் கூறியது.

(இ-ள்) ஒன்றொழி பொதுச்சொல் - இரு திணையில் ஆண்பால் பெண்பால்களுள் ஒன்றனையொழித்து நிற்கும் பொதுச்சொல்லும், விகாரம் - தலைக்குறைத்தல் முதலான ஒன்பது விகாரச் சொற்களும், தகுதி ஆகுபெயர் - மூவகைத் தகுதி வழக்கு மொழிகளும் ஆகு பெயர்ச் சொற்களும், அன்மொழி வினைக்குறிப்பு - அன்மொழித் தொகைச் சொற்களும் வினைக்குறிப்பு மொழிகளும், முதல் - முத னிற்கும் எழுத்து மாத்திரமும் மொழி மாத்திரமும் காட்டி நிற்கும் மொழிகளும், தொகை - பொருட்டொகையிற் றொற்றி நிற்கும் மொழி களும், குறிப்போடு - குறிப்பாய் வருமொழிகளுடன், இன்ன பிறவும் குறிப்பிற் றருமொழி - இவை போல்வன பிறவும் குறிப்பினாற் காட்டும் மொழிகளாம்; அல்லன வெளிப்படை - இவ்வாறன்றி வரு வன எல்லாம் விளங்கி நின்று பொருளைக் காட்டும் மொழிகளாம் என்றவாறு. (12)

## சொல் இத்துணையவென்பது

269. அதுவே,
இயற்சொல் றிரிசொ லியல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்குமாந் திசைவட சொல்லணு காவழி.

சூ-ம், மேல் அவ்வாற்றாற் பகுத்த சொல் இவ்வாற்றால் இத்தனை யாமெனக் கூறுகின்றது.

(இ-ள்) அதுவே - மேற் கூறப்பட்ட சொல்லே, இயற்சொல் திரி சொல் இயல்பிற் இயற்சொல்லும் திரிசொல்லும் என்னும் இவ்விரு வகையினாலும், பெயர்வினை என இரண்டாகும் - பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லுமென இரண்டாகும்; இடையுரி யடுத்து நான்குமாம் - இடைச்சொல்லும் உரிச்சொல்லும் என்னும் இவ்விரண்டு டன் நான்கு கூறுபட்டதாம், திசை வடசொல் அணுகா வழி - திசைச் சொல்லும் வட சொல்லும் கூடாவிடத்து என்றவாறு. (13)

## இயற்சொல்

270. செந்தமி ழாகித் திரியா தியார்க்கும்
தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்.

சூ-ம், மேல் "இயற்சொல்" என்றார்; அஃது இஃதெனக் கூறியது.

(இ-ள்) செந்தமிழாகி - செந்தமிழ் நிலத்து வழங்குமொழியாய், திரி யாது - சொல்லானும் பொருளானும் திரிவின்றி, யார்க்கும் - கற்றோர்க்

கும் கல்லாதவர்க்கும் ஒப்ப, தம் பொருளை விளக்கும் தன்மைய - தத்தம் பொருள் விளங்கிக் கிடக்கும் தன்மையை உடையன, இயற் சொல் - இயற்சொல்லுக்கு இலக்கணம் என்றவாறு. (14)

## திரிசொல்

271. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த வொருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்

சூ-ம், மேல் நிறுத்த முறையானே திரிசொல்லாவது கூறியது.

(இ-ள்) ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும் - ஒரு பொருளைக் குறித்த பல சொல்லாகியும், பல பொருள் குறித்த ஒரு சொல்லா கியும் - பல பொருளைக் கருதிய ஒரு சொல்லாகியும், அரிதுணர் பொரு ளன - கல்லாதார்க்கு அறியலாகாப் பொருளாவன, திரிசொல்லாகும் - திரிசொற்று இலக்கணமாம் என்றவாறு. (15)

## திசைச்சொல்

272. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரட்டியிற் றமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொல் லென்ப.

சூ-ம், திசைச்சொல் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) செந்தமிழ் நிலஞ்சேர் - செந்தமிழ் நிலத்தைச் சூழ்ந்த, பன்னிரு நிலத்தினும் - கொடுந்தமிழ் நிலமாகிய பன்னிரு நிலத்தினும், ஒன்பதிற்றிரட்டியில் - பதினெண் பாடைகளும் நிலைபெற்ற பதினெண் நிலத்தில், தமிழொழி நிலத்தினும் - இருவகைத் தமிழாம் ஒரு வகை மொழி நிலத்தையொழிந்த பதினேழு நிலத்திலும், தங்குறிப்பினவே - தத்தம் குறிப்பினவாய் வழங்குவனவற்றை, திசைச்சொல் என்ப - திசைச் சொல்லென்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு. (16)

## வடசொல்

273. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல்.

சூ-ம், நிறுத்த முறையானே வடமொழி ஆமாறு கூறியது.

(இ-ள்) பொதுவெழுத்தானும் - தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது வெழுத்தானும், சிறப்பெழுத்தானும் - ஆரியத்திற்கேயுரிய எழுத்தானும்,

ஈரெழுத்தானும் - பொதுவெழுத்தானும் சிறப்பெழுத்தானும், இயைவன வடசொல் - இம்மூவகையான் நடப்பனவாம் ஆரியச் சொற்கள் என்றவாறு. (17)

### பெயர்ச்சொல்

274. இடுகுறி காரண மரபொ டாக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே.

சூ-ம், பெயர்க்குப் பொது இலக்கணமும் அதன் பகுதியும் கூறுகின்றது.

(இ-ள்) இடுகுறி - தனித்தும் தொகுத்தும் மறைத்தும் வழங்குதற் பொருட்டு இதற்கிது பெயரென்று இட்ட இடுகுறியும், காரணம் - பொருளாதி ஆறும் கருத்தாவும் மிகவுமான காரணமும், மரபொடு - இதற்கு இவ்வாறு சொல்ல வேண்டுமென்னும் மரபால் வரும் காரணமும், ஆக்கம் - ஒன்றன் பெயரே ஒன்றற்காக்க ஆகுதலும், தொடர்ந்து - இந்நான்கு பகுதியையும் பற்றி, தொழிலல காலந் தோற்றா - வினையாலணையும் பெயர் ஒன்றும் காலங் காட்டி அல்லன காலங் காட்டாவாம்; வேற்றுமைக்கு இடனாய் - எட்டு வேற்றுமையும் சார்தற்கிடனாய், திணை பால் இடத்து ஒன்றேற்பவும் - திணை பால் இடங்களில் ஓர் திணை ஓர் பால் இடத்திற்கே உரியவாகியும், பொதுவும் - திணை பால் இடங்களிற் பலவிற்கு உரியவாகியும், ஆவன பெயரே - இவ்வாறு வருவன பெயர்களாம் என்றவாறு.

உ-ம்: கொற்றன், சாத்தன், தேவன், பூதன், நாகன், தாழி, கோதை, முட்டை எனத் தனித்து வழங்கிடுகுறிப் பெயர், சனம், படை, சேனை, நிரை, தொறு, உலகு, நாடு, ஊர் எனத் தொகுத்து வழங்கிடுகுறிப் பெயர். இடக்கரடக்கல் முதல் மூன்றும் மறைத்து வழங்கிடுகுறிப் பெயர். பொன்னன், நிலத்தன், காரான், முடவன், கரியன், உழவன் எனப் பொருளாதி ஆறான் வந்த காரணப் பெயர். கமுகந் தோட்டம், காரைக்காடு மிகுதி காரணமாக வந்த காரணப் பெயர். குழவி, மகவு, பிள்ளை, பார்ப்பு, குருளை, மறி, கன்று குட்டி, பொரி, களபம் இவ்விளமைச் சொற்கள் மரபு காரணத்தான் வந்த மரபுப் பெயர். கைவிரல், நுதல், முலை, கூந்தல், கண், ஏடு, தோடு, தாள், ஓலை, ஈர்க்கு, மடல், பாளை, குரும்பை, குலை, நுகம்பு, தாறு, சுளை, இலை, நெல், குரல் இவை உறுப்புச் சொல்;

மரபு காரணமாக வந்த இடுகுறி மரபுப் பெயர் சாத்தையுடை யான் சாத்தன், கூத்தையுடையான் கூத்தன் எனப் பொருள் கொளவரின் அவை காரணப் பெயராம். சங்கரன், அருகன், நான் முகன், நாராயணன், தேவன், தேவி எனக் இக் காரணப் பெயர் கள் மக்கட்காயினும் விலங்குகட்காயினும் வரின் இடுகுறிப் பெயராம் என்க. பொன்னன், சோரன் முதலான காரணப் பெயரும் ஆனை முதல் அஃறிணைக்கண்வரின் இடுகுறிப் பெயராம் என்க. அகலம் உரையிற் கொள்க. (18)

## ஆண்பாற் பெயர்

275. அவற்றுள்,

கிளையென் குழூஉமுதற் பல்பொரு டிணைதேம்
ஊர்வா னகம்புற முதல நிலன்யாண்
டிருது மதிநா ளாதிக் காலம்
தோள்குழன் மார்புகண் காது முதலுறுப்
பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினாப்பிற மற்றொ
டுற்ற னவ்வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குருசி றோன்றல்
இன்னன வாண்பெய ராகு மென்ப.

சூ-ம், மேல் திணை பாலிடத்துள் "ஒன்றேற்பவும்" என்றார்; அவற்றுள் உயர் திணை ஆண்பாற் படர்க்கைக்குரிய பெயராமாறு கூறுகின்றது.

(இ-ள்) அவற்றுள் - மேற் பொது வகையாற் சொல்லிய பெயர்களுள், கிளையெண் குழூஉ முதற் பல்பொருள் - நான்கு கிளையும் எண்ணும் திரளுமான பல பொருளையும், திணைதேம் ஊர் வானகம் புறமுதல நிலன் - ஐந்திணையும் தேசமும் ஊரும் வானும் அகமும் புறமும் முதலா நிலத்தையும், யாண்டு இருது மதி நாளாதிக் காலம் - யாண்டும் பருவமும் திங்களும் நாளும் முதலான காலத்தையும், தோள் குழல் மார்பு கண் காது முதல் உறுப்பு - தோளும் குழலும் மார்பும் கண்ணும் காது முதலான உறுப்பையும், அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி சாதி குடி சிறப்பாதிப்பல்குணம் - அளவும் அறிவும் ஒப்பும் வடிவும் நிறமும் கதியும் சாதியும் குடியும் சிறப்பும் முதலான பண் பையும், ஓதல் ஈதலாதிப் பல்வினை - ஓதலும் ஈதலும் முதலான பல தொழிலையும், இவையடை சுட்டு - பொருளாதி ஆறையும் பொருந்தி

வரும் மூன்று சுட்டையும், வினா - பொருளாதி ஆறையும் அடுத்து வரும் முதல் வினாவையும், பிற மற்றொடு - பிற என்பதனையும் மற்றை என்பதனையும், உற்ற னவ்வீறு - பொருந்தி வரும் னகரத்தை ஈறாகவுடைய பெயர்களும், நம்பி ஆடூஉ விடலை கோ - நம்பி என்பதும் ஆடூஉ என்பதும் விடலை என்பதும் கோ என்பதும், வேள் குருசில் தோன்றல் - வேள் என்பதும் குருசில் என்பதும் தோன்றல் என்பதும், இன்னன - இவை போல்வன பிறவுமான பெயர்களும், ஆண் பெயர் ஆகுமென்ப - ஆண்பாற்குரிய பெயர்களாமென்று சொல்வர் என்றவாறு.

"தநநு, எகர முதலா மகர மிடையிட்டு, னளரவா மீற்றன சுற்றப் பெயரே."

உ-ம்: தமன், நமன், நுமன், எமன் எனவும் ஒருவன், சங்கத்தன், பொன்னன், குழையன் எனவும் பொருள் தொடர்ந்தன. மலையன், மறவன், இடையன், ஊரன், பரதவன் எனவும் கலிங்கன், மதுரையான், வானான், அகத்தான், புறத்தான், பிற நிலத்தான், பிலத்தான் எனவும் இடம் தொடர்ந்தன. ஓராட்டையான், ஈராட்டையான், கூதிரான், வேனிலான், சித்திரையான், வைகாசியான், அசுபதியான் மூலத்தான், அற்றையான், இற்றையான் எனக் காலம் தொடர்ந்தன. திணிதோளான், சுரிகுழலன், அகன்மார்பன், செங்கண்ணன், அலைகாதன், நால்வாயன் எனவும் பெரியன், சிறியன் எனவும் அறிவன், புலவன் எனவும் பொன்னொப்பான், மணியொப்பான் எனவும் கூனன், குறளன் எனவும் கரியன், செய்யான், மானிடவன், தேவன், நரகன் எனவும் அந்தணன், அரசன், வணிகன், வெள்ளான் எனவும் சேரன், சோழன், பாண்டியன் எனவும் ஆசிரியன், படைத்தலைவன், சேனாபதியான் எனவும் இவை பண்பு தொடர்ந்தன. அவன், அப்பொருளான், அவ்விடத்தான், அந்நாளன், அக்குழலன், அக்கரியன், அக்கூத்தன் எனவும் அகரச் சுட்டுடன் பொருளாதி தொடர்ந்தன. ஏனைச் சுட்டு வினாக்களினும் இவ்வாறே ஒட்டுக. பிறன், மற்றையான், பிறபொருளான், பிறவிடத்தான் எனவும் ஒழிந்த நான்கிடத்தும் ஒட்டிக்கொள்க. சுட்டு முதலானவை எப்பொருளினும் அடுத்து வருதலின் வேறோதினார் என்க.

நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல் என இவை இடுகுறிப் பெயர்.

இறுதிக்கண் "இன்னன" என்றதனால் வில்லி, வாளி, கொற்றந்தை, சாத்தந்தை, வடுகந்தை எனவும் கொள்க.

வலியன், நரையன், கருடன் என இவை னகரவீறாய் உயர்திணையாக ஓதலின் உயர்திணைப் பால் ஆகாதென்க. (19)

## பெண்பாற் பெயர்

276. கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
எவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே.

சூ-ம், பெண்பாற்குரிய பெயர் இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) கிளைமுதலாகக் கிளந்த பொருள்களுள் - மேற் கிளை முதலாகச் சொல்லப்பட்ட பகுதிக்குள், எவ்வொற்றிகரக் கேற்றவீற்றவும் - ளகரவொற்றுக்கும் இகரத்துக்கும் ஏற்ற ஈற்றான் வருவனவும், தோழி செவிலி மகடூஉ நங்கை தையலோடு - தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையலென்றவற்றுடனே, இன்னன பெண்பாற் பெயரே - இவை போல்வன பிறவும் பெண்பாற்குரிய பெயர்களாம் என்றவாறு. (20)

## பலர்பாற் பெயர்

277. கிளந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவும்
கள்ளொ டீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும்.

சூ-ம், பலர்பாற்குரிய பெயராமாறு கூறுகின்றது.

(இ-ள்), கிளந்த கிளைமுதல் - மேற்கூறிய கிளைமுதலாகிய பொருள் அனைத்தையும், உற்ற ரவ்வீற்றவும் - பொருந்தி வந்த ரகரவொற்றை ஈறாகவுடைய மொழிகளும், கள்ளொடீற்றினேற்பவும் - அப்பொருளிற் கள்ளென்னும் இறுதி ஈறாகவுடைய மொழிகளுள் ஈண்டைக்குப் பொருந்துவனவும், பிறவும் - இவை போல்வன பிறவும், பல்லோர் பெயரின் பகுதியாகும் - பலர்பாற்குரிய பெயர்களாம் என்றவாறு.

உ-ம்: ஆண்பாற்குரிய பெயர்க்கு மேற்காட்டிய உதாரணங்களை ரவ்வீறாகத் திரித்துக் கண்டுகொள்க. கள்ளீற்றுக்கும் ஏற்பன கொள்க.

அவர்கள், அரசர்கள், உண்டவர்கள், உறங்கினவர்கள் என்பன ஒருசார் ரகரவொற்றும் கள்ளென் விகுதியும் கூடி வந்தாலும் முன்னின்ற ரகார ஒற்றே பால் விளக்கும்; ஏனையது வாய்பாடு நிரம்பல் மாத்திரையாய் வந்ததெனக் கொள்க.

நாய்கள் நரிகள் என உயர்திணைப் பன்மைப் படர்க்கைக் 'கள்' விகுதி அஃறிணைப் படர்க்கைப் பெயர்மேல் வந்து பால் ஒன்றும் வேறுபடுத்தும் விகுதியாமென்க. (21)

## ஒன்றன்பாற் பெயர்

278. வினாச்சுட் டுடனும் வேறு மாம்பொருள்
ஆதி யுறுதுச் சுட்டனை யாய்தம்
ஒன்றனெண் ணின்னை வொன்றன் பெயரே.

சூ-ம், நிறுத்த முறையானே அஃறிணையொருமைப் படர்க்கைப் பெயராமாறு கூறுகின்றது.

(இ-ள்) வினாச்சுட்டுடனும் - மூன்று முதல்வினாவையும் மூன்று சுட்டையும் அடுத்து வந்த துவ்வீறும், உ-ம்: எது, ஏது, யாது, அது, இது, உது; வேறுமாம் பொருளாதி - வினாவையும் சுட்டையும் அடுத் தும் அடாதும் வரும் பொருளாதியாறினையும், உறுது - பொருந்தி வந்த துவ்வீற்று மொழிகளும், சுட்டனை யாய்தம் - மூன்று சுட்டை யும் அடைந்த ஆய்தம் அடுத்த மொழிகளும், ஒன்றனெண் ணின்னன - ஒன்றென்னும் எண்ணும் இவை போல்வன பிறவும், ஒன்றன் பெயரே - அஃறிணை ஒருமைப்பாற் பெயர்களாம் என்றவாறு.

> உ-ம்: எப்பொருளது, எவ்விடத்தது, எந்நாளது, எக்கோட்டது, எந்நிறத்தது, எந்நடையது என வரும். இவ்வாறே ஏனை வினாச் சுட்டுக்கள் அடுத்துப் பொருளாதியாறினையும் ஒட்டுக. ஏகார வினா இடமுதல் ஐந்தினும் யா வினாக் காலமுதல் நான்கினும் வருதல் அரியதெனக் கொள்க. குழையது, நிலத்தது, நாளது, வாலது, குறியது, ஆடலது எனப் பொருளாதியாறும் வினாச் சுட்டுடன் அடாமல் தனியே துவ்வீறாக வந்தது. அஃது, இஃது, உஃது எனச் சுட்டனை ஆய்தப்பெயர் வந்தவாறு ஒன்று என எண் வந்தவாறு.

“இன்னன” என்றதினாற் பிறிது, மற்றையது எனவும் கொள்க. (22)

## பலவின்பாற் பெயர்

279. முன்ன ரவ்வொடு வருவை யவ்வும்
சுட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியும்
ஒன்றல வெண்ணு முள்ள வில்ல
பல்ல சில்ல வுளவில பலசில
இன்னன பலவின் பெயரா கும்மே.

சூ-ம், அஃறிணைப் பன்மைப் படர்க்கைப் பெயர் கூறியது.

(இ-ள்) முன்னரவ்வொடு - முன்னர் அஃறிணை ஒருமைப்பாற்கு எய்திய பெயர்கண்மேல், வருவையவ்வும் - பொருந்தி வரும் வையீற்று மொழிகளும் அகரவீற்று மொழிகளும், சுட்டிறு வவ்வும் - சுட்டொடு கூடிய வகரவீற்று மொழிகளும், கள்ளிறு மொழியும் - கள்ளென்னும் விகுதி ஈறாய் வருமொழிகளும், ஒன்றல வெண்ணும் - ஒன்று என்பதனையொழிந்த எல்லாவெண்களும், உள்ள இல்ல பல்ல சில்ல உள வில பல சில - உள்ளவென்பது முதல் எட்டு மொழிகளும், இன்னன - இவை போல்வன பிறவும், பலவின் பெயராகும்மே - அஃறிணைப் பன்மைப் பாற்குரிய பெயர்களாம் என்றவாறு. (23)

## பால்பகாவஃறிணைப் பெயர்

**280. பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.**

சூ-ம், அஃறிணைப் பெயர்கட்கு ஆவதோர் இயல்பு கூறியது.

(இ-ள்) பால்பகா அஃறிணைப் பெயர்கள் - மேற்பால் வகுத்தவையொழித்து ஒழிந்த பெயர்களனைத்தும், பாற் பொதுமைய - ஒருமை பன்மைகட்குரிய பொதுவாம் என்றவாறு.

உ-ம்: மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன; முலை எழுந்தது, முலை எழுந்தன. (24)

## இருதிணைப் பொதுப்பெயர்

**281. முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்கும்**
**சினைமுதற் பெயரொரு நான்குமுறை யிரண்டும்**
**தன்மை நான்கு முன்னிலை யைந்தும்**
**எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்.**

சூ-ம், இருதிணைக்குமுரிய பெயராமாறு கூறுகின்றது.

(இ-ள்) முதற்பெயர் நான்கும் - ஆண்மை முதற்பெயர் பெண்மை முதற்பெயர் ஒருமை முதற்பெயர் பன்மை முதற்பெயர் என்னும் நான்கும், சினைப்பெயர் நான்கும் - ஆண்மைச் சினைப்பெயர் பெண்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயர் பன்மைச் சினைப்பெயர் என்னும் நான்கும், சினைமுதற்பெயர் ஒரு நான்கும் - ஆண்மைச் சினை முதற்பெயர் பெண்மைச் சினைமுதற்பெயர் ஒருமைச் சினைமுதற் பெயர் பன்மைச் சினைமுதற் பெயர் என்னும் நான்கும், முறை இரண்டும் - ஆண்மை முறைப்பெயர் பெண்மை முறைப்பெயர் என்னும் இரண்டும், தன்மை நான்கும் - யான் நான் யாம் நாம் என்னும் தன்மைப்

பெயர் நான்கும், முன்னிலை ஐந்தும் - எல்லீர் நீவிர் நீமீர் நீர் நீ என்னும் முன்னிலைப்பெயர் ஐந்தும், எல்லாம் தாம் தான் - எல்லாம் தாம் தான் என்னும் இம்மூன்று பெயரும், இன்னன - இவை போல்வன பிறவும், பொதுப்பெயர் - இருதிணைக்குமுரிய பெயர் களாம் என்றவாறு. (25)

282. ஆண்மை பெண்மை யொருமை பன்மையின்
ஆமிந் நான்மைக ளாண்பெண் முறைப்பெயர்.

சூ-ம், மேல் தொகைப்படுத்துரைத்த பெயர்களை வகைப்படுத்து மாறு கூறியது.

(இ-ள்) ஆண்மை - ஆண்மை முதற்பெயர் ஆண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைமுதற்பெயர் ஆண்மை முறைப்பெயர், பெண்மை - பெண்மை முதற்பெயர் பெண்மைச் சினைப்பெயர் பெண்மைச் சினை முதற்பெயர் பெண்மை முறைப்பெயர், ஒருமை - ஒருமை முதற்பெயர் ஒருமைச் சினைப்பெயர் ஒருமைச் சினைமுதற்பெயர், பன்மையின் - பன்மை முதற்பெயர் பன்மைச் சினைப்பெயர் பன்மைச் சினைமுதற் பெயர், ஆமிந்நான்மைகள் - இந்த நால்வகைப் பெயரினாலே முன் கூறிய நான்கு தொகையுமாம், ஆண் பெண் முறைப்பெயர் - ஆண்மை யும் பெண்மையும் சார்ந்ததினாலே முறைப் பெயர் இரண்டாம் என்ற வாறு.

உ-ம்: சாத்தன், முடவன், முடக்கொற்றன் என ஆண்மையின் மூன்றும் வந்தன. சாத்தி, முடத்தி, முடக்கொற்றி எனப் பெண் மையில் மூன்றும் வந்தன. கோதை, செவிமிலி, நெடும்புற மருதி என ஒருமையின் மூன்றும் வந்தன. யானை, நெடுங்க முத்தல், நெடுந்தாள்யானை எனப் பன்மையில் மூன்றும் வந்தன. தந்தை, தாய் என முறைப்பெயர் இரண்டும் வந்தன. (26)

283. அவற்றுள்,
ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.

சூ-ம், மேல் ஆண்மை முதற்பெயர் முதலாகப் பகுத்தவற்றை இரு திணைப் பாலுள்ளும் இன்னது இன்ன பாற்கு உரித்தென்பது கூறியது.

(இ-ள்) அவற்றுள் - மேல் ஆண்மை முதற்பெயர் முதலாகச் சொல் லப்பட்ட பதினான்கு பெயருள்ளும், ஒன்றே இருதிணை - ஒரு பெயரே உயர்திணை அஃறிணை என்னும் இரு திணையிடத்தும், தன் பால் ஏற்கும் - பொருந்தி வரும் தன் பாலனைத்தையும் ஏற்று நிற்கும் என்ற வாறு.

உ-ம்: சாத்தன், முடவன், முடக்கொற்றன், தந்தை என்பன வந்தான், வந்தது என வரும். யானை, நெடுங்கழுத்தல்,

பெருங்கால்யானை என்பன வந்தார், வந்தன எனவும் வரும்.
(27)

## தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள்

284. தன்மை யானான் யாநா முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
அல்லன படர்க்கை யெல்லா மெனல்பொது.

சூ-ம், மேல் "தன்மை நான்கு முன்னிலை ஐந்தும்" என்றார்; அவை இவையெனவும் ஒழிந்த பெயர் இவ்விடத்தாமெனவும் கூறுகின்றது. அன்றி எல்லாப் பெயர்க்கும் இடம் அடைத்தலுமாம்.

(இ-ள்) தன்மை யான் நான் யாம் நாம் - தன்மையிடத்துக்குரிய பெயராவன யானென்றும் நானென்றும் யாமென்னும் நாமென்றும் வரும் நான்குமாம்; முன்னிலை எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ - முன்னிலையிடத்துக்குரிய பெயராவன எல்லீரென்றும் நீயிரென்றும் நீவிரென்றும் நீரென்றும் நீயென்றும் வரும் ஐந்துமாம்; அல்லன படர்க்கை - இவையொழிந்த பெயர்கள் எல்லாம் படர்க்கையிடத் துக்குரிய பெயர்களாம்; எல்லாமெனல் பொது - அவற்றுள்ளும் எல்லாமென்னும் பெயர் மூவிடத்திற்கும் உரித்தாகிய பெயர் என்றவாறு. (28)

285. வினையின் பெயரே படர்க்கை வினையா
லணையும் பெயரே யாண்டு மாகும்.

சூ-ம், தொழிற்பெயர்க்கும் தொழிலாலணையும்பெயர்க்கும் இடம் அடைத்தல் கூறுகின்றது.

(இ-ள்) வினையின் பெயரே படர்க்கை - தொழில்தன்னைச் சொல்லும் பெயர் படர்க்கையிடத்துக்குரிய பெயராம்; வினையாலணையும் பெயரே முற்றுவினையாலணையும் பெயர்கள், யாண்டுமாகும் - தன்மை முன்னிலை படர்க்கை மூன்றிடத்துக்குமுரிய பெயராம் என்றவாறு.

உ-ம்: உணல், வரவு, கூத்து, பாட்டு, உண்டல், ஓதல், நிற்றல், நடப்பு, நடக்கை என நிறுத்தி நன்று, தீது எனவொட்டிப் படர்க்கைப்பெயராயின காண்க. வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தேன், வந்தேம், வந்தாய், வந்தீர்: இவ் வினை முற்றுகள் வினையாலணையும்பெயராய் வந்தானை, வந்தானால் என உருபேற்று நிற்றலின் வினையாலணையும் பெயர் மூவிடத்துக்கும் உரியவாயின.

இவை பெயரான பொழுது உருபேற்கும்; வினையாயின பொழுது பொருள் முற்றிப் பெயர்கொண்டு முடியும். இவை தம்முள் வேற்றுமை எனக் கொள்க. (29)

286. தான்யா னாநீ யொருமை பன்மைதாம்
யாம்நா மெலாமெலிர் நீயிர்நீர் நீவிர்.

சூ-ம், மேற்சொன்ன "எல்லாந் தாந்தான்" என்னும் பெயர்க்கும் தன்மை முன்னிலைப் பெயர்க்கும் பால் வகுத்தல் கூறியது.

(இ-ள்) தான் யான் நான் நீ ஒருமை - தான் யான் நான் நீ என்பன ஒருமைப் பாலாவனவாம்; பன்மை தாம் யாம் நாம் எலாம் எலிர் நீயிர் நீர் நீவிர் - தாம் யாம் நாம் எல்லாம் எல்லீர் நீயிர் நீர் நீவிர் என்பன பன்மைப் பாலாம் என்றவாறு. (30)

287. ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில.

சூ-ம், இவ்விரு பெயர்க்கும் ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) ஒருவன் ஒருத்திப் பெயர் - ஒருவன் ஒருத்தி என்னும் இவ் விரு பெயரும் இவ்வாய்பாட்டால் நிற்றலன்றி, மேல் எண்ணில - இரு வன் மூவன் இருத்தி முத்தி என்பன முதலாகிய மேல் வரும் எண் களைக் கொள்ளா என்றவாறு. (31)

288. ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கித் தென்ப.

சூ-ம், இவ்விரு பாற் பொதுச் சொல் முடிவு கூறியது.

(இ-ள்) ஒருவரென்பது - ஒருவன் என்னும் பெயர், உயரிருபாற்றாய் - உயர்திணை ஆண்பால் பெண்பால்கள் இரண்டுக்கும் பொதுவாய் ஒரு பொருளைத் தருமேனும், பன்மை வினை கொளும் - பன்மை வினையைக் கொண்டு முடியும், பாங்கிற்றென்ப - பகுதியை உடைய தென்று சொல்லுவர் புலவர் என்றான்.

உ-ம்: பாப்பார் ஒருவர் வந்தன், பாப்பனியர் ஒருவர் வந்தார். (32)

## ஆகுபெயர்

289. பொருண்முத லாறோ டளவைசொற் றானி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே.

சூ-ம், ஆகுபெயர் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) பொருண்முதல் ஆறோடு - பொருளும் இடமும் காலமும் சினையும் குணமும் தொழிலும் என்னும் இவ்வாறு வகைப் பெயரும், அளவை - எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் நால் வகை அளவுப் பெயரும், சொற்றானி கருவி காரியம் கருத்தன் - சொல்லும் தானியும் கருவியும் காரியமும் கருத்தனும் என்னும் இவ்வைந்து பெயரும், ஆதியுள் ஒன்றன் பெயரான் - என்னும் இப்பெயர்கள் முதலா னவற்றுள் ஒன்றன் பெயரான், அதற்கியை பிறிதை - அதற்கியைபுடைய பிறிதொரு பொருளை, தொன்முறை உரைப்பன ஆகுபெயரே - பழமை யான வரலாற்றோடும் சொல்லப்படுவன ஆகுபெயராம் என்றவாறு.

(உ-ம்): தெங்கு, தாமரை, சந்தனம், கொன்றை, ஆத்தி, வில் வம், பூவை என முதற்பெயரை உணர்த்தின் இயற்பெயராம். தெங்கு தின்றான், "தாமரை புரையும் காமர் சேவடி" (குறு. கடவுள் வாழ்த்து), "ஆம்ப னாறுந் தீம்பொதி கிளவி" (குறு. 300), சந்தனம் பூசிய மார்பன், கொன்றை சூடி, ஆத்தி சூடி, வில்வந் தரித்த முடியினன், பூவை வண்ணமால் என இவற்றின் சினை அறிய வந்ததினால் சினையைக் காட்டும் பொருண் முத லாகுபெயர்.

குழிப்பாடி, சீனம், கொல்லம், அச்சை என அவ்விடம் உணர்த் தின் இயல்பெயராம். இப்படாம் குழிப்பாடி, இப்பட்டுச் சீனம், இப்பட்டுக் கொல்லம், இக்குதிரை அச்சை என அவ்விடத்தினிகழ் பொருளைக் காட்டின் இடவாகுபெயர். உலகம் வாழ்ந்தது, நாடு செழித்தது, இதுவுமது.

கார், கூதிர், கார்த்திகை, சித்திரை, பூசம் எனக் காலம் உணர்த் தின் இயற்பெயராம். கார் அறுத்தது, கூதிர் வீசும், கார்த்திகை பூத்தது, சித்திரை ஆடும், பூசம் ஆடத்தகும் என அக்காலத்தினிகழ் பொருளை உணர்த்தின் காலவாகுபெயராம். கொழுந்து, பூ, புகை யிலை, வேர் என உறுப்புணர்த்தின் இயற்பெயராம். கொழுந்து வைத் தான், பூ உண்டாக்கினான், புகையிலை நட்டான், வேர் உண்டாக்கி னான் என அம் முதல் உணர்த்தினமையான் முதலைக் காட்டும் சினை யாகுபெயராம்.

நீலம், வெள்ளை, வட்டம் எனப் பண்புணர்த்தின் இயற் பெய ராம். ஊண், எழுத்து, பாட்டு, செப்பு, மலர், தாய், கனி எடுத்தான் என அத்தொழிலைக் காட்டின் தொழிலாகு பெயராம்.

ஒன்று, துலாம், உழக்கு, நாழி, கோல் என்பன அளவு கருவி களை உணர்த்தின் இயற் பெயராம். இப்பொருள் ஒன்று, இப்பொன் துலாம், இந்நெய் உழக்கு, இப்பால் நாழி, இம்மனை ஒரு கோல் என

அளவையான் அளக்கப்படும் பொருளைக் காட்டும் அளவை ஆகு பெயராம்.

எழுத்துச் சொற் பொருள் யாப்பலங்காரம் என அவ்வச் சொற் பொருள்களை உணர்த்தின் இயற்பெயராம். இவ்வதிகாரம் எழுத்து, இவ்வதிகாரம் சொல் என அவற்றைச் சொல்லும் அதிகாரங்களை உணர்த்தும் சொல் சொல்லாகுபெயராம். விளக்கு, நெஞ்சு, நிருதி என்பன சுடரினையும் உணர்வினையும் தெய்வத்தினையும் உணர்த் தின் இயற்பெயராம். விளக்கு முரிந்தது, நெஞ்சு நொந்தது, நிருதி மேல் எழுந்தது புகை எனத் தானத்தைக் காட்டும் தானவாகுபெயராம்.

அம்பு, வேல், பஞ்சு எனக் கருவிகளை உணர்த்தின் இயற்பெய ராம். இப்புண் அம்பு, இவ்வடு வேல், இவ்வாடை பஞ்சு எனக் காரியத்தைக் காட்டும் காரணவாகுபெயராம்.

சோறு, அவல், கடகம், துலாம் என்பன காரியங்களை உணர்த் தின் இயற் பெயராம். இப்பொன் சோறு, இந்நெல் அவல், இப் பொருள் கடகம், இம்மரம் துலாம் எனக் காரியத்தைக் காட்டும் காரணவாகுபெயராம்.

கோலிகன், சாலிகன், பட்டணவன், சேணிகன் எனச் சாதிகளை உணர்த்தின் அது இயற்பெயராம். இவ்வாடை கோலிகன், இவ் வாடை சாலிகன், இவ்வாடை பட்டணவன், இவ்வாடை சேணிகன் என அவரால் ஆக்கப்பட்ட ஆடைகளைக் காட்டும் கருத்தனாகு பெயராம். பிறவுமன்ன.

பொற்றாலி, தோள் குழல், துடியிடை, இவ்வன்மொழித் தொகையும் ஆகுபெயர் என்பாருமுளர். அது தொடர் மொழியென்று தள்ளுக. புளி, கடு என்பது சுவையை உணர்த்தின் இயற்பெயராம். அச்சுவையையுடைய காயை உணர்த்தின் ஒருமடியாகுபெயராம். அவ்வுறுப்பையுடைய மரத்தை உணர்த்தின் இயற்பெயராம். அவ் வளவும் பண்பையுடைய கருவிகளை உணர்த்தின் ஒருமடியாகு பெயராம். அக்கருவியால் அளக்கப்படும் பொருளை உணர்த்தின் இருமடியாகுபெயராம். எனவே ஆக்க ஆகும் பெயர் ஆகுபெயர் என்பதாயிற்று. (33)

### வேற்றுமை

**290.** ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை.

சூ-ம், வேற்றுமைகளினது இயல்பும் அதன் பகுதியும் கூறுகின்றது.

(இ-ள்) ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய் - தம்மை ஏற்பனவான எவ்வகைப் பெயர்களுக்கும் ஈற்றிலே நின்று, பொருள் வேற்றுமை செய்வன - அப் பெயர்ப் பொருள்களை வேற்றுமை செய்வன, எட்டே வேற்றுமை - வேற்றுமை எட்டாம் என்றவாறு.

> அரும்பதவுரை: வேற்றுமை செய்தலான் வேற்றுமை. வேற்றுமை செய்வன யாவை அவை வேற்றுமை. "எட்டே" என்பது தேற்றேகாரம். விளியைப் பெயரது விகாரமெனப் பெயருள் அடக்கி ஏழென்பாருமுளர். பெயர் விகாரமே ஆயினும் படர்க்கையை முன்னிலையாக வேறுபடுத்தல் உடைமையின் எட்டே என்பார் மதம் கோடற்கு வந்ததென்க.

வேற்றுமை செய்தலாவது: முதலது சாத்தன் என்றது. அப் பெயர்தான் தன் பொருண்மையிற் பிரிவின்றி எடுத்தலோசையான் ஏனையவற்றின் வேறுபடுத்தது. இவ்வகையாதல் தத்தம் இலக்கணச் சூத்திரத்துட் காண்க. இரண்டாவது சாத்தனையென அப் பெயர்ப் பொருண்மையைக் காரியமாக்கிற்று. மூன்றாவது சாத்தனாலென அப்பெயர்ப் பொருண்மையைக் கருத்தாவாக்கிற்று. நான்காவது சாத்தற்கென ஏற்றுக்கொள்வதாயிற்று. ஐந்தாவது சாத்தனின் என நீக்குவதாயிற்று. ஆறாவது சாத்தனது என கிழமைய தாக்கிற்று. ஏழாவது சாத்தன்கண்ணென இடமாக்கிற்று. எட்டாவது சாத்தாவென முன்னிலையாக்கிற்று. (34)

### வேற்றுமையின் பெயரும் முறையும்

291. பெயரே ஐ ஆல் கு இன் அதுகண்
விளியென் றாகு மவற்றின் பெயர்முறை.

சூ-ம், மேல் எட்டென்ற வேற்றுமைகள் தம் பெயரும் முறையும் கூறுகின்றது.

(இ-ள்) பெயரே ஐ ஆல் கு இன் அது கண் விளி - பெயருரும் ஐயுருபும் ஆலுருபும் குவ்வுருபும் இன்னுருபும் அதுவுருபும் கண்ணுருபும் விளியுருபும், என்றாகும் அவற்றின் பெயர் - இவ்வகையாற் சொல்லப்படும் அவற்றினது பெயர்கள், முறை - இவை நின்ற முறையாம் என்றவாறு. (35)

292. ஆற னுருபு மேற்குமவ் வுருபே.

சூ-ம், உருபின்மேலும் உருபு பெறுமெனக் கூறுகின்றது.

(இ-ள்) ஆறனுருபும் - மேற் பெயர்கள் வேற்றுமை ஏற்கும் என்றார். அப்பெயர்களன்றி ஆறனுருபும், ஏற்கும் அவ்வுருபே - அவ்வுருபுகளை ஏற்று நிற்கும் என்றவாறு.

உ-ம்: சாத்தனது, சாத்தனதனை, சாத்தனதனால், சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதனது, சாத்தனதன்கண் என வரும். விளியேலாதேனும் உருபேற்றலிற் குறைபட்டதாகாது; சில உறுப் பிற் குறைபட்டாலும் மக்கள் என்பர்; அதுபோலவெனக் கொள்க. பெயர் வேற்றுமையும் ஏனை உருபுகளையும் ஏற்கு மால் அது ஒழித்தது என்னையோவெனின். பெயர் எழுவா யுருபாவது தன் பயனிலை தோன்றுகின்ற காலையன்றே; ஆண் டுப் பிற உருபுகளை ஏலாது. ஏற்பிற் றன் பொருண்மையும் ஏற்கும் உருபின் பொருண்மையும் ஒருங்குடைத்தாதல் வேண் டும்; அதனால் பயனிலை கொள்ளாது நின்ற பெயரே உருபு களை ஏற்குமெனக் கொள்க. ஆகலின் ஆறாம் வேற்றுமையுருபு ஒழிந்த உருபுகளை ஏற்புழித் தன் இருகிழமைப் பொருளினும் திரியாது நிற்குமெனக் கொள்க. (36)

## உருபேலாப் பெயர்கள்

**293. நீயிர் நீவிர்நா னெழுவா யலபெறா.**

சூ-ம், மேல் "ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீறாய்" என்றார்;

எனவே ஏலாப் பெயர்களும் உள என்பதாயிற்று; அவை இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) நீயிர் நீவிர் நான் - நீயிர் நீவிர் நான் என்னும் இம் மூன்று பெய ரும், எழுவாயல பெறா - எழுவாய் உருபினையொழிய ஏனை உருபு களை ஏலாது என்றவாறு.

உ-ம்: நீயிர் வந்தீர், நீவிர் வந்தீர், நான் வந்தேன் என வரும்.(37)

## முதல் வேற்றுமை

**294. அவற்றுள்,**
**எழுவா யுருபு திரிபில் பெயரே**
**வினைபெயர் வினாக்கொள லதன்பய னிலையே.**

சூ-ம், நிறுத்தமுறையானே பெயர் வேற்றுமையது இலக்கணம் கூறு கின்றது.

(இ-ள்) அவற்றுள் - மேற்கூறிய எட்டு வேற்றுமையுள்ளும், எழுவா யுருபு திரிபில் பெயரே - முதல் வேற்றுமைக்கு உருபாவது திரிபு யாதுமின்றி நிற்கும் பெயர்தானேயாம்; வினை பெயர் வினாக் கொளல் - வினையையும் பெயரையும் வினாவையும் கொண்டுமுடிதல், அதன் பயனிலையே - அதற்குப் பொருணிலையாம் என்றவாறு.

உ-ம்: சாத்தன் வந்தான், சாத்தன் அவன், சாத்தன் எவன் என வரும்.

ஆயன் சாத்தன் என்பன இருபெயரொட்டுப் பண்புத் தொகையாய் ஒரு மொழிபோல் நின்று இம் மூன்றனுள் ஒன்று கொள்ளு மெனக. ஆயன் சாத்தன் வந்தான், ஆயன் சாத்தன் சிறியன், ஆயன் சாத்தன் எவன் என வரும். (38)

## இரண்டாம் வேற்றுமை

295. இரண்டா வதனுரு பையே யதன்பொருள்
ஆக்க லழித்த லடைத னீத்தல்
ஒத்த லுடைமை யாதி யாகும்.

சூ-ம், இரண்டாம் வேற்றுமை இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) இரண்டாவதன் உருபு ஐயே - இரண்டாம் எண்ணின் முறைமைக்கண் நின்ற வேற்றுமைக்கு ஐ உருபாம்; அதன் பொருள் - அதனது பொருளாவது, ஆக்கல் அழித்தல் - ஒன்றை ஆக்கலும் ஒன்றை அழித்தலும், அடைதல் நீத்தல் - ஒன்றை அடைதலும் ஒன்றை நீத்தலும், ஒத்தல் உடைமை ஆதி யாகும் - ஒன்றை ஒத்தலும் ஒன்றை உடைமையும் இவை முதலானவை ஆகும் என்றவாறு.

உ-ம்: அறத்தை ஆக்கினான், நூலைக் கற்றான் எனவும்; மரத்தை அறுத்தான், வீட்டை விட்டான் எனவும்; பொன்னை ஒத்தான், புலியைப் போன்றான் எனவும்; அருளை உடையான், கொடையை உடையான் எனவும் வரும். பிறவுமன்ன. (39)

## மூன்றாம் வேற்றுமை

296. மூன்றா வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்.

சூ-ம், முறையே மூன்றாம் வேற்றுமை இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) மூன்றாவதன் உருபு - மூன்றாம் எண்ணின் முறைமைக்கு நின்ற வேற்றுமைக்கு உருபு, ஆல் ஆன் ஓடு ஒடு - ஆலும் ஆனும் ஓடும் ஒடுவும் இந்நான்கு உருபாம்; கருவி கருத்தா உடனிகழ்வு - கருவியாதலும் கருத்தாவாதலும் உடனிகழ்ச்சியாதலும் என்னும் இம்மூன்றும், அதன் பொருள்- அதற்குப் பொருளாம் என்றவாறு.

அரும்பதவுரை: ஞாபகக் கருவியையும் இயற்றுதற் கருவியான காரகக் கருவியையும் பொதுவே கருவியெனவும் ஏவதற் கருத்தாவையும் இயற்றுதற் கருத்தாவையும் பொதுவே

கருத்தாவெனவும் அடக்கி உடனிகழ்வுமென மூன்றாக ஓதினார் என்க. அவ்விரு வகைக் கருவியும் முதற் காரணமும் துணைக் காரணமும் என இரண்டாம். அவற்றுள் முதற் காரணமாவது அவ்விரு வழியும் தன்னை இன்றியமையாச் சிறப்புடையது. துணைக் காரணமாவது அவ்விரு வழியும் முதற் காரணத்துக் குத் துணையாய் வருவது.

வ்-று: கடல் கண்டான் என்றால் காட்சிக்கு உணர்வு ஞாபக முதற் காரணம்; கண்ணும் ஒளியும் முதலானவை ஞாபகத் துணைக் காரணம்; அவை ஞாபகக் கருவி. குழை செய்தான் என்றால் அதற்குப் பொன் காரக முதற் காரணம்; கம்மக் கருவி யும் தீ முதலானவையும் காரகத் துணைக் காரணம்; இவை காரக முதற் கருவி. உணர்வினால் உணர்ந்தான், சுடரினாற் கண்டான், புகையால் எரியுள்ளது, அலகினால் எண்ணினான், நாழியால் அளந்தான் என இவை ஞாபக முதற் கருவியும் ஞாபகத் துணைக் கருவியும். பொன்னாலாய மணி, மண்ணாலாய குடம் என இவை காரகத் துணைக் கருவி.

தச்சனால் இயற்றப்பட்ட வையம், கடவுளால் ஆக்கப்பட்ட விமானம், புலியால் விழுங்கப்பட்டான், சுறவால் ஏறுண்டான் என இவை இயற்றுதற் கருத்தா. அரசனால் இயற்றப்பட்ட தேவகுலம், தேவராலாய திரு. இவை ஏவுதற் கருத்தா.

"தூங்குகையா லோங்குநடைய, உறழ்மணியா லுயர்மருப்பின" (புறம்.22), "பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன் பெண் டகையாற் பேரமர்க் கட்டு" (குறள்.1083) என இவை உடனிகழ்ச்சி.

அரசனால் இயற்றப்பட்ட தேவகுலம் என்பவற்றுள் உருபல்லாத பிற மொழிகள் வருவது என்னையோவெனின் கனலொடு புகையும் குடையொடு நிழலும்போல் உருபு வர வந்து நீங்கவும் பெறும். ஆறன் உருபெறும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

"உலகத்தோ டொட்ட ஒழுகல்" (குறள்.140), "மனத்தோடு வாய்மை மொழியில்" (குறள்.295) என ஓடுவும் ஒடுவும் வந்தவாறு கண்டுகொள்க. (40)

### நான்காம் வேற்றுமை

297. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியி னிதற்கிதென்ல் பொருளே.

சூ-ம், முறையானே நான்காம் வேற்றுமைக்கு இலக்கணம் கூறு கின்றது.

(இ-ள்) நான்காவதற்கு - நான்காமெண்ணின் முறைமைக்கண் நின்ற வேற்றுமைக்கு, உருபாகும் குவ்வே - குவ்வேன்பது உருபாம், கொடை பகை நேர்ச்சி - கொடையும் பகையும் நேர்ச்சியும், தகவு அதுவாதல் - தகவும் அதுவாதலும், பொருட்டு முறை ஆதியின் - பொருட்டு முறை யின் முதலான பொருண்மைக்கண், இதற்கு இதெனல் பொருள் - இதற்கு இது என்பது பட நிற்றல் அதற்குப் பொருளாம் என்றவாறு.

உ-ம்: தேவர்க்குப் பூசை, சாத்தற்குச் சோறு, இரப்போர்க்கு ஈந்தான், மாணாக்கனுக்கு உபதேசித்தான் என்பன கொடை.

மக்கட்குப் பகை வெகுளி, பாம்புக்குப் பகை கீரி, "அல்லவை செய்தார்க் கறங்கூற்றம்" (நான்மணி.84), "பிணிக்கு மருந்து பிற மன் னணியிழைத் தன்னோய்க்குத் தானே மருந்து" (குறள்.1102) என்பன பகை.

சான்றோற்கு மகள் நேர்ந்தான், அறத்துக்குப் பொருள் நேர்ந் தான், இறைக்கு அது நேரின் எனக்கு அது நேரும் என்பன நேர்ச்சி. அறத்திற்குத் தக்கது அருள், சாத்தற்குத் தக்காள் கொற்றி, "செல் வர்க்கே செல்வந் தகைத்து" (குறள்.125), "அருங்குல முலகின் மிக்க வரசர்க்கே யுரிய" (சூளா. கல்யாணச். 189) என்பன தகவு. ஆடைக்கு நூல், ஆழிக்குப் பொன் என்பன அதுவாதல். வரிசைக்கு உழும், கூலிக்குக் குற்றேவல் செய்யும் என்பன பொருட்டு. சாத்தற்கு மகன், கொற்றிக்கு மகள்; இது முறை.

"ஆதி" என்பதனாற் கரும்புக்கு வேலி, மயிருக்கு எண்ணெய், உயிருக்கு உண்டி என்னும் அதற்கு வினையுடைமையும், கைக்கு யாப்புடையது கடகம் என்னும் யாப்புடைமையும், நாய்க்கு நட்புடை யன் என்னும் நட்புடைமையும், தாய்க்குக் காதல் என்னும் காதலும், வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர் என்னும் சிறப்பும் இவை முதலானவும் கொள்க. (41)

## ஐந்தாம் வேற்றுமை

298. ஐந்தா வதற்குரு பில்லு மின்னும்
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே.

சூ-ம், ஐந்தாம் வேற்றுமைக்கு இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) ஐந்தாவதற்கு - ஐந்தாமெண்ணின் முறைமைக்கண் நின்ற வேற்றுமைக்கு, உருபு இல்லும் இன்னும் - இல்லென்பதும் இன் னென்பதும் உருபாம்; நீங்கல் ஒப்பு எல்லை - நீங்கி நிற்றலும் உவமை

யும் எல்லையும், ஏதுப் பொருள் - கருவிரும் அதற்குப் பொருளாம் என்றவாறு.

உ-ம்: ஊரினீங்கினான், "தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை" (குறள்.964) என நீக்கம்.
"பொன்னிற் பிதிர்ந்த பொறிகளங் கிளமுலை."

இவை ஒப்பு.

அதனின் மெல்லிது, அதனிற் பெரிது, அவனிற் பெரியன் சாத்தன் என இவை ஒப்பொடு நீக்கல்.

கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு, வைகையாற்றின் தெற்கு, மருதையாற்றின் வடக்கு. இவை எல்லை.

பொன்னினாய குடம், "கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்" (பொருந.163), அறிவிற் பெரியன் என இவை ஏது. (42)

## ஆறாம் வேற்றுமை

299. ஆற னொருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

சூ-ம், ஆறாம் வேற்றுமை இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) ஆறன் ஒருமைக்கு - ஆறாம் வேற்றுமை ஒருமைப் பொருண்மைக்கு, அதுவும் ஆதுவும் - அதுவென்பதும் ஆதுவென்பதும், பன்மைக்கு அவ்வும் உருபாம் - பன்மைப் பொருண்மைக்கு அவ்வும் உருபாம், பண்பு உறுப்பு ஒன்றன் கூட்டம் - பண்பும் உறுப்பும் ஒரு பொருட்டிரட்சியும், பலவின் ஈட்டம் திரிபின் ஆக்கம் - பல பொருட்டிரட்சியும் ஒன்று பிரிந்து ஒன்றாதலும், ஆம் தற்கிழமையும் - ஆகும் இவ்வைந்து தற்கிழமையும், பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே - பிறிதின் கிழமையும் போற்றுதல் அதற்குப் பொருளாம் என்றவாறு.

உ-ம்: எனது முகம், எனது உயிர், எனாது உயிர் என ஒருமைக்கண் அதுவுருபும் ஆதுருபும் வந்தன. தன தாளைகள், என விழிகள், நின சீறடிகள் எனப் பன்மைப் பொருண்மைக்கண் அகர உயிர் வந்தன. சாத்தனது இயல்பு, இளமை, வன்மை, குறுமை, நன்மை, திறம், கல்வி, கேள்வி, உணர்வு என இவை பண்புத் தற்கிழமை. சாத்தனது செலவு, நிலை, இருக்கை,

உணர்வு, செய்கை என்பனவும் ஈண்டுத் தொழிற்பண்பாய் அடங்கும் என்ப. சாத்தனது கை, யானையது கோடு, வாழையது பழம், தேரது தட்டு, செய்யுளது அடி என்பன உறுப்புத் தற்கிழமை, நெல்லது கூட்டம், எள்ளது ஈட்டம், கொள்ளது குழாம், யானையது தொகை, மாந்தரது தொகுதி; இவை ஒன்றன் கூட்டத்தற்கிழமை, படையது தொகை, விலங்கினது ஈட்டம், மரப் பெயர்த் தொகுதி. இது பலவியற் றற்கிழமை, கொள்ளது நூறு, எள்ளது சாந்து, நெல்லது சோறு, அரிசியது சோறு, பயற்றது கும்மாயம் என இவை திரிபுத் தற்கிழமை.

சாத்தனது ஆடை, அரசனது ஆழி, ஆவினது கன்று, கபிலரது பாட்டு என இவை பிறிதின் கிழமை. ஒழிந்த உருபினும் இவ்வாறே ஒட்டுக. (43)

## ஏழாம் வேற்றுமை

300. ஏழ னுருபு கண்ணாதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப.

சூ-ம், ஏழாம் வேற்றுமை இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) ஏழனுருபு - ஏழாமெண்ணின் முறைமைக்கண் நின்ற வேற்றுமைக்கு உருபு, கண்ணாதி யாகும் - கண் முதலானவை யாம்; பொருண் முதல் ஆறும் - பொருளாதி ஆறு பெயரும், ஓரிரு கிழமையின் - தற்கிழமையானும் பிறிதின் கிழமையானும், இடனாய் நிற்றல் - ஒன்றற்கு இடனாய் நிற்றல், இதன் பொருள் என்ப - அதற்குப் பொருளாமென்று சொல்லுவர் என்றவாறு.

உ-ம்: மணியின்கண் ஒளி, பனையின்கண் உயர்ச்சி பண்புத் தற்கிழமையால் பொருள் இடனாயிற்று. ஊரின்கண் இல்லம், கடலின்கண் திரை என உறுப்புத் தற்கிழமையால் இடம் இடனாயிற்று. ஆதாயத்தின்கண் பறவை, வனத்தின்கண் முசல் எனப் பிறிதின்கிழமைக்கு இடம் இடனாயிற்று. ஆண்டின்கண் இருது, நாளின்கண் நாழிகை என உறுப்புத் தற்கிழமையாற் காலம் இடனாயிற்று. வேனிற்கண் பாதிரி, காரின்கண் கொன்றை எனப் பிறிதின் கிழமையால் காலம் இடனாயிற்று. கையின்கண் விரல், மலரின்கண் இதழ் என உறுப்புத் தற்கிழமையால் உறுப்பு இடனாயிற்று. கையின் கண் கடகம், மலரின்கண் வண்டு எனப் பிறிதின் கிழமைக்குச் சினை இடமாயிற்று. நிறத்தின்கண் எழில், உணர்ச்சிக்கண் கூர்மை எனப் பண்புத் தற்கிழமைக்குப் பண்பு இடனாயிற்று. இளமைக் கண் செல்வம், வளமைக்கண் விருந்து எனப் பிறிதின் கிழமைக்குப்

பண்பு இடனாயிற்று. ஆடற்கண் அழகு, பாடற்கண் பணிபு எனப் பண்புத் தற்கிழமைக்குத் தொழில் இடமாயிற்று. ஆடற் கண் பாட்டு, பாடற்கண் யாழ் எனப் பிறிதின் கிழமைக்குத் தொழில் இடமாயிற்று.

இதனிற் "பொருண் முத லாறும்" என்றாராயினும் வினை வேற் றுமையுருபு ஏலாததனால் ஈண்டுத் தொழிற்பெயரே கொள்க. (44)

## ஏழாம் வேற்றுமை உருபுகள்

301. கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முழைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே.

சூ-ம், ஏழாம் வேற்றுமைக்குக் கண் முதலானவை உருபு என்றார்; அவை இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) கண் - "நல்லார்கட் பட்ட வறுமைமி னின்னாதே, கல்லார்கட் பட்ட திரு" (குறள்.408), கால் - "ஊர்க்கா னிவந்த பொதும் பரின்" (கலி.56), கடை - "ஈதலியை யாக்கடை" (குறள்.230), இடை - "நல்லாரி டைப்புக்கு" (நாலடி.314), தலை - "நனந்தலை வந்த நல்லோர்", வாய் - "புன்னைநன்னீழற் புலவுத்திரைவாய்", திசை - "ஊர்த்திசை யோசை", வயின் - "அவர்வயினிடைச் செல்வாய்", முன் - "கற்றார்முற் றோன்றா கழிவிரக்கம்" (நான்மணி. 8), சார் - "காட் டுச்சா ரோடுங் குறு முயால்", வலம் - "ஊர்வலம் வந்தான்", இடம் - "இல்லிடப்பரத்தை", மேல் - "தன்மேற் கடுவரை" (பு.வெ.11), கீழ் - "பிண்டி நிழற் கீழ்", புடை - "கடைபுடைக் கொள்ளியநீர்", முதல் - "கான்முதல் வந்த வுரன்மாலை" (நற்.3), பின் - "காதலி பின்சென்ற தம்ம" (நாலடி.395), பாடு - "நம்பா டணையாத நாள்", அளை - "கல்லளைச் சுனைநீர்", தேம் - "தோழிக்குரியவை கோடாய் தேஎத்து" (இறை.14), உழை - அவனுழை வந்த சாத்தன், வழி - "நின்றதோர் நறவேங்கை நிழல்வழி யசைந்தனனே", உழி - "உறைப்புழி யோலை போல" (புறம்.290), உளி - "காவுளிச் சேர்ந்துறையுங் கிளிகாள்", உள் - "மூலையங் குவட்டுள் வாழும்" (சீவக.1232), அகம் - "பயன் சாராப், பண்பில்சொற் பல்லாரகத்து" (குறள்.194), புறம் - "செல்லு மென்னுயிர்ப்புறத் திறுத்தற்றே" (கலி.148), இல் - "ஊரிலிருந் தார்", இடப் பொருள் உருபே - இவ்விருபத்தெட்டும் இடப் பொரு ளைக் காட்டும் உருபாம். (45)

## எட்டாம் வேற்றுமை

302. எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
றிரிபு குன்றன் மிகுத லியல்பயற்
றிரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

சூ-ம், எட்டாம் வேற்றுமை இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) எட்டனுருபே - எட்டாமெண்ணின் முறைமைக்கண் நின்ற வேற்றுமைக்கு உருபாவது, எய்து பெயரீற்றின் - விளி ஏற்கும் பெயரின் ஈற்றது, திரிபு குன்றல் மிகுதல் - திரிதலும் கெடுதலும் மிகுதலும், இயல்பயற் றிரிபுமாம் - இயல்பாதலும் அயனின்றதன் திரிவுமாம்; பொருள் - அதற்குப் பொருள், படர்க்கையோரை - படர்க்கையிடத்தாரை, தன் முகமாகத் தானழைப்பதுவே - ஒருவன் தனக்கு எதிர்முகமாகத் தான் அழைக்கை என்றவாறு அரும்பதவுரை: "எய்துபெயர்" எனவே எய்தாத பெயரும் உள என்பதாம்; அவை போக்கிச் சொல்லுதும். "படர்க்கையோரை" எனவே தன்மை முன்னிலையார் ஈண்டே விலக்கப்பட்டார். (46)

## விளியேற்கும் பெயர்கள்

303. இ உ ஊவோ டையோ ன ள ர ல
யவ்வீற் றுயர்திணை யோரவல் லிவற்றொடு
ணஃகா னாவீ றாகும் பொதுப்பெயர்
ஞநவொழி யனைத்தீற் றஃறிணை விளிப்பன.

சூ-ம், மேல் விளியேற்கும் பெயரென்றார்; அவை இவையெனத் தொகுத்துக் கூறுகின்றது.

(இ-ள்) இ உ ஊவோ டையோ ன ள ர ல ய - இ உ ஊ ஐ ஓ ன ள ர ல ய என்னும், ஈற்றுயர்திணை - இப்பத்து எழுத்தும் ஈறாகவுடைய உயர்திணைப் பெயரும், ஓரவல் லிவற்றொடு - ஓகாரமும் ரகாரமுமான இரண்டு எழுத்தும் ஒழித்துநின்ற எட்டெழுத்துடனே, ணஃகா னாவீ றாகும் பொதுப்பெயர் - ணகரமும் ஆகாரமுங்கூட இப்பத்தெழுத்தும் ஈறாகவுடைய பொதுப்பெயரும், ஞநவொழி யனைத்தீற் றஃறிணை - ஞகரமும் நகரமும் ஒழித்து ஒழிந்த இருபத்தொரு எழுத்தும் ஈறாகவுடைய அஃறிணைப் பெயரும், விளிப்பன - விளி ஏற்பனவாம் என்றவாறு.

உ-ம்: நம்பி, முனி, வேந்து, பெண்டு, ஆடூஉ, மகடூஉ, விடலை, மங்கை, கோ, கோமான், பெருமான், அடிகள், கோமாள், மாந்தர், சான்றோர், குரிசில், தோன்றல், ஆய் எனப் பத்தீற்று உயர் திணைப் பெயர்; பிதா, பிணா, தம்பி, சாத்தி, அரசு, அழிதூஉ, பேதை, தந்தை, ஆண், பெண், மகன், மகள், தூங்கல், தாய் எனப் பத்தீற்றுப் பொதுப்பெயர்; விள, புறா, தும்பி, முசு, தூ, சே, வாடை, கோ, கோக்கள், இதணே, அன்னம், மானம், மான், பேய், சூர், வேல், தெவ், யாழ், தேன், நாகு என இருபத்தொரு ஈற்று அஃறிணைப் பெயரும் விளியேற்கும் என்றவாறு.(47)

## விளியுருபுகள்

**304. இம்முப் பெயர்க்கு ணியல்பு மேயும்**
**இகர நீட்சியு முருபா மன்னே.**

சூ-ம், மூவகைப் பெயர்க்கும் பொதுவான விளியுருபு தொகுத்துக் கூறு கின்றது.

(இ-ள்) இம்முப் பெயர்க்கண் - உயர்திணைப்பெயர் பொதுப்பெயர் அஃறிணைப் பெயர் என்னும் இம்மூவகைப் பெயர்க்கண்ணும், இயல்பும் ஏயும் இகரநீட்சியும் - இயல்பாதலும் ஏகாரம் மிகுதலும் இகர ஈறு ஈகார ஈறாய்த் திரிதலும், உருபா மன்னே - விளி வேற்றுமைக்கு உருபுகளாம் பெரும்பாலும் என்றவாறு.

உ-ம்: நம்பி கூறாய், வேந்து கூறாய், ஆடூஉ கூறாய், விடலை கூறாய், கோக் கூறாய், நம்பியே கூறாய், மாந்தர் கூறீர், குருசில் கூறீர், ஆய் கூறாய், கோமானே, அடிகளே, சான்றாரே, குரிசிலே, ஆயே என உயர்திணைப் பெயர்க்கண் விளியுருபு வந்தவாறு.

பிதா உரையாய், தம்பி கூறாய், அரசு கூறாய், அழிதூஉக் கூறாய், பேதை பேசாய், ஆண் கூறாய், சாத்தன் கூறாய், மகள் பாராய், தூங்கல் கூறாய், தாய் கூறாய் எனவும் பிதாவே, அளியே, அரசே, அழிதூஉவே, அன்னையே, பெண்ணே, சாத்தனே, தூங்கலே, தாயே எனவும் சாத்தீ, கொற்றீ எனவும் பொதுப்பெயர்க்கண் விளி யுருபு வந்தவாறு. விளக் கொடியாய், புறா அழகியாய், தும்பி கொடியை, வீ கொடியை, வாடை கொடியை, நொக் கொடியை, கோக் கொடியை, சூர்க் கொடியை, வேல் கொடியை, தெவ் அரியை, யாழ் கொடியை, கௌ கொடியை எனவும் மகவே, நிலாவே, வீயே, முசுவே, பூவே, சேவே, மழையே, நொவ்வே, கோலே, கௌவே, இதணே, புனமே, தேனே, வேயே, காரே, குமிலே, தெவ்வே, யாழே, புள்ளே, எனவும் மந்தீ, தும்பீ எனவும் அஃறிணைப் பெயர்க்கண் விளியுருபு வந்தவாறு காண்க.

"மன்னே" என்ற மிகையானே உயர்திணைப் பெயரீற்று ஐகாரம் ஏகாரம் ஏலாதெனவும் கொள்க. (48)

305. ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவும்
உருபா மல்லவற் றாயு மாகும்.

சூ-ம், ஐகாரவீற்றிற்கு எய்தியதை விலக்கலும் எய்திய தன்மேற் சிறப்பு விதியும் கூறுகின்றது.

(இ-ள்) ஐயிறு பொதுப்பெயர்க்கு - ஐகாரவீற்றுப் பொதுப் பெயர்க் கண், ஆயும் ஆவும் உருபாம் - ஐகாரம் நீங்கி ஆயென்பதுவும் ஆவென் பதுவும் விளியுருபாம்; அல்லவற்று - பொதுப்பெயர் அல்லாத உயர் திணைப் பெயர்க்கண் அஃறிணைப் பெயர்க்கண், ஆயுமாகும் - ஐகாரம் திரிந்து ஆயுருபாம் என்றவாறு.

உ-ம்: அன்னாய், அன்னா; தந்தாய், தந்தா; "ஆவன்னா வன்னா வலந்தே னெழுந்திராய்" எனவும் விரவுப் பெயர்க்கண் வந்தன. விடலாய், மடந்தாய் என உயர்திணைப் பெயர்க்கண் வந்தன. நாராய், கொன்றாய், என அஃறிணைப் பெயர்க்கண் வந்தன. (49)

306. ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
அளபி றழிவய னீட்சி யதனோ
டிறு போத லவற்றோ டோவுறல்
ஈறழிந் தோவுற லிறுதியவ் வாதல்
அதனோ டயறிரிந் தேயுற லிறழிந்
தயலே யாதலும் விளியுரு பாகும்.

சூ-ம், னகாரவீற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) ஒரு சார் னவ்வீற்று உயர்திணைப் பெயர்க்கண் - சில இடத்து னகாரவீற்று உயர்திணைப் பெயர்களுள், அளபீறழிவு - சில அள பெழுந்து சில ஈறு கெட்டு, அயனீட்சி - சில ஈற்றயல் நீண்டு, அத னோடு ஈறு போதல் - சில ஈற்றயல் நீண்டதனோடு ஈறு கெட்டும், அவற்றோடு ஓவுறல் - சில ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டு அவற்றோடு ஓகாரம் மிக்கும், ஈறழிந்து ஓ வரல் - சில ஈறு கெட்டு ஓகாரம் மிக் கும், இறுதி யவ்வாதல் - சில இறுதி யகர ஒற்றாயும், அதனோடு அயல் திரிந்து ஏயுறல் - சில இறுதி யகரமாய் அதனோடு அயலில் ஆகாரம் ஓகாரமாகத் திரிந்து ஏகாரம் ஏற்றும், ஈறழிந்து அயலேயாத லும் - சில ஈறழிந்து அயலில் அகரம் ஏகாரமாகியும், விளி உருபாகும் - விளி வேற்றுமை உருபாம் என்றவாறு.

உ-ம்: அம்பர்கிழாஅன், வல்லங்கிழான், அரசூருடையாஅன் எனச் சேய்மைக்கண் அளபாயின. இறைவ கேள், புலவ கேள் என அணிமைக்கண் ஈறழிந்தன. ஐயான் கேள், நண்பான் கேள் என அயல் நீண்டன. இறைவா, மன்னா, தேவா என அயல் நீண்டு ஈறு கெட்டன. ஐயாவோ, அன்பாவோ எனப் புலம்பின் கண் அயனீண்டு ஈறழிந்து ஓகாரம் மிக்கன. திரையவோ, ஐயவோ என அணிமைப் புலம்பின்கண் ஈறழிந்து ஓகாரம் மிக்கன. குழையாய், வாயிலான், ஆதிரையாய் என இறுதி யகார வொற்றாய்த் திரிந்தன. வாயிலோயே என அயல் திரிந்து இறுதி யகரம் ஏகாரம் ஏற்றது. ஐயே வாழ்க, முருகே வாழ்க என ஈறழிந்து அயனின்ற அகரம் ஏகாரமாயின. பிறவும் இவ்வாறே கண்டுகொள்க. (50)

307. ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவயல்
நீட்சி யிறுதி யவ்வொற் றாதல்
அயலி லகரமே யாதலும் விளித்தனு.

சூ-ம், ஏகாரவீற்றிற்கு எய்தியன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) ளஃகான் உயர்பெயர்க்கு - ளகாரவீற்று உயர்திணைப் பெயர்க்கண், அளபீறு அழிவு அயனீட்சி - அளபெடுத்தலும் ஈறு கெடுதலும் அயல் நீடலும், இறுதி யவ்வாற் றாதல் - இறுதி யகர வொற்றாய்த் திரிதலும், அயலில் அகரம் ஏயாதலும் - அயனின்ற அகரம் ஏகாரமாகத் திரிதலும், விளித்தனு - விளி வேற்றுமை என்ற வாறு.

உ-ம்: "மேவார்த் தொலைத்த விறன்மிகு வேளஎ்" என அளபா யிற்று. கருங்கண்ணா, கருங்குழலா என ஈறழிந்தன. நமர் காள், எமர்காள், அளிகாள் என ஈற்றயல் நீண்டன. குழையாய், வாயி லாய், ஆதிரையாய், தோளாய் உண்டாய் என இறுதி யகரவொற் றாயின. அடிகேள், மக்கேள் என ஈற்றயல் அகரம் ஏகாரமாயின. (51)

308. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழெ லீற்றயல்
அகரம் இஈ யாத லாண்டையா
ஈயாத லதனோ டேயுற லீற்றே
மிக்கயல் யாக்கெட் டதனய னீடல்
ஈற்றி னீருற லிவையுமீண் டுருபே.

சூ-ம், ரகரவீற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) ரவ்வீற் றுயர் பெயர்க்கு - ரகாரவீற்று உயர்திணைப் பெயர்க் கண், அளபெழல் - அளபெடுத்தலும், ஈற்றயல் அகரம் இ ஈ யாதல் -

ஈற்றயலினின்ற அகரம் இகரம் ஈகாரம் ஆதலும், ஆண்டையா ஈயாதல் அதனோடு ஏயுறல் - ஈற்றயல் நின்ற ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம் ஏற்றலும், ஈற்றே மிக்கயல் யாக்கெட்டு அதனயல் நீடல் - ஈற்றில் ஏகாரம் மிக்கு அயலினின்ற யாக் கெட்டு அதனின் அயலில் இகரம் ஈகாரமாதலும், ஈற்றின் ஈகுறல் - இறுதி ஈராதலும், இவையும் ஈண்டுருபே - என்றிவை இவ்விடத்து விளியுருபாம் என்றவாறு.

உ-ம் : சிறாஅர், நம்பிமாஅர், உளாஅர் என அளபாயின. தெவ்விர், வேந்திர் என ஈற்றயல் அகரம் இகரமாயின. வேந்தீர், அமரீர், உளீர், பார்ப்பீர் என ஈற்றயல் அகரம் ஈகாரமாயின. சான்றீர், மடவீர் என ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாயின. "பல் சான்றீரே" (புறம்.195), முனிவீரே என அயலில் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம் ஏற்றன. நம்பீரே, தம்பீரே, தோழீரே என ஈற்றயல் யாக்கெட்டு அதன் அயலில் இகாரம் ஈகாரமாய் ஈற்றில் ஏகாரம் மிக்கன. தமரீர், நம்பீர், எமரீர், பிறரீர் என ஈற்று ஈரேற்றன. இதனுள் "ஈண்டு" என்ற மிகையானே அஃறிணைப் பெயர்க்கும் பொதும் பெயர்க்கும் இவ்விதி கொள்க. (52)

309. லகாரவீற் றுயர்பெயர்க் களபய னீட்சியும்
யகார வீற்றிற் களபுமா முருபே

சூ-ம், லகார யகாரவீற்றுப் பெயர்க்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறியது.

(இ-ள்) லகாரவீற்று உயர்பெயர்க்கு - லகாரவீற்று உயர்திணைப் பெயர்க்கண், அளபயனீட்சியும் - அளபெடுத்தலும் அயல் நீடலும், யகார வீற்றிற்கு - யகரவீற்று உயர்திணைப் பெயர்க்கண், அளபுமாம் உருபே - அளபெடுத்தலும் விளியுருபாம் என்றவாறு.

உ-ம்: "வலம்புரித் தடக்கை மாஅல்நின் நிறம்" என அளபெடுத்தது. தாழ்குழால், மடவரால், தோன்றால் என அயல் நீண்டது. ஆஅய் கூறாய், மணிப் பூணாஅய் என அளபெழுந்தன. பிறவு மன்ன. (53)

310. ளவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்
இறுதி யழிவத னோடய னீட்சி

சூ-ம், ளகாரவீற்று அஃறிணைப் பெயர் பொதுப் பெயர்கட்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறியது.

(இ-ள்) ளவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண் - ளகாரவீற்று உயர்திணை அல்லாத அஃறிணைப் பெயர்க்கண்ணும் பொதுப்

பெயர்க்கண்ணும், இறுதி அழிவு அதனோடு அயல் நீட்சி - இறுதி அழிதலும் அதனோடு அயல் நீட்சியும் விளியுருபாம் என்றவாறு.

உ-ம்: அலவ, கலுழ என ஈறழிந்தன. அலவா, கலுழா என ஈறழிந்து அயல் நீண்டன. இனி விரவுப் பெயர் வருமாறு. சாத்த கேள், கொற்ற கேள் என ஈறழிந்தன. சாத்தா, கொற்றா என ஈறழிந்து அயல் நீண்டன. பிறவுமன்ன. (54)

311. லளவீற் றஃறிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்
ஈற்றய னீட்சியு முருபா கும்மே.

சூ-ம், லகார லகாரவீற்றுப் பெயர்க்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) லளவீற்று அஃறிணைப் பெயர் - லகார ளகாரவீற்று அஃறிணைப் பெயர்க்கண்ணும், பொதுப் பெயர்க்கண் - லகார ளகாரவீற்றுப் பொதுப் பெயர்க்கண்ணும், ஈற்றயல் நீட்சியும் உருபாகும்மே - ஈற்றயல் நீளலும் உருபாம் என்றவாறு.

உ-ம் : "காட்டுச்சா ரோடுங் குறுமுயால்," கிளிகாள் என அஃறிணைப் பெயர்க்கண் அயல் நீண்டன. ஓதுங்கால், தூங்கால், மக்காள் என விரவுப் பெயர்க்கண் அயல் நீண்டன. பிறவுமன்ன. (55)

312. அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மையின்
அளபும் புலம்பி னோவு மாகும்.

சூ-ம், உரைத்த விளி வேற்றுமை உருபிற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) அண்மையின் இயல்பும் ஈறழிவும் - அணியாரை விளிக்குமிடத்து இயல்பும் ஈற்றினது அழிவும், சேய்மையின் அளபும் - சேய்மையாரை விளிக்குமிடத்து அளபெடுத்தலும், புலம்பின் ஓவுமாகும் - புலம்பின்கண் ஓகாரமுமாம் என்றவாறு. (56)

313. நுவ்வொடு வினாச்சுட் டுற்ற னளர
வைதுத் தாந்தா னின்னன விளியா.

சூ-ம், விளி ஏற்குமென்ற ஈற்றுப் பெயருள்ளும் இவை ஏலாவென எடுத்துக் கூறுகின்றது.

(இ-ள்) நுவ்வொடு வினாச் சுட்டு - நுவ்வையும் முதல் வினாக்களையும் மூன்று சுட்டையும், உற்ற ன ள ர வை து - பொருந்திய னவ்வும் ளவ்வும் ரவ்வும் வையும் துவ்வும் என்று இவ்வீற்றுப் பெயர்களும்,

தாம் தான் இன்னன விளியா - தாமென்பதும் தா னென்பதும் இவை போல்வன விளியுருபு ஏலா என்றவாறு.

உ-ம் : நுமன், நுமள், நுமர், எவன், எவள், எவர், எது, எவை, யாவன், யாவள், யாவர், யாது, யாவை, அவன், அவள், அவர், அது, அவை, இவன், இவள், இவர், இது, இவை, உவன், உவள், உவர், உது, உவை, தாம், தான் என்பன விளி ஏலா என்க.

"இன்னன" என்றதனால் மற்றையான், மற்றையாள், மற்றையார், மற்றையது, மற்றையன எனவும் எண்ணிறையளவுப் பெயர் முதலவும் விளி ஏலா எனக்கொள்க. (57)

## இரண்டாமுருபுக்கு ஓர் மரபு

**314. முதலை யையுறிற் சினையைக் கண்ணுறும்**
**அதுமுதற் காகிற் சினைக்கை யாகும்.**

சூ-ம், இஃதோர் வேற்றுமை உருபு பெறும் வகைமை கூறுகின்றது.

(இ-ள்) முதலை ஐயுறின் - சினை தொடர்ந்த முதற் பொருட்கு இரண்டாம் வேற்றுமை ஐயுருபு பொருந்தில், சினையைக் கண்ணுறும் - முதல் தொடர்ந்த சினைப் பொருட்கு ஏழாம் வேற்றுமைக் கண் ணுருபு வரும்; அது முதற்காகில் - ஆறாம் வேற்றுமை அதுவென்னும் உருபு முதற் பொருட்கு வரில், சினைக்கு ஐயாகும் - சினைப் பொருட் கண் இரண்டாம் வேற்றுமை ஐயுருபு வரும் என்றவாறு.

உ-ம் : யானையைக் கோட்டின்கட் குறைத்தான், யானையது கோட்டைக் குறைத்தான் என வரும். முதலை ஐயுற என்னாது "ஐயுறின்" என்றதனால் யானையைக் கோட்டைக் குறைத்தான், பசுவைப் பாலைக் கறந்தான் என வரும். (58)

**315. முதலிவை சினையிவை யெனவே றுளவில்லை**
**உரைப்போர் குறிப்பின வற்றே பிண்டமும்.**

சூ-ம், இது ஓர் சொல்லுதல் வகைமை கூறுகின்றது.

(இ-ள்) முதலிவை சினையிவை யென - இதுவே முதற் பொருள் இது சினைப் பொருளென்று சொல்ல, வேறுளவில்லை - வேறாக அறியக் கிடப்பன இல்லை; உரைப்போர் குறிப்பின - சொல்லுவான் குறிப்பினாலே முதற் பொருளே சினைப் பொருளாம்; சினைப் பொருளே முதற் பொருளாம்; அற்றே பிண்டமும் - பிண்டப் பொருளும் அவ்வாறேயாம் என்றவாறு.

உ-ம்: கோட்டை நுனிக்கட் குறைத்தான், கோட்டை நுனியைக் குறைத்தான், கைவிரற்கண் மடக்கினான், கையது விரல் மடக்கி னான் எனவும் வந்தன. நெற்குப்பை என்றால் நெல்லினது குப்பை, குப்பையது நெல் என இரண்டாவது வேறில்லாதது காண்க. (59)

## உருபு மயக்கம்

316. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.

சூ-ம், உருபுகள் ஒரு சார் அதன் பொருண்மேலன்றி மயங்கி வருதலும் உடையவென வழுவமைப்புக் கூறுகின்றது.

(இ-ள்) யாதனுருபிற் கூறிற்றாயினும் - ஓருருபிற் சொல்லப்பட்டதே ஒரு சொல் ஆயினும் அச்சொற்கு அவ்வுருபின் பொருளே பொரு ளென்று கொள்ளற்க; பொருள்சென் மருங்கின் - அச்சொல்லின் பொருள் அவ்வுருபிற்கு ஏற்குமோவென்று அப்பொருள் நோக்கும் உருபு அறிந்து, வேற்றுமை சாரும் - அவ்வேற்றுமை உருபே கொள்க என்றவாறு.

உ-ம்: "கிளையரி னாணற் கிழங்கு மணற்கீன்ற; முளையோ ரன்ன முள்ளெயிற்றுப் பேழ்வாய்" (அகம்.212) என நான்காம் வேற்றுமை வந்ததாயினும் அதனை ஏழாம் வேற்றுமையாகக் கொள்க. "நாகு வேயொடு நக்கு வீங்குதோள்" என இதனுள் ஒடுவை ஐயாகக் கொள்க. "ஆலத்தினால் அமிர்தாக்கிய கோன்" என ஆலை ஐயாகக் கொள்க. பிறவுமன்ன. இவை உருபு மயக்கம்; பிறவுமன்ன. (60)

## செய்யுட்கண் உருபு திரிதல்

317. ஐயான்குச் செய்யுட் கவ்வு மாகும்
ஆகா வஃறிணைக் கானல் லாதன.

சூ-ம், அவ்வுருபுகள் செய்யுள் விகாரப்படுமெனக் கூறுகின்றது.

(இ-ள்) ஐயான்கு - ஐயுருபும் ஆனுருபும் குவ்வுருபும் என்னும் மூன் றும், செய்யுட்கு அவ்வுமாகும் - செய்யுட்கண் அகரமாகியும் நிற்கப் பெறும்; ஆகா அஃறிணைக் கானல் லாதன - அஃறிணைக் கணாமே யெனில் ஆனல்லாத ஐயுருபும் குவ்வுருபும் திரியாவாம் என்றவாறு.

உ-ம்: "காவ லோனைக் களிறஞ் சும்மே" என்பது "காவ லோனக் களிறஞ் சும்மே" என்றும், "புலவரான்" என்பது "புலவரான" என்றும், "கடிநிலை யின்றே யாசிரி யர்க்கு" என்பது "கடிநிலை யின்றே யாசிரி யர்க்க" (தொல்.எழு.390) என்றும் இவை

உயர்திணைக்கண் திரிந்தன. "புள்ளினான்" என்பது "புள்ளி னான" என அஃறிணைக்கண் ஆன் ஒன்றும் திரிந்தது. (61)

## முடிக்குஞ் சொல்

318. எல்லை யின்னும் மதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளு நான்கே ழிருமையும்
புல்லும் பெரும்பாலு மென்மனார் புலவர்.

சூ-ம், வேற்றுமைகட்கு ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) எல்லை இன்னும் அதுவும் - எல்லைப் பொருண்மைக்கண் வரும் ஐந்தாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும், பெயர் கொளும் - பெயரைக் கொண்டு முடியும்; அல்ல வினை கொளும் - ஒழிந்த வேற்றுமைக்கண் வினையைக் கொண்டு முடியும்; நான்கேழிருமையும் புல்லும் - நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் பெயர் வினை என்னும் இரண்டையும் கொண்டு முடியும், பெரும்பாலும் என்மனார் புலவர் - பெரும்பாலும் என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு எனவும் சாத்தனது குணம், சாத்தனது கை, நெல்லது குப்பை, படையது குழாம், எள்ளது சாந்து, சாத்தனது ஆடை எனவும் பெயர் கொண்டன. அறத்தைச் செய்தான், சுடரினாற் கண்டான், வாளான் மறிந்தான், சேனையொடு சென்றான், சாத்தனொடு வந்தான், மலையின் இழிந்தான், வானின் வணக்கினான், இறைவ கூறாய், மன்ன வாராய், ஏனை வினை கொண்டன. கரும்பிற்கு வேலி, இரவலர்க்கு ஈந்தான் எனவும் பனையின்கண் அன்றில், தினையின்கட் பிள்ளை, பனையின்கட் சென்றான் எனவும் பெயரும் வினையும் கொண்டன.

"பெரும்பாலும்" என்றதனாற் சிறுபான்மை சாத்தனது வந்தது, அறத்தை அடைந்தவன், சுடரினாற் கண்டவன். இவ்வாறு வருவனவும் கொள்க.

தச்சனாற் செய்த மாடம், வாளாற் கொண்ட கொடி என்பனவும் பெயர் கொண்டனவன்றோவெனின் செய்த, கொண்ட என்னும் பெயரெச்ச வினை கொண்டன் என்க. (62)

திருச்சிற்றம்பலம்

முதலாவது பெயரியல் முடிந்தது

## இரண்டாவது

# வினையியல்

### தெரிநிலைவினை

319. செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.

சூ-ம், ஏது வகையாற் றெரிநிலை வினைச் சொல்லாது இன்னதென அதன் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) செய்பவன் கருவி நிலம் - கருத்தாவும் கருவியும் நிலனும், செயல் காலம் செய்பொருள் - தொழிலும் காலமும் செயப்படுபொருளும், ஆறுந் தருவது வினையே - என்னும் ஆறு பொருளையும் விளக்குவது வினையாம்.

உ-ம்: வனைந்தான் என்புழி வனைதற்றொழில் செய்தவன் குலாலன், கருமக்கருத்தர்; மண் முதற்கருவி; திரிகை; கோல், தண்ணீர் முதலானவை துணைக்கருவி; அகம், புறம் நிலம்; வனைதல் தொழில்; வனைந்தான் இறந்தகாலம்; மட்குடம் செயப்படு பொருள்; தண்ணீர் வார்க்க இன்னதற்கு; விலை இன்னது பயன்.

இவ்வாறன்றி, பகுதி செயலை விளக்கும்; இடைநிலை காலத்தை விளக்கும்; விகுதி செய்பவனை விளக்கும்; ஒழிந்தவை மறைந்து நின்று விளக்கும் என்பார் கருத்தும் கொள்க. வனைவித்தான் என்பது ஏவுதற் கருத்தாவெனக் கொள்க.

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

என ஆசிரியர் தொல்காப்பியனார் (சொல்.195) கூறியவாறு காண்க.

கால மறிதொழில் கருத்தனோ டியையப்
பால்வகை தோறும் படுமொழி வேறே

என ஆசிரியர் அவினயனார் கூறியவாறும் காண்க. (1)

## குறிப்பு வினை

320. பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே.

சூ-ம், குறிப்பு வினைச் சொல்லாவது இன்னதென அதன் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) பொருண்முதல் ஆறினும் தோற்றி - பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் ஆறும், முன்னாறனுள் - மேற்செய்பவன் முதலாகச் சொன்ன ஆறனுள், வினைமுதன் மாத்திரை விளக்கல் - கருத்தா ஒருத்தனையே காட்டி நிற்றல், வினைக்குறிப்பே - வினைக் குறிப்பிற்கு இயல்பாவது என்றவாறு.

உ-ம்: குழையினன், அகத்தினன், நாளினன், கண்ணினன், கரியன், சொல்லினன் என முறையே காண்க.

வினையைக் குறிப்பாக உடைமையின் வினைக்குறிப்பு என்றாயிற்று.

"பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலே
குறிப்பு வினையின் நெறிப்படு முதனிலை." (2)

## வினைச்சொற்களின் வகை

321. அவைதாம்,
முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.

சூ-ம், மேற்சொன்ன தெரிநிலை வினை, குறிப்பு வினைக்கு எய்தியதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) அவைதாம் - மேல் தெரிநிலை வினைச்சொல் குறிப்பு வினைச்சொல் என்று சொல்லப்பட்ட இரண்டும், முற்றும் - தெரிநிலை முற்றென்றும் குறிப்புவினை முற்றென்றும், பெயர்வினை எச்சமுமாகி - தெரிநிலைவினைப் பெயரெச்சமென்றும் குறிப்புவினைப் பெயரெச்சமென்றும் தெரிநிலை வினையெச்சமென்றும் குறிப்பு வினையெச்சமென்றும் ஆகி, ஒன்றற்குரியவும் - ஒரு திணை ஓர் பால் ஓர் இடத்திற்கு உரியவும், பொதுவுமாகும் - இரு திணைக்கும் பல பாற்கும் பல இடத்திற்கே உரியவுமாம் என்றவாறு. (3)

## முற்றுவினை

322. பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே.

சூ-ம், நிறுத்த முறையானே தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினை முற்றுக்கு இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) பொதுவியல்பு ஆறையும் தோற்றி - மேல் வினைக்கெல்லாம் பொதுவாகச் சொன்ன செய்பவன் முதல் ஆறு பொருளையும் காட்டி, பொருட்பெயர் முதலறு பெயரலது - பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் அறுவகைப் பெயரையுமல்லது, ஏற்பில முற்றே - வேறொன்றையும் வேண்டாது திற்பனவே தெரிநிலை வினை முற்றும் குறிப்பு வினைமுற்றுமாம் என்றவாறு.

> உ-ம்: நடந்தனன் அவன், நடந்தனள் அவள், நடந்தனர் அவர், நடந்தது அது, நடந்தன அவை, நடந்தேன் யான், நடந்தேம் யாம், நடந்தாய் நீ, நடந்தனிர் நீர், குழையினன் அவன், குழையினள் அவள், குழையினர் அவர், குழையினது அது, குழையின அவை, குழையினேன் யான், குழையினேம் யாம், குழையினை நீ, குழையினீர் நீர் எனப் பெயர்ப்பின் வேறொன் றையும் வேண்டாதவாறு காண்க.

குளிர்ந்தது பொன், பரந்தது நிலம், வந்தது கார், இற்றது கை, பரந்தது பசப்பு, வந்தது போக்கு எனப் பொருட்பெயர் முதலாறும் ஏற்றவாறு காண்க.

முற்றி நிற்றலான் முற்று.

> "மற்றுச்சொ னோக்கா மரபின வனைத்து
> முற்றி நிற்பன முற்றியன் மொழியே"

என்றார் அகத்தியனார். (4)

## முற்றுவினையின் வகையும் தொகையும்

323. ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்
ஒருமை பன்மையைத் தன்மைமுன் னிலையினும்
முக்கா லத்தினு முரண முறையே
மூவைந் திருமுன் றாறாய் முற்று
வினைப்பத மொன்றே மூவொன் பானாம்.

சூ-ம், முற்றுவினை வகையும் தொகையும் கூறுகின்றது.

(இ-ள்) ஒருவன் முதல் ஐந்தையும் - ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பலவென்றும் ஐம்பாலையும், படர்க்கையிடத்தும் - படர்க்கை இடத்திலும்... தன்மை முன்னிலையினும் - தன்மையிடத்தும் முன்னிலையிடத்தும், முக்காலத்தினு முரண - முக்காலங்களினாலும் மாற, முறையே மூவைந்து - முறையே படர்க்கை வினைமுற்றுப் பதினைந்தும், இருமூன்று - தன்மை வினைமுற்று ஆறுமாக, ... முற்று வினைப்பதம் ஒன்றே - தெரிநிலை முற்றுப்பதம் ஒன்றே, மூவொன்பானாம் - இருபத்தேழு கூறாம் என்றவாறு. (5)

## ஆண்பால் படர்க்கை வினைமுற்று

**324. அன்னா னிறுமொழி ஆண்பாற் படர்க்கை.**

சூ-ம், திறுத்த முறையானே உயர்திணை ஆண்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் கூறுகின்றது.

(இ-ள்) அன் ஆன இறுமொழி - அன் ஆன் என்னும் இவ்விரு விகுதிகளை ஈறாகவுடைய மொழிகள், ஆண்பாற் படர்க்கை - உயர்திணை ஆண்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம் என்றவாறு.

> உ-ம்: வந்தனன், வந்தான், வாராநின்றனன், வாராநின்றான், வருவன், வருவான் அவன் எனவும் தெரிநிலை வினைமுற்று வந்தன. பூணினன், பூணினான்; புறத்தன், புறத்தான்; ஆதிரையன், ஆதிரையான்; கண்ணினன், கண்ணினான்; பொன்னினன், பொன்னினான்; விரைவினன், விரைவினான் அவன் எனக் குறிப்பு வினைமுற்று வந்தன. (6)

## பெண்பால் படர்க்கை வினைமுற்று

**325. அள்ளா ளிறுமொழி பெண்பாற் படர்க்கை.**

சூ-ம், உயர்திணைப் பெண்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் கூறுகின்றது.

(இ-ள்) அள் ஆள் இறுமொழி - அள் ஆள் என்னும் இவ்விரு உயர்திணைப் பெண்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம் என்றவாறு.

> உ-ம்: வந்தனள், வந்தாள்; வாராநின்றனள், வாராநின்றாள்; வருவள், வருவாள் எனத் தெரிநிலை வினைமுற்று வந்தன. குறிப்பு வினை முற்றுக்கு மேல் வந்தவற்றை ளகாரமாகத் திரித்துக் காண்க. (7)

### பலர்பால் படர்க்கை வினைமுற்று

**326.** **அர் ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற**
**பல்லோர் படர்கைமார் வினையொடு முடிமே.**

சூ-ம், உயர்திணைப் பலர்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் கூறுகின்றது.

(இ-ள்) அர் ஆர் பவ்வூர் அகரமார் ஈற்ற - அர் ஆர் என்னும் விகுதியும் பகரவொற்றை ஊர்ந்த அகரமாகிய பவ்வென்னும் பகுதியும் மாரென் னும் விகுதியும் இந்நான்கு விகுதியையும் ஈறாகவுடைய மொழிகள், பல்லோர் படர்க்கை - உயர்திணைப் பலர்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம்; மார்வினையொடு முடிமே - மார் விகுதி சேர்ந்த தெரிநிலை வினைமுற்றுப் பெயர் கொண்டு முடிவ தன்றி வினை கொண்டு முடிவதுமாம் என்றவாறு.

உ-ம்: வந்தனர், வந்தார்; வருகின்றனர், வருகின்றார்; வருவர், வருவார் அவர் எனத் தெரிநிலை வினைமுற்று வந்தன. குறிப்பு வினைமுற்றுக்கு மேற்காட்டின னகர ளகரவீற்றை ரகரமாகத் திரித்து அவரென்னும் பெயர் வருவித்துக் கொள்க. ஒப்ப, உரைப்ப, சொல்லுப, புல்லுப அவர் எனவும் கொண்மார், உண் மார் அவர் வந்தார் எனவும் பவ்வூர் அகரவீறும் மாரீறும் வந்தன. ஒப்ப, உரைப்ப முதலானவை ஒப்பவை உரைப்பவையெனப் பெயர்ப்படின் அஃறிணைப் பன்மை பெயராமென்க. (8)

### ஒன்றன்பால் வினைமுற்று

**327.** **துறுடுக் குற்றிய லுகர வீற்ற**
**ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பி னாகும்.**

சூ-ம், அஃறிணையொருமைப் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் கூறியது.

(இ-ள்) து று டுக் குற்றிய லுகர வீற்ற - து, டு, று என்னும் இம் மூன்று குற்றியலுகரவீற்று மொழிகளும், ஒன்றன் படர்க்கை - அஃ றிணை யொருமைப் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம்; டுக் குறிப்பினாகும் - அவற்றுளே டுவ்வீற்று விகுதி குறிப்பு வினைக்கண் வரும் என்றவாறு.

உ-ம்: வந்தது, வாராநின்றது, வருவது; கூறிற்று, போயிற்று, ஆயிற்று அது எனவும் தெரிநிலை முற்று வந்தன. பெயர்த்து, ஊர்த்து, கார்த்து, மயிர்த்து, நடைத்து அது எனவும் பாற்று

மேற்று, வேனிற்று, கோடிற்று, செலவிற்று எனவும் வினைக் குறிப்பு முற்று வந்தன. பலபொருட்டு, ஆதிரைநாட்டு, குண்டு கட்டு அது எனக் குறிப்பு வினைமுற்று வந்தன. (9)

## பலவின்பால் வினைமுற்று

328. அ ஆ வீற்ற பலவின் படர்க்கை
ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்.

சூ-ம், அஃறிணைப் பன்மைப் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் கூறியது.

(இ-ள்) அ ஆ வீற்ற - அகர அகாரங்களை விகுதியாகவுடைய மொழிகள், பலவின் படர்க்கை - அஃறிணைப் பன்மைப் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம்; ஆவே எதிர் மறைக் கண்ண தாகும் - அவற்றுள் ஆகாரவீறு எதிர்மறுத்து உரைக் குமிடத்து வரும் என்றவாறு.

உ-ம்: வந்தன, வாராநின்றன, வருவன, வாரா அவை யெனத் தெரிநிலை வினைமுற்று வந்தன. பொருளல, மேல, நாள, கண்ண, கடிய, செயல அவையெனக் குறிப்பு வினைமுற்று வந்தன. (10)

## இருதிணைப் பொதுவினை

329. தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை.

சூ-ம், பொதுவாகிய தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினை முற்றும் தொகுத்துக் கூறுகின்றது.

(இ-ள்) தன்மை முன்னிலை வியங்கோள் - தன்மை வினைமுற்றும், முன்னிலை வினைமுற்றும், வியங்கோள் வினைமுற்றும், வேறிலை உண்டு - வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று வினைக்குறிப்பு முற்றும், ஈரெச்சம் - பெயரெச்ச வினையெச்சமும், இருதிணைப் பொது வினை - இவ்வெட்டும் இரு திணைக்கும் பொதுவான வினைகளாம் என்றவாறு. வியங்கோள் என்பது ஏவல். (11)

## தன்மையொருமை வினைமுற்று

330. குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ
டல்ல னென்னே னாகு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

சூ-ம், நிறுத்த முறையானே விரவுத்திணைத் தன்மையொருமைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் கூறியது.

(இ-ள்) கு டு து று வென்னுங் குன்றிய லுகரமோடு - கு டு து று என்னும் இந்நான்கு குற்றியலுகரவீற்று மொழிகளும், அல்ல லென்னே னாகு மீற்ற - அல் அன் என் ஏன் என்னும் இந்நான்கு விகுதி களையும் இறுதியாகவுடைய மொழிகளும், இருதிணைமுக்கூற்று - இரு திணைக்கும் பொதுவான விரவுத்திணை ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும் மூன்றற்கும் பொதுவான, ஒருமைத் தன்மை - ஒரு மைத் தன்மைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம் என்றவாறு.

உ-ம்: உண்கு, செய்கு, கோடு, உண்டு, வந்து, வருது, சென்று, சேறு; உண்பல், உண்டனன், உண்ணாநின்றனன், உண்பன், உண்டனென், உண்கின்றனென், உண்குவேன், உண்டேன், உண்ணாநின்றேன், உண்பேன் என விரவுத் திணைத் தன்மை யொருமைத் தெரிநிலை வினைமுற்று வந்தன. குழையல், குழையன், குழையேன், தாரினேன், ஈண்டையேன், பண்டை யேன், காலினேன், சிறியேன், செலவினேன் என விரவுத் திணைத் தன்மையொருமைக் குறிப்பு வினைமுற்று வந்தன. யான் என்னும் பெயர் வருவித்துக் கொள்க. (12)

### உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று

331. அம்மா மென்பன முன்னிலை யாரையும்
எம்மே மோமிவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற விருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.

சூ-ம், உளப்பாட்டுத் தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் கூறியது.

(இ-ள்) அம்மா மென்பன - அம் ஆம் என்னும் இவ்விரு விகுதியை ஈறாகவுடைய மொழிகள், முன்னிலை யாரையும் - முன்னிலையாரைத் தன்னோடு உளப்படுத்தும் விரவுத்திணைத் தன்மைப் பன்மைத் தெரி நிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம்; எம்மே மோமிவை - எம் எம் ஓம் என்றும் இம்மூன்று விகுதியையும் ஈறாகவுடைய மொழி கள், படர்க்கையாரையும் - படர்க்கையாரைத் தன்னோடு உளப்படுத் தும் விரவுத் திணைத் தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம்; உம்மூர் கடதற கும் டும் தும் றும் என்னும்

இந்நான்கு விகுதியையும் ஈறாகவுடைய மொழிகள், இருபாலாரையும் - முன்னிலையாரையும் படர்க்கையாரையும் தன்னோடு உளப்படுத்தும் விரவுத் திணைத் தன்மைப் பன்மைத் தெரிநிலை வினை முற்றாம்; தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை தன்னோடு உளப் படுத்தும் தன்மைப் பன்மையாம்.

இவ்வுரையென மூன்றனோடும் கூட்டுக.

உ-ம்: உண்டனம், உண்ணாநின்றனம், உண்பம், உண்பாம், உண்ணாநின்றாம், உண்பாம், உண்டனெம், உண்ணாநின்றனெம், உண்பேம், உண்டோம், உண்ணாநின்றோம், உண்போம், உண்கும், உண்டும், வந்தும், வருதும், சென்றும், சேறும் என இவ்வொன்பது விகுதியும் சேர்ந்தது; விரவுத்திணைத் தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்று வந்தன.

தாரின, ஈண்டையம், ஆண்டையம், பண்டையம், கரியம், செய்கையம் என வினைக்குறிப்பு முற்று வந்தன. யாம் என்னும் பெயர் வருவித்துக் கொள்க. (13)

332. செய்கெ னொருமையுஞ் செய்குமென் பன்மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே.

சூ-ம், எய்தியது இகந்துபடாமற் காத்தல் கூறியது.

(இ-ள்) செய்கென் ஒருமையும் - செய்கு என்னும் விரவுத் திணைத் தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றும், செய்குமென் பன்மையும் - செய்கும் என்னும் விரவுத் திணை தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றும், வினையொடு முடியினும் - வினைகொண்டு முடியும்; முடிந்தாலும் வினையெச்சமெனப்படா; விளம்பிய முற்றே - முன் கூறிய தன்மை முற்றேயாம் என்றவாறு.

உ-ம்: உண்கு வந்தேன், உண்கு வந்தேம் என வரும்.

"வினையொடு முடியினும்" என்ற உம்மையால் முன் விதித்த பெயர் கொள்ளுதல் வலியுடைத்தென்க.

முற்றுச் சொற்றாம் வினையொடு முடியினு
முற்றுச் சொலென்னு முறைமையிற் றிரியா

என்பது அகத்தியம். (14)

## உளப்பாட்டுப் பன்மை முன்னிலை வினைமுற்று

333. முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை

சூ-ம், தன்மையொடு கூடிய முன்னிலை படர்க்கைகள் தன்மையான் அமைந்தன என்றார்; முன்னிலையோடு கூடிய படர்க்கை முன்னிலை யாமோவென்று ஐயுற்றார்க்கு ஐயமறுத்தல் கூறுகின்றது.

(இ-ள்) முன்னிலை கூடிய படர்க்கையும் - தன்மையொடு கூடிய படர்க்கை தன்மையானது போல முன்னிலையோடு கூடிய படர்க்கை யும், முன்னிலை - முன்னிலையான் முடிக்க என்றவாறு.

> உ-ம்: அவனும் நீயும் போமின், அவரும் நீரும் வம்மின்,
>
> "ஒண்டூவி நாராய்நின் சேவலு நீயுமாய், வண்டூது
>
> பூங்கானல் வைகலுஞ் சேறிரால்" எனவும் வரும். (15)

## முன்னிலையொருமை வினைமுற்று

**334.** ஐயா யிகர வீற்ற மூன்றும்
ஏவலின் வரூஉ மெல்லா வீற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே.

சூ-ம், விரவுத் திணை, முன்னிலையொருமைத் தெரிநிலை வினை முற்றும் குறிப்பு வினைமுற்றும் கூறியது.

(இ-ள்) ஐயா யிகர வீற்ற மூன்றும் - ஐ, ஆய், இ என்னும் இம்மூன்று விகுதியும் ஈறாகவுடைய மொழிகளும், ஏவலின் வரூஉ மெல்லா வீற்றவும் - ஏவற்கண் வரும் இருபத்துமூன்று ஈற்றவுமான மொழி களும், முப்பா லொருமை - ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும் மூன்றற் கும் பொதுவான ஒருமைப்பாலையுடைய, முன்னிலை மொழியே - முன்னிலைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம் என்றவாறு.

> உ-ம்: உண்டனை, உண்ணாநின்றனை, உண்குவை, உண்டாய், உண்ணாநின்றாய், உண்பாய்; உண்டி, சென்றி; நட, வா, மடி, சீ, விடு, கூ, ஏ, ஐ முதலாயினவும் கொள்க. தாரினை, தரை யினை, காரினை, காலினை, வலியை, வரவினை தாராய் என வினைக்குறிப்பு முற்று வந்தன. நீ என்னும் பெயர் வருவித்துக் கொள்க. (16)

**335.** முன்னிலை முன்ன ரீயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

சூ-ம், மேலதற்கு எய்தியதோர் விதி கூறுகின்றது.

(இ-ள்) முன்னிலை முன்னர் - ஒருமை முன்னிலை மொழியிடத்து, ஈயு மேயும் - ஈகாரமும் ஏகாரமும், அந்நிலை மரபின் - அவ்விடத்துத் தமக் கேற்ற, மெய்யூர்ந்து வருமே - ஒற்றெழுத்தைச் சேர்ந்து வருவனவும் சிலவுள என்றவாறு.

உ-ம்: "சென்றீ பெருமாநிற் றகைக்குநர் யாரே" (அகம்.46),

"அட்டி லோலை தொட்டனை நின்மே" (நற்.300) என வரும்.

இது புணர்ச்சி விதி அுண்மையின் ஈண்டை வைத்தார் என்க. (17)

## முன்னிலைப் பன்மை வினைமுற்று

336. இர்ஈ ரீற்ற விரண்டு மிருதிணைப்
பன்மை முன்னிலை மின்னவற் றேவல்.

சூ-ம், விரவுத் திணை முன்னிலைப் பன்மைத் தெரிநிலை வினை முற்றும் குறிப்பு வினைமுற்றும் கூறுகின்றது.

(இ-ள்) இர்ஈரீற்ற விரண்டும் - இர், ஈர் என்னும் இவ்விரண்டு விகுதி யினையும் ஈறாகவுடைய மொழிகள், இருதிணைப் பன்மை முன்னிலை - விரவுத்திணை முன்னிலைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம்; மின்னவற்றேவல் - மின் விகுதியை ஈறாக வுடைய மொழிகள் விரவுத் திணை முன்னிலைப் பன்மையாய் ஏவற் பொருண்மையின் வரும் என்றவாறு.

உ-ம்: உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்குவிர்; உண்டீர், உண்ணாநின்றீர், உண்பீர்; உண்மின் என இம்மூவிகுதி சேர்ந்த விரவுத் திணை முன்னிலைப் பன்மைத் தெரிநிலை வினை முற்று. தாரினிர், தரையினிர், காரினிர், காலினிர், வலியினிர் எனவும் தாரினீர், தரையினீர், காரினீர், காலினீர், வலியினீர் எனவும் இவ்விரு விகுதி சேர்ந்த விரவுத் திணை முன்னிலைப் பன்மைக் குறிப்புவினை வந்தன. (18)

## வியங்கோள் வினைமுற்று

337. கயவொரு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப.

சூ-ம், வியங்கோட் டெரிநிலை வினைமுற்று வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) கயவொடு ரவ்வொற் றீற்ற - ககர யகரங்களையும் ரகார வொற்றையும் இம்மூன்று விகுதியையும் ஈறாகவுடைய மொழிகள், வியங்கோள் - வியங்கோட் டெரிநிலை வினைமுற்றாம்; இயலு

மிடம்பா லெங்குமென்ப - அம்மூவிடத்தை தம்பாற்கண்ணும் நடக்கும் என்றார் என்றவாறு.

> உ-ம்: "அமுத முண்க" (நற்.65), நம் மயிலியலாட்டி வாழ்க, வருக, சிறக்க, எழுதுக, துணிக; வாழிய, காணிய, வாழியர், காணியர்; நாம் வருக, தந்தை வாழிய, தாய் வாழிய, நமர் வாழிய என மூவிடத்து இரு திணைக்கண்ணும் வியங்கோட் டெரிநிலை வினைமுற்று வந்தன. (19)

338. வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன.

சூ-ம், வேறு இல்லை உண்டு என்னும் மூன்று சொற்கும் பாலிட உரிமை கூறுகின்றது.

(இ-ள்) வேறில்லை யுண்டு - வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று சொற்களும், ஐம்பான் மூவிடத்தன - ஐம்பால் மூன்றிடத்தினும் ஒழி யாது வரும் குறிப்பு வினைமுற்றுக்களாம்.

> உ-ம்: வேறு அவன், வேறு அவள், வேறு அவர், வேறு அது, வேறு அவை, வேறு யான், வேறு யாம், வேறு நீ, வேறு நீர் என வரும். இவ்வாறு ஒழிந்த வினைக்கும் வருவிக்க. (20)

## பெயரெச்சம்

339. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்பவ னாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

சூ-ம், நிறுத்த முறையானே தெரிநிலைவினைப் பெயரெச்சமும் குறிப்புவினைப் பெயரெச்சமும் கூறியது.

(இ-ள்) செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற் - செய்த, செய்கின்ற, செய்யுமென்னும் வாய்பாட்டான், காலமுஞ் செயலுந் தோன்றி - முக் காலமும் தொழிலும் தோன்றி, பாலொடு - பால் தோன்றாது, செய்பவ னாதி - செய்பவன் முதலான ஆறு பொருளையும், அறுபொருட் பெய ரும் எஞ்ச நிற்பது - பொருளாதி அறுவகைப்பெயரும் ஒழிய நிற்பது, பெயரெச்சம்மே - தெரிநிலைவினைப் பெயரெச்சமும் குறிப்புவினைப் பெயரெச்சமுமாம் என்றவாறு.

> உ-ம்: நின்ற ஒருவன், நிற்கின்ற ஒருவன், நிற்கும் ஒருவன்; எறிந்த வேல், எறியாநின்ற வேல், எறியும் வேல்; பொருத

களம், பொராநின்ற களம், பொரும் களம், செய்த செயல், செய்கின்ற செயல், செய்யும் செயல், வாழ்ந்த நாள், வாழாநின்ற நாள், வாழும் நாள், வனைந்த குடம், வனைகின்ற குடம், வனையும் குடம் என வரும்.

இவ்வாறே ஒழிந்த பால் இடங்களினும் ஒட்டித் தெரிநிலை வினைப் பெயரெச்சம் வந்தவாறு காண்க.

கரிய கொற்றன், சிறிய காலம், சிறிய கால், நல்ல குணம், நல்ல செயல் என வரும்.

ஒழிந்த பால் இடங்களினும் ஒட்டிக் குறிப்புவினைப் பெயரெச்சம் வந்தவாறு காண்க.

ஓடாக் குதிரை, பாடாப் பாணன், கேளா நூல், காணாத நூல் என எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்; இவற்றிற்கு வாய்பாடு ஓடாமலைச் செய்த, பாடாமலைச் செய்த என்று கொள்க. ஓடுதலைச் செய்யாத, பாடுதலைச் செய்யாத என்றுமாம். அல்லாத குதிரை, பொல்லாத பாணன் எதிர்மறைக் குறிப்பு வினைப் பெயரெச்சம். (21)

**340.** செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளு ளும்முந் தாகலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே.

சூ-ம், எதிர்காலத் தெரிநிலைப் பெயரெச்சத்துக்கும் தெரிநிலை வினைமுற்றுக்கும் ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும் - செய்யும் என்னும் பெயரெச்ச வாய்பாட்டுச் சொற்களுட் சில மொழியீற்று உயிர்மெய் கெடுதலும், செய்யுளுளும்முந்தாகலும் - செய்யுட்கண் சில உம் உந்தென்று தோன்றுதலும், முற்றேல் - செய்யுமென்னும் வாய்பாட்டுச் சொல் தெரிநிலை வினைமுற்றாமின், உயிரு முயிர் மெய்யு மேகலும் - சில ஈற்றுயிர் கெடுதலும் சில ஈற்றுயிர் மெய் கெடுதலும், உளவே - உளவாம் என்றவாறு.

உ-ம்: "ஆம்பொருள்கள்" (சீவக.848), போம் பொருள்கள், "வாம்புரவி வழுதி". இவை எதிர்காலப் பெயரெச்சம்; உயிர் மெய் கெட்டன. "கடற்றிரை மிசைப்பாயுந்து" (புறம்.24), "நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து" (புறம்.395), "ஆதித்தன் மேற்கே பாயுந்து". இவை உம் உந்தென்றாயின. "அம்பலூரு மவனொடு மொழிமே" (குறு.51), "சார னடாவென் றோழியுங் கலுழ்மே,"... "பசுத்தான், வெருளினு மெல்லாம வெருண்ம்,"

போன்ம். இவை உயிர் கெட்டன. "ஆம்போதவளோடு மாம்" எனவும் "போம்போ தவளோடும் போம்" என உயிர்மெய் கெட்டன.

இவை மகரவொற்று நிற்றலான் முன் கூறிய பெயரெச்சம்; வினைத்தொகை அல்லவென்க. பிறவுமன்ன. (22)

## வினையெச்சம்

341. தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

சூ-ம், தெரிநிலை வினையெச்சமும் குறிப்பு வினையெச்சமும் வருமாறு.

(இ-ள்) தொழிலுங் காலமுந் தோன்றி - செயலையும் காலத்தையும் காட்டி, பால்வினை ஒழிய நிற்பது - பால் தோன்றாது வினையெஞ்ச நிற்பது, வினையெச்சம்மே - தெரிநிலை வினையெச்சமும் குறிப்பு வினையெச்சமுமாம் என்றவாறு.

உ-ம்: ஓதி வந்தான், பாடி வந்தான், ஓதி நல்லன், பாடி நல்லன், ஓதிப்பெற்ற, பாடிப்பெற்ற, ஓதிப் பெரிய, பாடிப் பெரிய, ஓதி வந்து, பாடி வந்து, ஓதியன்றி, பாடியன்றி எனத் தெரிநிலை வினையெச்சம் வினைகளைக் கொண்டு முடிந்தன. அவனன்றி வந்தான், இவனின்றி வாரான், அவனன்றி நல்லன், இவனின்றி நல்லன், அவனன்றிப் பெற்ற, இவனின்றிப் பெற்ற, அவனன்றி நல்ல, இவனின்றிச் சிறிய, அவனன்றி வந்து, இவனின்றி வந்து எனக் குறிப்பு வினையெச்சம் வினைகளைக் கொண்டு முடிந்தவாறு காண்க.

"காலமும் வினையுந் தோன்றிப் பாறோன்றாது
வினைகொள் ளும்மது வினையெச் சம்மே." (23)

## வினையெச்ச வாய்பாடு

342. செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்.

சூ-ம், வினையெச்சப் பகுதியும் வினையெச்சத்திற்கு வரும் வாய் பாடும் கூறுகின்றது.

(இ-ள்) செய்து - வந்து, எண்ணி, பரீஇ, சினைஇ, ஆறி, ஆடி, அடுக்கி, அண்டி, பொருத்தி, கவ்வி, சொல்லி, உண்டு, இற்று, தின்று,

அற்று; செய்பு - இடுபு, உண்பு, தெரிபு, வணங்குபு, சொல்லுபு; செய்யா - உண்ணா, வணங்கா, கல்லா, காணா, திளையா, வாரா, எண்ணா, ஆறா, ஆடா, அடா; செய்யூ - காணூஉ, படையூஉ, உண்ணூஉ, வணங்கூஉ; செய்தெனச் - பசித்தென, வீழ்ந்தென, உண்டென, பட்டென, இற்றென, தின்றென; செய - கொள்ள, மோப்ப, நோக்க, உண்ண, காண, பாட, வணங்க, படிக்க; செயின் - வேண்டின், காணின், வரின், வரில், வணங்கின், வணங்கில், படில், படின்; செய்யிய - வாழிய, வணங்கிய, உண்ணிய, திண்ணிய, பூணிய; செய்யியர் - அணியியர், பணியியர், காணியர், வாழியர், வணங்கியர், பேணியர், உண்ணியர், திண்ணியர்; வான்- செல்வான், ஓதுவான், உறங்குவான்; பான் - கற்பான், உண்பான், தின்பான், பூண்பான்; பாக்கின - தருபாக்கு, உண்பாக்கு, உரைப்பாக்கு; வினையெச் சம்பிற - இப்பன்னிரண்டும் வினையெச்சமாம்; ஐந்து - இவற்றின் முதலைந்தும் இறந்த காலமும் செய்து, செய்ப, செய்யா, செய்யூ, செய்தென; ஒன்று - இடையில் ஒன்று நிகழ்காலமும், ஆறு - ஒழிந்த ஆறும் எதிர்காலமும் செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு; முக்காலமு முறைதரும் - இவ்வகை முக்காலமும் முறையே காட்டுவனவாம் என்றவாறு. (24)

### வினையெச்சங்கட்கு முடிபு

**343.** அவற்றுள்,
முதலி னான்கு மீற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற.

சூ-ம், தெரிநிலை வினையெச்சத்திற்கு ஆவதோர் இயல்பு கூறியது.

(இ-ள்) அவற்றுள் - மேற்சொன்ன பன்னிரண்டு வாய்பாட்டு வினையெச்சத்தினுள்ளும், முதலினான்கும் - செய்து, செய்பு, செய்யா, செய்யு என நான்கு வாய்பாட்டு வினையெச்சமும், ஈற்றின் மூன்றும் - வான், பான், பாக்கு என்னும் மூன்று வாய்பாட்டு வினையெச்சமும், வினைமுதல் கொள்ளும் - வினைமுதலாகிய தன்வினை கொண்டு முடியும்; பிறவுமேற்கும் பிற - ஒழிந்த ஐந்தும் வினைமுதலாகிய தன் வினையும் பிறிதின் வினையையும் கொண்டு முடியும் என்றவாறு.

உ-ம்: "வாளொடு கனையிருள் வந்து தோன்றினன்" (சீவக. 320), "எண்ணித் துணிக கருமம்" (குறள்.467), "...... நிலந்தலைக் கொண்ட" (புறம்.2), "ஐயம் இட்டு உண்" (ஆத்தி.9) எனச் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் தன்வினை கொண்டன. "இணக்கம் அறிந்து இணங்கு" (ஆத்தி.19), "புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த"

(புறம்.33), "கூடிப் பிரியேன்...", "தெரிபு குத்தின ஏறு" (கலி.103), "சேரிடம் அறிந்து சேர்" (ஆத்தி.51) எனச் செய்பு என்னும் வினையெச்சம் தன்வினை கொண்டது. "பரீஇ யுயிர்செருக்கும்" (நாலடி.220), "கல்லாக் கழிப்பர் தலையா யார்" (நாலடி.366), "காணாக் கழிப்ப ரறிவோர்", "ஐவரொடு கிளைஇ" (புறம்.2), "நிலங்கிளையா வந்த கேழல்" எனச் செய்யா என்னும் வினையெச்சம் தன்வினை கொண்டது. "படு மகன் கிடக்கை காணூஉ, ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" (புறம்.278), "நிலம் புடையூஉ வெழுதரு வலம்படு குஞ்சரம்" ("இலங்குதொடி" எனத் தொடங்கும் பதிற்.) எனச் செய்யூ என்னும் வினையெச்சம் தன்வினை கொண்டது. ஆகவே முதலினான்கும் வினைமுதலும் இறந்த காலமும் தழுவின.

"கொல்வாம் கொடித்தானை கொண்டெழுந்தான்" (பு.வெ.99), புரவலன் புரிவான் றொடுத்த கரும மனைத்துஞ் சொன்னான், ஓது வான் போனான், உறங்குவான் வந்தான் எனவும் கல்வி கற்பான் வந்தான், உண்பான் வந்தான் எனவும் "புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்" (கார்நாற்பது.11), உண்பாக்கு வந்தான் எனவும் ஈற்றின் மூன்றும் வந்தன; வினையும் எதிர்காலமும் ஏற்றன.

"பசித்தென... யானைக் கோடுநொடுத் துண்ணும்" (குறு. 100), யானை வீழ்ந்தென அலறா நிற்கும், வெட்டெனப் போவார், "வீழ்ந்தென குளிர்கொண்டு, பேஎ நாறுந் தாணீர்ப் பனிச்சனை" ("பையுண் மாலை"யெனத் தொடங்கும் பாடல்) என வரும் செய் தென என்னுமீறு தன்றொழிலும் பிறிதின்றொழிலும் இறந்த காலமும் ஏற்றது. பசித்தெனப் புனமேயா வென்றோ புலிமாரி பெய்தென மலர்ந் தன முல்லைமேல் என்பனவும் அவை.

மோப்ப வெடுத்தான், "மோப்பக் குழையுமனிச்சம்" (குறள்.90),

விண்டு பெய்ய விரிந்தன முல்லைமேல்
வண்டு பாட வந்தாடின மஞ்ஞையைக்
கண்டு வாழ மணிக்கழ லார்குழுக்
கொண்டு போக வெங்கொய்யுளி யேறினார்.

எனவும் செயவென்னீறு தன்வினையும் பிறவினையும் நிகழ்காலமும் ஏற்றது. "கொளக் குறைபடா கூழுடை வியனகர்" (புறம்.70), "பீடு பெற நில்" (ஆத்தி.80) புகழ் பெற வாழ், "வீடு பெற நில்" (ஆத்தி.102), "பிழைபடச் சொல்லேல்" (ஆத்தி.79) என்பனவும் அவை.

"தாம்வேண்டி னல்குவர் ச லர் யாம்வேண்டிற், கவ்வை யெடுக் குமிவ் வூர்" (குறள்.115( 'பீரம் பேணிற் பாரந் தாங்கும்" (கொன்றை.62), "ஊருடன் பகைக்கில் வேருடன் கெடும்" (கொன்றை.6), "கவ்வைச் சொல்லின் எவ்வருக்கும் பகை" (கொன்றை.25), "வேந்தன் சீறின் ஆந்துணை யில்லை" (கொன்றை. 88) எனச் செயினென்னீறு தன்வினையும் பிறவினையும் எதிர்காலமும் ஏற்றது.

"காணியவா வாழி தோழி" (கலி.42) எனவும் "மாணிழை யரிவை காணி வொருநாள், பூண்க மாளநின் புனைவினை நெடுந்தேர்" (பதிற்.81) எனவும் செய்யியவென்னீறு தன்வினையும் பிறவினையும் எதிர்காலமும் ஏற்றது. பசலை யுணியியர் வருந்தினன், "கொற்கைச் செழியர் கொங்கர்ப் பணியியர்... பழையன் வேல்வாய்த் தன்ன" (நற்.10) என வரும் செய்யியரென்னீறு தன்வினையும் பிறவினையும் எதிர்காலமும் கொண்டது.

"பிற" என்ற மிகையானே சிறுபான்மை தொழிற்பெயர் கொண்டு முடிவனவென்க.

உண்டு வருதல், உண்குபு வருதல், உண்ணா வருதல், உண்ணூஉ வருதல், பசித்தென உண்டல், வாழக் கருதல், மழை பெயின் விளைதல், காணிய சேறல், மழை பெய்யியர் எழுதல், கொள் வான் போதல், உரைப்பான் தொடங்கல், உண்பாக்கு வருதல் என வரும்.

"விருந்தின்றி யுண்ட பகலும்" (திரி.44), "துயிலின்றி யானீந்த" (கலி.30), "நாளின்றிப் போகிப் புள்ளிடை தட்பப், பதனன்றிப் புக்குப் பயனன்றி மொழியினும்" (புறம்.124) எனக் குறிப்பு வினை யெச்சம் வந்தவாறு காண்க. பிறவாறு வருவனவும் ஆராய்ந்து கொள்க. (25)

**புறநடை**

**344. சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்.**

சூ-ம், இவ்வினையெச்சத்திற்கோர் புறநடை கூறுகின்றது.

(இ-ள்) சினைவினை - சினையைச் சேர்ந்த வினையெச்சமாமேயெனில், சினையொடு - சினைவினைதன்னுடனும் முடியும், முதலொடுஞ் செறி யும் - முதல்வினையொடும் முடியும் என்றவாறு.

உ-ம்: கையிற்று வீழ்ந்தது, கையிற்று வீழ்ந்தான்; கையிறுபு வீழ்ந்தது, கையிறுபு வீழ்ந்தான்; கையிறா வீழ்ந்தது, கையிறா

வீழ்ந்தான்; கையிறூஉ வீழ்ந்தது, கையிறூஉ வீழ்ந்தான்; முலை சுரந்தது, கொடுத்தது, முலை சுரந்து கொடுத்தாள் என வரும். (26)

**345. சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை.**

சூ-ம், வினையெச்ச மயக்கம் கூறுகின்றது.

(இ-ள்) சொற்றிரியினும் - தத்த வினையெச்ச உருபுகள் ஓர் உருபு மற்றோர் உருபாய்த் திரிந்து வருவன உளவேனும், பொருள் திரியா - தத்தம் பொருளிற் றிரியாமல் தத்தம் பொருள் பெறவே நிற்கும், வினைக்குறை - வினையெச்சப் பகுதி என்றவாறு.

உ-ம்: ஞாயிறு பட்டு வந்தான், கோழி கூவிப் பொழுது புலர்ந்தது, "உறற்கால் யானை ஒடித்துண் டெஞ்சிய, யாஅ வரி நிழற் றுஞ்சும்" (குறு.232), "செந்நா யேற்றை கேழ றாக்கி... செங்கா யுதிர்ந்த பைங்குலை மீந்தின்" (அகம்.21) என செயவெனெச்ச உருபு திரிந்தது. (27)

**346. ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா.**

சூ-ம், ஆக்கவினைக் குறிப்புக் கொண்டு முடியும் வினையெச்சத் திற்கோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) ஆக்க வினைக் குறிப்பு - வினையெச்சம் கொண்டு முடியும் ஆக்கவினைக்குறிப்பு, ஆக்கமின்றியலா - தன்மேல் ஒரு ஆக்க வினைச் சொல்லன்றி வாரா என்க.

உ-ம்: மருந்துண்டு திண்ணியனாயினான், கல்வியோதி நல்ல னாயினான், அறங்கேட்டு அருளுடையனாயினான் எனவும் வரும். ஆயினான் என்பது ஆக்கம். "வேங்கையுங் காந்தளு நாறி, ஆம்பல் மலரினுந் தான்றண் ணியளே" (குறு.84), "குருதி படிந்துண்ட காகம் உருவிழந்து, குக்கிற் புறத்த" (களவழி.5) இவையெல்லாம் செய்யுளாதலால் ஆக்கவினைக் குறிப்பு தொகுக்கப்பட்டன. (28)

## செய்யுமென் முற்று

**347. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்**
**செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.**

சூ-ம், செய்யுமென்னும் முற்றுச் சொல்லுக்குத் திணை பால் இடம் கூறுகின்றது.

(இ-ள்) பல்லோர் படர்க்கை - உயர்திணைப் பலர்பாற் படர்க்கை யிடத்தும்,...

செல்லாது - இவையிற் சிலவே செல்லாமல், ஆகும் - ஒழிந்த உயர்திணை ஆணொ ருமையினும் பெண்ணொருமையினும் அஃறிணையொருமையினும் அஃறிணைப் பன்மையினும் ஆகும், செய்யு மென் முற்றே - செய்யுமென்னும் நிகழ்கால வினைமுற்று என்றவாறு.

உ-ம்: அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும். (29)

### பாற்பொது வினா வினைக்குறிப்பு

**348.** யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.

சூ-ம், உயர்திணை முப்பாற்கும் பொதுவான வினாவினைக் குறிப்பு வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) யாரென் வினாவினைக் குறிப்பு - வினாப் பொருண்மைக் கண் வரும் யாரென்னும் வினைக்குறிப்புச் சொல், உயர் முப்பால், உயர் திணை மூன்று பாற்கும் பொதுவாம் என்றவாறு.

உ-ம்: யார் அவன், யார் அவள், யார் அவர் என வரும். சிறு பான்மை தன்மை முன்னிலையிடத்தும் அஃறிணையிடத்தும் வரும். நீ யார், நீர் யார். இவ்வகைக்கு யான் யார், நாங்கள் யார், இக்கிளி யார் என வரும்.

யார் என்னும் வினா யாவர் என்றும் வரும். இக்காலத்து ஆர் என்றும் ஆரை என்றும் வரும். (30)

**349.** எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.

சூ-ம், அஃறிணை இரு பாற்கும் வினைக் குறிப்பு வருமாறு கூறு கின்றது.

(இ-ள்) எவனென் வினாவினைக் குறிப்பு - வினாப் பொருண்மைக் கண் வரும் எவனென்னும் வினைக்குறிப்புச் சொல், இழி இருபால் - அஃறிணை இரு பாற்கும் பொதுவாம் என்றவாறு.

உ-ம்: எவன் அது, எவன் அவை என வரும்.

என்னை என்றும் என்ன என்றும் என் என்றும் வரப் பெறும். அது என்னை, அவை என்னை; அது என்ன, அவை என்ன; அது என், ... ...

இக்காலத்து என என்றும் பெறும்.

அது என, அவை என. (31)

## புறநடை

**350. வினைமுற் றேவினை யெச்ச மாகலும்**
**குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே.**

சூ-ம், தெரிநிலை விஏனமுற்றுக் குறிப்பு வினைமுற்றுச் சொற்கட்கு எய்தாதோர் இயல்பு கூறியது.

(இ-ள்) வினைமுற்றே வினையெச்ச மாகலும் - தெரிநிலை வினை முற்றுச் சொல் வினையெச்சமாகி வருதலும், குறிப்பு முற்று ஈரெச்ச மாகலு முளவே - குறிப்பு வினைமுற்றுச் சொல்லாயது வினையெச்ச மாகியும் பெயரெச்சமாகியும் வருதலுமுள என்றவாறு.

உ-ம்: "காணான் கழிதலு முண்டென் றொருநாள்" (கலி.37), "மோயின ளுயிர்த்த காலை" (அகம்.5), மொய்த்து "முகந்தனர் கொடுப்ப" (புறம்.33), "விளிப்பது பயிலுங் குறும்பர் துந் துமியொடு", "எருவைநுண் டாது குடைவன வாடி" (குறு.46) என வரும். "பெயர்த்தனன் முயங்கியான்" (குறு.84), "மக்களு ளிரட்டையாய் மாறினம் பிறந்துயாம்" என வரும். "சேர்ந்தனை சென்மோ பைந்தார் மார்ப" ("எம்மூ ரல்லது" எனத் தொடங்கும் பாடல்), "கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்" (பெரும் பாண்.392) என மூவிடத்து ஐம்பாலினும் வந்த தெரிநிலை வினைமுற்று வினையெச்சமாயின.

"வரிபுனை வில்ல னிருகனை தெரிந்துகொண்டு" (அகம்.48), "அளிநிலை பெறாஅ தமரிய முகத்தள், விளிநிலை கேளாள்" (அகம். 5), "உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து" (திருமுருகு.185), "விழுமிது கழிவ தாயினும்" (குற.253), "நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்து" (புறம்.44) என வரும். "துணைமி னெஞ்சினேன் றுயருழந் தினையேன்", "நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சி" (113) என வரும். "நீர்வார் கண்ணை நீமிவணொழிய" (குறு.22), "வெள்வேல் வலத்தினிர் பொருடரல் வேட்கையி, னுள்ளிர்" (கலி.4), "பெருவரை மிசையது" (குறு.74) என வினைக்குறிப்புமுற்றுத் தன்வினை வினையெச்சக் குறிப்பாயினவாறு காண்க.

"வெந்துப்பினன் விறல்வழுதி", "அஞ்சாயல ளாயிழை", "கடற் றானை யார்த்தார் வேந்தர்", "பெருவரை மிசையது நெடுவெள் ளருவி" (குறு.74), "புன்றா ளோரமைய சுரனிறந் தோரே" (குறு. 260), "பெருவேட்கையே னென்னிற் பிரிந்து", "கண்புரை காதலே மெம்மு முன்ளோர்", "உலங்கொ டோளினை நின்னால் வந்தேன்",

"வினைவேட்கையிர் வீரருள் வம்மின்" வினைக்குறிப்பு முற்றுக்கள் ஐம்பால் மூன்றிடத்தும் பெயரெச்ச வினைக்குறிப்பாயின. இவை இவ்வாறு வருவதன்றிப் பெயர்ப்படாதெனக் கொள்க. எச்சந்தானே திணை பால் இடம் விளங்கிற்றென அமையாதோவெனின் முற்கூறிய வினையெச்ச இலக்கணம் வழுவாமென்க. இவற்றுட் பிறவினை கொள்ளுமாறு அம்மை "விண்ணிற் றூவியட்டான் வந்து வீழ்ந்தனவே" (சீவக.894), "கலைத்தொழில் பாடினான் காமுகர் மயங்கினார்", "பகழி சிந்தினார் பலபடை மாய்ந்தன", "மன்னன் மனநூல் அறிந்தான் உலகம் வாழ்ந்தது" என வரும். (32)

**இரண்டாவது வினையியல் முடிந்தது.**

மூன்றாவது

# பொதுவியல்

### கடவுள் துணை

## பெயர் வினைகளின் இலக்கணம்

351. இருதிணை யாண்பெணு ளொன்றனை யொழிக்கும்
பெயரும் வினையுங் குறிப்பி னானே.

சூ -ம், பொதுவாகிய பெயர்க்கும் பொதுவாகிய வினைக்கும் எய்திய தோர் இலக்கணம் கூறியது.

(இ-ள்) இரு திணை - உயர்திணையிடத்தும் அஃறிணையிடத்தும், ஆண் பெண்ணுள் - ஆண்மைப் பொருளினும் பெண்மைப் பொருளினும், ஒன்றனை யொழிக்கும் - ஒன்றனையொன்று ஒழிந்துநிற்கும், பெயரும் வினையும் - அவ்விரு பாற்கும் பொதுவான பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும், குறிப்பினானே - சொல்லுவான் குறிப்பினால் என்றவாறு.

உ-ம்: வடுகரசர் ஆயிரமக்களை உடையர் எனவும் இவை பத்து மானிடத்தின் முலைப்பால் எனவும் உயர்திணைப் பெண்ணொழி பொதுப் பெயரும் ஆணொழி பொதுப் பெயரும் வந்தன. அரசர் ஆயிரமக்களொடு தாவடி போயினார், இன்று இச்சேரியாரும் அச்சேரியாரும் பொருவார் எனவும் இவ்வூரார் எல்லாரும் தைந் நீராடின் ஆடுப எனவும் உயர்திணைப் பெண்ணொழி வினையும் ஆணொழி வினையும் வந்தன. நம்மரசன் ஆயிரம் யானையை உடையன் எனவும் இவ்வூர் வணிகன் நூறு எருமை உடையன் எனவும் அஃறிணைப் பெண்ணொழி பெயரும் ஆணொழி பெயரும் வந்தன. இவ்வூர்ப் பெற்றமெல்லாம் உழுதன, இவ் வூர்ப் பெற்றமெல்லாம் கறக்கும் என அஃறிணைப் பெண் ணொழி வினையும் ஆணொழி வினையும் வந்தன. (1)

352. பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.

சூ-ம், பெயர்ப் பகுபதமும் வினைப் பகுபதமும் செய்யுளிடத்து வந்தால் இவ்விகுதி பெறுமெனக் கூறுகின்றது.

(இ-ள்) பெயர்வினையிடத்து - பெயர்ப் பகுபதத்தின்கண்ணும் வினைப் பகுபதத்தின்கண்ணும், ன ள ர ய வீற்றயல் ஆ - ஈற்றினின்ற ன ள ர யக்கள் - ஈற்றயலினின்ற ஆகாரம், ஓ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே - ஓகாரமாகலும் செய்யுட்கண் உரித்தாம் என்றவாறு.

உ-ம்: வெண்குழையோன், இளையோள், தொழுகுலத்தோர், குழையோய், கூற்றை யுதைத்தோன், மயிலிடர் செற்றோன், உயர்ந்தோர், உயர்ந்தோய் எனப் பெயர்க்கண்ணும் வினைக் கண்ணும் வந்தன. (2)

**353. உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினும்
திரியர் தத்த மீற்றுருபி னென்ப.**

சூ-ம், வேற்றுமை உருபுகட்கும் வினைச்சொற்கும்' உரியதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) உருபும் வினையும் - எண் வகை வேற்றுமை உருபுகளும் மூவகை வினைச் சொற்களும், எதிர்மறுத்து உரைப்பினும் - எதிர் மறுத்துச் சொல்லுமிடத்தும், திரியா தத்த மீற்றுருபினென்ப - தத்தம் ஈற்றுருபுகளின் வேறுபடாவென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: ஆ வாராது, மரத்தை வெட்டான், சாத்தனொடு வாரான், சாத்தற்குச் சிறப்பெடான், மலையின் இழியான், சாத்தனது இல்லாமை, ஊரின்கண் வாரான், சாத்தா வாளாவிரு என வேற்றுமை உருபு திரியாது வந்தன. உண்ணான் சாத்தன், உண்ணாள் சாத்தி, உண்ணார் சாத்தர், கூவாது குயில்கள், பேசா கிளிகள், உண்ணேன் யான், உண்ணேம் யாம், உண்ணாய் நீ, உண்ணீர் நீர் என முற்றுவினை திரியாது வந்தன. உண்ணாத அவன், உண்ணாத அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ , நீர் எனப் பெயரெச்சம் திரியாது வந்தன. உண்ணாது வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தேன், வந்தேம், வந்தாய், வந்தீர் என வினையெச்சம் திரியாது வந்தன. ஒழிந்த குறிப்பு வினைப் பெயரெச்சம் குறிப்பு வினையெச்சங்களுக்கும் எதிர் மறுத்துச் சொல்லுதலும் உரியவுளவேற் காண்க.

உண்ணாத, தின்னாத என்னும் பெயரெச்சம் சிறுபான்மை உண்ணா, தின்னா என வரும். (3)

## உருபும் வினையும் அடுக்கி முடிதல்

**354. உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினும்**
**ஒருதம் மெச்ச மீறுற முடியும்.**

சூ-ம், இதுவும் எண் வகை வேற்றுமை உருபுகட்கும் வினைச் சொற்குமுரியதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) உருபுபல வடுக்கினும் … … வினைச்சொற்கள் மூன்றும் தம் முள் விரவாது வேறு வேறடுக்கி வந்தாலும், ஒருதம் மெச்சம் - தத்த மெச்சமாகிய பெயர் வினைகளினொன்று, ஈறுற முடியும் - இறுதி யிலே வர அதனோடு அனைத்தும் முடிவனவாம் என்றவாறு.

உ-ம்: கட்கினியாள் காதலாள் ஊராள் பெண், காலார் கழலார் வேலார் சேர்ந்தார், வேலால் வாளால் தேரால் குதிரையால் வென் றார் என இவை உருபொன்றே அடுக்கி இறுதி பெயரொடும் வினையொடும் முடிந்தன. யானையது கோட்டை வாளாற் குறைத்தான், கொற்றியர் நல்லூரிற் சாத்தரது மகற்குப் பிள்ளையைக் கொடுத்தார், கொற்றி நல்லூரிற் பூதருடைய மகற்குச் சாத்தி முறை மருமகள் என உருபு பல அடுக்கி இறுதி ஒரு வினை பெயர் கொண்டு முடிந்தன.

உண்டான் தின்றான் ஓடினான் பாடினான்; வருதி பொருதி வருந் துதி பொருந்துதி புலம்புதி நீ; இளையள் மெல்லியள் சிறியள் மடந்தை; அரிய செய்ய தண்ணிய புதிய பெருங்கான் யாறு என வினை வினைக்குறிப்பு முற்று விரவாது அடுக்கி ஒருமைப் பெயர் கொண்டன. வந்த உயர்ந்த துறந்த பெரியோர்; "சிறிய பெரிய நிகர் மலர்க் கோதை" ("சீறடிப் பேரகலெ"னத் தொடங்கும் பாடல்) எனத் தெரிநிலைப் பெயரெச்சமும் குறிப்புவினைப் பெயரெச்சமும் அடுக்கி ஒரு பெயர் கொண்டன. பிறந்து தவழ்ந்து நடந்து வளர்ந்து தளர்ந்து பெரியோர் ஆயினார்; அவனன்றி இவனன்றி வாரான். (4)

**355. உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்**
**பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.**

சூ-ம், எண் வகை வேற்றுமைப் புணர்ச்சித் தொடர் மொழிக்கும் வினை புணரும் புணர்ச்சித் தொடர் மொழிக்கும் ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) உருபு - எண் வகை வேற்றுமை உருபுகளும், முற்று - தெரி நிலை வினைமுற்றுக்களும் குறிப்பு வினைமுற்றுக்களும், ஈரெச்சம் -

தெரிநிலை வினைப் பெயரெச்சங்களும் குறிப்பு வினையெச்சங் களும், கொள்ளும் பெயர்வினை யிடை - தாந்தாங் கொள்ளும் பெயர் வினைக்கு நடுவே, பிற வரலுமா மேற்பன - ஆண்டைக்கு ஏற்பனவான பிற சொற்களும் வரப்பெறும் என்றவாறு.

உ-ம்: சாத்தன் இன்று பகல் வயிறார உண்டான், அறத்தை அழகு பெறச் செய்தான், வாளான் மருவாரை மாய வெட்டினான், தேவர்க்குச் செல்வம் வேண்டிச் சிறப்பு எடுத்தான், மலை யினின்று உருண்டு புரண்டு வீழ்ந்தான், சாத்தனது மத்தகக் களிற்று யானை, ஊர்க்கண் உயர்ந்த ஒளி மணி மாடம், சாத்தா கூத்தற்குக் கூறை எடுத்துக் கொடு என வரும். "பாடினான் தேவகீதம் பண்ணினுக் கரசன்" (சீவக.2052), "அழுதான் மன னொந் துணங்கிழையே" என வரும். "இரங்கின நன்மை யுள்ள வென்றோழி" என வரும். பெரிய வெங்க ளருந்தவ முனிவர் என வரும். பிறந்து வெகுநாட் பூமியிலே யிருந்தான், "உப்பின்றிப் புற்கை யுண்கமா கொற்கை யோனே" என வினைப்புணர்ச்சி யினும் இடைப் பிறவரல் காண்க.

"ஏற்பன" எனவே ஏலாதன வரப்பெறா என்பதாம். அவை வல்ல மெறிந்த நல்லிளங் கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி என்பதனுள் வல்லமெறிதல் பெருவழுதி மேற்றேயெனில் நல்லிளங் கோசர் தந்தை என்பதனை இடை நிறுவின் ஏலாதாம் வல்லமெறிந்த மல்லல் யானைப் பெருவழுதி நல்லிளங் கோசர் தந்தையெனின் ஏற்பதாம். பிறவுமன்ன. (5)

## முடிக்குஞ்சொல் நிற்குமிடம்

**356. எச்சப் பெயர்வினை யெய்து மீற்றினும்.**

சூ-ம், உருபும் வினையும் கொண்டு முடியும் பெயரும் வினையும் நிற்கும் இடம் கூறுகின்றது.

(இ-ள்) எச்சப் பெயர்வினை - உருபு, முற்று, பெயரெச்சம், வினை யெச்சம் என்பனவற்றிற்கு எச்சமாய் வரும் பெயரும் வினையும், எய் தும் ஈற்றினும் - அவற்றின் ஈற்றின்கண்ணே வந்து நிற்கும் என்ற வாறு.

உம்மையால் முதலினுறழ வருமென்க.

உ-ம்: சாத்தன் வந்தான், மரத்தைக் குறைத்தான், சாத்தனோடு வந்தான், சாத்தற்குக் கொடுத்தான், சாத்தனின் நீங்கினான், சாத்தனது ஆடை, சாத்தற்கட் சென்றான், சாத்தா வா என உருபு கொள்ளும் பெயர் வினைகள் ஈற்றில் வந்தன. வந்தான் சாத்தன்,

குறைத்தான் மரத்தை, வந்தான் சாத்தனோடு, கொடுத்தான் சாத்தற்கு, நீங்கினான் சாத்தனின், ஆடை சாத்தனது, சென்றான் சாத்தன்கண், வா சாத்தா என முதலினும் வந்தன. உண்டான் சாத்தன், உண்டாள் சாத்தி, சாத்தன் உண்டான், சாத்தி உண்டாள் என முதலினும் ஈற்றினும் முற்று வந்தது என்க. உண்டு வந்தான், உண்டு வந்தாள், வந்தான் உண்டு, வந்தாள் உண்டு என வினையெச்சம் முதலினும் ஈற்றினும் வந்தன. பெயரெச்சம் ஈற்றிலன்றி முதலின் வாராவெனக் கடாவிடை காட்டி மறுக்க. (6)

**357. ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.**

சூ-ம், பெயர்ச்சொல் வினைச்சொற்கட்கு எய்தியதோர் இயல்பு கூறு கின்றது.

(இ-ள்) ஒருமொழி - ஒரு பெயர்ச்சொல்லும் ஒரு வினைச்சொல்லும் நின்றே, ஒழிதன் இனம் - ஒழிந்த தன்னினங்களையும், கொளற் குரித்தே - தழுவுதற்கு உரித்தாம் என்றவாறு.

உ-ம்: "தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடி" (நாலடி. 43), நஞ்சுண்டான் சாவான், பார்ப்பான் கள்ளுண்ணான் என நின்ற ஒரு மொழிக்கு இனமான தீம்பூ, இலவங்கம், சாதி முதலானவும் தின்று எனவும் நஞ்சுண்டாள் சாவாள், பார்ப்பனி கள்ளுண்ணாள் எனவும் ஒழிந்த பாலினும் வந்து தமக்கு இனமானவற்றையும் தழுவின. (7)

**358. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்<br>மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.**

சூ-ம், பொதுப்பெயர்க்கும் பொதுவினைக்கும் ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) பொதுப்பெயர் வினைகளின் - திணை பால் இடங்கட்குப் பொதுவாய் நின்ற பெயர் வினைகளுடைய, பொதுமை நீக்கும் - பொதுமையை நீக்கி ஒன்றற்கு உரித்தாக்கும், மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே - அவற்றின்மேல் வரும் பொதுவல்லாத சிறப்புப் பெயரும் சிறப்பு வினையும் என்றவாறு.

உ-ம்: சாத்தன் இவன் மகன், சாத்தன் இதன் மகன்; முடவன் இவன் மகன், முடவன் இதன் மகன்; முடக்கொற்றன் இவன் மகன், முடக்கொற்றன் இதன் மகன்; தந்தை இவன், தந்தை இது எனச் சிறப்புப் பெயர் ஒரு திணைக்கு உரிமை செய்தன. யான் யாம் நீ நீர் முதலான இரு திணைப் பொதுப் பெயர்.

அவற்றை யான் பாணன், யான் பாடினி,. யான் கடுவன், யான் பேடை எனச் சிறப்புப் பெயர் ஒன்றற்கு உரிமை செய்தன. இவ் வகை ஒழிந்த பொதுப் பெயர்க்கும் கொள்க. வந்த, வருகின்ற, வரும் என்பன இரு திணைக்கும் பொதுவான வினை.

இவற்றை வந்த அவன், வந்த அவள், அது, அவை எனச் சிறப்புப் பெயர் ஒரு திணைக்கு உரித்தாக்கின. சிறிய பெரிய என்பன இரு திணைப் பொதுவான வினை. இவற்றைச் சிறிய நம்பி, சிறிய நங்கை, சிறிய மயில், சிறிய மயில்கள் எனச் சிறப்புப் பெயர் ஒரு திணைக்கு உரித்தாக்கின. வந்து, பயிற்றி, நடத்தி என்பன இரு திணைப் பொது வினை. இவற்றை வந்து போனான், போனாள் எனச் சிறப்பு வினை ஒரு திணைக்கு உரித்தாக்கின. பிறவுமன்ன: இவ் வாறன்றி யான் வருவேன், யாம் வருவேம், நீ வருவாய், நீர் வருவீர் எனப் பொதுப் பெயர் பொது வினைகளான் விளங்கா என்க. (8)

### எச்சங்களின் வகையும் முடிபும்

359. பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை
எதிர்மறை யிசையெனுஞ் சொல்லெழி பொன்பதும்
குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும்.

சூ-ம், எச்சங்களின் வகையும் முடிபும் கூறுகின்றது.

(இ-ள்) பெயர்வினை யும்மை - பெயரெச்சமும் வினையெச்சமும் உம்மையெச்சமும், சொற் பிரிப்பென - சொல்லெச்சமும் பிரிநிலை யெச்சமும் எனவெனெச்சமும், ஒழியிசை எதிர்மறை யிசை - ஒழியிசை யெச்சமும் எதிர்மறையெச்சமும் இசையெச்சமும், எனுஞ்சொல்லொழி பொன்பதும் - என்று சொல்லப்படும் அச்சொல்லெச்சம் ஒன்பதும், குறிப்பும் - குறிப்பெச்சம் ஒன்றும் ஆகப் பத்தெச்சமும், தத்த மெச்சங் கொள்ளும் - தத்தம் குறைபாடாகவுடைய எச்சங்களைக் கொண்டு முடியும் என்றவாறு.

உ-ம்: பிறர் "இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்" தான் "புணரின் வெகுளாமை நன்று" (குறள்.308), "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்" புலவர் "கண்ணென்ப" உலகத்தில் "வாழு முயிர்க்கு" (குறள்.392) இவற்றுள் எஞ் சிய பெயர் கொண்டு முடிதலின் பெயரெச்சமாயின.

கொள்ளும் "காலங் கருதி யிருப்பர் கலங்காது, ஞாலங் கருது பவர்" (குறள்.485), "நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம், மண் மாண் புனைபாவை" எழில் நலம் எற்று "அற்று" (குறள்.407). இவ்வாறு வினைகொண்டுமுடிதலின் வினையெச்சமாயின. மனனை

"எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங், கள்ளாமை காக்கதன் னெஞ்சு" (குறள்.281). இவ்வெச்சமாகிய உருபுச் சொல் லும் வினைக்குறிப்பாய் அடங்குதலின் வினையெச்சத்தின்பாற்படு மென்க.

இரு கை வீசி நடந்தான், இரு தோள் தோழர் பற்றினார். இவற்றை இரு கையும் வீசி எனவும் இரு தோளும் பற்ற எனவும் உம்மை கொண்டு முடிதலின் உம்மையெச்சம் ஆயின.

"கைம்மாலை மிட்டுக் கலுழ்ந்தா டுணைமில்லார்க், கிம்மாலை யென்செய்வ தென்று" (நாலடி.393), "சுவையொளி யூறோசை நாற்றமென்று" சொல்லப்படும் ஐந்திணைத் "தெரிவான் கட்டே யுலகு" (குறள்.27). இவற்றுள் எஞ்சிய சொற்கொண்டு முடிதலிற் சொல்லெச்சம் ஆயின.

எஞ்ஞான்றும் "அறிமி னறநெறி", எஞ்ஞான்றும் "அஞ்சுமின் கூற்றம்", எஞ்ஞான்றும் "பொறுமின் பிறர்கடுஞ்சொல்", எஞ்ஞான் றும் "போற்றுமின் வஞ்சம்", எஞ்ஞான்றும் "பெறுமின் வினை செய்யார் கேண்மை", "எஞ்ஞான்றும் பெறுமின் பெரியார் வாய்ச் சொல்" (நாலடி.172). "எஞ்ஞான்றும்" என நின்றதனைப் பிரித்துப் பிறவழியும் கூட்டி முடிக்க வேண்டுதலிற் பிரிநிலையெச்சம் ஆயிற்று.

"எடுத்தலும் படுத்தலு மாமிரண் டல்லது, நலித லில்லை யென் பாரு முளரே" என்பதில் எடுத்தலெனவும் படுத்தலெனவும் ஆமிரண் டல்லதெனவும் எனவென்பது கொண்டு முடிதலின் எனவெனெச்ச மாயின.

இன்னா செயினும் மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது

(நாலடி.76)

என்பதின் மனிதர்க்குக் கைவிடுதல் அரிது என நின்றமையான் ஒழி மிசையெச்சமாயிற்று.

"பிறவிப் பெருங்கட னீந்துவர்" இறைவனடி சேர்ந்தார்.

"நீந்தார், இறைவ னடிசேரா தார்" (குறள்.10) இதனுள் இறை வனடி சேர்ந்தார் என்பது கொண்டு முடிதலின் எதிர்மறையெச்ச மாயிற்று.

இனி இசையெச்சமாவது ஒன்று சொல்ல வேறு பொருளை இசைத்தல். "பாய்பரி மாவோடும் வந்தன னடி... செய்வதற்கென் றான்", குமரியாட வந்தேன், யானையெய்ய வந்தேன், மயிலெய்ய வந்தேன் என ஒன்று சொல்ல வேறு பொருள் கொண்டு முடிதலின் இசையெச்சமாயின.

இங்ஙனம் கூடிய ஒன்பதும் சொல்லெச்சம் ஆகியவாறு காண்க. இனிக் குறிப்பெச்சம் வருமாறு சொல்லுவாம்.

குறிப்புப் பொருள் கொண்டு முடிவது :

"பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்" (குறள்.475).

"கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து" (குறள்.476).

"மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப

"மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ் கொளினே" (குறு.17)

என இவை முறையே மெலியரும் பலர் தொகின் வலியராகுவர் எனவும் இவ்விடம் இவர்க்குச் செல்லும் இவ்விடம் இவர்க்குச் செல்லாது எனவும் யானும் அவ்வண்ணம் செய்வேன் எனவும் சொல் லுவான் குறித்த பொருள் கொண்டு முடிதலின் குறிப்பெச்சமாயின.... நுவலாநுவற்சி என்பர். (9)

## தொகைநிலைத் தொடர்மொழி

360. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை
ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழியோ னடப்ப தொகைநிலைத் தொடர்ச்சொல்.

சூ-ம், மேற்றொடர்மொழி என்றார்; அது தொகைநிலைத் தொடர் மொழியென்றும் தொகாநிலைத் தொடர்மொழியன்றும் இரண்டாம். அவற்றுள் தொகைநிலைத் தொடர்மொழியாமாறு கூறுகின்றது.

(இ-ள்) பெயரொடு பெயரும் - பெயருடனே பெயர் புணருமிடத்தும், வினையும் - பெயருடனே வினை புணருமிடத்தும், வேற்றுமை முதலிய பொருளின் - வேற்றுமை முதலானவற்றின், அவற்றினுரு

பிடை ஒழிய - அவற்றின் உருபுகளை இடையே ஒழித்து, இரண்டு முதலாத் தொடர்ந்து - இரண்டு சொல் முதலாகத் தொடர்ந்து, ஒரு மொழிபோ னடப்ப - ஒரு மொழி பெயர்ச்சொல் போலவும் ஒரு வினைச் சொல் போலவும், தொகைநிலைத் தொடர்ச்சொல் - தொகைநிலைத் தொடர்மொழிகளாம் என்றவாறு.

அரும்பதவுரை: ஒரு மொழி போலாவது பல சொல்லேனும் தொடர்ந்து ஒற்றுமைப்பட்டு ஒரு பெயர்ச்சொல்லாய் எட்டு வேற்றுமைகளையும் ஏற்று நிலைமொழி வருமொழிகளாய்ப் புணர்ச்சி வகை ஏற்றலும் ஒரு வினைச் சொல்லாய்ப் பெயர் ஏற்பது முதலான வினை இலக்கணமெல்லாம் ஏற்பது எனக் கொள்க. (10)

**361.** வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும்.

சூ-ம், தொகைநிலைத் தொடர்மொழியது பெயரும் முறைமையும் தொகையும் கூறுகின்றது.

(இ-ள்) வேற்றுமை - வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் மொழியும், வினை - வினைத் தொகைநிலைத் தொடர்மொழியும், பண்பு - பண்புத்தொகைநிலைத் தொடர்மொழியும், உவமை - உவமைத் தொகை நிலைத் தொடர்மொழியும், உம்மை - உம்மைத் தொகை நிலைத் தொடர்மொழியும், அன்மொழி - அன்மொழித் தொகைநிலைத் தொடர் மொழியும், எனவத் தொகையா றாகும் - என்று சொல்லப்படும் தொகை நிலைத் தொடர்மொழிகள் ஆறாம் என்றவாறு.

உ-ம்: நிலம் கடந்தான், பொற்குடம், கருப்புவேலி, வரை வீழருவி, சாத்தன்கை, குன்றக்கூகை, கொல்யானை, கருங் காக்கை, துடியிடை, இராப்பகல், பொற்றாலி எனத் தொகை நிலைத் தொடர்மொழி. (11)

## வேற்றுமைத் தொகை

**362.** இரண்டு முதலாக இடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

சூ-ம், நிறுத்திய முறையே வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் மொழியாமாறு கூறுகின்றது.

(இ-ள்) இரண்டு முதலாக - இரண்டாம் வேற்றுமை ஐயுருபு முத லாக, இடையா றுருபும் - இடையிலுள்ள கண்ணுருபு ஈறாக நின்ற ஆறுருபும், வெளிப்பட லில்லது - இரண்டு சொற்கு நடுவே தோன்

றாமை நிற்பது, வேற்றுமைத் தொகையே - வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்மொழிகளாம் என்றவாறு.

உ-ம்: நிலம் கடந்தான், மரம் தறித்தான் எனவும்; பொற்குடம், மட்குடம் எனவும்; கருப்புவேலி, வயிற்றுச்சோறு எனவும்; வரை வீழருவி, கருவூர்க்கிழக்கு எனவும்; சாத்தன்கை, புலவர் - பாட்டு எனவும்; குன்றக்கூகை, பனங்கிளி எனவும் இடையே உருபுகள் தொக்கவாறு காண்க.

இடையிலே தொகும் எனின் என்னை? கடந்தானிலம்; இருந் தான் குன்றத்து என ஈற்றினும் உருபு தொகுமாலோ எனின் அவை ஒரு பெயர் போலவும் ஒரு வினை போலவும் ஆகாமையின் விகாரத் தாற் றொகுக்கப்பட்டன என்க.

"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ விறுதியான"
(தொல். சொல். 101) (12)

## வினைத் தொகை

**363.** காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

சூ-ம், வினைத் தொகைநிலைத் தொடர்மொழியாமாறு கூறுகின்றது.

(இ-ள்) காலங் கரந்த பெயரெச்சம் - முக்காலமும் தோன்றாது தன் னெச்சமான பெயர் கொண்டு நிற்கும் பெயரெச்சம், வினைத்தொகை - வினைத் தொகைநிலைத் தொடர் மொழியாம் என்றவாறு.

உ-ம்: பொருகளிறு, பொருவேல், பொருகளம், பொருபடை, பொருபொழுது, பொருபோர் என வரும்.

இவை விரிவுழி பொருதகளம், பொராநின்றகளம், பொருங் களம் என விரியும்.

இவ்வகையே அரிவாள், கொல்யானை, இறைகூடை, பற்றி ரும்பு, பிடிவாள், தாழ்குழல் எனவும் வரும்; காண்க. (13)

## பண்புத் தொகை

**364.** பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை.

சூ-ம், முறையே பண்புத் தொகைநிலைத் தொடர்மொழி ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) பண்பை விளக்கு மொழிதொக்கனவும் - குணத்தை விளக்கிக் காட்டுதற்கான மொழி தொக்கனவும், ஒருபொருட் கிருபெயர் வந்தவும் - ஒரு பொருட்குரிய பெயர் ஒருங்கு வருவனவும், குணத் தொகை - பண்புத்தொகைநிலைத் தொடர்மொழியாம் என்றவாறு.

உ-ம்: கருங்காக்கை, தண்ணீர், நறுமலர், தீம்பால், குறுங் கொற்றான், வட்டக்கல், உள்பொருள், இல்குணம் எனவும் கேழற்பன்றி, வேழக்கரும்பு, அளகைநகர், ஆனித்திங்கள், "அகரமுதல்" (தொல்.எழு.1), "சகரக்கிளவி" (தொல்.எழு. 62) எனவும் வரும். இவை விரிவுழி இரு திணைக்கும் ஐம்பாற்கும் பொதுவாகப் பெயரெச்ச வாய்பாடாய் விரியும். கருமையாகிய காக்கை, தண்மையாகிய நீர், நறிய மலர், தீவிய பால், குறிய கொற்றன், வட்டமாய கல், உளவாய பொருள், இலதாய குணம் எனவும் கேழலாகிய பன்றி, வேழமாகிய கரும்பு, அளகையாகிய நகர், ஆனியாகிய திங்கள், அகரமாகிய முதல், சகரமாகிய கிளவி எனவும் ஆய, ஆன ஆகிய பிறவும் விரியும்.இவை பண்பை விளக்கும் மொழியாம்.

கேழற்பன்றி, வேழக்கரும்பு இருபெயரொட்டுப் பண்புத் தொகை இவை சாதிப்பண்புடைமையின் ஈண்டு வேண்டினார் என்க. "ஆதிபகவன்" (குறள்.1) என்பது இறுதிப் பெயரொட்டுப் பண்புத் தொகையாம். இவ்வாறன்றி ஒத்த பண்புபற்றி ஒற்றுமை குறித்து வரும் இருபெயரொட்டுப் பண்புத்தொகையும் உள. அவை கைத் தாமரை, கண்வேல், புருவச்சிலை என வரும். (14)

## உவமத் தொகை

**365.** உவம வுருபில துவமத் தொகையே.

சூ-ம், முறையே உவமைத் தொகைநிலைத் தொடர்மொழி ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) உவம வுருபிலது - பண்பு பயன் வினை என்பன பற்றி வரும் உவமவுருபு தோன்றாதது, உவமத் தொகையே - உவமத் தொகை நிலைத் தொடர்மொழிகளாம் என்றவாறு.

உ-ம்: பான்மொழி, குவளைக்கண், துடியிடை எனவும் மாரி வண்கை எனவும், சீயகங்கன் (நன்.பாயிரம்), புலிசாத்தன் என வும் பொற் றாமரை, குமிண்மூக்கு, கார்குழல் எனவும் வரும். இவை விரிவுழி பால் போலும் மொழி, குவளை போலும் கண் என விரியும். பாலைப் போலும் மொழி என உருபுத் தொகை யாய்க் கொள்ளற்க. (15)

### உவமவுருபுகள்

**366.** போலப் புரைய வொப்ப வுறழ
மானக் கடுப்ப வியைய வேய்ப்ப
நேர நிகர வன்ன வின்ன
என்பவும் பிறவு முவமத் துருபே.

சூ-ம், மேல் உவம உருபென்றார்; அவை இவையெனக் கூறு கின்றது.

(இ-ள்) போல - "வேந்தன் மனம்போல வந்த மகன்" (பு-வெ.26), புரைய - "உயிர்புரை யூகியோ டெண்ணி", ஒப்ப - "என்னொப்ப வுளரரி யர் உலகில்", உறழ - "கனவுறழ் நிலவுக்கான்று", மான - "புள்ளி மான செடியர்", கடுப்ப - "அறல்கடுக்குங் கூந்தல்", இயைய - "காரியையுங் காவலன் கை", ஏய்ப்ப - "பசம்பவள மேய்ப்பத் திகழு மதரம்", நேர - "பொன்னேர்மேனிப் புரவலனே", நிகர - "கார்நிகர் வண்கை", அன்ன - "அரிமா விடித்தன்ன வோசை", இன்ன - "வெஞ் சிலையின்ன விறலுமிழ்தோள்" என்பவும் பிறவும் - இச்சொன்ன பன்னி ரண்டும் இவை போல்வன பிறவும், உவமத் துருபே - உவமவுருபு களாம் என்றவாறு. (16)

### உம்மைத் தொகை

**367.** எண்ண லெடுத்தன் முகத்த னீட்டல்
எனுநான் களவையி லும்மில தத்தொகையே.

சூ-ம், முறையே உம்மைத் தொகைநிலைத் தொடர்மொழி ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) எண்ணல் - எண்ணி அளக்கப்படும் அளவின்கண்ணும், எடுத் தல் - எடுத்து அளக்கப்படும் அளவின் கண்ணும், முகத்தல் - முகந்து அளக்கப்படும் அளவின்கண்ணும், நீட்டல் - நீட்டி அளக்கப்படும் அள வின் கண்ணும், எனுநான்களவையில் - என்று சொல்லப்பட்ட நால் வகை அளவின்கண்ணும், உம்மில தத்தொகையே - வரும் உம்மை தொக்கு நிற்பது உம்மைத் தொகைநிலைத் தொடர்மொழியாம் என்ற வாறு.

உ-ம்: உவப்பதினான்கு, கபிலபரணர், கல்லாட மாமூலர், சேர சோழ பாண்டியர், பதினொன்று, பதினைவர், ஆயிரத்தொரு நூற்றம்பத்தொன்றரையரைக்கால் எனவும்; கழஞ்சேகால், கழஞ் சரையே யரைமாவரைக்காணி முந்திரிகை எனவும்; நாழியா

ழாக்கு, ஆயிரத்து முந்நூற்று முப்பது முக்கலனே முக்குறுணி முந்நாழியுழக் காழாக்கு முச்செவிடு எனவும், சாணரை எனவும் வரும். இவை விரிவுழி உவாவும் பதினான்கும், கபிலரும் பரணரும், கல்லாடரும் மாமூலரும் என விரியும். பிறவுமன்ன. (17)

## அன்மொழித் தொகை

**368.** ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

சூ-ம், முறையே அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழி ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஐந்தொகை மொழிமேல் - வேற்றுமைத்தொகை முதலான ஐவகைத் தொகைத் தொடர்மொழிகளின்மேல், பிற தொகல் - அவற்றின் பொருள்களைக் கருதிய வேற்றுமைப் பொருள்களும் தொகுவது, அன்மொழி - அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழியாம் என்றவாறு.

உ-ம்: பூங்குழல், பொற்றொடி, கவியிலக்கணம், பொற்றாலி, கிள்ளிகுடி, கீழ்வயிற்றுக்கழலை எனவும் தாழ்குழல், கருங்குழல், துடியிடை, தகல்ஞாழல் எனவும் காண்க. இவை விரிவுழி பூவையுடைய குழலினையுடையாள், பொன்னினாய தொடியினையுடையாள் எனவும் கொள்க. (18)

## தொகைச் சொற்களின் பொருண்மை

**369.** முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.

சூ-ம், தொகைச்சொற் பொருண்மைக்கு இடம் கூறுகின்றது.

(இ-ள்) முன்மொழி - தொகைச் சொற் பொருள் முதனிற்கும் மொழியிடத்துத்தான், பின்மொழி - பின்மொழியிடத்துத்தான், பன்மொழி - அனைத்து மொழியிடத்துத்தான், புறமொழி - அனைத்து மொழிக்கும் புறத்துத்தான், எனுநான்கிடத்தும் - என்று சொல்லப்படும் இந்நான் கிடத்தில் ஓரிடத்தில், சிறக்குந் தொகைப்பொருள் - சிறந்து நிற்கும் தொகைச்சொற் பொருள் என்றவாறு.

உ-ம்: கால்வாய், அடைகடல் என்பன வாயையுடைய கால் கடலினது அடை என முதன்மொழிப் பொருள் சிறந்தன. வேங்கைப்பூ, கருங்குதிரை எனப் பின்மொழிப் பொருள் சிறந்தன. தந்தைதாய், இராப்பகல், இவை இரு மொழியுஞ் சிறந்தன.

பொற்றொடி, துடியிடை, மொழிமறை என்பன. அவற்றை யுரையாரையும் ஒப்பாரையும் குறித்தமையிற் புறமொழி சிறந் தன. பிறவுமன்ன. (19)

## இடத்தொகையும் பெயர்த்தொகையும்

370. வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்.

சூ-ம், அத்தொகைநிலைத் தொடர்மொழிக்கு ஏற்பதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) வல்லொற்று வரினே - தொகைச் சொற்களுள் வல்லொற்று வந்தால், இடத்தொகை யாகும் - பெயரொடு இடம் தொக்க தொகை நிலைத் தொடர்மொழியாம்; மெல்லொற்று வரினே - அத் தொகைச் சொற்களின் மெல்லொற்று இடையே வந்தால், பெயர்த்தொகை யாகும் - பெயரொடு பெயர் தொக்க தொகை நிலைத் தொடர்மொழி யாம் என்றவாறு.

உ-ம்: வடுகக்கண்ணன் என இடையே வல்லொற்று வந்தால் வடுகநாட்டில் பிறந்த கண்ணன் என்றும், வடுகங்கண்ணன் என இடையே மெல்லொற்று வந்தால் வடுகற்கு மகனாகிய கண் ணன் என்றும் பொருளாம்.

சோனகக்கொற்றன், சோனகங்கொற்றன்; யாவுகச் சாத்தன், யாவுகஞ்சாத்தன்; கொங்கணத்தேவன், கொங்கணந்தேவன்; ஈழப் பூதன், ஈழம்பூதன் என இடந்தொக்கதும் பெயர் தொக்கதுமாய்க் கொள்க. இவற்றை உருபும் பொருளும் உடன்றொக்க தொகை எனக் காண்க.

இவை எழுத்து முடிபேனும் தொகை அதிகாரப்பட்டமையால் ஈண்டே வைத்தார் என்க. (20)

## உயர்திணை உம்மைத்தொகை

371. உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.

சூ-ம், உயர்திணையிடத்து வந்த உம்மைத்தொகைக்கு ஏற்ப தோர் இயல்பு கூறிற்று.

(இ-ள்) உயர்திணை யும்மைத் தொகை - உயர்திணைப் பெயரிடத்து வந்த உம்மைத் தொகைநிலைத் தொடர்மொழி, பல ரீறே-பலரைக் காட்டும் ரகரவொற்றாக நிற்கும் என்றவாறு.

உ-ம் : சேரசோழபாண்டியர், கபிலபரணர், சந்திரசூரியர் என வரும்.

உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே
பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்
(தொல்.சொல்.421.) 21

## தொகைநிலைத் தொடர்மொழிகள் மயங்குமாறு

372. தொக்குழி மயங்குந விரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

சூ-ம், தொகைநிலைத் தொடர்மொழிப் பொருள் மயங்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) தொக்குழி - சொற்கள் தொகைநிலையாகத் தொக்கு நின்றவிடத்து, மயங்குந - அவற்றுள் மயங்கும் இயல்பினையுடைய சொற்கள், இரண்டு முதலேழ் எல்லைப் பொருளின் - இரண்டு தொடர்ச்சிப் பொருள் முதலாக ஏழு தொடர்ச்சிப் பொருள் ஈறாக, மயங்கு மென்ப - மயங்குமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: இரண்டு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொடர்த் தொகைமொழி வருமாறு. தெய்வவணக்கம் தெய்வத்தை வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம்; தற்சேர்ந்தார் தன்னைச் சேர்ந்தார், தன்கட் சேர்ந்தார்; பொற்குடம் பொன்னாலாய குடம், பொன்னினாய குடம், திரையனூர் திரையனால் இயற்றப்பட்ட ஊர், திரையனது ஊர்; தேவர் பலி தேவர்க்குப் பலி, தேவரது பலி; போர் நேர்ந்தான் போருக்கு நேர்ந்தான், போர்க்கண் நேர்ந்தான்; வையை வடக்கு வையையின் வடக்கு, வையைக்கு வடக்கு; நோய்நீங்கினார் நோயின் நீங்கினார், நோயை நீங்கினார்; யானைக்கூடம் யானையது கூடம்; யானைக்குக் கூடம்; கடற்றிரை கடலது திரை, கடலின் கண் திரை; ஊர்ப்புக்கான் ஊரின் புக்கான், ஊரைப் புக்கான்; ஊர்மனை ஊரது மனை, ஊரின்கண் மனை; அலர்முல்லை அலர்ந்த முல்லை, அலரையுடைய முல்லை; தாழ்குழல் தாழ்ந்த குழல், தாழ்ந்த குழலினையுடையாள்; கோண்டுலாம் கோணாகியதுலாம், கோணலையுடைய துலாம்; முந்நான்கு மூன்றாகிய நான்கு, மூன்றாற் பெருக்கப்பட்ட நான்கு; தளிரடி தளிரன்ன அடி, தளிரையொத்த அடி; பதினைந்து பத்தும் ஐந்தும், பத்தின்மேல் ஐந்து; தகரஞாழல் தகரமும் ஞாழலும், தகரமும் ஞாழலுமுடைய சாந்து என வரும்.

மூன்று தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொகைநிலைத் தொடர்மொழி வருமாறு. முறை செய்தான் முறையைச் செய்தான்,

முறையினாற் செய்தான், முறையிற் செய்தான்; பொற்றொடி பொன்னாலாய தொடி, பொன்னினாய தொடி, பொன்னினாய தொடியினையுடையாள்; கடிப்பகை கடிக்குப் பகை, கடியினது பகை, கடியாகிய பகை; வரையிழிந்தான் வரையின் இழிந்தான், வரையை இழிந்தான், வரையின்கண் இழிந்தான்; சான்றோரிலக்கணம் சான்றோரது இலக்கணம், சான்றோர்க்கு இலக்கணம், சான்றோரறற் செய்த இலக்கணம்; ஊர்க்குளம் ஊரின்கண் குளம், ஊர்க்குக் குளம், ஊரினது குளம்; ஒலி வளை ஒலிக்கும் வளை, ஒலியையுடைய வளை, ஒலிக்கும் வளையையுடையாள்; ஆனேறு ஆனாகிய ஏறு, ஆனின்கண் ஏறு, ஆனேறு அனையான்; துடியிடை துடியன்ன இடை, துடியை ஒக்கும் இடை, துடியன்ன இடையையுடையாள்; ஏழேகால் ஏழும் காலும், ஏழின்மேற் கால், ஏழேகால் நிலமான ஊர் என வரும்.

நாலு தொடர்ச்சிப் பொருண்மையாகிய ஒரு தொகை நிலைத் தொடர்மொழி வருமாறு. சொல்லிலக்கணம் சொல்லது இலக்கணம், சொற்கண் இலக்கணம், சொற்கு இலக்கணம், சொல்லிலக்கணம் சொன்ன நூல்; பொன்மணி பொன்னாலாய மணி, பொன்னினாய மணி, பொன்னின்கண் மணி, பொன்னும் மணியும் என வரும்.

ஐந்து தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொகை நிலைத் தொடர்மொழி வருமாறு. கருப்பு வேலி கரும்புக்கு வேலி, கரும்பினது வேலி, கரும்பின்... வேலி, கரும்பாற் செய்த வேலி, .....; இயலிசை இயலையுடைய இசை, இயற்கண் இசை, இயலும் இசையும், இயலும் இசை, இயலாகிய இசை என வரும்.

ஆறு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொகை நிலைத் தொடர்மொழி வருமாறு. நூலுரை நூலினது உரை; நூற்கண் உரை, நூலையொக்கும் உரை, நூலன்ன உரை, நூலும் உரையும்,...; உரைவிதி உரையது விதி, உரைக்கு விதி, உரைக்கண் விதி, உரையை விதி, உரைவிதியுடைய நூல்,... என வரும்.

ஏழு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொகைத் தொடர் மொழி வருமாறு. கருத்துப்பொருள் கருத்தையுடைய பொருள், கருத்தினாலறியும் பொருள், கருத்தினறியும் பொருள், கருத்திற்குப் பொருள், கருத்தினது பொருள், கருத்தின்கண் பொருள், கருத்தும் பொருளும்; சொற்பொருள் சொல்லாலறியப்படும் பொருள், சொல்லனறியப்படும் பொருள், சொற்குப் பொருள், சொல்லது பொருள், சொல்லின் கண் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள் என வரும்.

இரண்டு தொடர்ச்சிப் பொருள் மயங்கிப் பல தொகைநிலைத் தொடர்மொழி வருமாறு. வாளை மீன் கெண்டைத் தலைப்படல் வாளை மீனைக் கெண்டை தலைப்படல், வாளை மீன் கெண்டையைத் தலைப்படல் என வரும்.

மூன்று தொடர்ச்சிப் பொருள் மயங்கிய பல தொகைநிலைத் தொடர்மொழி வருமாறு. புலிகொல் யானை புலியைக் கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை, புலியினிற் கொல்லப்பட்ட யானை என வரும்.

நான்கு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய பல தொகை நிலைத் தொடர்மொழி வருமாறு. "குரங்கெறிவிளங்காய்" குரங்கால் எறியப் பட்ட விளங்காய், குரங்கின் எறியப்பட்ட விளங்காய், குரங்கிற்கு எறிந்த விளங்காய், குரங்கை எறிந்த விளங்காய் என வரும். இவ் வாறு பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க. (22)

## தொகாநிலைத் தொடர்மொழி

**373.** முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை.

சூ-ம், தொகாநிலைத் தொடர்மொழி இவையெனக் கூறுநின்றது.

(இ-ள்) முற்று - தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், ஈரெச்சம் - தெரி நிலைவினைப் பெயரெச்சமும் குறிப்புவினைப் பெயரெச்சமும் தெரி நிலை வினையெச்சமும் குறிப்பு வினையெச்சமும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், எழுவாய் - எழுவாய் வேற்றுமை தன் பயனிலையொடு புணரும் - புணர்ச்சியும், விளிப்பொருள் - விளி வேற்றுமை தம் பொருளோடு புணரும் புணர்ச்சியும், ஆறுருபு - இரண் டாம் வேற்றுமை ஐயுருபு முதல் ஆறுருபும் தத்தம் பெயரொடும் புணரும் புணர்ச்சியும், இடையுரி - இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், அடுக்கு - விரை வாதியின் வரும் இரண்டு முதலான அடுக்குப் புணரும் புணர்ச்சியும், இவை தொகாநிலை - இப்பதினேழு புணர்ச்சியும் தொகாநிலைத் தொடர் மொழியாம் என்றவாறு.

உ-ம்: உண்டான் சாத்தன், குழையன் கொற்றன், உண்ட சாத்தன், பெரிய சாத்தன், உழுது வந்தான், அவனன்றி உண்ணான், சாத்தன் உண்டான், சாத்தாவா, சாத்தனைச் சேர், சாத்தனால் வந்தான், சாத்தற்குப் பூசை, சாத்தனின் நீங்கினான், சாத்தனது

பாடல், சாத்தன்கண் வந்தான், அதுகொல் தோழி, நனி பேதை, பாம்பு பாம்பு என முறையே காண்க.

"காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை"

(நன்.363) என்றமையால் காலந் தோன்றும் பெயரெச்சம் தொகாநிலையாம் என்க. (23)

## வழுநிலைகள்

374. திணையே பாலிடம் பொழுது வினாவிடை
மரபா மேழு மயங்கினாம் வழுவே.

சூ-ம், வழாநிலையும் வழுநிலையும் கூறுகின்றது.

(இ-ள்) திணையே பாலிடம் - இரு திணையும் ஐம் பாலும் மூன்று இடமும், பொழுது வினாவிடை - முக்காலமும் ... ..., மரபும் - மரபு காரணமாக வரும் பெயர்களும், ஆமேழும் - ஆகிய இவ்வேழும், மயங்கினும் வழுவே - தத்தம் இயல்பின்றி வரின் அவை வழுக்களாம் என்றவாறு.

மயங்கின் வழுநிலை எனவே மயங்காத வழாநிலையாம் என்க.

உ-ம்: அவன் வந்தது தனித்திணை வழு. அவன் வந்தாள் பால்வழு. அவன் வந்தேன் இடவழு. பண்டு, அன்று, நெருநல் இறந்தகாலப் பேர்; இன்று, இப்பொழுது நிகழ்காலப் பேர்; நாளை, இனிமேல் எதிர்காலப் பெயர். முக்காலப் பேரோடு முக்கால வினை மயங்குவது கால வழுவாம். அவை வந்தான் நாளை, வாராநின்றான் நாளை, வருவான் நெருநல், நாளை வந்தான், நெருநல் வாராநின்றான், நாளை வாராநின்றான், நெரு நல் வருவன் என வினை மேற் பெயரும் பெயர்மேல் வினையு மாய் மயங்கியது காலவழு.

இன்று வந்தான், இன்று வருவான் என வழங்குவனவும் வழு வாமோ எனின், இன்றென்பது இற்றைநாளையன்றே! அத்தினத்தி னில் நிகழ்ந்தமையை நோக்க ஏனைக் காலங்களும் உளவாகலின் வழுவன்றி என்க.

வினா வழுவாவது: கறக்கின்ற எருமை பாலோ? சினையோ? ஒரு விரல் காட்டி இது சிறிதோ? பெரிதோ? இத்தொடக்கத்தன என்க.

செப்பு வழுவாவது: பட்டுக்கோட்டைக்கு வழியெங்கே என்றால் கொட்டைப்பாக்கு முந்நூறு; குருக்கள் வீட்டுக்கு வழி கேட்கத் துலுக்கவீடு என்பது.

மரபு வழுவாவது வரலாற்று முறைமை மயங்கிச் சொல்லுவது. அது ஆனை மேய்ப்பானை இடையன் என்றும் பசு மேய்ப்பானைப் பாகன் என்றும் எருமையிலத்தி, குதிரைச் சாணகம் என்றும் வரும். (24)

## திணை பால் வழுவமைதி

**375. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்**
**மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.**

சூ-ம், திணை பால் ஐயுற்ற வழியும் துணிந்த வழியும் இவ்வாறு சொல்லுகவெனத் திணை பால் அமைப்புக் கூறுகின்றது.

(இ-ள்) ஐயந் திணை - திணைமேல் ஐயந் தோன்றிய வழியும், பால் - பால்மேல் ஐயந் தோன்றிய வழியும், அவ்வப் பொதுவினும் - அவ் விரு திணைப் பொதுவினாலும் அவ்வப் பால்களுக்குப் பொது வினாலும் மெய்தெரி பொருண்மேல் - இன்னதென உண்மை தெரிந்த பொருளின்மேல், அன்மையும் விளம்புவ - ஒரு திணைக்குரியவாகியும் ஒரு பாற்குரியவாகியும் சிறப்புப்படக் கூறுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: எளிதில் அறியலாகா இடமாயினும் காலமாயினும் பற்றி நான்கு முழ அளவில் ஓர் உருவு கண்டு குற்றி கொல்லோ மகன் கொல்லோ என்று ஐயுற்ற வழி அவ்விரு திணைக்கும் ஏற்ப முனந் தோன்றுகின்ற உரு என்னோ என்க. உரு என்பது பொதுச் சொல்லாமின் மகனென்றும் குற்றியென்றும் வெளியான காலை மகனன்று குற்றி என்க; குற்றி அல்லன் மகன் என்க. (25)

## திணை வழுவமைதி

**376. உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்**
**அதனொடு சார்த்தி னத்திணை முடிபின.**

சூ-ம், உயர்திணைப் பெயரைச் சேர்ந்த பொருளாதி அறு வகைப் பெயரின் முடிவு கூறுகின்றது.

(இ-ள்) உயர்திணை தொடர்ந்த - உயர்திணைப் பெயரைச் சார்ந்து வரும், பொருண்முத லாறும் - பொருளாதி அறு வகைப் பெயரும், அதனொடு சார்த்தின் - அவ்வுயர்திணைப் பெயரொடு முடிப்பினும், அத்திணை - முடிபின - அத்திணை முடிபினவாம் என்றவாறு.

உ-ம்: நம்பி பொன்னுடையான், நம்பி நாடுடையன், நம்பி வாழ் நாளுடையன், நம்பி கண்பெரியன், நம்பி ஆண்மை நல்லான், நம்பி செலவுநல்லான் என இவை உயர்திணையாய் முடிந்தன.

நம்பி பொன்பெரிது, நம்பி நாடுபெரிது, நம்பி வாழ்நாள் பெரிது, நம்பி குடிமையழகிது, நம்பி வாழ்நாளழகிது. இவை தத்தம் வினை யான் முடிந்தன. (26)

## திணை பால் மரபு வழுவமைதி

377. திணைபால் பொருள்பால் விரவின சிறப்பினும்
மிகவினு மிழிப்பினு மொருமுடி பினவே.

சூ-ம், திணை பால் மரபு வழுவமைப்புக் கூறுகின்றது.

(இ-ள்) திணைபால் - திணையும் பாலும், பொருள்பல விரவின - பல பொருளும் தம்முள் நின்ற வழி, சிறப்பினும் மிகவினு மிழிப்பினும் - சிறப்பினானும் மிகுதியினாலும் இழிப்பினாலும், ஒருமுடிபினவே - ஒன்றனைக் கொண்டு முடியும் என்றவாறு.

உ-ம்: "திங்களுஞ் சான்றோரு மொப்பர்" (நாலடி.151), பழி யஞ்சி வாழு மரசும் "அருந்தவம் விட்டானும் இல்லஞ்சி வாழு மெருதும் மிவர்மூவர் ... நோய்" (திரி.80) இவை சிறப்பி னால் உயர்திணை முடிபு ஏற்றன.

"பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர், மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு" (சிலம்பு.வஞ்சின.53-54) என இவை பன்மை மிகுதலான் உயர்திணை முடிபாய் முடிந்தன.

தொல்லை நால்வகைத் தோழரும் ... ... தேர்
மல்லற் றம்பியு மாமனு மதுவிரி கமழ்தார்ச்
செல்வன் றாதையுஞ் செழுநக ரொடுவள நாடும்
வல்லைத் தொக்கன வளங்கெழு கோயிலு ளொருங்கே

(சீவக.2360)

இவை இழிபு சிறப்பினான் அஃறிணை முடிபு ஏற்றன. (27)

## திணை பால் வழுவமைதி

378. உவப்பினு முயர்பினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே.

சூ-ம், இதுவுமது.

(இ-ள்) உவப்பினு முயர்பினும் - உவப்பினாலும் உயர்பினாலும், சிறப்பினுஞ் செறலினும் - சிறப்பினாலும் முனிவினாலும், இழிப்பினும் - இழப்பினாலும், பாறினை - இவ்வைந்திடத்தும் பாலும் திணையும்,

இழுக்கினு மியல்பே - மயங்கி வழங்கினும் அது முறைமையாம் என்றவாறு.

உ-ம்: ஒருவனை, என் யானை வந்தது எனவும்; ஒருத்தியை, என் பாவை வந்தது எனவும்; ஒரு பசுவை, என் அன்னை வந்தாள் எனவும்; ஒரெருத்தினை, என் தந்தை வந்தான் எனவும் வழங்குதல் உவப்பின்கண் வந்தன ... ... ... ... இவை உவப்பில் ஆண்பால் பெண்பாலாய் வழங்கின. ஒருவன், ஒருத்தியை வந்தார் போயினார் என்பது உவப்பின் கண் வந்தனவாம்.

கிளியார், மயிலார், குயிலார் பிறந்தார் என உயர்ச்சி சொல்லுதற்கண் அஃறிணை உயர்திணை ஆயின.

"நாவலர்க்குத் தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரா"

"இரவின் வருவானைப் புல்குவன் றோழா?" இவை சிறப்பின்கண் பெண்பாலை ஆண்பாலாகவும் ஆண்பாலைப் பெண்பாலாகவும் வழங்கின.

"... ... புலவிய தெவனோ வன்பிலங் கடையே" (குறு.93)

எனச் செறற்கண் பால் மயங்கின.

"இரவெதிர் கொள்ளா விருகாற் பசுவே ... ... என இழிபினால் அஃறிணை ஆயிற்று. பிறவுமன்ன." (28)

**பால் இட வழுவமைதி**

**379. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்**
**ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே.**

சூ-ம், பாலிட வழுவமைப்புக் கூறுகின்றது.

(இ-ள்) ஒருமையிற் பன்மையும் - ஒருமைச்சொல் பன்மைச்சொல்லைத் தழுவலும், பன்மையினொருமையும் - பன்மைச்சொல் ஒருமைச் சொல்லைத் தழுவலும், ஓரிடம் - பிறவிடந் தழுவலும் - ஓரிடத்துக்குரிய சொல் பிறவிடத்துக்குரிய சொல்லைத் தழுவலும், உளவே - உளவாம் என்றவாறு.

உ-ம்: நீர் இருந்தன, பால் இருந்தன எனவும் நாடெல்லாம் வாழ்ந்தது, ஊரெல்லாம் உவந்தது, சோறு மாண்டது, படை வந்தது, சாத்து வந்தது, "இருநோக் கிவளுண்க ணுள்ளது" (குறள்.1091), "உள்ளிய தெல்லா முடனெய்தும்" (குறள். 309), எனவும் அஃறிணையொருமையுடன் பன்மையும் பன்மையுடன் ஒருமையும் மயங்கின. "தந்தை, அண்ணல் யானை

யடுபோர்ச் சோழர்" (அகம்.96), "ஒருவி ரொருவி ரோம்பினிர் கழிமின்" (மலைபடு.218), யான் எம்மூர் புகுவன் எனவும் அவருள் அவனல்லன் மருளா ... ... எனவும் உயர்திணை ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும் மயங்கின.

நான் சாத்தன், நாங்கள் வெள்ளாளர், வருவேன் அல்லன் எனத் தன்மை படர்க்கை தழீஇயின்; முன்னிலை படர்க்கை தழீஇயயிற்று.

நீயோ அவனோ யாரிது செய்தார்? யானோ நீனோ யாரிது செய்தார்? யானோ நீயோ அவனோ யாரிது செய்தார் என ஓரிடம் பலவிடம் தழுவின. பிறவுமன்ன. (29)

## இடம் வழுமாற் காத்தல்

**380.** தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
எழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும்.

சூ-ம், இடம் வழுவற்கவென வழுக்காத்தல் கூறுகின்றது.

(இ-ள்) தரல்வரல் கொடைசெலல் - தரல் வரல் கொடை செலல் என்னும் இந்நான்கு சொல்லும், சாரும் படர்க்கை - படர்க்கை இடத்துக்கு உரித்தாம்; எழுவா யிரண்டும் - அந்நான்கு சொல்லின் எழுவாயில் நின்ற தரல் வரல் என்னும் இரண்டு சொல்லும், எஞ்சிய வேற்கும் - ஒழிந்த தன்மைப் பெயரும் முன்னிலைப் பெயரும் ஏற்கும் என்றவாறு.

உ-ம்: அவர்க்கு ஆடை சென்றது. செலல் எனப் படர்க்கைப் பெயர் ஏற்று வந்தது.

எனக்கு ஆடை தந்தார் - தரல்; எனக்கு ஆடை வந்தது - வரல்; நினக்கு ஆடை தந்தார், நினக்கு ஆடை வந்தது எனத் தன்மை முன்னிலை ஏற்றன.

எனக்கு ஆடை கொடுத்தார், எனக்கு ஆடை சென்றது, நினக்கு ஆடை கொடுத்தார், நினக்கு ஆடை செலுத்தினார் எனவும் வருமாலோவெனின் அவை பாராமுகமாகக் கருதி வரும் என்க. அபிமுகமாகக் கருதி வாரா என்க. (30)

## காலக் கூறுபாடு

**381.** இறப்பெதிர்வு நிகழ்பெனக் கால மூன்றே.

சூ-ம், காலவழு அமைப்பான் எடுத்துக்கொண்டார்; இது காலக் கூறுபாடு கூறுகின்றது.

(இ-ள்) இறப்பெதிர்வு நிகழ்பெனக் - போனதுவும் வருவதுவும் நிகழ்வதும் எனக், கால மூன்றே - காலம் மூன்று வகைப்படும் என்றவாறு.

அரும்பதவுரை: இறப்பு, நிகழ்பு, எதிர்பு என முறைமில் கூறாமையான் காலமென ஒரு பொருள் இல்லை என்பாரும், நிகழ்காலம் ஒன்றுமே என்பாரும் இறப்பும் எதிர்வும் என இரண்டு என்பாரும் உளர் என்பது அறிவித்தற்கு என்க. காலமென ஒரு பொருள் இல்லை என்பார் ஒரு பொருள் நிகழுமிடத்துப் பொருண்மைப் பேறல்லது காலமென வேற்றுணர்வு பெறப் படுவதில்லை என்பர். காலம் ஒன்றே என்பார் ஆறு ஒழுகும், மலை நிற்கும், தீச் சுடும், தண்ணீர் குளிரும், காற்று அசையும் என ஒரு காலத்தானே. இப் பொருள் சொல்லப்படும்; பிறிதில்லை என்பர். இறப்பும் எதிர்வுமென இரண்டு என்பார் விரை கெடும், முளை வரும்; முளை கெடும், கொழுந்து வரும்; கொழுந்து கெடும், தளிர் வரும்; தளிர் கெடும், இலை வரும்; இலை கெடும், பழுப்பு வரும்; பழுப்பு கெடும், சருகு வரும்; இவ்விரண்டுமன்றி அதனால் நிகழ்காலம் இல்லை என்பார். காலம் மூன்றாவது நெருநல், இன்று, நாளை, முன், இப்போது, இனி வந்தான், வருகின்றான், வருவான் என வரும். (31)

### கால வழுவமைதி

**382. முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்**
**செப்புவர் நிகழுங் காலத் தானே.**

சூ-ம், கால வழுவமைப்புக் கூறுகின்றது.

(இ-ள்) முக்காலத்தினும் - செல் காலம் நிகழ்காலம் வருங்காலம் மூன்றினும், ஒத்தியல் பொருளைச் - ஒரு தன்மையாய் நிகழும் பொருளை, செப்புவர் நிகழுங் காலத்தானே - நிகழ்காலச் சொல்லானே சொல்லுவர் என்றவாறு.

உ-ம்: யாறு ஒழுகும், மலை நிற்கும், வளி பெயரும், நிலம் கிடக்கும், நீர் குளிரும், தீச் சுடும், பால் இனிக்கும், வேம்பு கசக்கும் பண்டும் இன்றும் மேலும். (32)

**383. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்**
**பிறழவும் பெறூஉ முக்காலமு மேற்புழி.**

சூ-ம், இதுவும் கால வழுவமைப்புக் கூறுகின்றது.

(இ-ள்) விரைவினு மிகவினும் - விரைவின்கண்ணும் மிகுதியின் கண்ணும், தெளிவினு மியல்பினும் - தெளிவின் கண்ணும் இயல்பின் கண்ணும், பிறழவும் பெறூஉம் - இந்நான்கு பொருண்மைக் கண்ணும்

மயங்கி வரப் பெறும், முக்காலமு மேற்புழி - முக்காலங்களும் ஏற்கு மிடத்து என்றவாறு.

உம்மையான் மயங்காமல் நிற்றல் வலியுடைத்து என்க.

உ-ம்: உண்கின்றானை அழைக்க, உண்டேன் உண்டேன் வந் தேன் வந்தேன் இவை விரைவு.

அறஞ்செய்தான் சுவர்க்கம் புக்கான், தாயைக் கொன்றான் நிரயம் போனான். இவை உலகின் மிக்கவாதலின் இப் பலன்கள் தப்பாமையின் ஈண்டு மிகுதிக் கண் வந்தன.

எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்யும் இது தெளிவு.

ஒரு காட்டிற் போய்க் கூறை கோட்பட்டான், காட்டிற் செல்வான் கூறை கோட்படுவான் என்கை இயல்பு. (33)

## வினா வழுமாற் காத்தல்

384. அறிவறி யாமை ஐயுறல் கொளல்கொடை
ஏவ றரும்வினா வாறு மிழுக்கார்.

சூ-ம், வினா வழுவற்க என்பது கூறுகின்றது.

(இ-ள்) அறிவு - எதிர்வாதியாலும் ஆசிரியனாலும் வரும் அறிவினால் வரும் வினாவும், அறியாமை - தான் அறிதற்கு வரும் அறியாமை யால் வரும் வினாவும், ஐயுறல் - உண்மை உணர்தற்கும் கோடற்கும் வரும் ஐயத்தால் வரும் வினாவும், கொளல் - என்பது காரணமாக வரும் கொள்ளுதல் வினாவும், கொடை - தம் பொருண்மைக் காட்ட வரும் கொடை வினாவும், ஏவறரும் வினா - ஏவற் பொருள் தரவரும் ஏவலைத் தரும் வினாவும், ஆறு மிழுக்கார் - இவ்வறு வகை வினா வையும் தப்ப வழங்கார் கற்றோர் என்றவாறு.

உ-ம்: எதிர்வாதியால் வரும் வினா எதிரியை அளத்தற்கும் அறி யாமை காட்டுதற்கும் அச்சூத்திரப் பொருள் யாது? இப்பதம் முடிந்தவாறு என்னை? என வினாவப்படும். ஆசிரியனும் அவ் வாறு ஒருவனை அளத்தற்கும் அறிவு கொடுத்தற்கும் அறி வினை விளக்குதற்கும் அவ்வாறு வினாவப்படும். அறியாமை யால் வரும் வினா, தான் அறிதற்கு இச் சூத்திரப் பொருள் யாது? ... கோயிலுக்கு வழி யாது? என வினாவப்படும். ஐயத் தால் வரும் வினா புகையோ பனியோ முகிலோ பரக்கின்றது என்பது உண்மை உணர்தற்கண் வினாவப்படும். நீரோ பேய்த் தேரோ தோன்றுகின்றது என்பது கோடற்கு வினாவப்படும்

கொள்ளுதல் வினா. மணியுளவோ? வயிரமுளவோ? எனவும் கோடற்கு வினவப்படும். கொடுத்தற்கு வரும் வினா: சாத்த னுக்கு ஆடை இல்லையோ? என்பது கொடுத்தற்கு வினாவப் படும். ஏவற்கண் வரும் வினா: சாத்தா உண்டாயோ? என்பது ஏவற்கு வினாவப்படும். இவற்றின் வழு மேலே வந்ததென்க. (34)

## விடை

385. சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறைபு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.

சூ-ம், செப்பு வழுவமைப்புக் கூறுகின்றது.

(இ-ள்) சுட்டு - இச் சூத்திரப்பொருள் யாதென இது என்னும் சுட்டு விடையும், மறை - உண்ணாயோ என்றால் உண்ணேன் என மறை விடை யும், நேர் - உண்ணாயோ என்றால் உண்பேன் என நேர் விடையும், ஏவல் - உண்ணாயோ என்றால் உண் என ஏவல் விடையும், வினாதல் - உண் ணாயோ என்றால் உண்ணேனோ என எதிர் வினா விடையும், உற்ற துரைத்தல் - உண்ணப்போ என்றால் வயிறு குத்திற்று என உற்றது உரைக்கும் விடையும், உறுவது கூறல் - உண்ணாயோ என்றால் வயிறு குத்தும் என உறுவது கூறும் விடையும், இனமொழி - உண்ணாயோ என்றால் பலகாரம் தின்பேன் என இன விடையும், எனுமெண்ணிறை யுள் - என்று சொல்லப்படும் இவ்வெட்டு வகைச் சொல்லினுள்ளே முதல் மூன்றும் செவ்விதான விடையாம்; இறுதி நிலவிய வைந்தும் - ஈற்றினின்ற ஏவல் முதல் அவ்வைந்து விடையும் விடைப் பொருண் மையாய் வருதலின், அப் பொருண்மைமி னேர்ப - அவற்றையும் செவ் விதாகிய விடையென்று கொள்ளுவர் புலவர் என்ற வாறு. இவற்றின் வழு மேலே வந்ததென்க.

"நிலவிய" என்ற மிகையானே வினா அன்றியும் உத்தரமும் வரு வனவும் உள. வழிச் செல்வான் ஒருவன் கங்கை ஆடிப் போந்தேன் ஒரு பிடி சோறு தருமின் என வரும். (35)

## வினா விடைகளில் முதல் சினை வழுவாமை

386. வினாவினுஞ் செப்பினும் விரவா சினைமுதல்.

சூ-ம், வினா விடை இவ்விரண்டும் வழுவற்கு என்பது கூறுகின்றது.

(இ-ள்) வினாவினுஞ் செப்பினும் - வினாவினிடத்தும் விடையினிடத்தும், விரவா சினைமுதல் - சினை முதல் என்னும் இரண்டும் தம்முள் மயங்கப் பெறா என்றவாறு.

உ-ம்: சாத்தான் நல்லனோ? கொற்றன் நல்லனோ? என வினவில் சாத்தனிற் கொற்றன் நல்லன்; கொற்றனிற் சாத்தன் நல்லன் என்க. சாத்தன் மயிர் நல்லவோ? கொற்றன் மயிர் நல்லவோ? எனில் சாத்தன் மயிரிற் கொற்றன் மயிர் நல்ல; கொற்றன் மயிரிற் சாத்தன் மயிர் நல்ல என்க. இவ்வாறன்றிச் சாத்தன் மயிரிற் கொற்றன் தாடி நல்ல எனில் ஆகாதென்க. (36)

## மரபு

387. எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே.

சூ-ம், மரபாவது இன்னதென்று அதன் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) எப்பொரு ளெச்சொலின் - யாதொரு பொருளை யாதொரு சொல்லினாலே, எவ்வா றுயர்ந்தோர் - யாதொரு நெறியான் முன்னாட் கற்று வல்லோர்கள், செப்பின ரப்படிச் செப்புதல் - சொன்னார்கள் அதனை அப்படிச் சொல்லுதல், மரபே-மரபாம் என்றவாறு. (37)

## மரபு வழாநிலை

388. வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

சூ-ம், இது மரபு வழுவற்க என்பது கூறுகின்றது.

(இ-ள்) வேறுவினை - வேறு வினைக்குரியர், பல்பொருள் - பல பொருளையும், தழுவிய - ஒருங்கு தழுவிய, பொதுச்சொலும் - பொதுச் சொற்காடும், வேறவற் றெண்ணும் - வேறு வினையுடையவாய் எண்ணி வினை கொடுக்கும் பல சொற்களும், ஓர் பொதுவினை வேண்டும் - ஒன்றற்குரிய வினையன்றி அவற்றிற்கு எல்லாம் ஒரு பொதுவான வினை கொடுத்துச் சொல்ல வேண்டும் என்றவாறு.

உ-ம்: அடிசில் என்பது உண்பன, தின்பன, நக்குவன, பருகுவனவற்றிற்கு எல்லாம் பொது. அதனை அயின்றார், மிசைந்தார், கைதொட்டார் என்க. அணி என்பது கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவன, பூண்பனவற்றிற்கு எல்லாம் பொதுச் சொல். அதனை அணிந்தார், மெய்ப்படுத்தார், தாங்கினார் என்க. இயம் என்பது கொட்டுவன, ஊதுவன, உரஞ்சுவன இது

முதலானவற்றிற்கு எல்லாம் பொதுச் சொல். அதனை இயம்பினார், படுத்தார் என்க. படை என்பது எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற்குப் பொது. அதனைத் தொட்டார், வழங்கினார், பயிற்றினார் என்க.

இனி, எண்ணின் வழிவந்த பெயர்க்குப் பொது வினை கொண்டு முடிவன. குழையும், நாணும், கச்சும், குடையும் வளையும் அணிந்தார்; யாழும், குழலும், பறையும், தாளமும் இயம்பினார்; வாளும், வேலும், அம்பும் வழங்கினார் என வரும்.

சோறும் பாலும் தின்றார்; யாழும் குழலும் ஊதினார்... (38)

## பலபொருளொரு சொல் வருமாறு

389. வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர்சிறப் பெடுத்தே

சூ-ம், பலபொருள் குறித்த ஒரு பொதுச் சொல் வரும் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) வினைசார்பு - பொதுவான வினையானும் பொதுவான சார்பானும், இனமிடம் - பொதுவான இனத்தானும் பொதுவான இடத்தானும், மேவிளங்கா - பொருந்திப் பொதுமை நீங்காத, பல பொருளொருசொற் - பல பொருளை உணர்த்தும் ஒரு சொற்களை, பணிப்பர் சிறப் பெடுத்தே - அவற்றிற்கேற்ற சிறப்பொடுங் கூட்டிச் சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: மா என்பது மரத்திற்கும் விலங்கிற்கும் வண்டிற்கும் பொதுவான பல பொருள் ஒரு சொல். மா பழுத்தது என வினையால் மரமென விளங்கிற்று. மா வீழ் கூந்தல் எனச் சார்பான் வண்டு என விளங்கிற்று. மாவும் நாயும் வளர்ந்தன என இனத்தால் விலங்கென விளங்கிற்று. மா உறை மார்ப என இடத்தால் திருவென விளங்கிற்று. (39)

390. எழுத்திய றிரியாப் பொருடிரி புணர்மொழி
இசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப.

சூ-ம், எடுத்தல் ஓசையாற் படுத்தல் ஓசையாற் புணர்மொழிப் பொருள்கள் வேறுபடும் எனக் கூறியது.

(இ-ள்) எழுத்திய றிரியா - எழுத்து ஒரு தன்மைவாய்த்தன்னியல்பு திரியாமல் நின்றும், பொருடிரி புணர்மொழி - பொருண் வேறுபட்டு வரும் புணர்ச்சி மொழிகள், இசைத்திரிபால் - இசை எடுத்தும் படுத்

தும் வேறுபடுத்தும் உச்சரித்தால், தெளிவெய்து மென்ப - பொருள் இரண்டாய் வேறுபட்டு விளங்கும் என்றவாறு.

உ-ம்: செம்பொன்பதினாயிரங் கழஞ்சு கண்டேன், குறும்பரம்பு என வேறுபட உச்சரித்துக் கொள்க. (40)

**391. ஒருபொருண் மேற்பல பெயர்வரி னிறுதி**
**ஒருவினை கொடுப்ப தனியு மொரோவழி.**

சூ-ம், பல பெயர் அடுக்கி வந்தால் அவை கொண்டு முடியும் தன்மை இவையென ... ...

(இ-ள்) ஒருபொருண் மேல் - ஒரு பொருளின்மேலே, பல பெயர்வரின் அதன் பரியாய நாமமாகிய பல பெயர் அடுக்கி வரில், இறுதி ஒரு வினை கொடுப்ப - அவற்றிற்கெல்லாம் இறுதியிலே வினை கொடுப்பர், தனியு மொரோவழி - அவ்வாறன்றிச் சிறுபான்மை பெயர்தொறும் தனித்தனியே பெயர் கொடுப்பர் பெரியோர் என்றவாறு.

உ-ம்: ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான் எனப் பெயர்கள் அனைத்தும் வர இறுதி ஒருவினை கொண்டது. ஆசிரியன் வந்தான், பேரூர்கிழான் வந்தான், செயிற்றியன் வந்தான், இளங்கண்ணன் வந்தான் என அனைத்தினும் வினை வரப் பொருந்தாவாம். இனி, எந்தை வருக, எம்பெருமான் வருக மதலை வருக எனவும்

**மின்றோய் வரைகொன்ற வேலோன் புகுதுக**
**இன்றே னகழ்கா ரியக்கன் புகுதுக**
**வென்றோன் புகுதுக வீரன் புகுதுக**
**என்று நகர மெதிர்கொண்டதுவே (சீவக.2122)**

எனவும் பெயர்தொறும் ஒருவினை வந்தது. இனி, எந்தை வருக, எம்மான் போக, மைந்தன் நிற்க என ஒரு வினையனவாகா என்க.

ஒரு வினைச் சொல்லின் பரியாய நாமமுமாம். எந்தை சொல்லுக, எம்மான் விளம்புக என வரும். (41)

**392. திணைநிலஞ் சாதி குடியே யுடைமை**
**குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரொ**
**டியற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே.**

சூ-ம், திணைப்பெயர்கள் முதலான பல சிறப்புப் பெயர்களுள் இயற்பெயர் வருமாறு.

(இ-ள்) திணை - குறிஞ்சித்திணை முதலான ஐந்திணைப் பெயரும், நிலம் - தேசநாடு முதலான நிலப்பெயரும், சாதி - தத்தம் சாதியடுத்து வரும் சாதிப்பெயரும், குடியே - தத்தமக்கு உரிமையாகிய குடிப் பெயரும், உடைமை - பற்பல பெயரடுத்த உடைமைப் பெயரும், குணம் - அளவறியொப்பு முதலான குணப்பெயரும், தொழில் - ஓதலீதல் முதலான தொழிலடுத்து வரும் தொழிற் பெயரும், கல்வி - கல்விச் சிறப்பான் வந்த கல்விப்பெயரும், சிறப்பாம் பெயரொடு - இவை முதலாகிய சிறப்பாம் பெயருடனே, இயற்பெய ரேற்றிடில் - குரவராலுற்ற இயற்பெயர் எடுத்துச் சொல்லுங்கால், பின்வரல் சிறப்பே - அவ்வியற்பெயரை ஏனைப் பெயர்களுக்குப் பின்னே சொல்லுதல் சிறப்புடைத்து என்றவாறு.

உ-ம்: குன்றவன் சாத்தன், அருவாளன் கொற்றன், பார்ப்பான் பாராயணன், சேரலன் பூதன், பொன்னுடையன் ஓணன், கரியன் தானன், ஓதுவான் பத்தன், நாடகி நம்பி, ஆசிரியன் அமுதன் எனக் காண்க.

வருக என்று விதியாது சிறப்புடைத்து என்றமையாற் சிறுபான்மை வெண்கொற்றப் படைத்தலைவன், வெள்ளேறக்காவிதி என வரப்பெறுமாயினும் அவை சிறப்பல்ல என்க. அஃறிணைக் கண்ணும் எருமைப் பூதி, கிடாப்பூதன் என வரும். (42)

393. படர்க்கைமுப் பெயரொ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி.

சூ-ம், இயற்பெயரும் சுட்டுப்பெயரும் நிற்கும் முறைமை கூறியது.

(இ-ள்) படர்க்கைமுப் பெயரொடு - படர்க்கையிடத்தவான உயர்திணை, அஃறிணை, விரவுத்திணைப் பெயர்களுடனே, அணையிற் சுட்டுப் பெயர் - சுட்டுப் பெயர் சேர வரின், பின் வரும் வினையெனில் - அச்சுட்டுப் பெயர் வினைக்கண் வருமாயின் அம்முப் பெயர்க்கும் பின்னே வரும்; பெயர்க்கெங்கும் மருவும் வழக்கிடை - பெயர்க் கண்ணாயிற் பின்னாலும் முன்னாலும் வழக்கிடத்து வரும்; செய்யுட்கேற்புழி செய்யுட்கண் அச் சுட்டு வருமேயனில் நீதியின்றி வேண்டியவிடத்து வரப் பெறும் என்றவாறு.

உ-ம்: நம்பி வந்தான் அவற்குச் சோறு கொடுக்க, எருது வந்தது அதற்குப் புல்லிடுக எனப் படர்க்கை முப்பெயரையும் அடுத்த வினைக்கண் பின்னே வந்தது. நம்பி அவன், அவன் நம்பி, எருது அது, அது எருது, சாத்தன் அது, அது சாத்தன் எனப் பெயர்க்கண் ஈரிடத்தும் வந்தது.

அவன் வந்தான் நம்பிக்குச் சோறு கொடுக்க எனில் வேறு பொருள் பட்டு வழுவாம் என்க. (48)

## அடுக்குத் தொடர்

394. அசைநிலை பொருணிலை யிசைநிறைத் தொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்.

சூ-ம், கூறியது கூறினுங் குற்றமில்லை எனக் கூறியது.

(இ-ள்) அசைநிலை பொருணிலை - அசைநிலைக்கண்ணும் விரைவு, வெகுளி, உவகை, அச்சம் முதலிய பொருண்மைக் கண்ணும், இசை நிறைக்கு - இசை நிறைத்தற் பொருண்மைக்கண்ணும், ஒரு சொல் - இவ்விடத்திற் பொருட்டாக வரும் ஒரு சொல், இரண்டு மூன்று நான்கு எல்லை - அச்சொல் ஒன்றே இரண்டு மூன்று நான்கு அள வாக, முறையடுக்கும் - அடைவே அடுக்கி வரப் பெறும் என்றவாறு.

அசைநிலை இரண்டுக்கும், பொருணிலை இரண்டு மூன்றடுக் கும், இசைநிறை இரண்டு மூன்று நான்கடுக்குமாம் "முறை" என்ற தனான் என்க.

உ-ம்: ஒக்கும் ஒக்கும், மற்றோ மற்றோ, அன்றோ அன்றோ என்பன அசைநிலை. கள்ளர் கள்ளர், பாம்பு பாம்பு, தீத் தீத் தீ, போ போ போ என்பன விரைவு. எய் எய், எறி எறி எறி என்பன வெகுளி, வருக வருக, பொலிக பொலிக பொலிக என்பன உவகை. படை படை, எங்கே எங்கே எங்கே என்பன அச்சம். உய்யேன் உய்யேன், வாழேன், மயிலே மயிலே மயிலே, உரையாய் உரையாய் உரையாய் ... இவை பொருணிலை. "ஏஎ அம்பலஞ் சேர்ந்தனன்", "நல்குமே நல்குமே நல்குமே நாமகள்", "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ" என்பன இசை நிறைக் கண் வந்தன. (44)

## இரட்டைக் கிளவி

395. இரட்டைக் கிளவி யிரட்டிற் பிரிந்திசையா.

சூ-ம், இரட்டைக்கிளவியின் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) இரட்டைக்கிளவி - இரட்டித்து நிற்குஞ் சொற்கள், இரட்டிற் பிரிந்திசையா - அவ்விரு சொல்லும் ஒன்றாய் நின்று பொருள் விளை தலன்றிப் பிரித்தாற் பொருள் விளையாதாம் என்றவாறு.

உ-ம்: செழுசெழுத்தார், மொடுமொடுத்தார், "என்றவர் கூறுங் கால் உள்ளந் துடிதுடித்துத் துள்ளி வரும்", மண்காரியங் கடகட

வென்றல், நெருப்புத் தகதகவென்றல், வாயு கலகலவென்றல், ஆகாயங் கங்கமென்றல், "வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும், பச்சோலைக் கில்லை யொலி" (நாலடி.256)

"இரட்டைக் கிளவி" என்றமையால் இரண்டின் இறவா என்க. (45)

**396. ஒருபொருட் பலபெயர் பிரிவில வரையார்.**

சூ-ம், ஒரு பொருட்கண் வரும் பலபெயர்க்கு ஆவதோர் இயல்பு கூறு கின்றது.

(இ-ள்) ஒருபொருட் பலபெயர் - ஒரு பொருளைக் கருதி வரும் பல பெயர், பிரிவில - அப்பொருளை நீங்காவாயின; வரையார் - ஒரு பொருட்குப் பல பெயர் வந்ததென்று கடியார் புலவர் என்றவாறு.

உ-ம்: "வையைக் கிழவன் வயங்குதார் மார்பன்" எனப் பிரி வின்றி இரு பெயர் வந்தது. அரசனைக் காணச் செல்லு ஐம்புல யானையே வாசல் மந்திரியொடு வாய்மை கூற நட என இவை ஒரு பொருட் பல பெயர் பிரிக்கப்படுதலிற் கடிவர் என்க. (46)

**397. ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா.**

சூ-ம், ஒரு பொருட்படும் பல பெயர் வழுவன்று என்பது கூறு கின்றது.

(இ-ள்) ஒருபொருட் பன்மொழி - ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்கள், சிறப்பினின் - அப்பொருளைச் சிறப்பித்து வருதலான், வழா - வழுவென்று நீக்கப்படா என்றவாறு.

உ-ம்: அவன்தான், அதுதான், மீமிசை, அகன்மார்பன், உயர்ந் தோங்கும் பெருவரை, மழவிளநரை, நரையிளங்கன்று, "குழிந் தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி" (நாலடி.49), கேழற்பன்றி, வேழக்கரும்பு, "நனிபெரிதும் பெறக்கண்ண ளென்றிவளை வெஃகண்மின்" (நாலடி.17) என வரும். (47)

## மரபு வழுவாமற் காத்தல்

**398. இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள்**
**வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்.**

சூ-ம், மரபு வழுவற்கவெனக் கூறுகின்றது.

(இ-ள்) இனைத்தென் றறிபொருள் - இத்துணைத்தென்று வரை யறுத்து உணரப்படும் பொருளாதி எப்பொருள்களும், உலகினிலாப்

பொருள் - உலகின்கண் இல்லாத பொருள்களும், வினைப்படுத் துரைப்பின் - வினையொடு கூட்டிச் சொல்லுமிடத்து, உம்மை வேண் டும் - உம்மை கொடுத்துச் சொல்லவேண்டும் என்றவாறு.

உ-ம்: தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார், தேவர் முப்பத்து மூவ ரும் வந்தார், தேவர் நால்வரும் வந்தார், உலகமூன்று ஒருங் குணர்ந்தோன், கால மூன்றும் கண்டான், கண்ணிரண்டும் சிவந் தான், குணமூன்றும் கூறினான், தொழிலாறும் தோற்றினான். … … … அறுவகைப் பொருட்பெயர் மேலும் உம்மை வந்தன. இவை உளபொருள். இனி இலபொருட்டு உம்மை வருமாறு. பவளக்கோட்டு நீலயானை யாண்டுமில்லை, முயற்கோடும் ஆமை மயிரும், ஆகாயப் பூவும், மலடி மகனும், காக்கைக் கொம்பும், கருங்கற் சதையும், அம்மிப் பித்தும், துன்னுசிக் குடரும், ஈங்குமில்லை என் அங்கைக்கும் மயிர் இல்லை. “இருதோ டோழர் பற்ற”, “எருமை நாற்கால் நீர்க்கீழ் நின்றன” எனச் செய்யுள் விகாரத்தான் உம்மை தொக்கன என்க.

இனித் தமிழ் நாட்டு மூவேந்தர் வந்தார் எனின் வேறும் அரசர் உளர் எனவும், பவளக் கோட்டு நீலயானை பண்டில்லை எனில் இன் றுண்டு எனவும் உம்மை கொடாவிடில் இப்பொருள் பட்டு வழுவா மென்க.

“வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்” எனவே வினை கொடாவிடத்து உம்மை வேண்டியும் வேண்டாதும் வரும் என்க.

இவை இரண்டும் சே, இவை இரண்டும் பசு, ஈரீற்று, அற மிரண்டு, குற்றமூன்று, பொருணாலு, பொறியைந்து. பிறவுமன்ன.

(48)

399. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.

சூ-ம், செயப்படுபொருட்டு ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) செயப்படு பொருளை - தனது செயலின்றிப் பிறராற் செயப் படும் பொருளை, செய்தது போல - தனது செய்கையுடையது போல, தொழிற்படக் கிளத்தலும் - அதனது தொழிற் பகுதியாகச் சொல்லு தலும், வழக்கினு ளுரித்தே - வழக்கடிப்பாட்டுக்கு உரித்து என்றவாறு.

இவை இலக்கணம் அன்றேனும் கருவியையும் கருமத்தையும் கருத்தாவாகச் சொல்லினும் அமையும் என்பது ஆயிற்று.

உ-ம்: திரிகை சுற்றும், வாள் வெட்டும், எழுத்தாணி எழுதும் எனக் கருவி, முதலாகச் செய்தது போல் நின்றன. சோறு

அடாநின்றது, இல்லம் மெழுகிற்று, கரி பாகமாயிற்று, சீலை அழுக்கடைந்தது சீலை அழுக்கு நீங்கிற்று, செம்பு விளங்கிற்று என இவை செயப்படுபொருள்வினை வினைமுதலாகச் செய்தது போல் நின்றன. (49)

### மரபு

400. பொருண்முத லாறா மடைசேர் மொழியினம்
உள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும்

சூ-ம், மரபியல்பு கூறுகின்றது.

(இ-ள்) பொருண்முத லாறா மடைசேர் மொழி - பொருளாதி ஆறையும் அடையாக அடுத்து வருமொழிகள், இனம் உள்ளவுமில்லவு மாம் - இனத்தைக் காட்டுவனவும் இனத்தைக் காட்டாதனவும் ஆம்; இரு வழக்கினும் - வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் என்றவாறு.

உ-ம்: நெய்க்குடம், குளநெல், கார்த்திகைவிளக்கு, பூந்தோடு, பூந்தோழி, செந்தாமரை, குறுங்கூலி எனவும் இனமுள்ள அடையடுத்து வந்தது.

உப்பளம், நாடுமன்று, கீழ்நோக்கிய கிணறு, மேல்நோக்கிய மரம், பக்கநோக்கிய கிணறு, மேல்நோக்கிய தீ, கீழ்நோக்கிய நீர், செம்போத்து, தோய்தயிர், வெண்மதி, செந்தீ என்பன இனமில்லா அடையடுத்து வந்தன.

இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே
(தொல். சொல். 18) (50)

### அடைமொழி மரபு வழுவாமற் காத்தல்

401. அடைமொழி யினமல் லதுந்தரு மாண்டுறின்.

சூ-ம், மேலதற்கு எய்தாதது எய்துவித்தல் கூறுகின்றது.

(இ-ள்) அடைமொழி - அடையடுத்த மொழி, இனமல் லதுந்தரும் - அதற்கு இனமல்லாததையும் காட்டும், ஆண்டுறின் - அவ்விடத்துக்குப் பொருத்தமுண்டாயின் என்றவாறு.

உ-ம்: சுமந்தான் வீழ்ந்தான், புதுப்புனல் வந்தது, இருள் புலர்ந்தது எனச் சுமக்கப்பட்டதும் வீழ்ந்ததும் மழை பெய்தது, ஒளி தோன்றிற்று என இல்லாததனையும் விளக்கினவாறு காண்க.

மேற்சேரிக்கோழி ... ... அலைப்புண்டது எனவும்

ஆ வாழ்க அந்தணர் வாழ்க என்றாற் பிறர் கெடுக என்னாமையும் மேலிற் சூத்திரத்தினால் இனமின்றியும் வரூஉம் என்பதும் கொள்க. (51)

402. அடைசினை முதன்முறை யடைதலு மீரடை
முதலோ டாதலும் வழக்கிய வீரடை
சினையொடு செறிதலு மயங்கலுஞ் செய்யுட்கே.

சூ-ம், அடைமொழிகள் முதல் சினையிடத்து வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) அடைசினை - ஒன்றினால் ஒன்றைச் சிறப்பித்துச் சொல்லுமிடத்து அடையடுத்த சினையுடனே, முதன் முறையடைதலும், ஈரடை முதலோ டாதலும் - இரண்டு அடை முதலுடனே சேர்த்துச் சொல்லுதலும், வழக்கியல் - வழக்கினுள் இயற்கையாம்; ஈரடை சினையொடு செறிதலும் - இரண்டு அடையைச் சினையொடு சேர்த்துச் சொல்லுதலும், மயங்கலுஞ் செய்யுட்கே - ஆண்டை முதலுடனேயும் வேண்டி ... மயங்கச் சொல்லுதலும் செய்யுட்கண் இயல்பாம் என்றவாறு.

உ-ம்: பெருந்தலைச் சாத்தன், செங்கானாரை, நெடுமலைத் தோங்கு எனவும் இளம்பெருங் கூத்தன், சிறு கருங்காக்கை எனவும் வழக்கினுள் வந்தன. "சிறுபைந் தூவியாற் செயிரறச் செய்த", "கருநெடுங் கண்டரு காம நோயே" எனவும் "பெருந் தோட் சிறுமருங்கின் பேரமர்க்கட் பேதை" எனவும் செய்யுளில் வந்தன: பிறவுமன்ன. (52)

403. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

சூ-ம், உலகத்துப் பொருள்கள் எல்லாம் இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளுமென இரண்டாம். அவற்றினுள் இயற்கைப் பொருளுக்கு ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) இயற்கைப் பொருளை - செயற்கைப் பொருள் அல்லாத இயல்பாக வாராநின்ற இயற்கைப் பொருளைச் சொல்லுமிடத்து, இற்றெனக் கிளத்தல் - இத்தன்மையையுடைய என்று சொல்ல வேண்டும் என்பார்கள் என்றவாறு.

உ-ம்: நிலம் வலிது அல்லது உரத்துத் தரிக்கும்; நீர் தண்ணிது அல்லது குளிரும் பதஞ் செய்விக்கும்; தீ வெய்யிது அல்லது சூடு ஒன்றுவிக்கும்; வளி அசையும் அல்லது எவையும் திரட்டும்; கண் காணும், காது கேட்கும், மூக்கு மணக்கும், நா சுவைக்கும், தோல் பரிசிக்கும், வாக்கு வசனிக்கும் என வரும். பிறவுமன்ன. (53)

404. காரண முதலா வாக்கம் பெற்றும்
காரண மின்றி யாக்கம் பெற்றும்
ஆக்க மின்றிக் காரண மடுத்தும்
இருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்.

சூ-ம், செயற்கைப் பொருட்கு வரும் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) காரண முதலா வாக்கம் பெற்றும் - காரணச் சொல்லை முன் கொண்டு ஆக்கச் சொல்லொடு வருவனவும், காரணமின்றி யாக்கம் பெற்றும் - காரணச் சொல்லின்றி ஆக்கச் சொல்லோடு வருவனவும், ஆக்கமின்றிக் காரணமடுத்தும் - ஆக்கச் சொல்லின்றிக் காரணச் சொல்லொடு வருவனவும், இருமையு மின்றியும் - ஆக்கமும் காரண மும் இன்றி வருவனவும், இயலுஞ் செயும்பொருள் - இந்நான்மையும் பற்றி நடக்கும் செயற்கையுடைய பொருள்கள் என்றவாறு.

உ-ம்: கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையால் மயிர் நல்லவாயின எனவும், எருப்பெய்து இளங்களை கட்டி நீர்க் காலின் யாத்தமையாற் பைங்கூழ் நல்லவாயின எனவும், மயிர் நல்லவாயின, பைங்கூழ் நல்லவாயின எனவும், கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையால் மயிர் நல்ல, எருப்பெய்து இளங் களை கட்டி நீர்க் காலின் யாத்தமையால் பைங்கூழ் நல்ல எனவும், மயிர் நல்ல, பைங்கூழ் நல்ல எனவும் முறையே நான் மையும் வந்தன. (54)

### விடை மரபு

405. தம்பா லில்ல தில்லெனி னினனா
யுள்ளது கூறியு மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங்கு தற்கே.

சூ-ம், வினா நிகழுமிடத்து விடை கூறுவதற்கு ஓர் இயல்பு கூறியது.

(இ-ள்) தம்பா லில்லது - ஒருவன் ஒன்றை வினாவினால் அது தன் பக்கத்தில் இல்லதை, இல்லெனின் - தான் இல்லையென்று சொல லத் தொடங்கினான், இனனாயுள்ளது கூறியும் - அவன் வினாயதற்கு இனமாய்த் தன் பக்கம் உள்ளதைச் சொல்லியும், மாற்றியும் - ஒருவன் வினாயதற்கு இனமாய் உள்ளது சொல்லி மறுத்தும், உள்ளது சுட்டியு முரைப்பர் - அவன் வினாயது தன்னிடத்து உளதாயின் அதனை இத் துணை உண்டென்று சுட்டியும் சொல்லுவர் தொல்லோர் சொற் சுருங் குதற்கே - உரை பல்காமற்கு என்றவாறு.

உ-ம்: பயறுளவோ வணிகரே என்றால் உழுநதுண்டு எனவும், உழுந்தல்லது இல்லை எனவும், இத்துணைப் பயறு உளவென்னும் விடை வருமென்க.

நூறு விற்கும் பட்டாடை உளவோ என்றால் ஐந்து விற்கும் கோசியம் உண்டு எனவும், ஐம்பது விற்கும் கோசிகமல்லது இல்லை எனவும், இத்துணைப் பட்டாடை உள எனவும் விடை வரும் என்க. பிறவுமன்ன. (55)

## இரக்கும் சொல்

406. ஈதா கொடுவெனு மூன்று முறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை.

சூ-ம், ஏற்பதற்கு வருவதோர் கேள்விச்சொல் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) ஈதா கொடுவெனு மூன்றும் - ஈ, தா, கொடு என்னும் மூன்று சொல்லும், முறையே - கூறிய முறையே அச்சொற்களில், இழிந்தோன் - ஈயென்னும் சொல் ஈவானின் இழிந்த இரப்பான் சொல்லுவதாம்; ஒப்போன் - தாவென்னும் சொல் ஈவானோடு ஒக்கும் இரப்பான் சொல்லுவதாம்; மிக்கோ னிரப்புரை - கொடுவென்னும் சொல் ஈவானின் மிக்கோன் இரப்புரையாம் என்றவாறு.

"இரப்புரை" கடைநிலைத் தீபம் என்ப. (56)

## மரபு வழுவமைதி

407. முன்னத்தி னுணரும் கிளவியு முளவே.

சூ-ம், தொடர்மொழிச் சொல் கிடந்த முறையேயன்றி வேறு பொருளும் படும் என்கின்றது.

(இ-ள்) முன் - தொடர்மொழியின் முன்னம் சொற்பொருள் கிடந்த வாறின்றி, அத்தின் - அத்தொடர்மொழியிடத்து சொல்லுவான் குறிப்பான், உணருங் கிளவியும் - வேறு பொருள்பட வரும் சொற்களும், உளவே - சில உளவாம் என்றவாறு.

உ-ம்: செஞ்செவியர், வெள்ளொக்கலர் என்றவழி செவ்வென்று உதிரஞ் சொரியும் செவியர், வெள்ளிய சுற்றத்தார் என்பது பொருளன்று. செவியெல்லாம் சாலச் செம்பொன் அணிந்தவர், முட்டில் செல்வத்துச் சுற்றத்தார் என்பதும் பொருளாம். "குழை கொண்டு கோழியெறியும் வாழ்க்கையவர்" என்றவழி கோழி எறிவாரென்று உணரற்பாலதன்று; ஒன்றானும் முட்டில் செல்வத்தார் என்பதாம். (57)

**408. கேட்குந போலவுங் கிளக்குந போலவும்**
**இயங்குந போலவு மியற்றுந போலவும்**
**அஃறிணை மருங்கினு மறையப் பெறுமே.**

சூ-ம், தொழில் இல்லாத அஃறிணைப் பொருட்கண்ணும் வினா விடை நிகழ்ந்ததுபோல் கூறலாமென்று கூறுகின்றது.

(இ-ள்) கேட்குந போலரவம் - ஒருவர் சொல்லிய சொற்களைக் கேட்பன போலவும், கிளக்குந போலவும் - தாம் வேண்டிய சொற்களைச் சொல்லுவன போலவும், இயங்குந போலவும் - தாம் தாமே நடக்கின்றன போலவும், இயற்றுந போலவும் - தாம் தாமே செய்தன போலவும், அஃறிணை மருங்கினும் - இந்நால் வகைத் தொழிலும் இல்லாத அஃறிணையிடத்து, அறையப் பெறுமே - உள்ளதாகச் சொல்லப் பெறும் என்றவாறு.

உ-ம்: "நன்னீரை வாழி யனிச்சம்" (குறள்.1111), "கரவல மென் றோரைக் கண்ட திலையோ, இரவெலா நின்றாயா லீர்ங் கதிர்த் திங்களாய்" ("அரவளை மென்றோள்" என்று தொடங்கும் பாடல்) எனவும் "மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலும், உடைமையைத் திங்கள் செப்புமால்" (சீவக.2932) எனவும் இவ்வழி அவ்வூர்க்குப் போம், இம்மலை இவ்வழி வந்து கிடக்கும், நிலம் இத்துணை அகன்று கிடக்கும் எனவும் "தன்னெஞ்சே தன்னைச் சுடும்" (குறள்.293), "மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னென்னார்க் கடிமை புகுத்தி விடும்" (குறள். 608) எனவும் வரும். (58)

## வழுவமைப்பும் புறநடையும்

**409. உருவக முவமையிற் றிணைசினை முதல்கள்**
**பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.**

சூ-ம், மரபு வழுவமைப்பும் இவ்வியலுக்குப் புறநடையும் கூறுகின்றது.

(இ-ள்) உருவக முவமையில் - உருவக அலங்காரமும் உவமை அலங்காரமும் என்னும் இவ்விரு அலங்காரங்கட்கு ஏற்புழி, திணை - இரு திணையும் தம்முள் மயங்கலும், சினை முதல்கள் - சினையும் முதலும் தம்முள் மயங்கலும், பிறழ்தலும் - மயங்கலும் என்றது பொருள், இச்சொல்லை முன்னிரண்டினோடும் கூட்டுக; பிறவும் - இவ்வோத்தினுள் சொல்லாது ஒழிந்தனவும், பேணினர் கொளலே - போற்றி அறிந்து கொள்க.

உ-ம்: தருமண் றண்ணளி யாற்றன நிகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலில் வாமனே
யருமை யாலடி கிற்கணை ஐந்துடைத்
திரும கன்றிரு மாநில மன்னனே (சீவக.160)

இது உயர்திணையும் முதலும் மயங்காது வந்த உருவகம்.

முகந்தா மரைமுறுவல் முல்லைகண் ணீலம்
... .... விரல் காந்தள் (திணைமாலை.72).

மதிமுகம், பவளவாய், முறுவல் முத்தம் எனத் திணை மயங்காது முதலும் சினையும் மயங்கி வந்த உருவகம்.

மன்னர் மடங்கன் மறையவர் சொன்மாலை
யன்ன நடையினார்க் காரமுதந் துன்னும்
பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப்பூம் பைந்தார்
எரிசினவேற் றானையெங் கோ (பு.வெ.189)

என உயர்திணை அஃறிணையாக மயங்கி வந்த உருவகம்.

அகழ்கிடங் கந்துகி லார்ந்த பாம்புரி
புகழ்தகு மேகலை ஞாயில் பூண்மாலை
திகழ்மணிக் கோபுரந் திங்கள் வாண்முகம்
சிகழிகை நெடுங்கொடி செல்விக் கென்ப (சீவக.1444)

என அஃறிணை உயர்திணையாக மயங்கி வந்த உருவகம்.

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும் (குறள்.1040)

கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாள்
மங்கலங் கூற மகிழ்பெய்திக் கங்கையாள்
பூம்புன லாகந் தழீஇயினான் போரடுதோள்
வேம்பார் தெரியலெம் வேந்து (பு.வெ.224)

என உருவக இலக்கணம் விளங்கி நின்றிலவேனும் அதனிடத்து மயக்கமெனக் கொள்க.

மணியணி வரைநிகர் மாட வாயிலோன் எனவும்
திருமக ளிவளெனச் செல்வி செல்லுமே எனவும்
இந்திர குமரன் போல விறைமக னிருந்து காண
(சீவக.1253)

எனவும் இவை திணையும் முதலும் மயங்காது வந்த உவமை.

செம்பவள மேய்ப்பத் திழ்ந்திலங்கு சீறடியின்
வம்பழகு நோக்கி வழிபடுவ தேசாலும்
(சூளா. கல்யாணச்.293),

மதிநுதன் மாதர் மதலைபின் சென்றாள்
கயற்கண் ணாளையுங் காமனன் னானையும்
(சீவக.1346)

என இவை திணை மயங்காது முதலும் சினையும் மயங்கின உவமை.

மல்லன் மலையனைய மாதவரை வைதுரைக்கும்
(சீவக.2780)

எனவும்

தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே
(சீவக.53)

என இவை திணை மயங்கி வந்த உவமை.

இவை பட்டாங்கு உரைத்தலின் உவப்பினுள் அடங்காவெனக் கொள்க. (59)

### பொருள்கோள்

410. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே.

சூ-ம், பொருள்கோட் பகுதி கூறுகின்றது.

(இ-ள்) யாற்றுநீர் - ஆற்றுபுனற் பொருள்கோளும், மொழி மாற்று - மொழிமாற்றுப் பொருள்கோளும், நிரனிறை - நிரனிறைப் பொருள் கோளும், விற்பூண் - விற்பூட்டுப் பொருள்கோளும், தாப்பிசை - தாப் பிசைப் பொருள்கோளும், அளைமறி பாப்பு - அறைமறிபாப்புப் பொருள்கோளும், கொண்டுகூட்டு - கொண்டுகூட்டுப் பொருள் கோளும், அடிமறி மாற்று - அடிமறி மாற்றுப் பொருள்கோளும், எனப் பொருள்கோ ளெட்டே - எனப் பொருள் கொள்ளுமுறைமை எட்டாம் என்றவாறு. (60)

### யாற்றுநீர்ப் பொருள்கோள்

411. மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொறும்
அற்றற் றொழுகமஃ தியாற்றுப் புனலே.

சூ-ம், முறையே யாற்றுநீர்ப் பொருள்கோள் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) மற்றைய நோக்கா தடிதொறும் - ஏனைய அடிகளை நோக் காது அடி அடிதோறும், வான்பொருள் அற்றற் றொழுகும் - மேன்மை யுள்ள பொருள் அற்று வருவது, அஃது யாற்றுப் புனலே - ... ... பொருள்கோளாம் என்றவாறு.

உ-ம்: அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைவதூஉங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்வதூஉங் குற்றம்
கொலைப்பா லுங் குற்றமே யாம் (நான்மணி.26)

என வரும். (61)

### மொழிமாற்றுப் பொருள்கோள்

412. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கன் மொழி மாற்றே.

சூ-ம், மொழிமாற்றுப் பொருள்கோள் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஏற்ற பொருளுக்கு - கருதிய பொருளுக்கு, இயையு மொழி களை - பொருந்திய மொழிகளை, மாற்றியோ ரடியுள் வழங்கல் - ஓரடி யுள்ளே மாற்றிச் சொல்லுவது, மொழி மாற்றே - மொழிமாற்றாம் என்ற வாறு.

உ-ம்: சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை

உ-ம்: கரையாடக் கெண்டை கயத்தாட மஞ்ஞை
சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை

இதனுள் கரையாட மஞ்சை, கயத்தாடக் கெண்டை எனவும் சுரை மிதப்ப, அம்மி ஆழ எனவும் யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனவும் ஓரடியுள்ளே மாற்றினவாறு காண்க.

இதனைச் சுண்ணமொழிமாற்று என்று ஈரடியிடத்தே கொள் ளின் ஏனையடிகளுள்ளும் ஏனைப் பாக்களுள்ளும் வரப்பெறாவென மறுக்க. அவை வருமாறு: "ஆலத்தின்மேற் குவளை கயத்துள் வானெடிய குரங்கு." இதனுள் ஆலத்தின்மேல் வானெடிய குரங்கு, குவளை கயத்துள் எனவும் பொருள் கொண்டு ஈரடி மொழிமாற்று என்க.

அடிமறிமொழிமாற்றெனவும் ... அது "சூரல் பம்பிய ... ... நீவர லாறே" என்னும் எல்லாவடியும் முதலிறுதியாக உச்சரித்தாலும்

ஓசையும் பொருளும் வழுவாது நிற்றலின் அடிமறிமொழிமாற்று ஆயிற்று. என்னை?

அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே. (62)

## நிரனிறைப் பொருள்கோள்

413. பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறு நிரனிறீஇ முறையினு மெதிரினும்
நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே.

சூ-ம், நிரனிறைப் பொருள்கோள் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) பெயரும் வினையுமாஞ் சொல்லையும் - பெயர்ச்சொல் வினைச் சொல் என்னும் இவற்றையும், பொருளையும் - இவற்றிற் பொருளாய் வருவனவற்றையும், வேறு நிரனிறீஇ - வெவ்வேறே அடைவே தொகை யொப்ப வைத்து, முறையினு மெதிரினும் - வைத்த முறையே யாதல் எதிரேயாதல், நேரும் பொருள்கோள் - பொருளேற்குமாறு சொல்லைக் கூட்டிப் பொருள் கொள்ளுதல், நிரனிறை நெறியே - நிரனிறைப் பொருள் கோளின் முறையாம் என்றவாறு.

அரும்பதவுரை: பெயர்ச்சொல்லும் பொருளும் வேறு நிறீஇ யது பெயர்நிரனிறை; வினைச்சொல்லும் பொருளும் வேறு நிறீஇயது வினைநிரனிறை. இவை நிறீஇய முறையே பொருள் கொள்வன, முறைப்பெயர் நிரனிறை, முறைவினை நிரனிறை என்னும் பெயராம். எதிர் தொடங்கிப் பொருள் கொள் வன எதிர்ப்பெயர் நிரனிறை எதிர்வினை நிரனிறை என்பனவாம். இவ்வாற்றான் நான்காம் நிரனிறைப் பொருள் ... கொள்க.

உ-ம்: கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்

பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்,
காமவிதி கண்முக மென்மருங்குல் செய்யவாய்
தோமி றுகடினி சொல்லமிர்தந் - தேமலர்க்
காந்தள் குரும்பை கனக மடவாள்கை
யேந்திளங் கொங்கை யெழில்,

முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு (குறள்.1113)

என இவை பெயர் முறை நிரனிறை.

காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய - நீதியான்
மண்ணமிர்த மங்கையர் தோன் மாற்றாரை யேற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்

இவை வினை நிரனிறை.

குன்ற வெண்மண லேறி நின்றியா
மின்னுங் காண்கு வம்மோ தோழி
களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றுந்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே,

ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா - நீடியமால்
நின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு,

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றே சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல் (குறள்.840)

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர் (குறள்.410).

இவை பெயர் எதிர் நிரனிறை. எரித்தான் உரித்தான் உதைத்தான் வேளினை தோலினை காலனை. இதுவும் பெயர் எதிர் நிரனிறை. “நெறி” என்ற மிகையானே ஒரு சாரார் மயக்க நிரனிறையும் ஒரு முத னிரைனிறையும் இருமுதனிரனிறையும் எனவும் வேண்டுவர் என்க.

அவற்றுள் அம்ம் பவள்ள் வரிநெடுங்க ணாய்வஞ்சிக்
கொம்ம் பவள்ள் கொடிமருங்குல் கோங்கின்
அரும்ம் பவண்முலை யொக்குமே யொக்கும்
கரும்ம் பவளவாயிற் சொல்,

கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் னுழைமருங்குல் மேதகு சாயலாள்
என்ன் பிறமகளா மாறு

இவை மயக்க நிரனிறை.

அறவரு முதலாய அந்நால்வருமாம். இவை ஒரு முதனிரனிறை.

அறவரு முதலாய ....ன்னவர் முதலாய வருஞ் சாதியாகும். இவை இருமுதனிரனிறை நால்வகைப் பொருளும் நால் வண்ண மாகும். இவை உய்த்துணர் நிரனிறையாம்.

"வஞ்சி மகள்" இப் பாவினொடு சேர்ந்த பெயர் முறை நிரனிறை ஆறாம்.

மயில்களிக்கும் வண்டார்க்கும் தண்டளவும் பூக்கும்
குயிலொளிக்குங் கோபம் பரக்கும் வெயிலொளிக்கும்
கானங் குழைகொள்ளும் காந்தள் துடுப்பெடுக்கும்
வானம் பொழியு மழை

இது நிரலே நிறுத்து நேரே பொருள் கொண்டது.

காரிகை மென்மொழியோ நோக்கால் கதிர்முலையான்
வார்புருத்தான் இடையான் வாய்த்தளிரான் ஏர்புனைந்த
கொல்லி வடிநெடுவேற் கோங் கரும்பு வாங்குசிலை
வல்லி தமியேன் மனம்

இது நிரையே நிறுத்திய மொழிமாற்று கொண்டது. (63)

## பூட்டுவிற் பொருள்கோள்

414. எழுவா யிறுதி நிலைமொழி தம்முட்
பொருணோக் குடையது பூட்டுவில் லாகும்.

சூ-ம், பூட்டுவிற் பொருள்கோள் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) எழுவா யிறுதி நிலைமொழி- பாவின் முதலினும் ஈற்றினும் நின்ற மொழிகள், தம்முட் பொருணோக் குடையது - தம்முன் பொருள் நோக்கி நிற்பது, பூட்டுவில்லாகும் - பூட்டுவிற் பொருள்கோளாம் என்றவாறு.

உ-ம்: திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத
ரிறந்து படிற்பெரிதா மேதம் - உறந்தையர்கோன்
றண்ணார மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு (முத்தொள்.)

என வரும். (64)

## தாப்பிசைப் பொருள்கோள்

415. இடைநிலை மொழியே யேனையீ ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுத றாப்பிசை.

சூ-ம், தாப்பிசைப் பொருள்கோள் ஆமாறு கூறியது.

(இ-ள்) இடைநிலை மொழியே - பாவின் இடையினின்ற மொழி, ஏனையீரிடத்தும் - ஒழிந்த முதலிடத்தினும் ஈற்றிடத்தினும், நடந்து

பொருளை நண்ணுத றாப்பிசை - சென்று பொருள் கொள்வது தாப் பிசை என்றவாறு.

உ-ம்: உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு. (குறள்.255) (65)

## அளைமறிபாப்புப் பொருள்கோள்

416. செய்யு ளிறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே.

சூ-ம், அளைமறிபாப்புப் பொருள்கோள் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) செய்யு ளிறுதி மொழி - செய்யுள் ஈற்றினின்ற மொழிகள், இடை முதலினும் - இடைமினும் முதலினும் சென்று, எய்திய பொருள் கோள் - வேண்டும் பொருள் கொள்வது, அளைமறி பாப்பே - அளை மறி பாப்புப் பொருள் கோளாம் என்றவாறு.

உ-ம்:
தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சூழல்வார் தாமும்
மூழ்ந்த வினைநலிய முன்செய்வினை யென்றே முயல்வார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலா தாரே
என வரும். (66)

## கொண்டுகூட்டுப் பொருள்கோள்

417. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி யியைப்பது கொண்டு கூட்டே.

சூ-ம், கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) யாப்படி பலவினும் - செய்யுமாறு பல அடிகளுள்ளும், கோப் புடை மொழிகளை - பொருந்தி நின்ற ஏற்புடைய மொழிகளை, ஏற்புழி யியைப்பது - பொருள் ஒக்குமிடத்து ஏற்ப வருவித்துப் பொருள் கொள் வது, கொண்டு கூட்டே - கொண்டு கூட்டுப் பொருள்கோளாம் என்ற வாறு.

உ-ம்: ஆலத்தின் மேற் குவளை வாலி னெடிய குரங்கு

இது ஆலத்தின்மேற் குரங்கு, குளத்துட் குவளை என ஈரடியுட் பெயரையும் வினையையும் வேண்டுழிக் கொண்டமையால் ஈரடிக் கொண்டுகூட்டு. இதனை மொழிமாற்று என்பாரும் ஈரடி மொழி

மாற்று என்பாரும் உளர். அவ்வாறு கொள்ளின் ஏனைப் பல அடி களுள் வரினும் பல பெயர் கொடுக்க வேண்டுமென மறுக்க.

தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
யஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்

இவை அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் எனவும் தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி பசலை எனவும் பல அடியிற் சொற்களையுங் கூட்டிக் கொண்டமை யால் பலவடிக் கொண்டுகூட்டப் பொருள்கோள் என்க.

ஆரிய மன்னர் பறைபோ லெழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேற் றண்ணுமை - காரி
விறன்முள்ளூர் வேங்கை பைதனாணுந் தோளாய்
நிறனுள்ளூ ருள்ள தலர்

பைதல் நாணுந் தோள் எனவும் நிறம் வேங்கை வீ எனவும் ஆரிய மன்னர் பறைபோல் எழுந்தியம்பும் உள்ளூர் எனவும் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொண்டமையால் இதுவும் பலவடிக் கொண்டுகூட்டாம் என்க. (67)

## அடிமறிமாற்றுப் பொருள்கோள்

418. ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும்
யாப்பீ றிடை முத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறா வடியவு மடிமறி.

சூ-ம், அடிமறிமாற்றுப் பொருள்கோள் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஏற்புழி யெடுத்துடன் - பொருளுக்கு ஏற்புடைய இடத்திலே எடுத்துக்கொண்டு வந்து, கூட்டுறு மடியவும் - கூட்டியுரைத்தற்குப் பொருந்தும் அடியவும், யாப்பீ றிடைமுத லாக்கினும் - வேண்டின அடியைப் பாவிற்கு முதல் இடை ஈறாகத் தொகுத்துரைத்தாலும், பொருளிசை மாட்சியு மாறா வடியவும் - தம் ஓசையும் பொருளும் தப்பா அழகையுடைய அடியவும், அடிமறி - அடிமறிமாற்றுப் பொருள் கோளாம் என்றவாறு.

உ-ம்: இந்நூலார்க்கு இதுவும் கருத்தன்று. அடிமறிமாற்றன்றி மொழிமாற்று ஆகாமையால்.

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்

(நாலடி.93)

அரிதவித் தாசின் றுணர்நதவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்
தூரிதனிற் கண்டுணர்ந்தா ரோக்கமே போலப்
பெரியத னாவி பெரிது

(பழமொழி - கடவுள்)

என வரும். இவை அடியாக எடுத்துக் கூட்டிப் பொருள் கோடலிற் கொண்டுகூட்டுப் பொருள்கோளில் அடங்கா என்க.

மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னாவே
யேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே

இதனை வேண்டியதோர் அடியை முதல் இடை ஈறாக உச்சரித்து அடிமறியாதல் காண்க. இஃது ஏனை யாப்புகளினும் வருமாதலால் அடிமறிமண்டில ஆசிரியத்துள் அடங்கா என்க.

அஃதேல் யாப்புக்குரிய பொருள்கோள்களை ஈண்டுச் சொல்ல வேண்டியது என்னையோவெனின், ஒரு மொழி, தொடர்மொழி, பொது மொழி என்று சொற்கூறு செய்து அவை ஆமாறு சொன்னாரென்க. அவற்றுள் தொடர்மொழி அடிமறிமாற்று ஒழிந்த ஏழு பொருள் கோளும்படத் தொடர்வனவாம்.

அவை பாவஞ் செய்தான் நரகம் புகும் புண்ணியஞ் செய்தான் சுவர்க்கம் புகும் என இவை யாற்றுநீர்ப் பொருள்கோள்படத் தொடர்ந்த தொடர்மொழி.

தந்தையைக் கண்டு தலையினா னிலமுறத் தொழுது வணங் கினான். இது பூட்டுவிற் பொருள்கோள்படத் தொடர்ந்த தொடர் மொழி.

நன்மக்களுள்ளும் விலங்கினுள்ளும் நரகத்துள்ளுஞ் சென்று துன்பம் எய்துவர். இது தாப்பிசைப் பொருள்கோள்படத்தொடர்ந்த தொடர்மொழி.

செய்யார் தீமானுடருள்ளும் விலங்கினுள்ளும் அழுந்துவர்; அறஞ் செய்தார் நன்மக்களுள்ளும் வீட்டின்கண்ணும் சென்று இன்பம் எய்துவர். இதுவுமது.

செல்வமும், சிறப்பும், கல்வியும், மீக்கூற்றமும், வலியும், வனப்பும், ஆற்றலும், புண்ணியத்தான் ஆம். இது அளமறிபாப்புப் பொருள்கோள்படத் தொடர்ந்த தொடர்மொழி.

காதில் வளையுங் கையில் குழையுந் தரித்தான். இது மொழி மாற்றுப் பொருள்கோள் படத் தொடர்ந்த தொடர்மொழி.

மரத்தின்மேல் ஆமை; கிணற்றில் அணிற்பிள்ளை. இது கொண்டு கூட்டுப் பொருள்கோள் படத் தொடர்ந்த தொடர்மொழி. பிறவுமன்ன. (68)

**மூன்றாவது பொதுவியல் முடிந்தது.**

நான்காவது

# இடைச்சொல்லியல்

கடவுள் திருவடி துணை

## இடைச்சொல்லின் இயல்பும் பாகுபாடும்

419. வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.

சூ-ம், இடைச் சொல்லினது இயல்பும் அதன் பகுதியும் கூறு கின்றது.

(இ-ள்) வேற்றுமை - ஐ ஆல் முதலாகிய வேற்றுமை உருபும், வினை - அன் ஆன் அள் ஆள் முதலாகிய வினையுருபும், சாரியை - அன் ஆன் இன் அல் முதலாகிய சாரியை உருபும், ஒப்புருபுகள் - போலப் புரைய முதலாகிய உவமை உருபும், தத்தம் பொருள் - ஏ ஓ முதலாகிய பிரி நிலை முதலிய பொருளைத் தோற்றி நிற்கும் தத்தம் பொருளவும், இசைநிறை - ஏ ஓ முதலாகிய இசை நிறைப்பனவும், அசைநிலை - மியா இக மோ முதலாகிய அசைநிலையின் வருவனவும், குறிப்பு - கல்லென் விண்ணென ஒல்லென முதலாகிய குறிப்பின் வருவனவும், எனெண் பகுதியில் - என்று சொல்லப்படும் எட்டுப் பகுதியவாய், தனித் தியலின்றி - தாமாகத் தனித்து நடத்தலின்றி, பெயரினும் வினையினும் - பெயரிடத்தினும் வினையிடத்தினும், பின்முன் னோரிடத்து - பின்னிடத் தாயினும் முன்னிடத்தாயினும் ஓரிடத்தாயினும், ஒன்றும் பலவும் வந்து - ஒன்றானும் பலவானும் வந்து, ஒன்றுவ பலவும் வந்து - ஒன்றானும் பலவானும் வந்து, ஒன்றுவ திடைச்சொல் - பொருந்தி நிற்பது இடைச்சொல்லாம் என்றவாறு.

உ-ம்: "அதுமன்", "அதுமற்ற", "அதுமற் றம்ம தானே" எனவும், "கொன்னூர்" (குறு.138), "ஓஒ வுவம னுறழவின்றி யொத்ததே" (களவழி.36) எனவும் பெயர்க்குப் பின்னும் முன்னும் ஒன்றும் பலவும் இடைச்சொல் வந்தன. "வருகதில்", வருகதி லம்ம தானே எனவும், "ஓஒ தந்தார்", "ஏஎ அம்பன் மொழிந்தனள் யாயே" (திருமுருகு.217) எனவும் வினைக்குப் பின்னும் முன்னும் ஒன்றும் பலவும் வந்தன.

தனித்து வருங்கொல் என்னும் ஐயமறுத்தற்குத் "தனித்திய லின்றி" என்றாரென்க.

வருவது என்னாது "வந்தொன்றுவது" என்றமையால் இவை தம்மீறு பிரிந்து நிற்கவும் பெறும். அவை மன், மன்னை; கொன், கொன்னை என வரும்.

பிறிதின் இடத்தைச் சார்ந்து நடத்தலான் இடைச்சொல் என்க.

(1)

## இடைச்சொற் பொருள்

420. தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்
பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை
பிரிப்புக் கழிவாக்க மின்ன விடைப்பொருள்.

சூ-ம், மேலே "தத்தம் பொருள்" என்றார்; அவற்றின் பொருளாவன இவையெனக் கூறியது.

(இ-ள்) தெரிநிலை தேற்றம் - தெரிநிலைப் பொருளும் தேற்றப் பொருளும், ஐயமுற்று - ஐயப் பொருளும் முற்றுப் பொருளும், எண்சிறப்பு - எண்ணுப் பொருளும் சிறப்புப் பொருளும், எதிர்மறை யெச்சம் - எதிர் மறைப் பொருளும் எச்சப் பொருளும், வினாவிழைவு - வினாப் பொருளும் விழைவுப் பொருளும், ஒழியிசை பிரிப்பு - ஒழியிசைப் பொருளும் பிரிநிலைப் பொருளும், கழிவாக்கம் - கழிவுப் பொருளும் ஆக்கப் பொருளும், இன்ன - இப்பதினான்கு பொருளும் இவை போல்வன பிறவும், இடைப்பொருள் - இடைச்சொற்குப் பொருளாவன என்றவாறு.

உதாரணம் வருஞ் சூத்திரத்திற் காண்க.

"இன்ன" என்றதனாற் சில வருமாறு.

தொறு, தோறு, ஞெரோ, அந்தோ, அன்னோ, கொல்லோ, ஆ, ஆஅ, இனி, என், ஏன், ஏதில், ந, கல், ஒல், கொன், துடும், துண், பொள், கம், கொம் என்பன.

இவற்றுள் தொறு தோறு என்பது தான்புணர்ந்த மொழிப் பொருண்மையைப் பலவாக்கி ஆங்காங்கு என்பது பட வரும். உ-ம்: "குன்றுதொ றாடிய குமரற் போற்றுவாம்" "அறிதோ றறியாமை கண்டற்றாற் காமம்" (குறள்.110) என வரும்.

ஞெரோவென்பது வெருவுதற் பொருளின் வரும். "ஞெரோ வெனத், தலைக்கொள் வேட்டங் களிறட் டாஅங்கு" (பொருந.141) என வரும்.

அந்தோ அன்னோ என்பன இரக்கங் குறித்து வரும். "அந்தோ விசையைப் பட்டன" (சீவக.312), "அரக்காம்ப னாறும்வா யம்மருங் கிற் கன்னோ, பரற்கான மாற்றின கொல்லோ" (நாலடி.396), "ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ" (புறம்.235), "ஆவாழிய துயர்" "ஆஅ ஆசா ரார்" என வரும். இனி என்பது காலத்தின்மேலும் இடத் தின் மேலும் பின் என்பது பட வரும். சென்ற காலநிற்க இனி நல்லறஞ் செய்வோம், ஒன்னார் மதிலெடுத்த வாசிரினி விடுவானல்லன், பிரிந்த தலைமகன் இமையில் வந்தான் இனி விடுவா னல்ல னென்றவ ரீந்தனரே எனக் காண்க.

என் என்பது சொல்லுதலென்னும் தொழில் குறித்துப் பெயர் வினைகட்குரிய விகுதிகளுடனே வரும். என்றான், என்றாள், என்றார், என்றது, என்றன, என்றேன், என்றேம், என்றாய், என்றீர் என வரும்.

ஏன் என்பது ஒழிதற் பொருள் குறித்து வரும். ஏனோன், ஏனோர், ஏனையது, ஏனையவை, ஏனைய, ஏனுழி என வரும். ஏதில் என்பது அயலென்னும் பொருள் குறித்து வரும். ஏதிலான், ஏதிலாள், ஏதிலார், ஏதிலது, ஏதிலவை,

> ஏதிலார் குற்றம்போற் தங்குற்றங் காண்கிற்பிற்
> றீதுண்டோ மன்னு முயிர்க்கு (குறள்.190)

என வரும்.

ந சிறப்புப் பொருளை உடையதாய்ப் பேர்முன் அடுத்து வரும். நக்கீரர், நச்செள்ளையார், நப்பிஞ்சை, நந்நாகனார், நக்கடகம் எனக் காண்க.

கல் என்றது முதல் நான்கும் ஓசைப் பொருண்மேல் வரும். "கல் லென்ற புள்ளுங் கொள்ளென ஒலிசெய்யும்", "நிலையருங் குட்டத் துத் துடுமெனப் பாய்ந்து" (புறம்.243) என வரும். துண் என்றது முதல் நான்கும் குறிப்புப் பொருண்மேல் வரும். துண்ணென நடந்தார், பொள்ளென வியர்த்தார், கம்மென அரும்பு விரிந்தன, கொம்மென வந்தார் என வரும். (2)

## ஏகார இடைச்சொல்

421. பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே.

சூ-ம், வேற்றுமையுருபு முதலான நாலும் மேலே சொல்லப்பட்டன; தத்தம் பொருட்டு வருவனவும் இசை நிறைப்பனவும் அசைநிலையும் குறிப்புமாவன உணர்த்தத் தொடங்கினார்; இது ஏகார இடைச்சொல் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) பிரிநிலை வினா - ஒரு குழுவின் ஒன்றைப் பிரித்தற்கண்ணும் வினாதற்கண்ணும்,

அவனே கொண்டான் என்பது பிரிநிலை ஏகாரம்.
நீயே கொண்டாய் என்பது வினா ஏகாரம்.
எண் - பலவற்றை அடுக்கி எண்ணுதற்கண்ணும்,
நிலனே நீரே தீயே வளியே என்பது எண்ணேகாரம்.
ஈற்றசை - ஈற்றிலே பொருள் வேண்டா இடத்தும்,
கடல்போல் றோன்றல காடிறந் தோரே (அகம்.1)

என்பது ஈற்றசை ஏகாரம்.

தேற்றம் - ஒரு பொருளைத் துணியுமிடத்தும்,
பொருள் கொள்வார் மேற்றே புகழ்

என்பது தேற்றேகாரம்.

இசைநிறை - ஓசை நிறைக்க வேண்டுமிடத்தும்,
ஏஎ யிவளொருத்தி பேடியோ வென்றார் (சீவக.652)

என்பது இசைநிறை ஏகாரம்.

எனவா - றேகா ரம்மே - அவ்வப் பெயரால் ஆறு கூற்றதாம் ஏகா ரம் என்றவாறு. (3)

## ஓகார இடைச்சொல்

422. ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே.

சூ-ம், ஓகார இடைச்சொல்லினது இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) ஒழியிசை - ஒரு சொல் ஒழிவு பட வந்து ஒழியிசை ஓகார மாகியும், வினா - ஒன்றை வினாதற்கண் வந்து வினா ஓகாரமாகியும்,

சிறப்பு - ஒன்றைச் சிறப்பிக்க வந்து சிறப்பு ஓகாரமாகியும், எதிர்மறை - எதிர்மறுத்தற்கண் வந்து எதிர்மறை ஓகாரமாகியும், ... ... கழிவு - ஒரு பொருளைக் கழிக்க வந்து கழிவு ஓகாரமாகியும், அசைநிலை - அசைகளை அசைத்தற்கண் வந்து அசைநிலை ஓகாரமாகியும், பிரிப்பு - ஒரு குழுவின் ஒன்றைப் பிரித்தற்கண் வந்து பிரிநிலை ஓகார மாகியும், எனவெட் டோவே - என்று கூறப்படும் இவ்வெட்டுப் பொரு ளையும் தரும் ஓகார இடைச்சொல் என்றவாறு.

(உ-ம்): கொளலோ கொண்டான் என்பது கோடற்குத் தகுமா யினும் கொண்டுய்யப் போயினானல்லன் என ஒரு சொல் ஒழிவு பட வந்தமையால் இது ஒழியிசை. நன்மைக்கோ வந்தான் என்பதுவும் அது. அவனோ அல்லனோ என்பது வினா. ஓஒ பெரியன் என்பது சிறப்பு. யானோ கொண்டேன் என்பது எதிர் மறை. நன்றோ அன்று தீதோ அன்று என்பது தெரிநிலை இடை நிகர்த்தலென்பது தெரித்தமையின். நைதலின்றி நல்ல றஞ் செய்கின்றாலோ உயிருய்யும் என்பது கழிவு. "காணிய வம்மினோ மாலையது நிலையே" என்பது அசை. அவனோ செய்தான் பிரிநிலை. (4)

## என என்று என்னும் இடைச்சொற்கள்

423. வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினும்
எனவெனு மொழிவரு மென்று மற்றே.

சூ-ம், எனவெனவும் என்றெனவும் வரும் இடைச்சொற்களது இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) வினைபெயர் - வினைப் பொருண்மைக்கண்ணும் பெயர்ப் பொருண்மைக்கண்ணும், குறிப்பிசை - குறிப்புப் பொருண்மைக் கண் ணும் இசைப் பொருண்மைக்கண்ணும், எண் - பலவற்றை அடுக்கி எண்ணுதற்கண்ணும், பண்பாறினும் - பண்புப் பொருண்மைக் கண்ணும் இவ்வாறு பொருண்மைக்கண்ணும், எனவெனு மொழிவரும் - என வென் னும் இடைச்சொல் வரும்; என்று மற்றே - என்றென்னும் இடைச் சொல் லும் அவ்வாறு பொருளினும் வரும் என்றவாறு.

உ-ம்: கொள்ளெனக் கொண்டான் என்பதுவினை.

ஊர் எனப்படுவது உறையூர் என்பது பெயர். விண்ணென விசைத்தது என்பது குறிப்பு. ஒல்லென வொலித்தது என்பது இசை. "கடலெனக் காற்றெனக் கடுங்கட் கூற்றென, உடலென உருமென ஊழித் தீயென" (சீவக.973) என்பது எண். வெள்ளென விளர்த்தது

என்பது பண்பு. இனி, என்று என்பதையும் இவ்வாறே வருவிக்க. இவை பெயரினிடத்தினும் வினையினிடத்தும் உவமை உருபாகி இடைச்சொல்லாகி வரும்.

காரென யார்க்கும் பொழிந்தான், புலி பாய்ந்தெனப் பாய்ந்தான் என வரும். (5)

### உம்மை இடைச்சொல்

**424.** எதிர்மறை சிறப்பைய மெச்சமுற் றளவை
தெரிநிலை யாக்கமோ டும்மை யெட்டே.

சூ-ம், உம்மை இடைச்சொல்லின்து இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) எதிர்மறை - எதிர்மறைப் பொருண்மைக்கண்ணும், சிறப்பை யும் - சிறப்புப் பொருண்மைக்கண்ணும் ஐயப் பொருண்மைக் கண்ணும், எச்சமுற்று - எச்சப் பொருண்மைக்கண்ணும் முற்றுப் பொருண் மைக்கண்ணும், அளவை - பலவற்றை அடுக்கி எண்ணுதற் கண்ணும், தெரிநிலை - தெளிவுபடுத்த வரும் தெரிநிலைப் பொருண்மைக் கண் ணும், ஆக்கமோடு - ஆக்கப் பொருண்மைக்கண்ணொடும், உம்மை யெட்டே - இவ்வெட்டுப் பொருண்மைக்கண்ணும் வரும் உம் என்னும் இடைச்சொல் என்றவாறு.

உ-ம்: கொற்றன் வருதற்கும் உரியன் என்பது எதிர்மறை;
வாரான் என்பதற்கும் உரித்தாகலின்.

"குறவரு மருளுங் குன்றம்" (மலைபடு.125) என்பது சிறப்பு; யாவரும் செல்லக்கூடாது என்பது பட நிற்றலின். பத்தேனும் எட்டே னும் கொடு என்பது ஐயம்; ஒன்று துணியாமையின். சாத்தனும் வந்தான் என்பது எச்சம்; அவனேயன்றி பிறனையும் வரவு விளக்க லின். தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார் என்பது முற்று; மூவரன்றி வேறில்லையெனக் காட்டலின். ஒன்றும் இரண்டும், பொன்னும் மணியும் என்பது எண்ணின் அளவை; பலமும் கஃசும் என்பது நிறை அளவை; உழக்கும் ஆழாக்கும் என்பது முகத்தல் அளவை; ஒரு கோலும் அரைக்கோலும் என்பது நீட்டல் அளவை. நன்றுமன்று தீது மன்று என்பது தெரிநிலை; இடை நிகர்த்தது என்பது தெரித்தமை யின். நெடியனும் வலியனும் என்பது ஆக்கம். (6)

### முற்றும்மையின் இயல்பு

**425.** முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்.

சூ-ம், இன்னும் முற்றும்மை இடைச்சொற்கு ஓர் இயல்பு கூறு கின்றது.

(இ-ள்) முற்றும்மை - தன் பொருண் முழுதுங்கொண்டு நிறைவாய் இருந்த முற்றும்மை, ஒரோவழி - ஒரோ ஓரிடத்து, எச்சமு மாகும் - குறைவாகிய எச்ச உம்மைக் குறிப்புமாம் என்றவாறு.

உ-ம்: பத்தும் கொடுக்க வேண்டாம் என்றால் அனைத்தும் கொடுக்க வேண்டாம் என்றுமாம்; அவற்றுட் சில கொடு என்று மாம். எல்லாரும் வந்திலர் என்றால் அனைரும் வந்திலர் என்று மாம்; சிலர் வந்தார் என்றுமாம். (7)

### எச்சவும்மைக்கு ஆவதொரு விதி

426. செவ்வெ ணீற்றதா மெச்ச வும்மை.

சூ-ம், எண்ணும்மை இடைச்சொற்கு ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) செவ்வெண் - செவ்வெண்ணின்கண்ணே, ஈற்றதா மெச்சவும்மை - எச்சவும்மை கொடுக்கில் ஈற்றிலே கொடுக்க என்றவாறு.

உ-ம்: "அடகு புலால்பாகு பாளிதமு முண்ணான், கடல்போலுங் கல்வி யவன்" என வரும். அடகும் புலாலும் பாகும் பாளிதமும் உண்ணான் என அறிக. (8)

### சில எண்ணிடைச்சொற்களின் இயல்பு

427. பெயர்ச்செவ் வெண்ணே யென்றா வெனாவெண்
நான்குந் தொகைபெறு மும்மையென் றெனவொ
டிந்நான் கெண்ணுமஃ தின்றியு மியலும்.

சூ-ம், எண்பெயரும் இடைச்சொல்லும் விரவுவழி நிகழ்வதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) பெயர்ச்செவ் வெண் ... ... - ... ... ஏகாரவெண்ணும் என்றா வெண்ணும் எனாவெண்ணும், நான்குந் தொகைபெறும் - இந்நான் கெண்ணும் இறுதித் தொகை பெற்று நடக்கும்; ... ... - ... என்றென் எண்ணும் எனவென் எண்ணும் ஒடுவென் எண்ணும், இந்நான் கெண் ணும் - ஆகிய இந்நான்கெண்ணும், அஃதின்றியு மியலும் - தொகை பெறாமலும் நடக்கும் என்றவாறு.

உம்மையாற் றொகை பெறுதலுமாம் என்றவாறு.

உ-ம்: சாத்தன் கொற்றன் தேவன் பூதன் நால்வரும் வந்தார் எனவும்; சாத்தனே கொற்றனே தேவனே மூவரும் வந்தார்

எனவும்; சாத்தனென்றா கொற்றனென்றா தேவனென்றா மூவரும் வந்தார் எனவும்; சாத்தனெனா கொற்றனெனா இருவரும் வந்தார் எனவும் நான்கெண்ணும் முறையே தொகை பெற்றன.

இனி நிலனும் நீரும் தீயும் நல்லவாம் எனவும்; சாத்தனென்று கொற்றனென்று தேவனென்று சொல்லப்பட்டவர் வந்தார்; நிலனென நீரெனத் தீயென வளியென ஆகாயமென அறிகுதும்; பொன்னொடும் தேரொடும் தானையிற் பொலிந்தேன் எனவும் முறையே நான்கும் தொகையின்றி வந்தன.

நிலனும் நீரும் இரண்டும் வேண்டுமெனத் தொகை பெறலுமாம். (9)

### சில எண்ணிடைச் சொற்களுக்குச் சிறப்பு விதி

428. என்று மெனவு மொடுவு மோரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்.

சூ-ம், என்று என ஒடு என்னும் இம் மூன்று எண்ணிற்கும் ஆவதோர் இயல்பு கூறியது.

(இ-ள்) என்று மெனவு மொடுவும் - என்றும், எனவும், ஒடு ... ... இம் மூன்று இடைச்சொல்லும், ஒரோவழி நின்றும் - எண்ணின்கண் ஓரிடத்தே நின்றனவேனும், பிரிந்தெண் பொருடொறு நேரும் - அது பிரிந்து எண்ணும் பொருடொறுஞ் செல்லும் என்றவாறு.

உ-ம்: வினைபகை யென்றிரண்டி னெச்சம் (குறள்.674)

பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண் (குறள்.146).

பொருள்கருவி காலம் வினையிட னொ டைந்து
மிருடீர எண்ணிச் செயல் (குறள்.675)

என இரண்டிடத்தும் மூன்றிடத்தும் நான்கிடத்தும் என்றும், எனவும், ஒடுவும் எண்ணி வந்தன. பிறவுமன்ன. (10)

### சில எண்ணிடைச்சொற்கள் வினையொடு வருமாறு

429. வினையொடு வரினுமெண் ணினைய வேற்பன.

சூ-ம், எண் வகை எண்கட்கும் ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) வினையொடு வரினும் - எண் வகை எண்களும் வினையொடு கூடி வருமிடத்து, எண்ணினைய - மேற் சொன்னவாறே பெற்றும் பெறாதும் வருவனவாம், ஏற்பன - அவ்வினைகள் ஏற்பன என்றவாறு.

... ... ...தெனத் தந்தாரென எனவென் என் வினையொடு வந்தது.

"மண்டில மழுங்க ... ... வண்டின மலர்பரந் தூத... ... கண்டற் கானற் குருகின மொலிப்ப" எனச் செவ்வெண் வந்தவாறு.

சாத்தன் வந்தான்; கொற்றன் வந்தான்; இருவரும் வந்ததாற் கலியாணம் பொலிந்தது எனத் தொகை பெற்றவாறு காண்க.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (11)

## தில்லென்னும் இடைச்சொல்

**430. விழைவே கால மொழியிசை தில்லே.**

சூ-ம், தில்லென்னும் இடைச்சொல் வருமிடம் கூறுகின்றது.

(இ-ள்) விழைவே காலம் - விழைவுப் பொருண்மைக் கண்ணும் காலப் பொருண்மைக்கண்ணும், ஒழியிசை - ஒழியிசைப் பொருண் மைக் கண்ணும், தில்லே - இம்மூன்று பொருண்மைக்கண்ணும் வரும் தில்லென்னும் இடைச்சொல் என்றவாறு.

உ-ம்: "சின்மொழி யரிவையைப் பெறுகதி லம்ம யானே" (குறு. 14) எனப் பெறுவேனாகக் கடவது என விழைவின்கண் வந்தது.

பெற்றாங் கறிகதி லம்மவிவ் வூரே (குறு.14) என இது பெற்ற பின் அறிவதாக எனக் காலத்தின்கண் வந்தது.

வருகதி லம்மவெஞ் சேரி சேர (அகம்.276) என வந்தால் இன்னதொன்று செய்வேன் என்னும் சொல்லொழிய வந்தமை யால் ஒழியிசைக்கண் வந்தது. (12)

## மன்னென்னும் இடைச்சொல்

**431. மன்னே யசைநிலை யொழியிசை யாக்கம்**
**கழிவு மிகுதி நிலைபே றாகும்.**

சூ-ம், மன்னென்னும் இடைச்சொல் வருமிடம் கூறுகின்றது.

(இ-ள்) மன்னே - மன்னென்னும் இடைச்சொல்லாவது, அசைநிலை ஒழியிசை - அசைநிலைப் பொருண்மைக்கண்ணும் ஒழியிசைப் பொருண் மைக் கண்ணும், ஆக்கம் கழிவு - ஆக்கப் பொருண்மைக்கண்ணும் கழி வுப் பொருண்மைக்கண்ணும், மிகுதி நிலைபேறு - மிகுதிப் பொருண் மைக்கண்ணும் நிலைபேற்றுப் பொருண்மைக்கண்ணும், ஆகும் - இவ் வறுவகைப் பொருண்மைக் கண்ணும் வரும் என்றவாறு.

உ-ம்: மாலை யென்மனார் மயங்கி யோரே (கலி.119)

என அசைநிலைக்கண் வந்தது.

"பண்டு கூரியதோர் வாண்மன்" என்பது வாய் போமிற்று என்றேனும் இந்நீர்த்து ஆமிற்று என்றேனும் சொல்லொழிய வருதலின் ஒழியிசைக்கண் வந்தது.

"பண்டு காடுமன்" என்பது இப்பொழுது வயல் ஆமிற்று குளம் ஆமிற்று என ஆக்கப் பொருண்மைக்கண் வந்தது.

சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே (புறம்.235)

என்பது இப்பொழுது கழிந்ததெனக் கழிவின்கண் வந்தது.

மன்னு மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி
(சிலம்பு. கானல்.3)

என்பது மிகுதிக்கண் வந்தது.

பூமன்னு பொழில் வாழ்க மன்னே

என்பது நிலைபேற்றின்கண் வந்தது. (13)

## மற்றென்னும் இடைச்சொல்

432. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.

சூ-ம், மற்றென்னும் இடைச்சொல் வருமிடம் கூறுகின்றது.

(இ-ள்) வினைமாற்று - வினைமாற்றுப் பொருண்மைக்கண்ணும், அசை நிலை - அசைநிலைப் பொருண்மைக்கண்ணும், பிறிது - பிறி தென்னும் பொருண்மைக்கண்ணும், எனு மற்றே - என்று சொல்லப்படும் இம் மூன்று பொருண்மைக்கண்ணும் மற்று என்னும் இடைச் சொல் வரும் என்றவாறு.

உ-ம்: மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது (நாலடி.19)

என்பது வினைமாற்று.

மற்றடிகள் கண்டருளிச் செய்ய மலரடிக்கீழ் (சீவக.1873)

என்பது அசைநிலை.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் (குறள்.380)

என்பது பிறிதின்மேல் வந்தது. (14)

## மற்றையதென்னும் இடைச்செல்

**433.** மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

சூ-ம், மற்றையதென்னும் இடைச்சொல் வருமிடம் கூறுகின்றது.

(இ-ள்) மற்றைய தென்பது - மற்றையதென்று சொல்லப்படும் இடைச் சொல், சுட்டிய தற்கினம் - சுட்டியதனை ஒழிய இதற்கு இனமான பிறிதொன்றனைக் காட்டும் என்றவாறு.

> உ-ம்: பல பொத்தகங் கிடப்புழி ஏவலாளனைப் பொத்தகம் கொண்டுவா என்றால் அவன் ஒரு பொத்தகம் கொடுவந்த விடத்தில் தான் கருதியது அன்றெனில் மற்றையது கொணர வேண்டும் என்றால் கொணர்ந்ததன் இனமதனைச் சுட்டிற்று ஆகலான் அதனையொழித்து அதற்கினமான பொத்தகம் கொணர வேண்டும் என்பதாம். (15)

## கொல்லென்னும் இடைச்சொல்

**434.** கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.

சூ-ம், கொல்லென்னும் இடைச்சொல் வருமிடம் கூறுகின்றது.

(இ-ள்) கொல்லே - கொல்லென்று சொல்லப்படும் இடைச் சொல், ஐயம் - ஒரு பொருளை ஐயப்பாடு செய்யும் பொருண்மைக் கண்ணும், அசைநிலை - அசைநிலைப் பொருண்மைக்கண்ணும், கூற்றே - ஆன இவ்விரு கூற்றின்கண்ணதாம் என்றவாறு.

> உ-ம்: குற்றிகொல்லோ? மகன்கொல்லோ? என்பது ஐயத்தின் கண் வந்தது. பிரிவெண்ணிக்கொல்லோ என்பது அசைநிலை. (16)

## ஒடு தெய்ய என்னும் இடைச்சொற்கள்

**435.** ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.

சூ-ம், ஒடு தெய்ய என்னும் இரண்டு இடைச்சொல்லும் வருமிடம் கூறுகின்றது.

(இ-ள்) ஒடுவுந் தெய்யவும் - ஒடுவென்னும் இடைச் சொல்லும் தெய்யவென்னும் இடைச்சொல்லும், இசைநிறை மொழியே - இசை நிறைத்தற்கண் வரும் சொற்களாம் என்றவாறு.

உ-ம்: முதைப்புனங் கொன்ற வார்கலி யுழவர்
விதைக்குறு வட்டி போதொடு போதுள (குறு.155),

சொல்லேன் றெய்ய நின்னொடு பெயர்த்தே

என வரும். (17)

## அந்தில் ஆங்கு என்னும் இடைச்சொற்கள்

**436. அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே**

சூ-ம், அந்தில் ஆங்கு என்னும் இவ்விரண்டு இடைச்சொல்லும் வரு மிடம் கூறுகின்றது.

(இ-ள்) அந்திலாங்கு - அந்தில் ஆங்கு என்னும் இவ்விரண்டு இடைச் சொல்லும், அசைநிலை - அசைநிலைப் பொருண்மைக் கண்ணும், இடப்பொருளவ்வே - இடப்பொருண்மைக்கண்ணும் வரும் என்றவாறு.

உ-ம்: "அந்திற், கழலினன் கச்சினன்" (அகம்.76) என்பது அசைநிலை. "வருமோ சேயிழை யந்திற், கொழுநற் காணி" (குறு.293) என்பது அவ்விடத்தென வந்து இடப்பொருட்டு "ஆங்கத், திறனல்ல யங்கழற யாரை நகுமிம், மகனல்லான் பெற்றமகன்" (கலி.86) என்பது அசைநிலை. "ஆங்காங் காயினுங் காண்டக" என்பது இடம். (18)

## அம்ம என்னும் இடைச்சொல்

**437. அம்ம உரையசை கேண்மினென் றாகும்.**

சூ-ம், அம்மவென்னும் இடைச்சொல் வருமிடம் கூறுகின்றது.

(இ-ள்) அம்ம - அம்மவென்று சொல்லப்படும் இடைச் சொல், உரை யசை - உரையசைக்கண்ணது ஆயினும், கேண்மினென்றாகும் - கேண் மின் என்று முன்னிலையேவற் பொருட்கண்ணதாயும் வரும் என்ற வாறு.

உ-ம்: "பயனின்று மன்றம்ம காமம்" (கலி.142) என்பது அசைநிலை. "அம்ம வாழி தோழி" (நற்.158, குறு.104; ஐங் 31-40) எனக் கேளென்னும் பொருட்கண் வந்தது. (19)

## மா என்னும் இடைச்சொல்

**438. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.**

சூ-ம், மாவென்னும் இடைச்சொல் வருமிடம் கூறுகின்றது.

(இ-ள்) மாவென் கிளவி - மாவென்று சொல்லப்படும் இடைச்சொல், வியங்கோ ளசைச் சொல் - வியங்கோட்கண் அசைச்சொல்லாய் வரும் என்றவாறு.

உ-ம்: ... ...

"உப்பின்று, புற்கை யுண்கமா கொற்கை யோனே" என வியங்கோட்கண் அசையாய் வந்தது. (20)

## முன்னிலை அசைச்சொற்கள்

439. மியாயிக மோமதி யத்தை யித்தை
வாழிய மாளவீ யாழமுன் னிலையசை.

சூ-ம், முன்னிலையிடத்து வரும் இடைச்சொல் கூறுகின்றது.

(இ-ள்) மியா - "கேண்மியாவே", இக - "காணிகமென", மோ - "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" (குறு.2) மதி - "செல்மதி பாங்கி", அத்தை - "குறுங்களிச் சொல்லத்தை", இத்தை - "அளிபோன்று பாடித்தை", வாழிய - "காணிய வாழிய மலைச்சாரல்", மாள - "சிறுமை தவிர்ந்தீக மாள", ஈ - "சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே" (அகம்.46), யாழ - "நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழ" (கலி-7), முன்னிலையசை - இப்பத்திடைச்சொல்லும் முன்னிலை அசைச்சொல்லாய் வரும் என்றவாறு. (21)

## அசைநிலை மொழிகள்

440. யாகா பிறபிறக் கரோபோ மாதிகும்
சின் குரை யோரும் போலு மிருந்திட்
டனறாந் தாந்தான் கின்றநின் றசைமொழி.

சூ-ம், அசைநிலைக்கண் வரும் இடைச்சொல் இத்தனையெனக் கூறுகின்றது.

(இ-ள்) யா - "தோழியா சுவாகதம் போத வீங்கென (சீவக.1021), கா - "இவளிவட் காண்டிகா" (கலி.99), பிற - "ஆயனையல்லை பிறவோ" (கலி.108), பிறக்கு - "எண்ணிப் பிறக்கனுட் செல்லான் பெருந்தவப் பட்டான்", அரோ - "கூர்வாமரோ", போம் - "வாழா தென்போ மென்ற", மாது - "விளிந்தன்று மாதவர்" (நற்.178), இகும் - "கண்டிகு மல்லமோ" (ஐங்.121-28),சின் - "உணர்ந்தி சினேரே", குரை - "அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே" (புறம்.5), ஓரும் - "அஞ்சுவ தோரு மறனே யொருவனை, வஞ்சிப்ப தோரு மவா" (குறள்.366), போலும் - "வடுவென்ற கண்ணாய் வருந்தினை போலும்", இருந்து - "நனவென் றெழுந்திருந்தேன்"

(முத்தொள்.), இட்டு - "நெஞ்சம் பிளந்திட்டு" (கலி.101), அன்று - "தேவாதி தேவ னவன்சேவடி சேர்து மன்றே" (சீவக.1), ஆம் - "பணியுமா மென்றும் பெருமை சிறுமை, யணியுமாந் தன்னை வியந்து" (குறள்.978), தாம் - "... தாவில்சீர்த் தாமடிகள்", தான் - "மாண்பினை தோன்றலி னீதான்", கின்று - "ஆசைப்பட் டிருக்கின்று வந்தேன்", நின்று - "அயரா நின்றார், நிழலடைந்தே நின்னை" (பு.வெ.42), ஊரினின்று வந்தார், அசைமொழி - இவ்விருபது இடைச்சொல்லும் அசைநிலை மொழிகளாம் என்றவாறு. (22)

**நான்காவது இடைச்சொல்லியல் முடிந்தது.**

ஐந்தாவது

# உரிச்சொல்லியல்

## உரிச்சொல்லின் பொதுவியல்பு

**441.** பலவகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.

சூ-ம், உரிச்சொல்லினது இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) பலவகைப் பண்பும் - குணப்பண்பு தொழிற்பண்பு முதலாகிய பலவகைப் பட்ட பண்புகளையும், பகர்பெயராகி - அறிவிப்பனவான பெயர்ச்சொல்லாகி, ஒருகுணம் பலகுணந்தழுவி - ஒரு குணத்துக்கே உரியவாகியும் பல குணத்துக்கே உரியவாகியும், பெயர்வினை ஒருவா - ஏனைப் பெயர்ச் சொல்லையும் வினைச்சொல்லையும் தழுவி, செய்யுட் குரியன - செய்யுட்கே வரும் உரிமையுடையன, உரிச்சொல் - உரிச்சொல்லாவது என்றவாறு.

உரிய சொல் யாது அது உரிச்சொல்லென்க.

உ-ம்: "உறுபுகழ்", "தவச்சேய் நாட்டா ரானும்" (நற்.115), "நனிபேதையே" (புறம்.227), "புண்கூர் யானை" எனவும் சாலக் கொண்டான், தவச் சென்றான், நனி சொன்னான், நோய் கூர்ந்தது எனவும் பெயரொடும் வினையொடும் வந்தவாறு காண்க.

பெயர் வினைகட்கு பின் முன் வரும் என்னாமையின் ஏற்பது வருமென்க. (1)

## பண்பு இன்னதென்பது

**442.** உயிருயி ரில்லதாம் பொருட்குணம் பண்பே.

சூ-ம், மேற் "பண்பு" என்றார்; அஃது இஃதெனக் கூறுகின்றது.

(இ-ள்) உயிருமி ரில்லதாம் - உலகத்து உயிர்ப் பொருளும் உயிரில் பொருளுமாய, பொருட்குணம் பண்பே - இருவகைப் பொருள்களி னுடைய குணம் பண்பாவது என்றவாறு. (2)

### உயிர்ப்பொருள்

**443. மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்**
**ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்**
**ஓரறி வாதியா வுயிரைந் தாகும்.**

சூ-ம், "உயிர்" என்றார்; அவ்வுயிர்க் கூறுபாடு கூறுகின்றது.

(இ-ள்) மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின் - மெய், நா, மூக்குக், கண், செவி என்னும் இவ் வைந்தினுள்ளும், ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டு - ஒன்று முதலாகக் கீழ் நின்றதனையுங் கொண்டு, மேல் உணர்தலின் - மேனின்றது அறிதலால், ஓரறி வாதியா - ஓரறி உயிர் முதலாக, உயிரைந்தாகும் - உயிர் ஐந்து கூறாம் என்றவாறு. (3)

### ஓரறிவுயிர்

**444. புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.**

சூ-ம், முறையே ஓரறிவுயிர் இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) புன்மர முதல - மேற்சொன்ன ஓரறிவாதியான உயிர்களிற் புல்லும் மரமும் முதலானவை எல்லாம், உற்றறியும் - மெய் உற்றால் அறி யும், ஓரறிவுயிர் - ஓர் அறிவினையுடைய உயிர்களாம் என்றவாறு.

கல்லும் ஓரறிவுயிர் (4)

### ஈரறிவுயிர்

**445. முரணந் தாதிநா வறிவோடீ ரறிவுயிர்.**

சூ-ம், ஈரறிவுயிர் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) முரணந் தாதி - இப்பியும் நந்தும் முதலானவை, நாவறி வோடு - மெய்யுற்று அறிதலுடனே நாவாலும் அறியும், ஈரறிவுயிர் - ஈரறி வினையுடைய உயிர்களாம் என்றவாறு. முரண் என்றது அந்தென்று மாம். (5)

### மூவறிவுயிர்

**446. சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.**

சூ-ம், மூவறிவுயிர் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) சிதலெறும் பாதி - கறையானையும் எறும்பையும் முதலாக வுடையன, மூக்கறிவின் - முற்கூறிய இரண்டினொடு முக்காலும் அறியும், மூவறிவுயிர் - மூவறிவையுடைய உயிர்களாம் என்றவாறு.

### நாலறிவுயிர்

**447. தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்.**

சூ-ம், நாலறிவுயிர் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) தும்பிவண் டாதி - தும்பியையும் வண்டையும் முதலாக வுடையவை, கண்ணறிவின் - முற்கூறிய மூன்று அறிவினோடுங் கண்ணாலும் அறியும், நாலறிவுயிர் - நாலறிவுயிர்களாம் என்றவாறு. (7)

### ஐயறிவுயிர்

**448. வானவர் மக்க ணரகர் விலங்குபுள்**
**ஆதி செவியறிவொ டையறி வுயிரே.**

சூ-ம், ஐயறிவுயிர் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்) வானவர் மக்கள் - தேவரையும் மக்களையும், நரகர் விலங்கு - நரகரையும் விலங்கையும், புள் ஆதி - புள்ளையும் முதலாகவுடையவை, செவியறிவொடு - முற்கூறிய நாலறிவினோடுஞ் செவியாலும் அறியும், ஐயறி வுயிரே - ஐந்தறிவினையுடைய உயிர்களாம் என்றவாறு. (8)

### உயிரில் பொருள்

**449. உணர்விய லாமுயி ரொன்று மொழித்த**
**உடன்முத லனைத்து முயிரில் பொருளே.**

சூ-ம், உயிரில் பொருளாவது இன்னதெனக் கூறுகின்றது.

(இ-ள்) உணர்விய லாமுயிர் - அறிவு மயமாயுள்ள உயிர், ஒன்று மொழித்த - ஒன்றையும் ஒழித்து ஒழிந்து நின்ற, உடன்முத - லனைத்தும் - உடம்பும் முதலான உலகத்துப் பொருள்கள் எல்லாம், உயிரில் - பொருளே - உயிர் இல்லாத பொருள்களாம் என்றவாறு. (9)

### புறநடை

**450. ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும்**
**வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்.**

சூ-ம், மேலதற்கோர் புறநடை கூறுகின்றது.

(இ-ள்) ஒற்றுமை நயத்தின் - ஒன்றுபட்ட தன்மையால், ஒன்றெனத் தோன்றினும் - ஒன்றுபோலத் தோன்றுவன ஆமினும், வேற்றுமை நயத்தின் - வேற்றுமைப் பட்ட தன்மைகளால், வேறே யுடலுயிர் - உடம்பும் உயிரும் தம்முள் வேறேயாம் என்றவாறு.

புல், மரம் முதலானவை அறிவுடலும் உயிரும் அவ்வாறாம் என்க. (10)

## உயிர்ப்பண்பு

451. அறிவரு ளாசை யச்ச மானம்
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம்.

சூ-ம், உடலொடு கூடிய உயிர்ப்பொருட் பண்பு கூறுகின்றது.

(இ-ள்) அறிவு - "அறிவுடையா ராவ தறிவார்" (குறள்.427), அருள் - "அருளில்லார்க் கவ்வுலக மில்லை" (குறள்.247), ஆசை - "ஆசை மாக்களோ டந்தணர்க் காகென" (சீவக.911), அச்சம் - "கல்லாமை யச்சம் கயவர் தொழிலச்சம்" (நாலடி.145), மானம் - "மான முடையார் மனம்" (நாலடி.291), நிறை - "நிறையுடைமை நீங்காமை" (குறள்.154), பொறை - "பொறையுடைமை போற்றி யொழுகப்படும்" (குறள்.154), ஓர்ப்பு - "ஓர்த்துள்ள முள்ள துண ரின்" (குறள்.357), கடைப்பிடி - "அற்ற தறிந்து கடைப்பிடித்து" (குறள்.944), மையல் - "மையல் யானையின் மும்மத மார்ந்து" (சீவக. 37), நினைவு - "நினைத்துத்தன் கைகுறைத்தான்" (பழ மொழி. 102), வெறுப்பு - "வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப் பரே" (நாலடி. 222), உவப்பு - "பேணலு முவப்பின்மை" (சீவக. 2816), இரக்கம் - "இரக்கமிலுள்ளத் தவர்", நாண் - "நாணாமை நாடாமை" (குறள். 833), வெகுளி - "வெல்வது, வேண்டில் வெகுளி விடல்" (நான்மணி.17), துணிவு - "சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்" (குறள். 671), அழுக்காறு - "அழுக்கா றெனவொரு பாவி" (குறள். 168), அன்பு - "அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை" (குறள்.78), எளிமை -

"எளிய ளென்றெள்ளி யுரைப்பின்" (பு.வெ.84), எய்த்தல் - "எய்த்த மெய்யேன்" (பொருந.68), துன்பம் - "துன்ப முற்ற வர்க்கலால்" (சீவக.579), இன்பம் - "இன்ப மில்லை" (சீவக.579), இளமை - "இளமையானடக்க மடக்கம்" (நாலடி.65), மூப்பு - "மூப்புவந் தெய்தல்", இகல் - "வலிய விகலே", வென்றி - "வென்றிவிளையா விழுமதிலோர்" (பு.வெ.125), பொச்சாப்பு - "பொச்சாப்புக் கொல்லும் புகழை" (குறள்.532), ஊக்கம் - "ஊக்க முடையா னொடுக்கம்" (குறள்.486), மறம் - "மறங்கந் தாக வாளமர்" (புறம்.93) - "வாண்முக மதைஇய நோக்கே" (அகம்.130), மறவி - "மறவியுடையான் மாயந்த தோடோக்கி", இனைய - இம் முப்பத்திரண்டும் இவை போல்வன பிறவும், உடல்கொ ளுயிர்க்குணம் - உடம்பொடு கூடிய உயிர்க்குணமாம் என்றவாறு.

உடம்பொடு கூடா உயிர்க்குணம் இவை அல்லவென்க. (11)

## உயிர்ப்பொருள்களின் தொழிற்பண்பு

452. துய்த்த றுஞ்ச றொழுத லணிதல்
உய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்குணம்.

சூ-ம், உடலொடு கூடிய உயிர்த் தொழிற்பண்பு இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) துய்த்தல் - மெய், வாய், கண், மூக்குச், செவி யென்னும் ஐம்பொறியாலும் ஊறு, சுவை, நாற்றம், ஒளி, இசையென்னும் ஐம்புலன்களை நுகர்தலும், துஞ்சல் - இவ்வைம் பொறி முதலான கருவி ஒடுக்கமான உறங்கலும், தொழுதல் - மனம், வாக்குக் காயத்தாற் பிறரைத் தொழுதலும், அணிதல் - வேண்டினவற்றை அணிதலும், உய்த்தல் - படைத்தொழில், உழவு, வாணிகம், கல்வி ... .. என்னும் அது தொழில்களை முயறலும், ஆதி - இவை முதலாக இவை போல்வன பிறவும், உடலுயிர்த் தொழிற்குணம் - உடம்பொடு கூடிய உயிர்த்தொழிற் பண்பாம் என்றவாறு. (12)

## உயிரில் பொருட்பண்பு

453. பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்
அறுசுவை யூறொட் டுயிரில் பொருட்குணம்.

சூ-ம், உயிரில் பொருட்பண்பு வருமாறு கூறியது.

(இ-ள்) பல்வகை வடிவு - வட்டம், சதுரம், ஆயதம், முக்கோணம், சிலை துடி, தோரை, முழா, எறும்பு, கூன், குறள் முதலான முடிவுகளும், இரு நாற்றம் - நற்கந்தம், துற்கந்தமான இரு வகை நாற்றமும், ஐ வண்ணம் - வெண்மை, செம்மை, பொன்மை, கருமை, பசுமையான ஐந்து வண்ணமும், அறுசுவை - கைப்பு, துவர்ப்பு, புளிப்பு, கார்ப்பு, தித்திப்பு, உவர்ப்பு என்னும் அறு சுவைகளும், ஊறெட்டும் - வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல் சருச்சரை என்னும் எட்டூறும், உயிரில் பொருட் குணம் - உயிரில்லாத பொருட் பண்பாம் என்றவாறு. (13)

## இரு பொருட்கும் பொதுவான தொழிற்பண்பு

454. தோன்றன் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்க லடைத லடுங்க லிசைத்தல்
ஈத லின்னை விருபொருட் டொழிற்குணம்.

சூ-ம், உயிர்ப்பொருள் உயிரில் பொருள் என்னும் இவ்விரு பொருட் டும் பொதுவான தொழிற்பண்பு இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) தோன்றல் மறைதல் - தோற்றமும் நாசமும், வளர்தல் சுருங் கல் - வளர்தலும் குறைதலும், நீங்க லடைதல் - அகலுதலும் அணு கலும், நடுங்க லிசைத்தல் - அசைத்தலும் இசைத்தலும், ஈத லின்னன - ஈதலும் இவ்வொன்பதும் இவை போல்வன பிறவும், இரு பொருட் டொழிற்குணம் - உயிர்ப்பொருட்கும் உயிரில் பொருட்கு முரிய தொழிற்பண்பாம் என்றவாறு.

உ-ம்: பிள்ளை பிறந்தான், தோன்றினான்; உயிர்ப் பொருட் டோற்றம், பிறை பிறந்தது, தோன்றிற்று; உயிரில் பொருட் டோற்றம். சாத்தன் செத்தான், மாய்ந்தான்; உயிர்ப்பொருள் மறைதல். பொருள் இறந்தது, மறைந்தது; உயிரில் பொருள் மறைதல். சாத்தன் வளர்ந்தான், மரம் பெருத்தது; உயிர்ப் பொருள் வளர்தல். பிறை வளர்ந்தது, நத்தம் உயர்ந்தது, நிலாப் பரந்தது; உயிரில் பொருள் வளர்தல். வீரன் மெலிந்தான், நேர்ந் தான்; உயிர்ப்பொருள் சுருங்கல். பிறை தேய்ந்தது, நூல் நொள் கிற்று, ஒளி அருகிற்று; உயிரில் பொருள் சுருங்கல். ஊரின் நீங்கினான், தமரிற் றீர்ந்தான், கிழத்தியிற் பிரிந்தான்; உயிர்ப் பொருள் நீங்கல். இருள் நீங்கிற்று நோய் தீர்ந்தது, நீர் ஓடிற்று, உயிரில் பொருள் நீங்கல். அரசை அடைந்தான், மாதரைப் புணர்ந்தான், ஊரை அடைந்தான், உயிர்ப்பொருள் அடைதல். நீர் வந்தது, காற்று அறைந்தது, உயிரின் பொருள் அடைதல். நம்பி அயர்ந்தான், நடுங்கினான், தடுமாறினான், கூத்தாடினான்; உயிர்ப் பொருள் நடுங்கல். பூமி கம்பித்தது, கொடி ஆடிற்று, சுடர் நடுங்கிற்று; உயிரில் பொருள் நடுங்கல். சொன்னான்,

ஆர்த்தான், கூவினான், பாடினான்; உயிர்ப்பொருள் இசைத்தல். கடல் ஒலித்தது, மழை முழங்கிற்று, இடி இடித்தது; உயிரில் பொருள் இசைத்தல். பயந்தான், கொடுத்தான் உயிர்ப்பொருள் ஈதல், மழை பயந்தது, கொடுத்தது உயிரில் பொருள் ஈதல் எனவும் முறையே காண்க. (14)

### ஒரு பண்பிற்குரிய உரிச்சொல்

455. சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.

சூ-ம், ஒரு பண்பிற்குரிய உரிச்சொல் இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) சால - "பருவந்து சாலப் பலர்கொலென் றெண்ணி", உறு - "உறுவளி தூக்கு முயர்சினை மாவின்" (கலி.84), தவ - "தவச் சேய் நாட்டா ராயினும்" (நற்.115), நனி - "நனிபே தையே நயனில் கூற்றம்" (புறம்.227), கூர் - "பொறை நில்லா நோய்கூரப் புல லென்ற" (கலி.3), கழி - "சினனே காமங்கழிகண் ணோட்டம்" (பதிற். 22), மிகல் - இவ்வாறு உரிச்சொல் மிகுதியின் பொருண்மை விளக்கும் பெயர்களாம் என்றவாறு. (15)

### பல பண்பிற்குரிய ஓர் உரிச்சொல்

456. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னாகும்.

சூ-ம், பல பண்பிற்குரிய உரிச்சொல் இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) கடியென் கிளவி - கடியென்று சொல்லப்படும் உரிச்சொல், காப்பு - "ஒண்சுடர் நல்லி லருங்கடி நீவி" (அகம்.7) எனக் காப்புப் பொருண்மையிலும், கூர்மை - "கடிநுனைப் பகழி" எனக் கூர்மையின் கண்ணும், விரையே - "கடிமாலை சூடி" (சீவக.1574) என நாற்றத் தின் கண்ணும், விளக்கம் - "கண்ணாடி யன்ன கடிமார்பன்" (சீவக. 2327) என விளக்கத்தின் கண்ணும், அச்சம் - "கடியர மகளிர்க்கும் கைவிளக்காகி" என அச்சத்தின் கண்ணும், சிறப்பே - "கடிமலர் மிசை பூத்துக் கம்புளோ டன்ன மார்க்கும்" எனச் சிறப்பின்கண்ணும், விரைவே - "எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்" (புறம்.9), மிகுதி - "கடி யுண் கடவுட் கிட்ட செழுங்குரல்" (குறு.105), புதுமை - புதிதுண்ட கடவுள் எனப் புதுமைக்கண்ணும், ஆர்த்தல் - "அளந்தறியாப் பல பண்ட ... அருங்கடிப் பெருங்காப்பின்" (பட்டின.131-33) என யாப் புடைக் காப்பின் கண்ணும், வரைவே - "கடித்துக் கரும்பினை" (நாலடி. 156), ஊர் கடிந்தான் என வரைதற்கண்ணும், மன்றல் -

"கடிவினை முடிகென நொடியினில்" என மணத்தின்கண்ணும், கரிப்பின் - "கடி மிளகு தின்ற கல்லாமந்தி" எனக் கரிப்பின் கண்ணும், ஆகும் - என இப்பதின்மூன்று பொருண்மைக் கண்ணும் வரும் என்றவாறு. (16)

### சொல்லுதல் தொழிற்பண்பிற்குரிய உரிச்சொற்கள்

**457.** மாற்ற நுவற்சிசெப் புரைகரை நொடியிசை
கூற்றுப் புகறன்மொழி கிளவி விளம்பறை
பாட்டு பகர்ச்சி யியம்பல் சொல்லே.

சூ-ம், சொற் றொழிற்பண்பு இவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) மாற்றம் - "கோவலர் வாய், மாற்ற முணர்ந்து" (சீவக.432), நுவற்சி - "இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல" (திருமுருகு. 182), செப்பு - "தெருண்டா ரவை செப்ப லுற்றேன்" (சீவக.6), உரை - "உரைப்பா ருரைப்பவை யெல்லாம்" (குறள்.232), கரை - "அறங் கரை நாவி னான்மறை முற்றிய" (தொல். பாயிரம்), நொடி - "ஆயிழையாள் தானொடியும்" (பு.வெ.335), இசை - "நண்பெரு வாயி, லிசையேன் புக்கு" (பொருந.66-67), கூற்று - "உற்றது பிறர்கள் கூற உணர்ந்தனை", புகறல் - "புகன்ற வன்றியும் புறமிக வருமே", மொழி - "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" (குறு.2), கிளவி - "களக்குங் கிளவி பாண கேளினி", விளம்பு - "மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்" (நன்.63), அறை - "வையை யென் றறையுந ருளராயின்" (கலி.30), பாட்டு - "ஒருவன், செய்தி கொன்றோர்க் ... ... அறம்பா டின்றே" (புறம்.34), பகர்ச்சி - "கழனி நீர்நாடன் பாவை வார்த்தை பகர்குற்றேன்", இயம்பல் - "ஏற்றை யரிமா னிடிபோல வியம்பி னானே" (சீவக.432), சொல்லே - எனக் கூறிய இப்பதினாறுஞ் சொற்றொழிற் பண்பாம் என்றவாறு. (17)

### ஒலித்தல் தொழிற் பண்பிற்குரிய உரிச்சொற்கள்

**458.** முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறிரை
இரக்கமுங் கியம்ப லிமிழ் குளி றதிர்குலைர
கனைசிலை சும்மை கவ்வை கம்பலை
அரவ மார்ப்பொ டின்னன வோசை.

சூ-ம், ஒலித்தல் தொழிற் பண்பு இவையெனக் கூறியது.

(இ-ள்) முழக்கு - "முழங்கு மின்னீர் மேகம், இரட்டு - "குடிஞை யிரட்டும்" (மலைபடு.141), ஒலி - "ஒல்லென் றொலிக்கு மொலி புனலூரற்கு" (ஐந்திணை.28), கலி - "கலிகெழு மூதூர்" (புறம். 52), இசை - "பறையிசை யருவி" (புறம்.126), துவை - "அருவி

துவைத்தன", பிளிறு - "பிளிறுவார் முரசம்" (சீவக.450), இரை - "இரைக்கு மஞ்சிறைப் பறவைகள்" (சூளா. கல்யாணச்.51), இரக்கு - "இரங்குமுரசி னினஞ்சால் யானை" (புறம்.137), அமுங்கு "மாரி யமுங்கன் மூதூர்" (அகம்.122), இயம்பல் - "காலை முரச மதிலியம்ப", இமிழ் - "இமிழ் கடல் வளைஇய வீண்டகன் கிடக்கை" (புறம்.19), குளிறு - "குளிறு முரசங்குணில் பாய ..." (பு.வெ.48), அதிர் - "களிறு களித்த திருங்கார்" (பு.வெ. 37), குரை - "குரைபுனற் கன்னி..." (சீவக.39), கனை - "கனைபுன லூரன்", சிலை - "சிலைத்தார் முரசம்" (புறம்.36), சும்மை - "தள்ளாத சும்மை மிகுதக்கண் நாடு" (சீவக.20), கவ்வை - "கவ்வைநீர் வேலி (பு.வெ.83), கம்பலை - "வினைக் கம்பலை மனைச்சிலம்பவும்", அரவம் - "அறைகட லரவத்தானை" (சூளா. சீயவதை.108), ஆர்ப் பொடு - "ஆர்த்தபல் லியக்குழாம்" (சூளா. தூது.45), இன்னன - இவ்விருபத்திரண்டும் இவை போல்வன பிறவும், ஓசை - ஒலித்தல் தொழிற் பண்பாம் என்றவாறு.

இவ்விரு வகைப் பண்பும் பெயரையும் வினையையும் விட்டு நீங்காமையும் காட்டிய உதாரணங்களிலே கண்டுகொள்க. "பல வகைப் பண்பும் பகர்பெய ராகி" என்றமையால் இவ்விருவகைப் பண் புப் பெயர்களுள்ளும் உருபேற்றலும் தனியே நிற்றலும் உளவென்க. (18)

## உரியியலுக்குப் புறநடை

**459.** இன்ன தின்னுழி யின்னண மியலும்
என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கலர் முதலா
நல்லோர் ருரிச்சொலி னயந்தனர் கொளலே.

சூ-ம், இவ்வியலுக்கு உரியதோர் புறநடை கூறுகின்றது.

(இ-ள்) இன்னது - இவ்வெழுத்து இச்சொல் இப்பொருள், இன்னுழி - இவ்வெழுத்தினிடத்து சொல்லிடத்துப் பொருளிடத்து, இன்னணமி யலும் - இவ்வாறு ஆம், என்றிசை நூலுள் - என்று இலக்கணம் சொல்லு நூலுள், குண குணிப் பெயர்கள் - உலகிலுள்ள பொருள்கட் கும் குணங்கட்கும் தனித்தனியே, சொல்லாம் பரத்தலிற் - சொல்ல லுற்றால் அனைத்தும் பெருகுதலின் ஈண்டுச் சொல்லாமை, பிங்கலர் முதலா நல்லோர் - பிங்கலர் முதலான புலவர்களால், உரிச்சொலின் - சொல்லப்பட்ட உரிச்சொற் பனுவல்களுள், நயந்தனர் கொளலே - இன்னதற்கு இது பெயரன விரித்துக் கூறினர்; அறிந்து கொள்க என்றவாறு. (19)

### அதிகாரப் புறநடை

460. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்தும்
முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்
தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே.

சூ-ம், இவ்வதிகாரத்துட் சொன்ன பொருட் பகுதிக்கெல்லாம் ஆவ தோர் புறநடை கூறுகின்றது.

(இ-ள்) சொற்றொறும் - சொற்றோறுந் தனித்தனியே, இற்றிதன் பெற்றியென்று - இஃது இன்ன சொல் இவ்வாறு சொலினென்று சொல்லப்புகின், அனைத்தும் முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற் - எல்லாச் சொற்களையும் நிறைவிலக்கணமாகத் தனித்தனியே சொல்லலுறின் வரம்பின்மையாகலின், சொற்றவற் றியலான் - ஈண்டுச் சொன்னவற்றின் இலக்கணத்தானே, மற்றைய பிறவும் - சொல்லாதவற்றையும் ஒப்பித்துக்கொண்டு, தெற்றென வுணர்தல் - விளங்க அறிதல், தெள்ளியோர் திறனே - உணர்வுடையோர்க்கு அழகாவது என்றவாறு. (20)

### நூலிற்குப் புறநடை

461. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

சூ-ம், இந்நூலிற் சொன்ன ஐந்ததிகாரத்திற்கும் சிங்க நோக்காய் நிற்பதோர் புறநடை கூறுகின்றது.

(இ-ள்) பழையன கழிதலும் - முற்காலத்திலுள்ள சொற் களை..., புதியன புகுதலும் - இக்காலத்திற் சில புதிய சொற்களை வருவித்த லும், வழுவல கால வகையினானே - காலக் கூறுபாடு நோக்கக் குன் றக் கூறல் மிகைபடக்கூறல் என்னும் குற்றம் ஆகாது என்றவாறு.

அவை: ஒத்து, பின்றை, எவன், என்றா, நாலுகை, வெட்டினான், ஒலம், போழ், பூழைப்பூ இவை முதலானவை வழங்காதன என்க.

அக்காலத்து இப்பொழுது என்றது இப்போது எனவும் இக் காலத்திற் பிறவும் வந்தன. (21)

**ஐந்தாவது உரிச்சொல்லியல் முடிந்தது.**

நன்னூல் எழுத்துஞ் சொல்லுமாக இரு வகைக்
காண்டிகையும் ஒரு வகையான் முடிந்தது.

முருகன்றுணை.

# சூத்திர முதற்குறிப்பு அகராதி

**(எண் : பக்க எண்)**


| | |
|---|---|
| அஆஇஎஒவ் | 68 |
| அஆஉஊ | 68 |
| அஆவீற்ற | 187 |
| அஇஉம்முதற் | 55 |
| அஐமுதலிடை | 74 |
| அகமுனர்ச் | 128 |
| அசைநிலை | 231 |
| அடிநாவடியண | 60 |
| அடைசினை | 235 |
| அடைமொழி | 234 |
| அண்ணநுனிநா | 61 |
| அண்ணநுனிநாவருட | 60 |
| அண்பல்லடிநா | 60 |
| அண்பன்முதலு | 60 |
| அண்மைமி | 178 |
| அத்தினகர | 141 |
| அதுவே, இயற்சொல் | 152 |
| அந்திலாங் | 260 |
| அம்மஉரை | 260 |
| அம்மாமென்பன | 188 |
| அம்முதலீரா | 54 |
| அம்முனிகரம் | 75 |
| அர்ஆர்பவ்வூ | 186 |
| அரிதிற்பெயக் | 40 |
| அல்வழிஇஐ | 108 |
| அல்வழியாமா | 105 |
| அவ்வழி, ஆவி | 58 |
| அவற்றுள், அஇஉஎ | 54 |
| அவற்றுள், எழுவா | 166 |
| அவற்றுள், ஏழாமுமி | 88 |
| அவற்றுள், ஒன்றே | 160 |

| | |
|---|---|
| அவற்றுள், கிளையெண் | 155 |
| அவற்றுள், முதலி | 195 |
| அவற்றுள், முயற்சி | 59 |
| அவற்றுள், வினையி | 27 |
| அவைதாம், முற்றும் | 183 |
| அழலினீங்கா | 45 |
| அள்ளாளிறு | 185 |
| அளக்கலாகா | 37 |
| அறம்பொரு | 28 |
| அறிவருளாசை | 266 |
| அறிவறியாமை | 225 |
| அன் ஆன் அள் ஆள் | 84 |
| அன் ஆன் இன் | 138 |
| அன்றியின்றியென் | 106 |
| அன்னமாவே | 41 |
| அன்னானிறு | 185 |
| ஆஈஊஏ | 54 |
| ஆக்கவினைக் | 198 |
| ஆக்கியோன் | 46 |
| ஆசானுரைத்த | 45 |
| ஆண்பெண் | 147 |
| ஆண்மைபெண்மை | 160 |
| ஆநின்றுகின்று | 86 |
| ஆமாகோனவ் | 140 |
| ஆமுன்பகரவீ | 108 |
| ஆய்தக்கிடந்தலை | 61 |
| ஆயிரமுகத்தா | 49 |
| ஆவிஞணநமன | 69 |
| ஆவியரழ | 98 |
| ஆவியுமொற்று | 67 |
| ஆற்றொழுக் | 33 |
| ஆறனுருபு | 165 |
| ஆறனொருமைக் | 170 |
| இஈஎஏ | 59 |
| இஈஐவழி | 99 |
| இஉஊவோ | 173 |
| இசைகெடின் | 62 |
| இடுகுறிகாரண | 154 |
| இடுகுறிகாரணப் | 54 |
| இடைச்சொலேயோ | 118 |
| இடைத்தொட | 110 |
| இடைநிலை | 244 |
| இடையினம்யரல | 56 |

| | |
|---|---|
| இடையினான்கு | 87 |
| இடையுரி | 135 |
| இணைந்தியல் | 90 |
| இதற்கிதுசாரியை | 143 |
| இதற்கிதுமுடிபென் | 143 |
| இம்முப்பெயர்க் | 174 |
| இயல்பின்விகாரமும் | 142 |
| இயல்பினும் விதியினு | 101 |
| இயல்பெழு | 66 |
| இயற்கைப்பொருளை | 235 |
| இர்ஈரீற்ற | 191 |
| இரட்டைக்கிளவி | 231 |
| இரண்டாவதனுரு | 167 |
| இரண்டுமுதலாக | 210 |
| இரண்டுமுன் | 117 |
| இருதிணையாண் | 202 |
| இருவர்நூற்கு | 28 |
| இல்லெனின்மைச் | 133 |
| இலக்கணமுடைய | 149 |
| இலக்கியங்கண்டதற் | 85 |
| இறப்பெதிர்வு | 223 |
| இன்னதின்னுழி | 271 |
| இனைத்தென் | 232 |
| ஈதலியல்பே | 40 |
| ஈதாகொடு | 237 |
| ஈமுங், கம்மு | 128 |
| ஈற்றியா | 93 |
| ஈறுபோத | 81 |
| உஊஒஓஔ | 59 |
| உஊஒஓவல | 68 |
| உடன்மேலுயிர் | 120 |
| உணர்வியலாமுயி | 265 |
| உயர்திணைதொடர்ந்த | 220 |
| உயர்திணையும்மைத் | 215 |
| உயிர்மவிலாறுந் | 77 |
| உயிர்மெய்யாய்த | 53 |
| உயிர்மெய்மிரட்டு | 53 |
| உயிர்வரினுக்குறண் | 100 |
| உயிருமுடம்புமா | 52 |
| உயிருயிரில்லதாம் | 263 |
| உரத்தின்வளம் | 36 |
| உரிவரினாழியி | 107 |
| உருபின்முடிபவை | 135 |

| | |
|---|---|
| உருபுபல | 204 |
| உருபும்வினையு | 203 |
| உருபுமுற்றீ | 204 |
| உருவகமவமைமயிற் | 238 |
| உவப்பினு | 221 |
| உவமவுருபில | 212 |
| எகரவினாமுச் | 100 |
| எச்சப்பெயர்வினை | 205 |
| எட்டனுடம்பு | 115 |
| எட்டனுருபே | 173 |
| எடுத்தல்படுத்த | 61 |
| எண்ணலெடுத்தன் | 213 |
| எண்ணிறையளவும் | 113 |
| எண்பெயர்முறை | 51 |
| எண்மூவெழுத்தீற் | 96 |
| எதிர்மறைசிறப்பைய | 254 |
| எப்பொரு | 227 |
| எயாமுதலும் | 55 |
| எல்லாமென்ப | 138 |
| எல்லாருமெல்லீரு | 139 |
| எல்லையின்னும் | 181 |
| எவனென்வினா | 199 |
| எழுத்தியறிரியாப் | 228 |
| எழுத்தே | 77 |
| எழுவகை | 29 |
| எழுவாயிறுதி | 244 |
| என்றுமெனவு | 256 |
| ஏழனுருபுகண் | 171 |
| ஏற்குமெவ்வகைப் | 164 |
| ஏற்புழியெடுத்து | 246 |
| ஏற்றபொருளுக் | 241 |
| ஐஔஇஉச் | 56 |
| ஐகான்யவ்வழி | 75 |
| ஐந்தனொற் | 114 |
| ஐந்தாவதற்குரு | 169 |
| ஐந்தொகை | 214 |
| ஐயந்திணைபா | 220 |
| ஐயந்தீரப் | 38 |
| ஐயாமிகர | 190 |
| ஐயான்குச்செய்யுட் | 180 |
| ஐயிருபொதுப் | 175 |
| ஐயீற்றுடைக்குற் | 112 |
| ஒடுவுந்தெய்யவு | 259 |

| | |
|---|---|
| ஒருகுறிகேட்போ | 44 |
| ஒருசார்னவவீற் | 175 |
| ஒருநெறியன்றி | 32 |
| ஒருபஃதாதிமுன் | 116 |
| ஒருபுணர்ப்பிரண்டு | 96 |
| ஒருபொருட்பல | 232 |
| ஒருபொருட்பன் | 232 |
| ஒருபொருண்மேற் | 229 |
| ஒருபொருள்குறித்த | 153 |
| ஒருமையிற்பன்மையும் | 222 |
| ஒருமொழிதொடர் | 145 |
| ஒருமொழிமூவழிக் | 95 |
| ஒருமொழியொரு | 146 |
| ஒருமொழியொழி | 206 |
| ஒருவரென்ப | 162 |
| ஒருவன்முத | 184 |
| ஒருவனொருத்திப் | 162 |
| ஒருவனொருத்திபல | 136 |
| ஒழியிசைவினாச் | 252 |
| ஒற்றுமை | 265 |
| ஒற்றுயிர் | 137 |
| ஒன்பதொழித்த | 117 |
| ஒன்பானொடு | 115 |
| ஒன்றன்புள்ளி | 113 |
| ஒன்றமுதலீரைந் | 116 |
| ஒன்றுமுதலெட் | 140 |
| ஒன்றேபலவென் | 147 |
| ஒன்றொழிபொதுச் | 151 |
| கஙவுஞ்சஞவும் | 59 |
| கசதபவொழித்த | 70 |
| கடியென்கிளவி | 269 |
| கண்கால்கடை | 172 |
| கயவொரு | 191 |
| கருத்துப்பதப்பொருள் | 34 |
| களிமடிமானி | 42 |
| காரணமுதலா | 236 |
| காலங்கரந்த | 211 |
| காலங்களனே | 46 |
| கிளந்தகிளைமுத | 157 |
| கிளைமுதலாகக் | 157 |
| கீழின்முன் | 130 |
| குடுதுறுவென்னுங் | 187 |
| குயினூன்வேற்றுமைக் | 126 |

| | |
|---|---|
| குலனகுடெய்வங் | 36 |
| குற்றுயிரளபி | 69 |
| குறியதன்கீழாக் | 106 |
| குறியதன்முன்ன | 62 |
| குறில்செறியா | 131 |
| குறில்வழிலள | 131 |
| குறிலணைவில்லா | 123 |
| குன்றக்கூறன் | 29 |
| கேட்குநபோலவுங் | 238 |
| கொல்லேயைய | 259 |
| கோடன்மரபே | 43 |
| ஙஞணநமன | 63 |
| ஙம்முன்கவ்வாம் | 71 |
| சாதிகுழூஉப் | 123 |
| சாலவுறுதவ | 269 |
| சாவவென்மொழி | 104 |
| சிதலெறும்பாதி | 264 |
| சில்வகையெழுத்திற் | 32 |
| சிறப்பினுமினுத்தினுஞ் | 57 |
| சினைவினை | 197 |
| சுட்டியாவெகர | 68 |
| சுட்டின்முன் | 141 |
| சுட்டுமறைநே | 226 |
| சுடுவகரமூ | 133 |
| சுருங்கச்சொல்லல் | 30 |
| சுவைப்புளி | 107 |
| சூத்திரத்துட்பொரு | 35 |
| செந்தமிழ்நிலஞ் | 153 |
| செந்தமிழாகித் | 152 |
| செம்மைசிறுமை | 81 |
| செய்கெனொருமை | 189 |
| செய்தசெய்கின்ற | 192 |
| செய்துசெய்பு | 194 |
| செய்பவன்கருவி | 182 |
| செய்மியவென்னும் | 103 |
| செய்யுமெனெச்ச | 193 |
| செய்யுளிறுதி | 245 |
| செய்யென்வினை | 83 |
| செயப்படுபொருளைச் | 233 |
| செவ்வெணீற்றதா | 255 |
| சொற்றிரியினும் | 198 |
| சொற்றொறுமிற்றிதன் | 272 |
| ஞணநமலவளன | 127 |

| | |
|---|---|
| ஞநமுன்றம்மினம் | 71 |
| டறமுன்கசப | 71 |
| ணனமுனனினங் | 71 |
| ணனமுன்னும் | 65 |
| ணனவல்லினம் | 122 |
| தடறவொற்றின்னே | 85 |
| தத்தம், பகாப் | 80 |
| தம்பாலில்ல | 236 |
| தம்பெயர்மொழியின் | 74 |
| தமிழவ்வுறவும் | 129 |
| தரல்வரல் | 228 |
| தற்சுட்டளபொழி | 65 |
| தன்மகனாசான் | 41 |
| தன்மைமு - படர்க்கை | 149 |
| தன்மைமு - வியங் | 187 |
| தன்மையானான் | 161 |
| தன்னாசிரியன் | 48 |
| தன்னென் | 126 |
| தன்னொளி | 121 |
| தனிக்குறின் | 120 |
| தான்தாம்நாம் | 189 |
| தான்யானா | 162 |
| தானமுயற்சி | 56 |
| தானேதரக்கொளி | 39 |
| திசையொடுதிசையும் | 112 |
| திணைநிலஞ்சாதி | 229 |
| திணைபால்பொருள் | 221 |
| திணையேபாலிடம் | 219 |
| தும்பிவண்டாதி | 265 |
| துய்த்தறுஞ்ச | 267 |
| துறுடுக்குற்றிய | 186 |
| தெங்குநீண்டீற் | 112 |
| தெரிநிலைதேற்ற | 250 |
| தெரிவரும்பெருமை | 37 |
| தெவ்வென்மொழி | 134 |
| தேன்மொழி | 124 |
| தொக்குழிமயங்குந | 216 |
| தொகுத்தல்விரி | 47 |
| தொல்லைவடிவின | 65 |
| தொழிலுங்காலமுந் | 194 |
| தோன்றறிரிதல் | 93 |
| தோன்றன்மறைதல் | 268 |
| தோன்றாதோற்றித் | 48 |

| | |
|---|---|
| நடவாமடிசீ | 82 |
| நவ்விறுதொழிற்பெயர்க் | 122 |
| நான்கன்மெய்யே | 114 |
| நான்காவதற்குரு | 168 |
| நிறையுயிர் | 58 |
| நின்றநெறியே | 70 |
| நீயிர்நீவிர்நா | 166 |
| நுதலிப்புகுத | 31 |
| நுந்தம், எம்நம் | 128 |
| நுவ்வொடுவினாச் | 178 |
| நூல்பயிலியல்பே | 44 |
| நூலினியல்பே | 26 |
| நூலேநுவல்வோ | 26 |
| நூற்பொருள்வழக்கொடு | 31 |
| நெடிலொடாய்த | 64 |
| நெடிலோடுயிர்த் | 111 |
| நெல்லுஞ்செல்லுங் | 132 |
| நேரினமணியை | 32 |
| பகாப்பதமேழும் | 78 |
| பகுதிவிகுதி | 80 |
| பகுப்பாற் | 79 |
| பஞ்சுதன்சொல்லாப் | 35 |
| படர்க்கைமுப் | 230 |
| படர்க்கைவினை | 148 |
| பண்பைவிளக்கு | 211 |
| பதமுன்விகுதி | 137 |
| பல்லோர்படர்க்கை | 198 |
| பல்வகைத்தாது | 150 |
| பல்வகையுதவி | 40 |
| பல்வகைவடிவிரு | 267 |
| பலசிலவெனுமிவை | 105 |
| பலவகைப்பண்பும் | 263 |
| பவ்வமூவிடத் | 86 |
| பவ்வீநீமி | 108 |
| பழையனகழிதலும் | 272 |
| பன்னீருயிருங் | 67 |
| பனைமுன்கொடி | 119 |
| பாடங்கருத்தே | 34 |
| பாயிரம்பொதுச் | 25 |
| பால்பகாவஃறிணைப் | 159 |
| பிண்டந்தொகை | 33 |
| பிரிநிலைவினா | 252 |
| புள்ளியுமுயிரு | 143 |

| | |
|---|---|
| புள்ளிவிட்டவ்வொடு | 62 |
| புள்ளும்வள்ளுந் | 113 |
| புன்மரமுதலவுற் | 264 |
| பூப்பெயர்முன் | 118 |
| பூமலியசோகின் | 81 |
| பெண்மைவிட் | 147 |
| பெய்தமுறை | 39 |
| பெயர்ச்செவ் | 255 |
| பெயர்வழித்தம் | 136 |
| பெயர்வினைமிடத்து | 202 |
| பெயர்வினையும்மை | 207 |
| பெயரும்வினையுமாஞ் | 242 |
| பெயரே ஐ ஆல் | 165 |
| பெயரொடுபெயரும் | 209 |
| பொதுப்பெயர்வினை | 206 |
| பொதுப்பெயருயர்திணைப் | 97 |
| பொதுவியல்பாறையுந் | 184 |
| பொதுவெழுத் | 153 |
| பொருண்முதலாறா | 234 |
| பொருண்முதலாறினுந் | 183 |
| பொருண்முதலாறோ | 162 |
| பொருளிடங்காலஞ் | 79 |
| போலப்புரைய | 213 |
| மக்கடேவர் | 146 |
| மகரவிறுதி | 74 |
| மங்கலமாகி | 38 |
| மம்முன்பயவ | 72 |
| மரப்பெயர்முன்ன | 102 |
| மரமல்லெகின்மொழி | 125 |
| மலர்தலையுலகின் | 23 |
| மவ்வீறொற்றழிந் | 127 |
| மற்றையதென்பது | 259 |
| மற்றையநோக்கா | 240 |
| மன்னுடைமன்றத் | 48 |
| மன்னேயசை | 257 |
| மாடக்குச்சித்திரமு | 49 |
| மாவென்கிளவி | 260 |
| மாற்றநுவற்சி | 270 |
| மியாயிகமோ | 261 |
| மின்பின்பன்கன் | 126 |
| மீகீழிதழுறப் | 60 |
| மீன்றவ்வொடு | 124 |
| முக்காலத்தினு | 224 |

| | |
|---|---|
| முக்காற்கேட்பின் | 45 |
| முகவுரை | 25 |
| முச்சகநிழற்று | 145 |
| முதல்வழி | 27 |
| முதலிருநான்கா | 115 |
| முதலிவைசினைபிவை | 179 |
| முதலையையுறிற் | 179 |
| முதற்பெயர்நான்குஞ் | 159 |
| முதனூல்கருத்த | 47 |
| முரணந்தாதிநா | 264 |
| முழக்கிரட்டொலி | 270 |
| முற்றீரெச்ச | 218 |
| முற்றும்மை | 254 |
| முன்மொழி | 214 |
| முன்னத்தினுணரும் | 237 |
| முன்னரவ்வொட | 158 |
| முன்னிலைகூடிய | 189 |
| முன்னிலைமுன்ன | 190 |
| முன்னோர்நூலின் | 27 |
| முன்னோர்மொழி | 28 |
| மூன்றனுறுப் | 114 |
| மூன்றாவதனுரு | 167 |
| மூன்றாறுருபெண் | 109 |
| மூன்றுயிரள | 66 |
| மெய்களகரமு | 75 |
| மெய்ந்நாமூக்கு | 264 |
| மெய்யுயிர்முதலீ | 91 |
| மெல்லினம் ஙஞண | 56 |
| மென்றொடர் | 31 |
| மேற்பல்லிதழுற | 61 |
| மொழிகுணமின்மை | 38 |
| மொழிமுதற்காரண | 52 |
| மொழியாய்த | 76 |
| யகரம்வரக்குற | 64 |
| யரழமுன்னர்க் | 129 |
| யரழமுன்னர்மொழி | 72 |
| யரழவொற்றின் | 73 |
| யாகாபிறபிறக் | 261 |
| யாதனுருபிற் | 180 |
| யாப்படிபலவினுங் | 245 |
| யாரென்வினா | 199 |
| யாற்றுநீர்மொழி | 240 |
| ரவ்விற்கம்முத | 89 |

| | |
|---|---|
| ரவ்வீற்றுயர் | 176 |
| ரழவல்லனதம்முற் | 72 |
| லகாரவீற்றுயர் | 177 |
| லளமுன்கசப | 72 |
| லளமெய்திரிந்த | 73 |
| லளவிறுதொழிற் | 131 |
| லளவிற்றஃறிணைப் | 178 |
| லளவீற்றியைபினா | 65 |
| லளவேற்றுமை | 130 |
| லனமுன்றனவும் | 134 |
| வல்லினங்கசட | 55 |
| வல்லேதொழிற் | 132 |
| வல்லொற்றுவரினே | 215 |
| வலித்தன்மெலித்த | 95 |
| வவ்விறுசுட்டிற் | 141 |
| வன்றொடரல்லன | 110 |
| வாழியவென்பத | 104 |
| வானவர்மக்க | 265 |
| விகாரமனைத்து | 93 |
| விகுதிபதஞ்சா | 142 |
| விரைவினுமிகவினுந் | 224 |
| விழைவேகால | 257 |
| விளம்பியபகுதி | 83 |
| வினாச்சுட்டுடனும் | 158 |
| வினாவினுஞ்செப்பினும் | 226 |
| வினைசார்பின | 228 |
| வினைபெயர் | 253 |
| வினைமாற்றசை | 258 |
| வினைமுற்றே | 200 |
| வினைமின்பெயரே | 161 |
| வினையொடுவரி | 256 |
| வேற்றமை ஐ முத | 92 |
| வேற்றுமைமப் | 127 |
| வேற்றுமையாமி | 119 |
| வேற்றுமைவினை | 249 |
| வேற்றுமைவினைபண்பு | 210 |
| வேறில்லையுண் | 192 |
| வேறுவினைப்பல் | 227 |
| ளஃகானுயர் | 176 |
| றவ்வொடுகர | 87 |
| றனழஎஒவ் | 90 |
| னஃகான்கிளைப் | 124 |
| னவ்வீற்றுயர் | 177 |

# இடம் விளங்கா மேற்கோள் அகராதி

(எண்: சூத்திர எண்)


| | |
|---|---|
| அஞ்சாயல | 350 |
| அஞ்செவி | 221 |
| அடகுபூலால் | 426 |
| அடிமறிச்செய்தி | 412 |
| அடையெண் | 256 |
| அதுமற்ற | 419 |
| அதுமற்றம்ம | 419 |
| அம்ம்பவள்ள் | 413 |
| அரிமாவிடித்தன்ன | 366 |
| அருவிதுவைத்தன்ன | 458 |
| அவர்வயினிடைச் | 301 |
| அழுதான் | 355 |
| அளிபோன்று | 439 |
| அறல்கடுக்குங் | 366 |
| ஆஅஆசாரார் | 420 |
| ஆங்காங்காயினுங் | 436 |
| ஆசைப்பட்டு | 440 |
| ஆடவர்களெவ்வாறு | 413 |
| ஆதித்தன் | 340 |
| ஆம்போதவ | 340 |
| ஆரியமன்னர் | 417 |
| ஆலத்தின் மேற் | 412, 417 |
| ஆலத்தினால் | 316 |
| ஆவன்னாவன்னா | 305 |
| ஆவாழிய | 420 |
| இரக்கமிலுள்ளத் | 451 |
| இரங்கின | 355 |
| இரவின் | 378 |

| | |
|---|---|
| இரவெதிர் | 376 |
| இருதோடோழர் | 398 |
| இல்லிடப்பரத்தை | 301 |
| உப்பின்றிப் | 355 |
| உப்பின்று | 173, 438 |
| உயிர்புரை | 366 |
| உலங்கொ | 350 |
| உற்றதுபிறர்கள் | 457 |
| உறுபுகழ் | 441 |
| ஊர்த்திசை | 301 |
| ஊர்வலம் | 301 |
| எடுத்தலும் படுத்தலும் | 359 |
| எண்ணிப் | 440 |
| எருமைநாற்கால் | 398 |
| என்றவர் | 395 |
| என்னொப்ப | 366 |
| ஏஎதனையென்றோ | 200 |
| ஏஎ அம்பலஞ் | 394 |
| ஒண்டுவிநாராய் | 333 |
| ஓஒதந்தார் | 419 |
| கங்கனகன் | 267 |
| கடற்றானை | 350 |
| கடிநுனைப்பகழி | 456 |
| கடிமலர்மிசை | 456 |
| கடிமிளகுதின்ற | 456 |
| கடியரமகளிர்க்குக் | 456 |
| கடிவினைமுடிகென | 456 |
| கடைபுடைக் | 301 |
| கண்கருவிளை | 413 |
| கண்புரைகாதலேம் | 350 |
| கரவலமென்றோரைக் | 408 |
| கருநெடுங்கண் | 402 |
| கரையாடக்கெண்டை | 412 |
| கல்லளைச்சுனைநீர் | 301 |
| கல்லென்ற | 420 |
| கலைத்தொழில் | 350 |
| கழனிநீர்நாடன் | 457 |
| கழியே, சிறுநெய்தல் | 200 |
| கனவுறழ் நிலவு | 366 |

| | |
|---|---|
| கனைபுனலூரன் | 458 |
| காட்டுச்சாரோடுங் | 301, 311 |
| காடகமிறந்தோர்க்கே | 182 |
| காணாக்கழிப்ப | 343 |
| காணிகமென | 439 |
| காணிய ... கங்குலது | 200 |
| காணிய ... மாலையது | 422 |
| காணிய வாழிய | 439 |
| காதுசேர்தாழ் | 413 |
| காமவிதி | 413 |
| கார்நிகர்வண்கை | 366 |
| காரிகை | 413 |
| காரியையுங் | 366 |
| காலைமுரச | 458 |
| காவலோனக் | 317 |
| காவுளிச் | 301 |
| கிளக்குங்கிளவி | 457 |
| குரங்கெறிவிளங்காய் | 40, 372 |
| குழைகொண்டு | 407 |
| குறுங்களிச் | 439 |
| குன்றவென் | 413 |
| குன்றுதொறாடிய | 420 |
| கூடிப்பிரியேன் | 343 |
| கூர்வாமரோ | 440 |
| கேண்மியாவே | 439 |
| கொடிகுவளை | 413 |
| சாரனாட | 340 |
| சிறிய பெரிய | 354 |
| சிறுபைந்தூவி | 402 |
| சிறுமைதவிர்ந் | 439 |
| சின்மொழி | 152 |
| சுறமறிவன | 172 |
| சூரல்பம்பிய | 412 |
| செம்பவள | 366 |
| செல்மதிபாங்கு | 439 |
| சேர்ந்தனை | 350 |
| சொல்லேன்றெய்ய | 435 |
| சொற்றொறுஞ் | 22 |
| தண்ணந்துறைவனென் | 155 |

| | |
|---|---|
| தநது எகரமுதலா | 275 |
| தாவில்சீர்த் | 440 |
| தாழ்ந்த | 41 |
| திருத்தார் | 154, 155 |
| திருமகளிவளெனச் | 409 |
| துணையினெ | 350 |
| தெங்கங்காய் | 417 |
| நம்பாடணையாத | 301 |
| நல்குமே | 394 |
| நல்லவை | 39 |
| நனந்தலைவந்த | 301 |
| நாகுவேயொடு | 316 |
| நாவலர்க்குத் | 378 |
| நிலங்கினையா | 343 |
| நிலவிரி | 172 |
| நிலாச்சுறவினும் | 172 |
| நிலாவணங்கு | 172 |
| நின்றதோர் | 301 |
| நீலுண்டுகிலிகை | 156 |
| பகழிசிந்தினார் | 350 |
| பசுத்தான் | 340 |
| பண்டுகாடுமன் | 431 |
| பண்டுசுவரியதோர் | 431 |
| பருவந்துசாலப் | 455 |
| பாடுகோ பாடுகோ | 394 |
| பாய்பரிமா | 359 |
| பிண்டிநிழற்கீழ் | 301 |
| புகன்றவன்றியும் | 457 |
| புன்கூர்யானை | 441 |
| புலவரான | 317 |
| புள்ளிமான் | 366 |
| புள்ளினான | 317 |
| புன்னைநன்னீழற் | 301 |
| புநறுந்தொடையல் | 248 |
| பூமன்னு | 431 |
| பெருந்தோட் | 402 |
| பெருவேட்கை | 350 |
| பொருள்கொள்வார் | 421 |
| பொருளிடங்காலஞ் | 320 |

| | |
|---|---|
| பொன்னிற்பிதிர்ந்த | 298 |
| பொன்னேர் | 366 |
| போம்போதவ | 340 |
| மண்டிலமமுழங்க | 429 |
| மணியணி | 409 |
| மதிநுதன் | 409 |
| மயில்களிக்கும் | 413 |
| மரையிதழ் | 156 |
| மறவியுடையான் | 451 |
| மன்னன் | 350 |
| மாண்பினை | 440 |
| மாறாக்காதலர் | 418 |
| முழங்குமின்னீர் | 458 |
| மூப்புவந்தெய்தல் | 451 |
| மேவார்த்தொலைத்த | 307 |
| வடுவென்றகண்ணாய் | 440 |
| வருகதில் | 419 |
| வருகதில்லம்ம | 419 |
| வலம்புரித்தடக்கை | 309 |
| வலியலிகலே | 451 |
| வாம்புரவி | 340 |
| வாழாதென் | 440 |
| வாளன்றுபிடியா | 173 |
| விண்டுபெய்ய | 343 |
| விளிப்பது | 350 |
| வினைக்கம்பலை | 458 |
| வினைவேட்கையிர் | 350 |
| வீழ்ந்தெனக் | 343 |
| வெஞ்சிலையின்ன | 366 |
| வெந்துய்பினன் | 350 |
| வெயிலிகல் | 120 |
| வேண்டார் | 155 |
| வையைக்கிழவன் | 396 |

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை – 600 113

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும் | 65. 00 |
| கதிர்வேற்பிள்ளை – தமிழ்ச் சொல்லகராதி, மூன்று பாகங்கள் | 600. 00 |
| எண்பத்து மூன்றில் தமிழ், பகுதி–3 | 30. 00 |
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | 40. 00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள், தொகுதி–1 | 50. 00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள், தொகுதி–2 | 40. 00 |
| நாட்டிய நன்னூல் | 25. 00 |
| கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 20. 00 |
| கபிலர் | 70. 00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 75. 00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | 65. 00 |
| தமிழக மேடை நாடகப் பெண் கலைஞர்கள் – குறிப்பேடு | 25. 00 |
| A Grammar of Contemporary Literary Tamil | 80. 00 |
| Cilappatikaram (மொ.நூ.ம.ப) | 100. 00 |
| காதம்பரி மூலமும் வசனமும் (ம.ப) | 125. 00 |
| Tani pacura togai (மொ.நூ.ம.ப) | 30. 00 |
| Dedication (மொ.நூ.ம.ப) | 25. 00 |
| Temple chimes (மொ.நூ.ம.ப) | 20. 00 |
| Nala venba (மொ.நூ.ம.ப) | 45. 00 |
| Tamil Heroic Poems (மொ.நூ.ம.ப) | 40. 00 |
| Six Long Poems From Sangam Tamil (மொ.நூ.ம.ப) | 30. 00 |
| Kurinci-p-pattu-Muttollayiram (மொ.நூ.ம.ப) | 40. 00 |
| Kuruntokai (மொ.நூ.ம.ப) | 110. 00 |
| Landscape And Poetry (ம.ப) | 50. 00 |
| Tamil Culture and Civilization (ம.ப) | 60. 00 |
| Tolkappiyam and Astadhyayi | 110. 00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | 50. 00 |
| தொல்காப்பியம் – பொருள் – செய்யுளியல், பகுதி – 1 | 50. 00 |
| தடிவீரசுவாமிகதை வன்னியராயன்கதை (சு.ப) | 55. 00 |
| சடத்தலம் (சு.ப) | 40. 00 |
| காத்தவராய நாடகம் (சு.ப) | 30. 00 |
| மதங்க சூளாமணி (ம.ப) | 40. 00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப) | 32.00 |
| தமிழில் நவீன நாடகம் (தொ.நூ) | 70. 00 |
| இலக்கியத்தில் சோதிடம் | 65. 00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80. 00 |